இருமாத இதழ்

www.padippakam.com

ரூ.15

# காலச்சுவடு

ஜனவரி – பிப்ரவரி 2001

இதழ் 33



நேர்காணல்
புப்பேன் கக்



குமரிக் கண்டம் ஒரு கட்டுக்கதையா?

மனித வேட்டை

ஏ. கே. ராமானுஜன் கவிதைகள்

கர்பா நடனம்

சிறுகதை : பிரபஞ்சன்

படிப்பகம்

www.padippakam.com



மங்கள நாள்தனிலே!
அந்த மங்கள நாள்தனிலே!!

RmKV
முகூர்த்தப் பட்டுகள்
திருநெல்வேலி டவுன்

காஞ்சிபுரம் பட்டுகள் ● ஆரணி பட்டுகள் ● தர்மாவரம் பட்டுகள்
பனாரஸ் பட்டுகள் ● பிரிண்டட் சில்க்ஸ்

படிப்பகம்

www.padippakam.com


*நேர்காணல்* 6

**புப்பேன் கக்கர்**



**குமரிக் கண்டம் - லெமூரியா குழப்பம்** 52

சு. கி. ஜெயகரன்



**சிறுகதை**

சத்ரு 22
பவா. செல்லதுரை

நாவல் பழ இளவரசியின் கதை 46
பிரபஞ்சன்



**கட்டுரை**

குஜராத்தின் கர்பா நடனம் 4
வெளி ரெங்கராஜன்

விளம்பரங்களை முன் வைத்து 25
சில குறிப்புகள் – சுரேஷ்பால்

மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை 29
பெருமாள் முருகன்

ஆறாம் திணையும் ஏழாம் திணையும் 41
கென் சறோ – வீவாவின் படுகொலை
சேரன்



**மதிப்புரை**

பழ. அதியமான் 16
அ. கா. பெருமாள் 21
தேவிபாரதி 34
அரவிந்தன் 58
சி. சிவசேகரம் 59
ஜே. ஆர். வி. எட்வர்ட் 61

**விமர்சனக் கட்டுரை**

மகாபாரதத்தின் உளவியல் 18
இடைச்செருகல் - யுவன் சந்திரசேகர்



**கவிதை**

ஏ. கே. ராமானுஜன் 12
தேவதேவன் 32
பாலைநிலவன் 33



**மனித உரிமை**

வேட்டை 49



வீரப்பன் வேட்டையில் ஈடுபட்டிருக்கும் சிறப்பு அதிரடிப் படையினரின் அட்டூழியங்களால் பாதிக்கப்பட்டோரின் வாக்குமூலங்கள்

**மற்றும்**

நுட்பமும் ஈரமும் 3
வரப்பெற்றோம் 35
ஒரு கனவு நனவான கதை 36
தமிழ் இனி கடிதங்கள் 38
மௌனத்தின் சிறகடிப்பு 44
அஞ்சலி 57
நூல் விமர்சன அரங்கு 60
இலக்கிய அரங்கு 63
கண்டதும் கேட்டதும் 63
கடிதங்கள் 64


படிப்பகம்

www.padippakam.com

காலச்சுவடு

இதழ் 33
ஜனவரி – பிப்ரவரி 2001

ஆசிரியர்கள்
கண்ணன்
மனுஷ்ய புத்திரன்
தயாரிப்பில் உதவி
எம். எஸ்., மைதிலி,
மகாதேவன்,
சிவகுமாரி, தங்கம்
வடிவமைப்பு
குமார், லீலா

காலச்சுவடு இருமாத இதழ்
புதிய சந்தா விவரம்

| | |
|---|---|
| தனி இதழ் | ரூ. 15 |
| ஆண்டுச் சந்தா | ரூ. 90 |
| இரண்டாண்டுச் சந்தா | ரூ. 140 |
| வெளிநாட்டுச் சந்தா | ரூ. 400 |
| இரண்டாண்டுச் சந்தா | ரூ. 700 |

வெளிநாட்டு
நிறுவனங்களுக்கு US $ 20

*கல்லூரி / ஆய்வு மாணவர்
களுக்குச் சிறப்புச் சலுகை*

ஆண்டுச் சந்தா ரூ. 50
(சான்று அனுப்ப வேண்டும்.)

சந்தா தொகையை
**Kalachuvadu**
என்ற பெயரில்
பணவிடையாகவோ
வரைவோலையாகவோ
அனுப்புக. காசோலையாக
அனுப்புகிறவர்கள் ரூ. 10
சேர்த்து அனுப்புக.

**காலச்சுவடு**
669 கே. பி. சாலை
நாகர்கோவில் 629 001
தொலைபேசி : 04652 - 22525
மின்னஞ்சல் :
kalachuvadu@vsnl.com
தொலைநகல் : 04652 - 31160

முன் அட்டை ஓவியம்
ஃபிரான்செஸ்கா

# கலைஞர் மறுக்க வேண்டும்

தமிழகத்தின் சாகித்திய அகாடமியாக உருவாக்கப்பட்டிருக்கும் குறள்பீடம் அமைப்பின் தலைவராக முதலமைச்சர் மு. கருணாநிதி செயல்பட்டு வருகிறார். இந்த அமைப்பின் முதல் கூட்டத்தில் 'படைப்பிலக்கியச் செம்மலுக்கு' வாழ்நாள் சாதனைக்காக வழங்கப்படும் முதல் ஆண்டுப் பரிசை (பரிசுத் தொகை ரூபாய் இரண்டு லட்சம்) கலைஞருக்கு அளிக்க வேண்டுமென பல உறுப்பினர்கள் போட்டிப் போட்டுக் கொண்டு கோரிக்கை எழுப்பினர் என வதந்திகள் தெரிவிக்கின்றன.

இந்தப் பரிசை வாங்க கலைஞர் மறுக்க வேண்டும்.

கலைஞர் இப்பரிசைப் பெற ஏன் மறுக்க வேண்டும் என்பதற்கான வாதங்களை இங்கு முன் வைக்கிறோம்.

1. பரிசு எழுத்தாளனுக்கு வழங்கப்படும் ஒரு சமூக அங்கீகாரமாகக் கருதப்படுகிறது. தமிழ் சமூகத்தின் சகலவிதமான அங்கீகாரத்தையும் பெற்றவர் கலைஞரைப் போல வேறொருவரில்லை. எத்தனையோ எழுத்தாளர்கள் ஆயுட்கால இலக்கிய அர்ப்பணிப்புக்குப் பிறகும் போதுமான சமூக அங்கீகாரம் இன்றி இருக்கிறார்கள். இத்தகைய எழுத்தாளர்களைத் தமிழகத்தின் பல்வேறு இலக்கியப் போக்குகளிலும் அடையாளம் காட்ட முடியும். இதில் பலருக்கு பரிசுத் தொகை ரூபாய் இரண்டு லட்சமும் பிழைப்பிற்கு அவசியமான பெருந்தொகையாக இருக்கும். தமிழினத் தலைவராக சமூகத்தில் கணிசமான பகுதியினரால் மதிக்கப்படும் ஒருவர் இந்தப் போட்டியில் இறங்குவது கௌரவமானச் செயலாக இராது.

2. முன்னர் முதல்வராக இருந்தபோது தஞ்சைப் பல்கலைக் கழகத்தின் இராஜராஜ சோழன் விருதைப் பெற்று முதல்வர் பதவியைத் துஷ்பிரயோகம் செய்ததாக கண்டனத்திற்கு அவர் உள்ளானார். இப்போது மீண்டும் முதல்வராக இருக்கும்போது குறள் பீடம் பரிசை ஏற்றுக் கொள்வது அவசியமற்ற ஒரு சர்ச்சையை மீண்டும் எழுப்புவதோடு குறள் பீடம் திட்டம் துளிர்விடும் நிலையிலேயே அரசியல் மயமாக்கப்படும் அபாயமும் இதனால் உருவாகலாம்.

3. சாகித்திய அகாடமி உள்ளிட்ட பல அமைப்புகளில் அமைப்புக் குழுவில் இடம்பெறுபவர்கள் பரிசு பெற முடியாது என்பது நியதி. குறள் பீடம் அமைப்பின் தலைவரான கலைஞர் இப்பரிசை ஏற்றுக்கொள்வது தவறான வழிகாட்டுதலாகவும் மோசமான முன்மாதிரியாகவும் அமையும்.

மேலும் இந்தியாவில் நிறைய அரசியல்வாதிகள் எழுத்தாளர்களாகவும் உள்ளனர். சிலர் முதலமைச்சர்களாகவும் இருக்கின்றனர். இவர்கள் யாரும் தங்கள் மாநில, மத்திய அரசின் இலக்கிய திட்டக் குழுக்களில் அதிகாரம் வகிப்பதாகத் தெரியவில்லை. தன்னுடைய பல்வேறு அரசு மற்றும் கட்சிப் பணிகளுக்கிடையில் இந்தப் பொறுப்பை கலைஞர் வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் எதுவும் இல்லை. கலைஞர் இப்பதவியை ராஜினாமா செய்துவிட்டு ஒரு முழுநேர எழுத்தாளர் இப்பதவியில் இடம்பெற வழி செய்வது நல்லது. மேற்படி அமைப்பு அரசியல்வாதிகளின் இடையீடு இல்லாமல் செயல்பட அவசியமான சட்டத் திட்டங்களை உருவாக்கவும் அவர் வகை செய்ய வேண்டும்.

**கண்ணன்**



படிப்பகம்

www.padippakam.com



# நுட்பமும் ஈரமும்

■ சுந்தர ராமசாமி

ஃபிரான்செஸ்கா (Francesca) என்ற கலைஞரைத் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துவதே இந்தக் குறிப்பின் நோக்கம்.

ஃபிரான்செஸ்கா பெல்ஜியம் நாட்டில் ஆல்ஸ்ட் என்ற இடத்தில் 1942இல் பிறந்தார். செவிலியராகப் பயிற்சி பெற்றார். 1974இல் தனது முப்பத்திரண்டாவது வயதில் இந்தியா வந்தார். தமிழகக் கிராமங்களிலும் கர்நாடகத்திலும் சுமார் இருபத்தைந்து ஆண்டுகள் அவர் சமூகப் பணி ஆற்றியுள்ளார். பின்தங்கிய மக்களிடையே சமூகக் கல்வியைப் பரப்புவது, சுகாதார ஒழுக்கங்களைக் கவனப் படுத்துவது ஆகியவற்றில் சிறப்பான தொண்டாற்றியிருக்கிறார். தொழுநோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதும் தொழுநோய் பரவலுக்கு எதிரான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடுவதும் அவருடைய முக்கிய நோக்கங்களாக இருந்திருக்கின்றன. இன்று வரையிலுமான தன் வாழ்வை ஏழை எளியவர்களின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணித்து வருபவர் என்று இவரைச் சொல்லலாம்.

ஃபிரான்செஸ்கா ஒரு நுட்பமான கலைஞரும் கூட. அவர் எதார்த்தச் சாயலும் கலைப் பாங்கும் மிளிரும் அற்புதமான பொம்மைகளை உருவாக்கி வருபவர். இப்பொம்மைகளின் கலை நுட்பத்தை அவற்றின் புகைப்படங்கள் வழியாக ஓரளவு புரிந்துகொள்ள முடியும் என்றாலும் நேர்ப்பார்வையில் நாம் பெறும் அனுபவம் மூலமே அவற்றின் படைப்பாற்றலை முழுமையாக உணர முடியும். ஃபிரான்செஸ்கா தம் 17வது வயதில் நோய்வாய்ப்பட்டு சுமார் இரண்டு ஆண்டுகள் படுக்கையிலேயே கழிக்க நேர்ந்தது. அப்போது அவர் தமது முதல் பொம்மையை உருவாக்கினார். ஃபிரான்செஸ்காவின் மௌனமான பொம்மைகள் எண்ணற்ற செய்திகளை நமக்குத் தெரிவிப்பவை. அவரது கனவையும் நம்பிக்கையையும் கண்டுபிடிப்பையும் நட்பையும் விமர்சனத்தையும் ஆற்றாமையையும் எதிர்ப்புணர்வையும் கோபத்தையும் ஆழ்ந்த வேதனையையும் அவரது பொம்மைகள் வெளிப்படுத்துகின்றன. இந்தியக் கிராமிய வாழ்க்கை வெளிப்படுத்தும் எண்ணற்ற காட்சிகளையும் அந்தக் காட்சிகளுக்குப் பின்னால் உறைந்து கிடக்கும் துயரங்களையும் வெளிப்படுத்துபவைதான் அவருடைய பொம்மைகளில் மிகுதியானவை என்று கூறலாம்.

சமையல் செய்யும் பெண், ஊனமுற்ற சிறுவன், பிச்சைக்காரன், எழுதக் கற்கும் பெண், பாய் முடையும் பெண் போன்ற பல பொம்மைகள். ஆதிவாசி, சுள்ளி பொறுக்கும், கட்டடப் பணியில் ஈடுபட்டிருக்கும், குடத்தில் நீரேந்தி வரும், தையல் பணி செய்யும், தச்சு வேலையாற்றும், சைக்கிளில் பூ விற்கும், ஓவியம் வரையும் என எண்ணற்ற ஜீவன்களை தத்ரூபமாக உருவாக்கியிருக்கிறார் இவர். கிராமிய வாழ்க்கைக்குரிய காட்சிகள்தான் இவரது படைப்புகளில் அதிகம் என்றாலும்கூட அவற்றையும் தாண்டி நம் மரபு, நம்பிக்கை, இசை, நாட்டுப்புறக் கலை என்று பல்வேறு கருக்களுக்கும் உருவம் தந்திருக்கிறார். பெண்களுக்கு ஏற்படும் இழிவுகள், அவமானங்கள், ஒடுக்குதல்கள் இவரது முக்கியக் கவலைகளாக இருக்கின்றன.

ஜாதி, மதம், கலாச்சாரம், இடம், காலம் என்ற எந்தக் குறுக்கீடல்களுடனும் தன்னைப் பிணைத்துக்கொள்ளாமல் ஒரு கலைஞருக்கே உரித்தான விரிந்த பார்வை கொண்டவர் இவர் என்பதற்கு இவர் எடுத்துக் கொண்ட கருக்களின் வகைமையே போதுமானதாக இருக்கிறது. இவர் உருவாக்கியிருக்கும் பொம்மைகள் எவற்றுக்குமே முகங்களுக்குரிய விபரங்கள் இல்லை. அவை வெறுமையாக விடப்பட்டிருக்கின்றன. 'இப்பொம்மைகளுக்கு முகங்கள் இல்லை. இவர்கள் நம்மவர்களில் யாராக வேண்டுமென்றாலும் இருக்கலாம். நானாகவோ அல்லது நீங்களாகவோ அல்லது நாமாகவோ' என்று கூறுகிறார் ஃபிரான்செஸ்கா.

இப்போது இருபத்தைந்து வருடங்களாக இந்தக் கலைப் படைப்பில் அவர் ஈடுபட்டு வருகிறார். ஆரம்பக்காலத்தில் எளிமையாக வெளிப்பட்ட உருவங்கள் இன்று வாழ்க்கையின் சிக்கல்களையும் நுட்பங்களையும் துயரங்களையும் ஆழத்துடன் வெளிப்படுத்துபவையாக மாறி வருகின்றன. நூறு பொம்மைகளை இவர் செய்திருக்கிறார். ஒரு பொம்மையை உருவாக்குவதற்கு சுமார் பன்னிரெண்டு மணி நேரம் வரையிலும் ஆகிறது என்றும், இரவில் பணியை ஆரம்பித்து மறுநாள் காலை வரையிலும் தொடர்ந்து அதில் ஈடுபடுவதாகவும், தனது படைப்பாக்கத்தை அமைதியான சூழலில் மட்டுமே செய்ய முடிகிறது என்றும் கூறுகிறார்.

குப்பைகள் எனக் கருதி வீசியெறிந்துவிடும் பொருட்களைப் பயன்படுத்தியே இவரது பொம்மைகள் செய்யப்படுகின்றன. காகிதம், நாடா, பஞ்சு, துண்டுத் துணி, கம்பி, பனை ஓலை, தேங்காய் நார், சிறிய கண்ணாடிப் புட்டிகள், பழந் துணிகளிலிருந்து எடுக்கப்பட்ட ஜரிகைகள், பட்டு நூல்கள், புளியம்பழத்தின் மேல் தோடு போன்றவற்றை இவர் பயன்படுத்துகிறார்.

இப்போது இவரது பொம்மைகள் The Dolls Speak என்ற பெயரில் மிகச் சிறப்பாக நூல் வடிவம் பெற்றிருக்கின்றன. இந்நூலின் இடது பக்கங்களில் இவரது பொம்மைகளின் வண்ணப்புகைப்படங்களும் இப்பொம்மைகளால் தூண்டப்பட்டுப் பல கவிஞர்கள் எழுதியுள்ள கவிதைகள் வலது பக்கங்களிலும் மிக நேர்த்தியாக அச்சாகியுள்ளன. இந்நூலை ஒரு கலைப்படைப்பு என்று கூறலாம். ■

**The Dolls Speak**
Better World Publications
504 - Benaka Towers
16th D Main, Indiranagar
HAL IInd Stage
Bangalore 560 008
Pages: 194; Rs.675





படிப்பகம்

www.padippakam.com

# குஜராத்தின் கர்பா நடனம்

—: வெளி ரெங்கராஜன் :—



கர்பா நடனத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டதால் பெண் தற்கொலை என்று அண்மையில் குஜராத் பத்திரிகையில் வந்த ஒரு செய்தி (இந்தியன் எக்ஸ்பிரஸ், அக்.7) பலரை ஆச்சரியப்படுத்தும். ஆனால் குஜராத் கலாச்சாரத்தில் கர்பா நடனம் பெற்றிருக்கும் இடத்தையும், குஜராத் வாழ்க்கையுடன் அது இலைலந்திருக்கும் விதத்தையும் பார்க்கும்போது இதற்காக ஏன் உயிரை விடுகிறார்கள் என்பது தெரிய வரும்.

நவராத்திரிக் கொண்டாட்டங்களின் அங்கமாக நிகழ்ந்து வரும் இந்த கர்பா நடனங்களை குஜராத்தின் பல பகுதிகளிலும் பார்க்கக் கூடிய வாய்ப்பு கடந்த இரண்டு வருடங்களாக எனக்குக் கிடைத்தது. நவராத்திரி சமயங்களில் தெருக்களில் மக்கள் கூட்டம் அலைமோத, நாட்டுப் புற மெட்டுக்களுடன் இசை நிரம்பிக் கொண்டிருக்க விளக்குகளின் வெளிச்சத்தில் பெண்கள் வட்டவடிவில் இரவு நீண்ட நேரம் வரை நடனம் ஆடிக் கொண்டிருப்பார்கள். சிறிதாக ஆரம்பிக்கும் வட்டம் பெரிதாகிக் கொண்டே போகும். எந்த நேரத்திலும் யாரும் இணைந்து கொண்டு உடனே வட்டத்தின் அங்கமாகிவிட முடியும். ஒவ்வொரு தெருவிலும் அந்தப் பகுதியின் சிறிய பெண் முதல் முதியவர் வரை, ஆண்களும்கூட, கலந்து கொள்வர். வயது, அந்தஸ்து, பயிற்சி பெற்றவர், பெறாதவர், குறிப்பிட்ட உடை, சாதாரணத் தோற்றம் என்றெல்லாம் எந்தப் பாகுபாடும் இல்லை. சுழற்சியில் பங்கு கொள்ளும் எவரும் சுலபமாக நடனத்தின் அங்கமாகி விடுவர். வழக்கமான உடையணிந்த பெண்களுக்கு நடுவே பாரம்பரிய எம்ப்ராய்டரியுடன் கூடிய கண்ணாடி பதித்த ரவிக்கைகள், உலோக கர்ப்புகள், வளையல்கள் அணிந்த பெண்களும் தோன்றுவர் என்றால் தொள தொள வென்ற சல்வாரும், டர்பனும், காலணியும் அணிந்த ஆண்களும் இருப்பர். நவராத்திரிக்கு ஒரு மாதம் முன்பிருந்தே பல பகுதிகளிலும் நடன அசைவுகளுக்கென்று சிறப்பு வகுப்புகள் நடந்து கொண்டிருக்கும். ஒவ்வொருவரது நடனத்திலும் அவர்களது பயிற்சிக்கேற்ற நுட்பமான அசைவுகள் இருக்கும். ஆனால் ஒட்டு மொத்தமாக கர்பா நடனத்தில் காணக்கிடைப்பது மக்களுடைய, குறிப்பாக பெண்களுடைய, ஈடுபாட்டின் பிரதிபலிப்புதான்.

வட்டத்தில் கலந்து கொள்வது என்பது பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியையும் ஆனந்தத்தையும் தருவதாக இருக்கிறது. கால் அசைவுகள் பற்றி ஒன்றுமே தெரியாதவர்கூட வட்டத்துக்குள் சென்றவுடன் பாடலுக்கு ஏற்றபடி கைகால்களை அசைக்கும்போது அந்த வட்டத்தின் இயக்கம் அவர்களிடம் ஒருவிதமான லயத்தை உருவாக்கிவிடுகிறது. சாதாரணமாக அமைதியாகத் தோன்றும் பெண் அந்த நடனத்தின் அங்கமாகி விடும்போது அந்த அசைவில் அந்தப் பெண்ணின் முகத்தில் தோன்றும் உணர்வுகளும், தோற்றம் கொள்ளும் பரிமாணங்களும் வசீகரமாகி விடுகின்றன.

உண்மையில் கர்பா நடனம் என்பது பெண்ணுடைய சுதந்திரத்தின் அடையாளமாக இருக்கிறது. கர்பா என்பதே கர்ப்பப்பையிலிருந்து உரு





படிப்பகம்

www.padippakam.com

வானது. நடுவில் விளக்குடன் நிறைய ஓட்டைகள் உள்ள பானைகளை வைத்துக்கொண்டு அவர்கள் நடனமாடும்போது அங்கு விளக்கு என்பது வாழ்க்கையின் குறியீடாகிறது. வாழ்க்கைச் சுழற்சி என்பது பெண்ணின் வளமையுடன் சம்பந்தப்பட்டது. கர்பா நடனம் பெண் தெய்வமான சக்திக்கு அர்ப்பணிக்கப்படுகிறது. சும்பு, நிசும்பு ஆகிய அரக்கர்களைக் கொன்ற பெண் தெய்வமான ஜெகதாம்பாவைப் புகழ்ந்தே கர்பா நிகழ்த்தப்படுகிறது. ஹரப்பா நாகரிகத்திலேயே கர்பா நடனத்தைப் பற்றிய குறிப்புகள் காணப்படுவதாகவும், கிருஷ்ணருடைய மருமகளான உஷை, லஷ்யா என்கிற வடிவத்தை கற்றுக்கொண்டு துவாரகா கோபிஸ்திரீகளுக்கு கற்றுக்கொடுத்தார் என்றும் செய்திகள் உண்டு. இடைக்காலங்களில் பல கவிஞர்கள் இந்த நடனங்களுக்கு சமூகப் பரிமாணம் வழங்கி புதிய அர்த்தம் கொடுத்திருக்கின்றனர் என்றும். அரசியல் பற்றியும் மாமியார் மருமகள் உறவு போன்றவை பற்றியெல்லாம் கூட பாடல்கள் இயற்றப்பட்டிருப்பதாகவும் ஆராய்ச்சி மாணவர்கள் தெரிவித்தனர்.

மெல்லிய ராகங்களுடன் வசீகரமும், கவிதைத் தன்மையும் கொண்டு விளங்கிய கர்பா நடனத்துடன் இணைந்த அமைதி என்பது தற்போது இழக்கப்பட்டுவிட்டதாகக் கடுமையான விமர்சனங்களும் எழுகின்றன. ஒரு உள்ளூர் கொண்டாட்டமாக குறைந்த இசையுடன் நடனமாடுபவர்களே பாடுவதாக வடிவமைக்கப்பட்டிருந்த கர்பா நடனங்கள் போகப் போக உரத்த இசையுடன் வழக்கமான வடிவத்திலிருந்து மாறுபட்ட வடிவத்தை எடுத்துக் கொண்டிருப்பதாகவும், பாரம்பரிய இசையுடன் சினிமா இசையும் கலந்துவிட்டதாகவும், இந்தி நடிகைகளைப் போல கால் அசைவுகள் மேற்கொள்ளப்படுவதாகவும், ஆடம்பரமான இடம், பெரிய மேடைகள், ஒலி சாதனங்கள், நவீனக் கருவிகள் என மிகவும் வர்த்தகமயமாக்கப்பட்டுவிட்டதாகவும் பலர் வருந்துகின்றனர்.

கர்பா வடிவம் மிகவும் நெகிழ்வுத் தன்மை கொண்டிருந்தாலும் மக்களுடைய ஈடுபாடு என்பது அதனை உயிர்ப்புடன் இயங்கச் செய்கிறது. தெருக்கள், வளாகங்கள் என எங்கு நிகழ்த்தப்பட்டாலும் ஈடுபடுபவர் மிகவும் தனிப்பட்ட முறையில் ஒரு அழகியல் உறவு கொள்ள வடிவம் இடமளிக்கிறது. தனிப்பட்ட தேர்வுகளின் நுட்பங்கள் மாறுபட்டுக் கொண்டே இருந்தாலும் எல்லோரும் இணைந்து கொள்ளக்கூடிய, பெண்'தான்' என்று உணரக்கூடிய தருணங்களை இந்த வடிவம் கொண்டிருக்கிறது. தன்னுடைய சிறிய குழந்தையுடன் வரும் பெண், குழந்தையை வட்டத்தின் நடுவில் விட்டுவிட்டு நடனத்தில் கலந்து கொள்கிறார். தன்னுடைய தாய் நடனமாடுவதைப் பார்த்துக் கொண்டே குழந்தை வளர்கிறது.

இந்த நடனத்தில் பெண்ணுக்கு கிடைக்கக்கூடிய சுதந்திர உணர்வு என்பது இந்த நடனத்துடன் முடிவடைவதில்லை. அது வாழ்க்கையின் பல மட்டங்களிலும் ஊடுருவிச் செல்கிறது. நவராத்திரி இரவுகளின்போது நடனங்களைப் பார்த்துவிட்டு இரவு 2 மணிக்கு ஸ்கூட்டரில் திரும்பும்போது பல பெண்கள் இருசக்கர வாகனங் களில் தனியாகப் போய்க் கொண்டிருப்பதை பார்க்க முடிகிறது. இரவு 12 மணிவரை நகரம் சகஜமாக விழித்திருப்பதும் சாப்பிடுவதற்கும், உலவுவதற்கும் பெண்கள் தனியாக நடந்து செல்வதும் மிகவும் இயல்பாக காணக்கூடிய ஒன்றாக இருக்கிறது. மூன்று பேர்கள் அமரக்கூடிய ஆட்டோவில் ஆண்களும் பெண்களும் சகஜமாக உட்கார்ந்து கொண்டு கட்டணத்தைப் பகிர்ந்து கொள்வது என்பது மிகவும் வாடிக்கையான விஷயம். இதனால் பஸ் கட்டணத்திலேயே எவரும் ஆட்டோவில் செல்ல முடியும். ஒருமுறை ஆட்டோவில் ஒரு பெண்ணுடன் நான் பயணிக்க நேர்ந்தபோது மூன்றாவது பயணியை சேர்த்துக் கொள்வதற்காக ஆட்டோ ஓட்டுனர் 'கொஞ்சம் நெருங்கி உட்காருங்கள் சகோதரரே, அந்தப் பயணியும் சௌகரியமாக உட்கார வேண்டுமல்லவா' என்று சொன்னபோது இறுக்கமற்ற அந்தப் பெண்ணின் உடல் வாழ்க்கையின் சக பயணிக்கான ஒரு அந்நியோன்ய உறவை வெளிப்படுத்தியது. ஸ்பரிசங்களும், உடலின் நெருக்கங்களும் அன்பின் இயல்பான வெளிப்பாடுகளாய் உடல் ஒரு ஆனந்தம் என்பதை பறைசாற்றுகின்றன.

கர்பா நடனத்தில் சுற்றியுள்ள வெளியிலிருந்து சக்தியை எடுத்துக் கொண்டு ஒரு அதீத நம்பிக்கையிலும், சுதந்திரத்திலும் பெண்ணின் உடல் சுழன்று கொண்டே இருக்கிறது. வாழ்க்கை உணர்வுகளும், பாலியல் விழைவுகளின் நுட்பமான இழைகளும் பல்கிப் பெருகிக் கொண்டே போகின்றன. கர்பா நடனத்தின் அதிர்வுகளை தங்கள் உடலில் உணராத ஆண் பெண்களை குஜராத்தில் பார்ப்பது அரிது. ■


தமிழினி

342, டிடிகே சாலை
ராயப்பேட்டை
சென்னை 600 014
✆ 820 55 84

| | ரூ. |
|---|---|
| **கவிதைகள்** | |
| ஆம் நண்பர்களே அதுதான் நடந்தது — மகாதேவன் | 25 |
| இன்றைய மலையாளக் கவிதைகள் | 35 |
| விண்ணளவு பூமி — தேவதேவன் | 25 |
| அனிச்சம் — கலாப்ரியா | 20 |
| மீனுக்குள் கடல் — பாதசாரி | 15 |
| பூனையைப்போல அலையும் வெளிச்சம் — குட்டி ரேவதி | 15 |
| சிலைகளின் காலம் — சுகுமாரன் | 20 |
| கலாப்ரியா கவிதைகள் | 125 |
| **நாவல்கள்** | |
| சித்தார்த்தன் — ஹெர்மன் ஹெஸ்ஸெ | 45 |
| பின்தொடரும் நிழலின் குரல் — ஜெயமோகன் | 290 |
| புயலிலே ஒரு தோணி, கடலுக்கு அப்பால் — ப. சிங்காரம் | 180 |
| கன்னியாகுமரி — ஜெயமோகன் | 50 |
| **சிறுகதைகள்** | |
| ஆதண்டார் கோயில் குதிரை — கண்மணி குணசேகரன் | 60 |
| தீட்டு — அழகிய பெரியவன் | 60 |
| தூயோன் — கோபிகிருஷ்ணன் | 35 |
| டேபிள் டென்னிஸ் — கோபிகிருஷ்ணன் | 15 |
| கன்னிவாடி — க. சீ. சிவகுமார் | 50 |
| நுகம் — அ. எக்பர்ட் சச்சிதானந்தம் | 60 |
| **விமர்சனம்** | |
| புதுமைப்பித்தனும் கயிற்றரவும் — ராஜமார்த்தாண்டன் | 60 |
| புதுமைப்பித்தனும் ஜெயகாந்தனும் — வேதசகாயகுமார் | 60 |
| புதுமைப்பித்தன் எனும் பிரம்மராக்ஷஸ் — ராஜ் கௌதமன் | 50 |

Advt





படிப்பகம்

www.padippakam.com

நேர்காணல்

# புப்பேன் கக்கர்



## விளிம்பில் இருந்தவற்றையெல்லாம் கூற விரும்பினேன்

"ஒரு வண்ணத்துப்பூச்சி விளக்கொளியில் பாய்ந்து மறைந்து போனது, அடுத்த பிறப்பில் புப்பேன் கக்கராகியது" எனத் தனது ஆரம்பக் கையேடு ஒன்றில் கற்பனையும் நகையுணர்வும் சேரத் தன்னை அறிமுகம் செய்யும் புப்பேன் கக்கர் (1934) அறுபதுகளில் இந்தியக் கட்புலக் கலைப் பாரம்பரியத்தினுள் நுழைந்த வல்லமைமிக்க படைப்பாளிகளின் தலைமுறையைச் சேர்ந்தவர். இந்தியாவை உலகளவில் பிரதிநிதித்துவப்படுத்தும், சமகால இந்திய ஓவியர்களில் முக்கியமானவர்.

பரோடாவை மையப்படுத்திய 'உருவக எடுத்துரைப்புப் பள்ளி'யின் (Figurative Narrative School) பிரதான ஓவியரான அவர், காலனித்துவத்திற்குப் பிற்பட்ட இந்திய நகர வாழ்வை அதற்குரிய இயற்கையோடும் கட்புல மொழியோடும் ஓவியப் பரப்பிற்கு எடுத்துவந்தவர். அவரது மொழியும் பொருளும் விளிம்புநிலைப் பயணமுடையவை. 'பாதி மேற்கத்தையத்தனமும், பாதி இந்திய நகர வாழ்வும்' கலந்திணைந்த சேர்மம் அவரது ஓவியங்களின் பிரதான அடையாளம்.

ஆண்கள் நிறைந்த அவரது ஓவிய வெளியில், ஆண்களுக்கிடையான பாலியற் பரிமாற்றம், விநோதம் என்பன முக்கிய பகுதியாகியுள்ளன. இந்த வகையில் இந்தியாவின் முதல் ஒருபாலுறவு ஓவியராகவும், உலகின் முக்கியமான gay ஓவியர்களில் ஒருவராகவும் உள்ளார். ஓவியம் தவிர, தனது சொந்த மொழியான குஜராத்தியில் சிறுகதைகளும், நாடகங்களும் எழுதியுள்ள புப்பேன், தனது நாடகங்களுக்கான காட்சிகளையும் விதானித்துள்ளார்.

உலகின் பல்வேறு இடங்களிலும் அவரது ஓவியங்கள் சேகரிப்பிலுள்ளன. புப்பேன் கக்கர் பற்றி ஒரு நூலை பிருத்தானிய ஓவியரும், கலை வரலாற்று ஆசிரியருமான திமொத்னி ஹைமன் எழுதியுள்ளார். சமகால இந்திய ஓவியர்கள் பற்றிய சீதா கபூரது நூலும் புப்பேனை உள்வாங்கியுள்ளது.



Portrait of Shri Shankarbhai Patel near Red Fort

பிருத்தானிய BBC தொலைக்காட்சி *Lost Portrait* என்ற திரைப்படத்தையும், Art Council of Great Britain *Messages from Bhupen Khakhar* என்ற திரைப்படத்தையும் தயாரித்துள்ளன. அருண் கோப்கர் இந்திய வெளிவிவகார அமைச்சின் ஆதரவில் புப்பேன் கக்கர், நளினி மலானி, விவான் சுந்தரம் ஆகியோர் பற்றிய *Figures of Thought* என்ற திரைப்படத்தையும் எடுத்துள்ளார்.

அணுகுவதற்கு இலகுவான புப்பேன் கக்கருடனான இந்த நேர்காணல், பரோடாவின் நகரப் பகுதியிலிருக்கும் அவரது வீட்டில் நடைபெற்றது.



படிப்பகம்

www.padippakam.com

**பம்பாய் குலால்வாடியில், 1934ல் பிறந்த உங்கள் இளம்பிராயத்தின் பெரும்பகுதி அங்கேயே கழிந்தது. உங்கள் குடும்பம், பாடசாலை நாட்கள் பற்றிச் சிறிது கூறுங்கள்.**

நான் மிகவும் ஏழ்மையான மத்தியதர வர்க்க குடும்பத்திலிருந்து வந்தேன். எனது தந்தை எனது நாலாவதோ, ஐந்தாவதோ வயதில் காலமானார்; அம்மா இருந்தார். நாலு பிள்ளைகளில் நான் இளையவன். காசு எதுவும் குடும்பத்தில் இருக்கவில்லை. எனது சகோதரர் தனது பதினேழாவது வயதிலேயே உழைக்கத் தொடங்கினார். அவருக்குப் படிப்பதில் ஆர்வம் இருக்கவுமில்லை. எனக்கிருந்தது. படித்தேன். பம்பாய் பல்கலைக்கழகத்தில் பி.ஏ. - பொருளாதாரம், பி.காம்., பின் பட்டயக் கணக்கறிஞர் *(Chartered Accountant)*. ஆனால், கலையின் மீதே அதிக ஈடுபாடு இருந்தது.

1950களின் ஆரம்பத்தில் பம்பாய் கிராண்ட் வீதியில் சில மாலை நேர ஓவிய வகுப்புகளுக்குப் போனேன். ஓவியக் காட்சிகள் பார்க்கத் தொடங்கியதும் இக்காலத்தில்தான். 1960 - 61களில் ஜே. ஜே. கலைப்பள்ளியில் மாலைநேர ஓவிய வகுப்புகளுக்குப் போனேன். ஆனால், அங்கு எனக்கு எதுவும் கிடைக்கவில்லை. நான் அப்போது, எழுத்திலும் ஆர்வமாக இருந்தேன்; எழுதவும் ஆரம்பித்தேன்.

**1962ல், உங்கள் இருபத்தியெட்டாவது வயதில், பரோடாவுக்கு நீங்கள் வருவதற்கு, ஓவியர் குலாம் முகமது ஷேக் உடனான சந்திப்புப் பிரதான தூண்டுகோலாக இருந்தது அல்லவா? இந்தத் தெரிவிற்கான அடிப்படைக் காரணங்கள், ஓவியத்திலேயே உங்கள் பிரதான விருப்பு இருந்தாலும், பரோடாவில் கலை விமர்சன கற்கையை தேர்வு செய்து கொண்டதன் பின்னணி, இவை பற்றிக் கூறுங்கள்?**

பரோடாவைத் தவிர, எனக்கு வேறு தெரிவு இருக்கவில்லை. எனது குடும்பத்தினர், எனது கலை ஈடுபாட்டிற்கு முழுமையாக எதிராக இருந்தனர். பம்பாயிலிருந்தால், என்னால் வரையவும் முடியாது. மேலும், அக்காலத்தில் ஜே. ஜே. கலைப்பள்ளியைவிட பரோடாவே மிகவும் செயற்பாடுடைய மையமாக இருந்தது. குலாம் ஏற்கனவே என்னை பரோடா நோக்கி ஊக்கப்படுத்தியிருந்தார். இந்தப் பின்னணியில் பரோடாவுக்கு வந்தேன்.

ஓவியக்கல்வி பரோடா நுண்கலைப் பீடத்தில் ஐந்து வருடங்கள் - நான் ஐந்து வருடங்களைச் செலவழிக்க முடியாது, அதற்கு என்னிடம் காசும் இருக்கவில்லை என்பது இன்னொரு விடயம். எனவே, இருவருட குறுகிய கற்கை நெறிகளுள் ஒன்றான கலை விமர்சனக் கற்கை நெறியில் இணைந்தேன். இது எனக்கு கல்லூரிக்கு வருவதற்கான அங்கீகாரத்தைத் தந்தது. ஓவியர்களைச் சந்திக்க, படிக்க எல்லாம் வாய்ப்பாகியது.

மற்றப்படிக்கு கலைவிமர்சனம் தொடர்பான அறிவெதுவும் எனக்கில்லை. ஓவியர்களின் பெயர்களோ, வரலாறுகளோ எனக்கு அதிகம் அப்போது தெரிந்திருக்கவுமில்லை. ஜயோதி பட், சந்தோஷ், கீமத் ஷா, வினோத் பட்டேல்



Yayati

முதலியவர்கள் அப்போது பரோடாவில் முக்கியமான ஓவியர்களாக இருந்தார்கள். என். எஸ். பெந்தரேயின் மாணவர்கள் இவர்கள். எனக்கு தாழ்வு மனப்பான்மை இருந்தது. நானோ கணக்கியல் துறையிலிருந்து வந்திருந்தேன். பலரும் ஊக்கப்படுத்தினர். விவானை (விவான் சுந்த ரம்) சந்தித்ததும் இக்காலத்தில்தான்.

கல்வி முடிந்தபின் மீண்டும் பம்பாய் போனேன். வீட்டில் ஓவியராக வரும் எனது முடிவுக்கு தொடர்ந்து கடும் எதிர்ப்பு. திரும்ப பரோடாவுக்கு வந்தேன். பகுதி நேரமாக ஜயோதிபட் நிறுவனத்தில் கணக்குத் தொடர்பான வேலைபார்த்துக் கொண்டு, ஓவியம் தீட்ட ஆரம்பித்தேன்.

**1964ல் உங்கள் கலை விமர்சனம் முதுநிலைக் கல்வி பூர்த்தியானதும், உங்கள் தொடக்ககால ஓவியவெளிப்பாடுகள் கொலாஜ் (collage) நுட்பத்தைப் பயன்படுத்தியனவாக இருந்தன. இந்தப் பகைப் புலத்தில் 'இந்தியாவின் முதல் பொப் (pop) ஓவியராகவும்' நீங்கள் இனங்காணப்பட்டீர்கள். உங்களிடம் பொப் தனிப்பண்பு (idiom) தொடர்ந்தாலும், விரைவிலேயே கொலாஜ் நுட்பத்தை கைவிட்டுவிட்டீர்கள் அல்லவா?**

இப்போதும் சரி, அக்காலங்களிலும்சரி நாளாந்த வாழ்க்கைக்கு நெருக்கமானதாக எனது வெளிப்பாடுகள் இருக்கவேண்டும் என எண்ணி வந்திருக்கிறேன்; நான் அதில் ஒரு பகுதியாக இருக்கவேண்டும். ஓவியங்களை வேறுபட்ட முறைகளில் கையாள முயற்சித்தேன். பார்க்கக் கிடைத்த மேற்கத்தைய ஓவிய வெளிப்பாடுகளூடாக கொலாஜிற்கான கருத்துந்தல் கிடைத்தது. திரைப்படச் சுவரொட்டிகள், கோயில் அங்காடித் தெருக்களில் கிடைக்கிற ஓலோகிராப்புகளில் *(Oleograph)* உள்ள சிறிய தெருமுனைக் கோயில் கடவுளர்கள், தங்கவெள்ளித் தாள்கள் இவற்றை வெட்டியொட்டியதாக, எனாமல் வர்ணங்களிலான தூரிகை அசைவுகள் முதலியவற்றைப் பயன்படுத்தியனவாக ஆரம்ப வெளிப்பாடுகள் அமைந்தன. பலவேளை, ஓலோகிராப் கடவுளர்களது கண்களை வெட்டியெடுத்துவிட்டு, தூரிகையால் நான் கண்களை வரைவேன். அது ஒரு கட்டம்.

**இதில் ஜிம் டொனவனின் பங்கென்ன?**

அவர், லண்டன் றோயல் கலைக்கல்லூரியிலிருந்து கலாசாரப் பரிவர்த்தனை மாணவராக பரோடாவுக்கு வந்திருந்தார். அவரொரு நல்ல ஓவியரெனச் சொல்லமாட்டேன். அவர்தான் சமகால (1960களின்) பிருத்தானிய ஓவியப் போக்குகளை எனக்கு அறிமுகப்படுத்தினார். பீற்றர் பிளேக், றோஷோம் பேர்க் முதலியவர்களை எல்லாம். நாங்கள் நிறைய உரையாடினோம். அவரது கருத்துப் போக்குகள் என்னிடம் தாக்கம் செலுத்தின. பொப் வகையான



படிப்பகம்

www.padippakam.com

வெளிப்பாட்டில் எனக்கிருந்த ஆர்வவழியில் அவரென்னை அதிகம் ஊக்கப்படுத்தினார்.

***பொப் கலை மீதான உங்கள் கவனம் குவிந்ததற்கான கருத்து நிலை மையம் என்ன?***

கலையை நாங்கள் குறிப்பிட்டவொரு சட்டகத்துள் வரைவிலக்கணப்படுத்த முயற்சிக்கிறோம். அவ்வாறு எதையாவது செய்துவிட்டு, அதுதான் கலை என்கிறோம். ஆனால் அனைத்துக் காலங்களிலும் சட்டகம் மாறி வந்துள்ளது. பிக்காசோ (*Picasso*) கறுப்பினச் சிற்பங்களை முன்மாதிரியாக வைத்து வரைந்தார். அதன் மூலம் கலைபற்றிய அதுவரைக்குமான எல்லையை அகலப்படுத்தினார். பொப் கலையில், விளிம்பிலிருந்த விடயங்கள் உள்வாங்கப்பட்டிருந்தன. எனக்கு இந்த விளிம்பில்தான் ஆர்வம். விளிம்பிலிருப்பவற்றைக் கலைக்குக் கொண்டு வருவதில் எனக்குள்ள ஆர்வம் எனது கலையின் பிரதான பகுதியாக இருக்கிறது.

***1960களின் கடைக்கூற்றிலும், 1970களின் ஆரம்பங்களிலும் சிற்றோவியச் செல்வாக்குகள் உங்கள் ஓவியங்களில் முதன்மை பெறுகின்றன எனக் கொள்ளலாமா?***

சரி, அது இரண்டாவது கட்டம். ஏறத்தாழ 1969 - 1971 வரையான காலப்பகுதி. சிற்றோவியங்களின் சிறிய உருவங்களையும், வர்ணங்களையும் குறிப்பிட்டளவு அதன் எடுத்துரைப்பு (*narrative*) முறையையும் நான் பயன்படுத்தினேன். மிகவும் அழகாக, அலங்காரமாக, கவனமாகச் செய்யப்பட்ட அதன் தன்மை என்னைக் கவர்ந்தது. செந்நெறிச் சிற்றோவியங்களிலும் பார்க்க பிற்பட்ட ஆங்கிலத் தாக்கமுடைய அவுத், பாட்னா சிற்றோவியப் பள்ளிகளிலேயே ஆர்வமதிகம் - குறிப்பாகப் பாட்னா ஓவியங்களின் உருவப்பட்டிகள் (*strips*) பிரதானமானவை.

ஆனால், இத்தகைய வெளிப்பாட்டுக் காலங்களில் சமகால வாழ்விலிருந்து தள்ளிப்போவதாக உணரத் தொடங்கினேன். சிற்றோவியங்களின் வர்ணங்கள் எனக்கு மிகவும் பிடித்தமானவை. அவற்றில் ஒருவகைக் கடந்த காலம் பற்றிய ஏக்கம் இருந்தது. ஆனால், யாரும் கடந்த காலத்தைத் திருப்பிக் கொண்டு வர முடியாது. ஒவ்வொருவரும் சமகாலத்தவராக வாழும் உலகில் இருக்கவேண்டும் என்று பலமாகச் சிந்தித்தேன். அப்போதுதான் எனது *Trade Series* ஓவியங்கள் ஆரம்பமாகின. *'Janata Watch Repairing'*, *'Barber Shop'* முதலான ஓவியங்களுடன் 1972, 73 வரை நகர்ந்தேன். என்றாலும், நிலவுருக்களில் சிற்றோவியச் செல்வாக்கு சிலவேளை இன்றும் வந்து போகிறது.

***அடுத்த கட்ட ஓவியங்களில் உருவங்கள் முதன்மை பெறத் தொடங்குகின்றன. முன்னைய சிறிய உருவங்களுக்குப் பதிலாக அளவிற்பெரிய உருவங்களைச் சந்திக்கிறோம். 'Man with Bouquet of Plastic Flowers' ஓவியத்தில் அது பல மடங்காகப் பெருக்கிறது. இவை Pop-realism எனச் சில வேளை அழைக்கப்படுகின்றன. இந்தப் போக்கில் உங்கள் மொழியில் கலப்புப் பண்பு (hybrid) அதிகரித்துச் செல்வதாகச் சொல்லலாமா?***

ஆம். முதலில் பெரிய உருவங்களைக் கையாளுமளவிற்குத் தன்னம்பிக்கை இருக்கவில்லை, மிகவும் தயக்கமாக இருந்தது. உண்மையில் ஓவியத்தை நான் முறையாகப் பயிலவுமில்லை. ஆனாலும், நாள்தோறும் உருவங்கள் பெருத்தன - சிற்றோவியங்களில் உள்ளதைப் பார்க்கிலும். சிற்றோவிய உருவப்படிவம் (format) கூட பெரிய உருவங்களை அனுமதிக்காதது; எல்லைப் படுத்துவது. இதனால், உருவங்கள் பெருக்க எனது இக்கால கட்ட சிற்றோவிய முதன்மையும் குறையலாயிற்று.

கலப்புப் பண்பு ஓலியோகிராப்புகள், கம்பனி ஓவியங்கள், கலிகட் - குறிப்பாக எனது நிர்வாண ஓவியங்களில், நாத்துவரா பிச்சுவாய் ஓவியங்கள், சிற்றோவியங்கள் - இவற்றின் பாதிப்பு ஒருபுறம், மறுபுறம் றோஷோம்பேர்க், ரூசோ தொடர்ந்து டேவிட் கொக்னி முதலியவர்கள். இதேநேரம் இத்தாலிய ஓவியர்கள் லொறான்செற்றி இவரென்னை மிகவும் பாதித்தார். மற்றும் சசேற்றா புறூகல், ஜியற்தோ சிலவேளை மத்தீஸ், றஷ்ய விக்கிரக ஓவியங்கள் முதலியவெல்லாம் ஒன்று.

இன்றைய மத்தியதர வர்க்க வீடுகளில் குளிர்சாதனப்பெட்டி, தொலைக்காட்சி முதலியவற்றோடு, தாய் பூசையில் ஈடுபடுவதையும் பார்க்கலாம். இது ஒரு கலப்புப் பண்புடைய கலாசாரம். கலைகூட இந்த கலப்புப் பண்பின் இயற்கையையே பிரதிபலிக்கிறது.

***கே. ஜி. சுப்பிரமணியத்திற்கு நீங்கள் ஒருவகையில் மாணவர். 1968ல் பழைய பிருத்தானியர் கால வீடொன்றை கே. ஜி. எஸ். மாடியிலும், நீங்களும் குலாமும் கீழ்வீட்டிலுமாகப் பகிர்ந்து கொண்டீர்கள். கே. ஜி. எஸ்சிடம் நீங்கள் பெற்றுக்கொண்ட கல்வி, அவரது கலைபற்றிய அடிப்படைப் பார்வை என்பன எப்படியிருந்தன?***

கே. ஜி. எஸ். - தனது விரிவுரைகளில் செசான், மத்தீஸ் முதலிய மேற்கத்தைய ஓவியர்களையெல்லாம் கற்பித்தார். ஒவ்வொரு விடயங்களையும்,



You Can't Please All

தனியாக வேறுபடுத்தி அதனடிப்படைத் தன்மைகளை பார்ப்பதும், அதேசமயம் அவை ஒவ்வொன்றிற்குமிடையிலான தொடர்புகளை துல்லியமாக விளக்கவும் அவரால் முடியும். அவரது பார்வை மிகவும் பயனுடையது. இன்றுகூட அவர் பார்த்த முறை பயனுடையதாகவே எனக்குப் படுகிறது.

அவர் சாந்திநிகேதன் ஓவியர்கள் சார்ந்த பார்வையுடையவராக இருந்தார். அப்போது முதன்மை பெற்றிருந்த பம்பாய் முற்போக்கு இயக்கம் சர்வதேச நவீனத்துவத்தைப் பின்பற்றியது - அது சாந்திநிகேதன் பாரம்பரியத்தை ஒரு பொருட்டாகக் கருதவில்லை. கே. ஜி. எஸ். முற்போக்கு இயக்கத்தைக் கேள்விக்குள்ளாக்குகிறார். ஓவிய வெளிப்பாட்டில் வேரைத்தேடிச் செல்லுதல் என்பதை, தனது சாந்திநிகேதன் பாரம்பரியத்தினூடாக அவர் கருத்து ரீதியாகவும், செயற்பாட்டு ரீதியாகவும் வெளிப்படுத்தினார்.

***நீங்கள் குலாம் முகமது ஷேக்குடன் இணையாசிரியராக இருந்து நடாத்திய 'விருஷிக்'***



படிப்பகம்

www.padippakam.com



Janatha Watch Repairing

***சிறுசஞ்சிகை கூட, இதே வகையான ஒரு போக்கை வெளிப்படுத்தியது. பம்பாய் முற்போக்கு ஓவிய இயக்கத்தின் சர்வதேச நவீனத்துவத்திற்கு எதிரான கருத்துக்களை அது முன்வைத்தது. சீதா கபூரது 'அடையாளம் பற்றிய தேடல்' (In quest of identity) விருஷிக்கில் வெளியிடப்பட்டது. விருஷிக்கின் அடிப்படை நோக்கம் என்ன ? அதில் யாரெல்லாம் பங்களித்தார்கள் ?***

விருஷிக் முக்கியமாக லலித்கலா கலைக் கழகம் (*Lalit Kala Academy*) - தில்லியின் செயற்பாடுகளோடு மோதுவதற்காகவே தொடங்கப்பட்டது. அதுவொரு ஜனநாயக நிறுவனமாகச் செயற்படவேண்டும். அரசு அதன் செயற்பாடுகளில் தலையிடக்கூடாது என்ற அடிப்படையில் அது குரல் கொடுத்தது. கலைஞர்களை, கலைஞர்களே தெரிவுசெய்யவேண்டும் - அரசல்ல, என்ற கோரிக்கையே அதில் முக்கியமாக உள்ளடங்கி இருந்தது. இதுவே, ஆசிரிய பீடத்தின் பிரதான நிலைப்பாடு.

அதேநேரம் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், மொழிபெயர்ப்புகள் என்பனவெல்லாம் சஞ்சிகையில் இடம் பெற்றன. நாஞ்சிப் பட்டேல், கீவ் பட்டேல், ஜயோதி பட், பிரபாகர் பார்வே, அடில் யுஸ்வாலா, கீதா, விவான் முதலிய பலர் அதில் எழுதினார்கள்.

சர்வதேச நவீனத்துவத்திற்கு எதிராக, எமது சொந்த வேர் களை தேடிச் செல்லுதல் பற்றி அப்போது பலமாகச் சிந்திக்கப் பட்டது. கீதாவின் கட்டுரைகளும் இந்தப் பின்னணியில்தான் இடம் பெற்றன. சுவாமி (ஜே. சுவாமிநாதன்) தனது 'கொன்றா'விலும் (*Contra*) இது பற்றி எழுதினார்.

***'வேர்களைத்தேடுதல்' என்ற போக்கில் கே. ஜி. எஸ்சின் கிராமிய நாட்டார் குலக்குழு மரபுகளின் மீதான நாட்டம், ஜே. சுவாமிநாதனின் பௌதீக அதீத (Meta physical) மரபுகளின் தெரிவு, கே. சி. எஸ். பணிக்கரின் பண்டைய கட்புலம்சார் வெளிப் பாடுகளின் கோட்டுப் பகுதிகள் மீதான ஆர்வம் – இதில் நீங்கள் உங்களை எங்கே நிலைப்படுத்திக் கொண்டீர்கள் ?***

என்னை நகரம் சார்ந்த ஓவியத்தில் ஈடுபாடுகாட்டிய முதலாளாக நான் பார்க்கிறேன். என்னுடைய நகர வாழ்வு மீதான எதிர்வினைகள் மிகவும் இயல்பானவை. பாரம்பரிய அல்லது சிற்றூர் கலைபற்றி என்னிடம் அனுபவமில்லை. நான் பிறந்தது, வளர்க்கப்பட்டது எல்லாமே நகரங்களில் - குறிப்பாக பம்பாயில். என்னுடைய வாழ்வின் பெரும்பகுதி நகரங்களிலேயே கழிந்து போனது. எனது ஓவியங்களில் பிரதிபலிக்கப்படுவது காலனித்துவ ஆட்சிக்குப் பிந்திய இந்த நகரங்களின் அனுபவங்கள்தான்.

இன்னொருபுறம், எனதார்வம் ஆரம்பந்தொட்டே எடுத்துரைப்பு முறையில் இருந்தது. இத்தாலியில் 14ம், 15ம் நூற்றாண்டு இத்தாலிய ஓவியங்களைப் பார்த்தபொழுது ஒருவகையான கிளர்ச்சிக்கு ஆட்பட்டேன். அவற்றுக்கும், சிற்றோவியங்களுக்குமிடையில் எடுத்துரைப்பு முறையால் தொடர்புண்டு. இன்று பலர் எடுத்துரைப்பு முறையிலிருந்து விடுபட்டபோதும், எனக்கு இன்னமும் அதிலார்வமுண்டு. நகரம் சார்ந்த விடயங்களோடு கூடிய எடுத்துரைப்புத் தன்மை எனது ஓவியங்களில் பொதுவாக உள்ளது.

***விளிம்புநிலை விடயங்கள் மீதான ஆர்வம் பற்றிக் குறிப்பிட்டீர்கள். உங்கள் ஒருபாலுறவு சார்ந்த வெளிப்பாடுகள் கூட விளிம்புநிலை சார்ந்தவைதான்.***

நீங்கள் சொல்லுவது சரி. ஒரு பாலுறவு மட்டுமல்ல - எல்லா விளிம்புநிலை விடயங்களையும் நான் கூற விரும்பினேன். அதிலொன்றுதான் ஒரு பாலுறவு. எண்பதுகளின் பின்புதான் புத்திபூர்வமாக அதனை ஆரம்பித்தேன்.

***அதனுடைய முழுப்படி முறைகளையும், நீங்கள் அதனை எதிர்கொண்ட விதம் என்பவற்றையும் விபரிக்க முடியுமா ? 'You Can't Please All', 'Two Men in Benaras' முதலிய ஓவியங்களில் நீங்கள், ஒருபாலுறவு அனுபவங்களை வெளிப்படுத்தத் தொடங்கினீர்கள் அல்லவா ?***

*Gay* பண்பாடு பற்றிய தப்பான புரிந்து கொள்ளல்தான் அப்போது நிலவியது. மக்கள் அதனையொரு நோயாகவும், வைத்தியரைப் பார்க்கவேண்டிய விடயமாகவும் தான் கருதினார்கள். நான் ஒரு *gay* என வெளியில் தெரிவதை நான் விரும்பவில்லை; நான் வெட்கப்பட்டேன். ஒரு கட்டத்தில் எனது நண்பர்களுக்கு இது தெரியவந்தபோது தற் கொலை செய்யக்கூடத் தயாரானேன்.

ஆனால், *1979*ல் எனது இரண்டாவது இங்கிலாந்து பயணத்தின்போது ஹோவாட் கொட்க்கின் இல்லத்தில் தங்கியிருந்தேன். லண்டன் *Bath Academy of Arts*ல் கற்பித்தேன். பல ஓவியர்களை சந்திக்கவும், அவர்களது படைப்புக்களை நேரடியாகப் பார்க்கவும் முடிந்தது. பலவகையில் இது எனக்கு கண் திறப்பாக இருந்தது. இங்கிருந்து வேறுபட்ட உலகமாக அது இருந்தது. இந்தப் பயணத்து அனுபவங்களே எனது சிந்தனையில் மாற்றத்தைக் கொண்டுவந்தன. நான் தனியாக இல்லை என்பதை அப்போது பார்த்தேன். அங்கே ஒருபாலுறவுக்காரர்கள் ஒன்றாகக் கூடுவது, பேசுவதெல்லாம் எனக்கு நம்பிக்கையைத் தந்தது. அப்போது இந்தியாவில் இவ் வாறான எந்த சந்தர்ப்பமும் இல்லை. எண்பதுகளின் பின்தான் - இப்போதுதான் அது சாத்தியமாகி உள்ளது.

*1980*ல் இதுதான் *'You Can't Please All'* ஓவியமாகியது.

***இதுபோன்ற ஓவியங்களூடாக, நீங்கள் பாலியல் சிறுபான்மையினரின் குரலாகிறீர்கள். இப்போது, பம்பாய் போன்ற பெருநகரங்களில் gay குழுக்கள் தொழிற்படுகின்றன. ஆனால், நீங்கள் இவை எதனோடும் தொடர்புடையவராக இல்லையே ?***

என்னிடம் எந்த வகையான பற்றார்வக் கிளர்ச்சியும் (*missionary zeal*) இல்லை. அல்லது அதற்காக சண்டைபோட வேண்டும் என்றுகூட இல்லை. எனது நண்பர்களில் தொண்ணூற்றொன்பது சதவீதமானவர்கள் ஒருபாலுறவாளர்களுமல்ல. நான் எதையுணர்ந்தேனோ, உணர்கிறேனோ, அதனை மற்றவர் களின் பொருட்டாக வரைய விரும்புகிறேன். அப்படித்தான் ஒருபாலுறவு உள்ளடக்கம் என்னிடம் வருகிறது.



படிப்பகம்

www.padippakam.com

**உங்களிடம் பற்றார்வக் கிளர்ச்சியும் இல்லை என்கிறீர்கள். நீங்கள் எந்த அரசியல் நிலைப் பாடும் இல்லாதவர் என்று கூட எழுதியுள் ளீர்கள். ஆனால், அரசியலென்பது உங்க ளுக்குச் சம்மந்தமற்ற ஒன்று என்று கூற முடியுமா உங்களால்?**

அது, எனது படைப்புக்களூடாகத்தான் வருகிறது.

**நல்லது. தனிப்பட்ட உங்களது பாலியல் நட வடிக்கை படைப்பாகிவிடும்போது அது அர சியலாகி விடுகிறது. ஆனால், உங்களுடைய நிலைப்பாடு *comitted political art*லிருந்தும் வித்தியாசப்படுகிறது. குறிப்பாக இந்திரா காந்தியின் அவசரகால நிலைப் பிரகடனத் திற்கு எதிராக; நீங்கள் சார்ந்திருந்த பள்ளி யிடமிருந்து குறிப்பிடத்தக்க எதிர்வினை வெளிப்பாடுகள் உருவாகியிருந்த போதும், நீங்கள் மௌனமாக இருந்தீர்கள். அரசியல் கையாளுகை பற்றிய உங்கள் நிலைப்பாடு என்ன?**

ஓவியமென்பது பலதளங்களை உடையதாக இருக்கவேண்டும். நானொரு *gay* என்று சத்தம் போட்டுக் கூறத் தேவையில்லை. அது சுவ ரொட்டி போலாகிவிடும். அது எனக்கு விருப்ப மானதல்ல. கையுயர்த்திக் கோஷம் இடுவது என் நோக்கமல்ல. எதனையும் பலதளங்களில் வைத்துக் கையாளவே நான் விரும்புகிறேன்.

**காந்தியக் கருத்துநிலையோடு நெருக்கம் உடையவராக, உங்களைக் குறிப்பிட்டிருக் கிறீர்கள். காந்தியம் எப்படி உங்களைப் பாதித்தது? காந்தியின் பாலியல் தொடர் பான பார்வையிலிருந்து விலகியது உங்கள் நிலைப்பாடு – உங்களிடம் ஒருவகையான பாலியல் கொண்டாட்டம் (*sexual celebration*) உண்டு – காந்தியத்தோடான உங்களு டைய உறவு எப்படிப் பட்டது?**

நான் காந்தியின் பெறுமானங்களைத் (*values*) தாண்டிப் போய்விட்டேன். ஆனால், எனது பதினான்காம், பதினைந்தாம் வயதில் இந்தியா வின் மிக முக்கிய நபராக அவர் இருந்தார். அவரது உரைகளும், எழுத்துக்களும் மிகவும் பிரபலமாக இருந்தன. அவரது சுயசரிதையால் நான் ஈர்க்கப்பட்டேன். அது அவருக்கு உள்ளே யிருந்து வந்தது. அவரைப் பின்பற்றி நானும் நாட் குறிப்பு எழுதினேன்; தரையிலேயே படுத்தேன்.

இப்போதும், அவரை ஏன் விரும்புகிறேனெ னில் அவரது உண்மைத் தன்மைக்காகத்தான். மகாத்மா என்று அவரறியப்பட்ட பின்பும், தனது வாழ்க்கைக் குறிப்பில் - தந்தை இறக்கும் போது, தான் மனைவியோடு பாலியலுறவில் ஈடுபட்டதை அவர் எழுதுகிறார். மகாத்மா என்ற கட்டத்தை அடைந்த வேறொருவரால் இது முடி யாது. இந்த மனிதர் மட்டுமே இவ்வகையான விட யத்தை எழுதுகிறார். நானிந்த விடயத்தால் ஈர்க்கப்பட்டேன். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அது சரியோ, பிழையோ தான் உணர்ந்ததை அவர் சொல்லிவிடுவார்.

***Two Men in Benaras* ஓவியத்தில் பாலியலுறவு ஒரு புனிதப் பிரதேசமாகக் கொள்ளப்பட்டு வரும் பிரதேசத்தில் நிலைப் படுத்தப்பட்டுள் ளது. இதேபோல யமுனா நதியும் உங்களால் உள்வாங்கப் பட்டுள்ளது. பாலியலும், சமயமும் உங்கள் வெளிப்பாடுகளில் நெருக்கமான தன்மையுடையனவாக உள்ளன.**

சில வேளைகளில்தான் நான் சமயம் சார்ந்தவன். பல வேளை நான் சமூகம் சார்ந்தவன்.

*Two men in Benaras* பொறுத்தவரை, முழுவளவில் உத்தரப்பிர தேச வலயம் ஆண் முதன்மைச் சமூகத்தை உடையது -இது வொன்று. இந்த அடிப்படையில் நான் சிவலிங்கம் தொடக்கம் அதிலுள்ள மலைகள் வரை ஆண் குறிகளாகச் சித்திரித்துள்ளேன்.

இன்னொரு வகையில், வடக்கில் ஒரு காலம் இஸ்லாமிய மேலாதிக்கம் இருந்தது. இஸ்லாத்தில் ஒரு பாலுறவு பரவியிருந் தது. பெருமளவு சூபிகள் ஒரு பாலுறவாளர்கள்தான். அவர்கள் கடவுளை அழகான, இளமையான ஆணாகவே பார்க்கிறார்கள். ஆனால், இன்று பாகிஸ்தானும், ஈரானும் இதனை மறுக்கும்.

இந்துமதத்தில் இது தொடர்பான ஓரளவு கண்டிப்புக் குறைவு இருந்தாலும் - அது கொடுக்கப்படவுமில்லை; பேசப்படவுமில்லை. கஜிராகோவில் கூட மிகவும் குறைந்தளவு ஒருபாலுறவு சித்திரிப்பே



Two Men in Banaras

உள்ளது. ஆனாலும், இந்துக்களிடையேயும் ஒரு பாலுறவு பெரு மளவுக்குக் காணப்படு கிறது.

**உங்களது *'The Picture of their Thirtieth Wedding anniversary'*, *'Sakhibhav'*, *'Yakjna'* ஆகிய ஓவியங் களில் காணப்படுகிற சேலை அணிந்த ஆண்கள், ஓரளவு மார்பு முன்துருத்திய ஆண்கள் முதலியோர் பால்நிலை உருமாற்றத்தை (*sexual transgression*) பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கொள்ளலாமா?**

சரி, *Sakhibhav* பெருமளவுக்கு கிருஷ்ண வழிபாட்டு மரபுக்குரி யது. கிருஷ்ணன் மட்டுமே ஆண், ஏனையோரெல்லாம் பெண்கள் - கோபிகைகள் என்பதுதான் அந்த மரபு. அவர்கள் பெண்ணாடை புனைந்து, பெண்களாகவே தம்மைப் பாவிக்கிறார்கள். அதன்மீது எனக்கேற்பட்ட கவர்ச்சியே அவ்வோவியம்.

எனக்குக் காரணம் தெரியவில்லை. பெண்கள் பான்டும், சேட்டும் அணிகிறார்கள். ஆனால், ஆண்கள் சேலை கட்டினால் மட்டும், அது குழப்பமாகிறது.

**உங்களுடைய அண்மைய ஓவியக் காட்சியொன்றில் இராமர், சீதை, அனு மான் ஆகியோரையுடைய ஒரு ஓவியமும், *'An Oldman from Vasad, who had five penises'* ஓவியமும் அருகருகே காட்சிப்படுத்தப் பட்டன. அனுமானின் கிழிக்கப்பட்ட நெஞ்சுக்குள் இராமரும்**



படிப்பகம்

www.padippakam.com

**சீதையும் இல்லை, அவர்கள் வெளியே உள்ளனர். இராமரும் சீதையும் இயற்கைப் பாலுறவின் (hetero sexual) சின்னங்கள் – அனுமானின் நெஞ்சில் இப்போது அதன்மீதான நம்பிக்கை இல்லை என்பதா?**

நான் உணர்கிறேன் : இராமனுக்கும் : அனுமானுக்கும் இடையிலான, முழுவளவிலான கவர்ச்சியில் குறிப்பிட்டளவில் பாலியல் நாட்டம் இருப்பதாக. மனிதனின் விலங்கு மீதான கவர்ச்சி. நல்லது, ஓவியக்காட்சியில் யாரும் அதனைக் கண்டு கொள்ளவில்லை அல்லது கண்டும் காணாமல் விட்டுவிட்டார்களோ தெரியவில்லை.

*'An old man from Vasad . . .'* பாலியல் சார்ந்தது என்பதைவிடவும், அங்கதம் அதிகமானது. வாஸாத்தில் ஒரு மனிதனுக்கு ஐந்து குறிகள் இருக்கலாம். ஆனால், அவனுக்கு ஒழுகும் மூக்கு இருக்க முடியாது என்பது போல.

**இதனை வேறொரு விதமாகவும் படிக்க முடியும்: ஒழுகும் மூக்கு இடைவிடாத ஆசையின் ஒழுக்காகவும், ஐந்து குறிகள் கூட ஒருவனின் ஆசைகளைப் பூர்த்தி செய்துவிடுவதில்லை, அது முடிவற்றுப் பெருகுகிறது எனவும்.**

ஆசை, எப்போதும் இருக்கிறது.

***Yayati* உங்களுடைய *gay* ஓவியங்களில் பலம் வாய்ந்த ஒன்று. அதனுடைய உள்ளடக்கத்தை விபரிக்க முடியுமா? உங்களுக்கும் சங்கர்பாய்க்கும் இடையிலிருந்த உறவின் சொந்தக் குறிப்பாகவும் அது இருக்கிறது.**

அது, மகாபாரதத்திலுள்ள ஒரு கதை. அரசனொருவன் வயோதிபத்தையும், பாலியல் வலுவின்மையையும் அடைகிறான். அவன் தனது தனயர்களிடம் அவர்களது இளமையை அவனுக்குத் தருமாறு கேட்கிறான். அவனது இளைய மகன் தந்தைக்கு இளமையைத் தர முன்வருகிறான். இந்தக் கதையைத்தான் நான் எடுத்துக்கொண்டேன். அது என்னைப் பற்றியதும் தான். முதியவன் இளையவனால் தூண்டப் பெறல்.

ஆனால் முதியவர்களுக்கு சமூகத்தில் சரியான இடம் கொடுக்கப்படுவதில்லை. பெரும்பாலான மக்கள் தமது கால இளைஞர்களிலேயே அதிக கவனம் செலுத்துகிறார்கள். மேற்கிலும் சரி, இந்தியாவிலும் சரி, *gay* குழுக்கள் கூட வயோதிகர்களைப் புறக்கணிக்கின்றன. அது கூட, எனக்கு அவர்களது விழாக்களுக்கு சமூகமளிக்க விருப்பமின்மை இருப்பதற்கான காரணங்களில் ஒன்று.

**உங்களுடைய ஓவியங்களில் சுயசரிதைத்தனம் உண்டு – ஒரு கட்புல நாட்குறிப்புப் போல. இது உங்களது ஓவியங்களின் பொதுவான தன்மைகளில் ஒன்று.**

எப்போதும் அல்ல. என்னைப் போன்ற உருவங்கள் இடம் பெறும் - அவையெல்லாமே நானல்ல; நானுமிருப்பேன். *1980*களின் பின்னான பல ஓவியங்களில் நீங்கள் கூறுவது போன்ற தன்மைகள் அதிக முண்டு.

**''பலவீனமானதற்கே கடவுள் உதவுகிறார்'' என்றொருமுறை கூறியுள்ளீர்கள். உங்களுடைய அடையாளப்படுத்தல் எப்போதும் *under dogs* உடன் தொடர்புடையது இல்லையா?**

ஆம். காற்றுவீசும்போது -பாருங்கள் மரம் நிலையாக நிற்கும் -அதனால் பாறி விழுந்துவிடும். ஆனால், புற்கள் பலவீனமானவை, அவை வளைந்து தப்பிக்கொள்ள அதற்குப் படைப்பு உதவியிருக்கிறது. இல்லையா?

**இன்று, அடிப்படைவாத மேலெழுச்சி ஒன்று ஓங்கிக்காணப்படுகையில், நீங்கள் அடிப்படைவாதத்தின் கருத்து நிலைகளைக் கேள்விக்கு உள்ளாக்குகிறீர்கள். குறிப்பாக, இது இரண்டு மட்டங்களில்: ஒன்று, ஒரு பாலுறவு பற்றிப் பேசுதல், இரண்டு, உங்கள் ஆண்கள் சிலவேளை அடைந்திருக்கும் பெண்நிலை உருமாற்றம். அண்மைய தீபா மேத்தா மீதான நடவடிக்கைகளின் பின்னணியில் இதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

இந்து அடிப்படைவாதிகள் - எனக்குத் தெரியவில்லை - என்னுடைய ஓவியங்களை அவர்கள் கிழித்தாலும் கிழித்துவிடுவார்கள். இன்னும் அவர்கள் பார்வை எனது படைப்புகள் மீது விழவில்லை. சில வருடங்களின் முன் அகமதாபாத்தில் எனது ஓவியக்காட்சியொன்றை உசைன் திறந்து வைப்பதாக இருந்தது. ஆனால், இந்து அடிப்படைவாதிகள், அவரைத் தடுத்துவிட்டார்கள். நல்லவேளையாக உள்ளே நுழைந்து பார்க்கவில்லை - ஐந்து ஆண்குறிகளுடைய மனிதன் முதலான ஓவியங்கள் அங்கே இருந்தன.

**உங்களது படைப்புகள், சமூகப் பங்களிப்பு, முதலியனப் பற்றி – கடந்து வந்த காலத்தைத் திருப்பி எப்படி நீங்கள் பார்க்கிறீர்கள்?**

எனக்குச் சரியாகச் சொல்லத் தெரியவில்லை. நான் நினைக்கிறேன்: ஒருவர் தன்னோடு தனது ஸ்தானத்தை எப்போதும் மாற்றிக் கொண்டே இருப்பாரென்று. நான் வரைந்த குறிப்பிட்ட சில ஓவியங்கள் எனக்கு இன்னும் பிடிக்கின்றன. *You can't please all,* சல்மான் ருஷ்டியின் பிரதிமை முதலியன எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது.

எனது படைப்புக்ள் சமூகத்திற்கு நன்மை செய்திருக்கின்றனவா, இல்லையா என்று எனக்கு இன்னும் தெரியவில்லை. சந்தேகமில்லாமல் நான் சொல்லவேண்டும் என உணர்ந்ததை நான் சொன்னேன். நான் நினைக்கிறேன், நான் மிகவும் *bold* ஆக இருந்தேன் - யாரும் பேசத் தயங்கியதை நான் பேசத் தொடங்கினேன்.

காலச்சுவடுக்காகப் பதிவு செய்யப்பட்ட நேர்காணல்

*சந்திப்பும் தமிழாக்கமும் :*
சங்கர் நடராஜன்,
ஏ. எல். அபராஜிரதன், பா. அகிலன்


**புத்தக (சிறு) விளம்பரம்**

புத்தகங்கள் சம்பந்தமான விளம்பரங்களை மிகக்குறைந்த கட்டணத்தில் காலச்சுவடில் வெளியிடவிருக்கிறோம். நூலின் முக்கிய விவரங்கள் தவிர சிறு குறிப்பும் (25 வார்த்தைக்குள்) இடம் பெறும். விளம்பர கட்டணம் ஒரு நூலுக்கு ரூ.100 மட்டுமே. அதே பதிப்பகத்தின் அதிகப்படியான ஒவ்வொரு நூலுக்கும் ரூ. 50. வெளியீட்டாளர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள அழைக்கிறோம்.

விளம்பரம் காலச்சுவடில் முதல் 5 பக்கங்களுக்குள் இடம் பெறும். மாதிரி விளம்பரம் ஒன்று கீழே தரப்படுகிறது.



**புதுமைப்பித்தன் கதைகள்**

தொகுப்பாசிரியர்

ஆ. இரா. வேங்கடாசலபதி

பக். 824; விலை ரூ.350

இந்த முதல் தொகுப்பில் புதுமைப்பித்தனின் எல்லாக் கதைகளும் இடம் பெறுகின்றன. காலவரிசையில் கதைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. முதன்முதலில் இக்கதைகள் வெளியான இதழ்களோடும் புதுமைப்பித்தன் காலத்தில் வெளியான முதல் பதிப்புகளோடும் ஒப்பிடப்பட்டு, திருத்தமான பாடத்தோடு இந்நூல் அமைந்துள்ளது.

**காலச்சுவடு பதிப்பகம்**

669 கே. பி. சாலை

நாகர்கோவில் 629 001




படிப்பகம்

www.padippakam.com

# ஏ. கே. ராமானுஜன் கவிதைகள்

கன்னடத்திலிருந்து தமிழில்: நஞ்சுண்டன்




## புத்திசாலிகளுக்குக் கனவு வந்தால்

பழங்காலச் சீனாவில் புத்திசாலி
ஒருவனுக்குத் தினசரி இரவு
கனவு.

தினசரி இரவு சாத்துக்குடி
வண்ணப் பட்டாம்பூச்சியாகி அல்லியிலிருந்து
செவ்வந்திக்கு

செவ்வந்தியிலிருந்து அல்லிக்குப்
பறந்து பறந்து காற்றில் மிதப்பது போலக்
கனவு

எத்தனையோ இரவு பட்டாம்பூச்சியாகக்
கனவு கண்டு முடிவில்

மனிதனா
பட்டாம்பூச்சியா

இரவின் பட்டாம்பூச்சி
பகல் மனிதனின் கனவோ
பகல்
இரவின் கனவோ

தெரியாமல் பிரமை பிடித்தது

## அதில் இது

காட்டு மரங்களுக்கு நடுவில்
வீடு.
சிமெண்ட் விரிசலின்
புல்.
அமெரிக்க மார்க்கெட்டில்
பச்சையாக அறுத்த கொத்தமல்லிக்
கீரை

## பக்கத்து வீட்டில் உபநிஷத்

கொய்யா மரம். கிளை, கவை
யில் இரு பறவைகள்.

ஒன்று. பழம் கொத்தி எடுத்துத்
தின்கிறது. பசி. தாகம்

மற்றொன்று வெறுமனே உட்கார்ந்து
பார்க்கிறது. உடம்பெல்லாம் கண்.

இப்படி ஒருத்தன் கணவன். அவன் மனைவி.
பக்கத்து வீட்டுச் சம்சாரம்.



படிப்பகம்

www.padippakam.com

## அந்தப் பறவை வேண்டுமென்றால்

மங்கோலியாவில் ஒரு ராஜா
இருந்தானாமே
அவன் எதோ
தூர தேசத்திற்குப் படையெடுத்துப் போனபோது
அங்கொரு புதிய பறவையின் பாடல் கேட்டு
அந்தப் பாடல் எனக்கே வேண்டும் என்று
பாட்டுக்கென்று பறவையைப் பிடித்து
பறவையுடன் சேர்த்துக் கூடெடுத்து
கூடோடு கொம்பு
கொம்புக்குக் கிளை
கிளைக்கு மரம்
மரத்தடியின் வேர்
வேரைச் சுற்றிய கட்டி மண்
அந்த ஊர்
நீர்
பருவ மழை
அந்தப் பகுதி
தேசம்
அந்த ராஜ்யம் முழுவதும்
அனைத்தும் பிடித்துப் போட
நினைத்து
போன வந்த யானை குதிரை தேர்
படை எல்லாம் கூட்டி
ராஜ்யம் முழுவதையும் வென்று
தன் நாட்டோடு சேர்த்துக் கொண்டான்

வீட்டிற்கே போகவில்லை.



## புலம்பெயர்ந்து வந்த காடு

குளிர் என்று வடக்கிலிருந்து தெற்கே வருடாவருடம் பறந்து
ஆயிரமாயிரம் மைல் புலம்பெயர்ந்து வந்த குடித்தனம்

பறவைகளின் எச்சம் விழுந்து வீட்டிற்கு வரும் வழி
யில் ஒவ்வொரு அடிக்கும் காடு வளர்ந்து அவரி

வரின் காட்டில் வழி தவறியது. தூக்கத்தில் கிளை,
திரும்பத் திரும்ப விழுந்த விதை, நிலத்திற்குள் தெரிந்த காட்டிற்

குள்ளான காடு, விழித்த பசுமை -
இரவுயிலையைக் குலுக்கிய ஆகாயம்.

கிலி தடுக்கியபோது காகிதப் புலி தின்ற
நிஜ ஆட்டின் -

உடல். அருகில் பக்கத்து வீட்டுப் பையன் தொலைத்த சைக்கிள்
சக்கரம்.

## மீந்தது

மீந்தது
ஓர் உதடு:
சாப்பிடுவது எப்படி?

மீந்தது
ஓர் இறகு:
மரத்திலிருந்து மரத்திற்கு


பறப்பதற்குப் பதில்
அடிமரத்திலிருந்து அடிமரத்துக்குத்
தாவ வேண்டும்.

மார்கழியின் இளம்
வெயிலிலும்
இப்படித் தோன்றுகிறது

என்று தெரிந்திருக்கவில்லை.


படிப்பகம்

www.padippakam.com



## தியானம் பலித்தால்

நாள் முழுக்க நான் ஒரு மரம்
நானும் ஒரு கரிய வால்நட்மரம் என்று
தியானம் செய்தேன்.

மாலை வேளைக்கு மூன்றாம் வீட்டு வெள்ளைச்
சடை நாய்
முகர்ந்தபடி வந்து பின்னங்காலைத் தூக்கி என்
கால்மேல்
வெதுவெதுப்பாக
ஒன்றுக்கிருந்தது.

இரவு பெரும் மழை, சூறைக் காற்று வீசி
வேருடன் மரம் உருண்டு வானத்துக்கு
வேரைத் தூக்கிக் காட்டியது

முனிசிபாலிட்டிக்காரர்கள் லாரி
எலெக்ட்ரிக் ரம்பம் கொண்டு வந்து வெட்டி
நிரப்பிக்கொண்டு போனார்கள்.

தச்சன் சின்ன ரம்பத்தை ஆட்டி இழைத்து
தேன் மெழுகு போட்டுப் பாலீஸ் செய்து
மேஜை நாற்காலி எல்லாம் செய்துகொடுத்தான்.

மீந்த இலை பட்டை இதையெல்லாம். அரைத்து
சலித்துப் பேப்பர் மில்
காகிதம் செய்துகொடுத்தது.

இப்பொழுது இங்கே நாற்காலியின் மேல் அமர்ந்து
மேஜைமேல் காகிதம் விரித்து இதையெல்லாம்
எழுதிக் கொண்டிருப்பது
நான் எனது தலை, முண்டத்தின் மேல்.
அதென்னவோ காலே கம்பம் தலையே கலசம்
என்கிறார்களே அப்படியே ஆகிவிட்டிருக்கிறது.

## பாண்டியாட்டம்

இது சதுரங்கம்
அல்ல, வீட்டின் பின்புறச் சந்தின்
பாண்டியாட்டம்

இரண்டு கால்களில் முழு உடல்
வீட்டிலிருந்து வீட்டுக்குத் தாளம் போட்டு
நொண்டி உதைத்து

அக்கரை அடைந்து ஒரு கணம் மட்டும்
இரண்டு கால்களையும் ஊன்றி ஆசுவாசம் கண்டு
தடக்கென்று திரும்பி ஒத்தைக்காலில்

புறப்பட்டவிடத்துக்கே மீண்டும் தாய்வீடு
வந்து சேரும் - வாலிபம்
அடைவதற்கு முன் ஆண்

பிள்ளைகள் கூட மெய்மறந்து
ஆடும் - பெண் பிள்ளைகளின்
பூப்பெய்தும் ஆட்டம்
எங்கள் வீட்டுச்

சந்தின் இந்த ஆட்டத்தையே
ஆப்பிரிக்காவில் ஜெர்மனியில் கண்டு
ஆச்சரியமுண்டானாலும் வெடிகுண்டு போலியோ
முதலானவை தாக்காத காலிருந்தால்
கருப்பு வெள்ளை மஞ்சள் உடம்பு எல்லாம்
எங்கெங்கும் ஆடுவது பாண்டியாட்டம்.

விளையாட்டே என்று எண்ணிப்
பக்கத்து வீட்டில் ஆப்பிரிக்கா
எதிர் வீட்டில் ஜெர்மனி

சின்னக் குழந்தைகள் விழுங்கிய வீதி மண்ணில்
விஸ்வ
ரூபம் கண்டாற்போல ஒரு நிமிடம்
திக்பிரமை பிடித்தது.



படிப்பகம்

www.padippakam.com

## அப்பா, மகன்

குளியலறை வட்டிலில்
அப்பா மறந்த புதுப் பல்செட் சுதந்திரமாகப்
பல்லிளித்தது.

நான் பார்த்தேன்.

## ஒரு கணம்

*1940* இருக்க வேண்டும்.
எங்கள் அப்பாவின் பெரிய மச்சான்
எங்கள் பெரிய அத்தையுடன்
மைசூருக்கு நாலு நாள் வந்திருந்தார்

இரவு
வீட்டுக் குழந்தைகளையெல்லாம் மாடியறையில் உட்கார்த்தி
அப்பாவின் டேபிள் லாம்ப் கொண்டுவந்து
அதன் முன்னால் பெட்ஷீட்டால் திரைபோட்டு
பத்து விரலின் நிழல் காட்டினார்.

ஒரு கணம் விரல், ஒரு கணம்
காது உயர்த்தி மியாவ் என்கிற பூனை.
மீண்டும் விரல், மறுகணம் குலைக்கும் நாய்.
பார்த்துக்கொண்டிருக்கும் போதே
கொக்கிலிருந்து வாலின் இறக்கையைச் சொரிந்து கொள்ளும் வாத்து,
அதற்கொரு ஓட்டை வடிவிலான கண் கூட
மீண்டும் விரல். பத்து விரல். இரண்டு கை.
அதே பெரிய மாமா.
பெட்ஷீட்டின் திரை
கண நேரம்.
பூனை, நாய், வாத்து எல்லாம் விரலின் மாயம்,
கண நேரம். நாற்பத்தெட்டு வருடத்து நிழலின்
முந்தைய விரல், பெரிய மாமாவின் பின்னே
பெரிய அத்தை, அப்பா, அம்மாவின் அந்த மாடி, குழந்தைகள்,
இந்த எழுத்து, இந்தப் பக்கம், இதற்கு முந்தைய பிந்தைய நான்,
இந்தக் கணம்.



இலக்கிய ஆர்வமுடைய ஒரு நண்பர் சமீபத்தில் கேட்டார் 'ஏ. கே. ராமானுஜன் கன்னடத்தில் எழுதியிருக்கிறாரா?' பொதுவாகக் கன்னடம், தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு ஏகமாக மொழியாக்கம் செய்தவர் என்பதாகவே ராமானுஜனின் படிமம் (தமிழ்ச் சூழலில்) உள்ளதை அறிந்தேன். எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. ராமானுஜன் கன்னடத்தில் குறிப்பிடத்தக்க அளவு எழுதியுள்ளார். கன்னட நவ்ய இயக்கத்தின் முன்னோடிக் கவிஞர்களில் ஒருவர். *தொப்புளில் பூ இல்லை* (1969), *மற்றும் இதரக் கவிதைகள்* (1977), *பாண்டியாட்டம்* (1990) இவை அவரது கன்னடக் கவிதைத் தொகுதிகள். ராமானுஜன் கன்னடத்தில் எழுதிய கவிதைகளை அவரே ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யவில்லை. அதுபோலவே அவர் ஆங்கிலத்தில் எழுதிய கவிதைகளை அவரே கன்னட ஆக்கம் செய்யவுமில்லை. ராமானுஜன் எழுதியுள்ள *அண்ணையனின் மானுடவியல்* (1972) தேர்ந்தெடுக்கப்பட்டக் கன்னடச் சிறுகதைத் தொகுதிகளில் இடம் பெற்றுள்ளது. *மற்றொருவனின் சுயசரிதை* அவரது குறுநாவல். தன் மனைவி ஆங்கிலத்தில் எழுதிய ஒரு நாவலை ராமானுஜன் கன்னடத்திற்கு மொழிபெயர்த்திருக்கிறார். இங்கு ராமானுஜனின் சில கவிதைகளைத் தேர்ந்தெடுத்துத் தமிழ் வாசகர்களுக்குத் தந்திருக்கிறேன். இயல்பு நவிற்சி, வார்த்தைகளைப் பிரிப்பதினால் புதிய தொனியை உருவாக்குதல் போன்ற தன்மைகள் அவரது பல கவிதைகளில் காணப்படுகின்றன. இயல்பான பார்வையில் தொடங்கித் தத்துவார்த்தம் உருக்கொள்வது ராமானுஜன் கவிதையாடலின் சிறப்புத்தன்மை.

**நஞ்சுண்டன்**

*ஓவியங்கள் : மாரிமுத்து*



படிப்பகம்

www.padippakam.com

## அதிசயப் பிறவி வ.ரா.

ஆசிரியர் : *சிட்டி, பெ.சு.மணி*

வெளியீடு : *விஜயா பதிப்பகம்*
*20 ராஜவீதி*
*கோயம்புத்தூர் 641 001*

பக். *336;* விலை ரூ. *100* (1999)

பழ. அதியமான்

இந்தப் பெயரில் 'வாழ்க்கை வரலாறு' என்ற வகையில் நூலொன்று சமீபத்தில் வெளிவந்துள்ளது. இரண்டு பகுதிகள் அடங்கிய இந்நூலின் முதல் பகுதியைச் சிட்டி' எழுதியுள்ளார். இப்பகுதியில் வாழ்க்கை, நாவல்களும் சிறுகதைக ளும், தமிழ்ப் பெரியார்கள், சொர்க்கத் தில் சம்பாஷணை, நடைச்சித்திரம், வாழ்க்கை விநோதங்கள், வ.ரா.வின் கட் டுரைகள், கலை உணர்வு, நாடகம் என்ற தலைப்புகளில் வ.ரா.வின் வாழ்க்கையும் இலக்கியமும் விளக்கப் பட்டுள்ளன.

வ.ரா.வின் வாழ்க்கை, நாடக பாணி யில் சொல்வதற்கேற்ற மேடுகளும், (பெரும்பாலும்) பள்ளங்களும், போராட்டங் களும், தோல்விகளும் நிறைந்த வேதனைக் களஞ்சியம். நாடோடியின் வாழ்க்கையோ என்று கவலை தொனிக் கும் படியாக ஊர்கள்தோறும் ஓடிய வாழ்க்கை. திங்களூர், திருப்பழனம், திரு வையாறு, தஞ்சாவூர், திருச்சி, புதுவை, சென்னை, சேலம்(?), கல்கத்தா, மதுரை, காரைக்குடி, புனா, அலிப் புரம், கொழும்பு, வேலூர் எனப் பல ஊர்களில் கழிந்திருக்கிறது அவர் வாழ் நாள். அவர் சந்தித்த வாழ்க்கைச் சிக்கல்களுக்கும் குறைவில்லை. மணிக் கொடி சீனிவாசன் சொன்னது போல 'முன்னால் முகஸ்துதி, பின்னால் புறக் கணிப்பு'. படிப்பில் பிரச்னை, சாதி பகிஷ்காரம், கட்சியில் அவமதிப்பு, பார்ப்பனர் - பார்ப்பனரல்லா தார் சிக்க லில் இரண்டாட்டில் ஊட்டின குட்டி யின் நிலை, 'மணிக்கொடி'யிலிருந்து முன்னறிவிப்பற்ற நீக்கம், கையில் காசு புரளாத, நிரந்தரமில்லாத வேலை. இப் படி அவர் பட்ட துன்பங்கள் பல. இவை பற்றி எல்லாம் இந்நூலில் போதிய விவரங்கள் இல்லை. ஓரிரு துண்டுகளே யானாலும் வ.ரா.வைப் பார்த்து பழகிய வர் எழுதியது ஆயிற்றே என்ற எதிர் பார்ப்புடன் நூலை வாங்கிப்படித்தால் ஏமாற்றம். ஏமாற்றம்.

விவரிக்கப்பட்ட வாழ்க்கையின் பகுதிகளும் முரண்களைக் கொண்டுள் ளன. "பாரதியாருடனும், அரவிந்தருட னும் தாம் புதுச்சேரியிலிருந்த நான் காண்டு காலத்தில் நெருங்கிப் பழகும் வாய்ப்புப் பெற்ற வ.ரா. அவர்கள் இரு வரையும் பற்றி வர்ணிக்கிறார்" என்று ஒரு குறிப்பு (பக்.22) வருகிறது. 'புதுவை யில் இருந்த இரண்டரை ஆண்டுக் காலத்தில் பாரதியாரின் புரட்சிக் கொள் கைகள் வ.ரா.வுக்கு ஊக்கமளித்தன' என 148ஆம் பக்கத்தில் இன்னொரு குறிப்பு வருகிறது. எது சரி என்ற ஆராய்ச்சி ஒருபுறமிருக்க, தமக்கே குழப்பமான தகவல்களை எதற்குப் பயன்படுத்த வேண்டும்?

வ. ரா.வின் 'விஜயம்' நாவலின் தோற் றத்திற்கான காரணத்தை "முதல் நாவ லில் தாம் கையாண்ட பிரச்னைக்குத் தீர்வு, எல்லோருடைய வாழ்க்கையிலும் சாத்தியமில்லை என்பதை எடுத்துக் காட்டவே இந்த நாவலை எழுதினார்" என்று சிட்டி குறிப்பிடுகிறார். இதற்கு ஆதாரம் என்ன என்பது தெரியவில்லை. கைம்பெண்கள் அனைவருமே மறு மணம் செய்துகொள்ள வேண்டும், முடி யும் என்பதுதான் வ.ராவின் கருத்து. அது சாத்தியமில்லை என்றால் அது அவருக்கு வருத்தத்தையும் கோபத்தை யுமே தரும். இளம் வயதிலேயே வித வையாகி, மறுமணமே செய்துகொள்ளா மல் சமூகத் தொண்டாற்றிய சகோதரி சுப்புலக்ஷ்மி அவர்கள் ஏற்பாடு செய்த விழாவிலேயே, சகோதரி மறுமணம் செய்துகொண்டு சமூகத்திற்கு வழி காட்டியிருக்க வேண்டும்; அப்படிச்



வ. ரா.

செய்யாதது அவரது தவறு என்று கண் டித்து வ.ரா. ஆற்றிய சொற்பொழிவிலி ருந்து (சகோதரி சுப்புலக்ஷ்மி – பக் 84) இது நமக்குத் தெரிகிறது.

முதல் பகுதி கதை மற்றும் கட்டுரை களின் சுருக்கங்களைத் தரும் வேலை என்றால் இரண்டாவது பகுதி வ.ரா. வின் பல கட்டுரைப் பகுதிகளுக்குச் சிறுதலைப்புகள் தரும் பத்திரிகை உதவி ஆசிரியர் வேலை. முதல் பகுதியைப் பார்க்க இரண்டாவது பகுதி பரிதபிக்கத் தகுந்ததாக இருக்கிறது. டி.கே.ஸி.யின் வாழ்க்கை வரலாறு பற்றிய நூலுக்கு புதுமைப்பித்தன் சொன்ன விமர்சனத்தைத் திருப்பி சொல்லத் தோன்றுகிறது. 'கடுகு பத மாகு முன்பு தாளித்த உப்புமா மாதிரி டி.கே.ஸி.யின் அமிசங்கள் நன்றாகக் கலவையாகாமல் தனித்தனியே மிதக் கின்றன.'

வ.ரா.வின் இலக்கிய நோக்கை விவ ரிக்கும் கட்டுரை நகைப்புக்குரியதாக இருக்கிறது. 1914இல் 'ஞானபானு'வில் ராமஸ்வாமி அய்யங்கார் என்ற பெயரில் இலக்கியப் பணி தொடங்கியதிலிருந்து 1948இல் 'புண்யமும் பலவீனமும்' நூல் வரை அவரது இலக்கிய நோக்குக்கு உதாரண பத்திகள் காட்டப்படுகின்றன. 1914இல் எழுதியதற்கும் (அதாவது 25 வயதில்), 1948இல் எழுதியதற்கும் (அதாவது 59 வயதில்) அனுபவத்தில் முதிர்ச்சி, கருத்து நிலையில் மாற்றம், கைப்பக்குவத்தில் மாறுதல் எல்லாம் தோந்திருக்காதா? அதைப்பற்றி எல் லாம் எந்த விவரணையும் இல்லாமல், மொண்ணைத்தனமாக அவரது எழுத்துப் பகுதிகள் கையாளப்பட்டுள்ளன. சூழ் நிலையைப் பொருத்தது அல்லவா சொல் லின் பொருள்? பிறக்கும் போதே அறிஞ ராகப் பிறந்தவரைப் போல கருத்துகள் பேசப்படுகின்றன. போற்றி அகவல் எழுதுவதற்கு வேண்டுமானால் இந்த மனநிலை பயன்படலாம்.

வ.ரா.வின் இலக்கிய நோக்கில் பல மாற்றங்கள் (இதைச் சறுக்கல்கள் என் பாரும் உளர்) ஏற்பட்டிருப்பதை வ.ரா. வைப் படித்தவர்கள் உணர்ந்திருக்கக் கூடும். சான்றுக்கு ஒன்று. 'தினமணி' 1935 செப்டம்பர் 21 இதழில், பி.எஸ். இராமையாவும், புதுமைப்பித்தனும் கொழும்புவில் இருந்த வ.ரா.வுக்கு எழு திய பகிரங்கக் கடிதம் ஒன்று இப்படிச் செல்கிறது: (அன்னை இட்ட தீ, பக் – 352, 353).

"...நீங்கள் இங்கு இந்தியாவில் இருந்தபோது, எங்களுடன் பழகிய காலத்தில் தினம் ஒருமுறையாவது தமிழ்ப் பத்திரிகைகளில் நடதத்தப்படும் போட்டிப் பரிசு மோசடியை அழுத்த மாகக் கண்டிக்காமலிருந்ததில்லை. ஆனால் இன்று வ.ரா.! நீங்களே பொறுப்பு வகித்து ஆசிரியராக இருந்து நடத்தும் 'வீரகேசரி'யில் போட்டிப் பரிசை நடத்தி வருகிறீர்கள். இந்த மாற் றம் எப்போது வந்தது தங்களுக்கு?"

என்ற கேள்வியோடு தொடங்கும் அக்கடிதம், 'மனசாட்சி, கழுதை, குதிரை எல்லாம் ஒன்றுதான்' என்ற பெரிய உண்மையை நீங்கள் இலங்கை யில் போய்த்தான் தெரிந்து கொண்டீர் களா?" என்று கிண்டலுடன் தொடர் கிறது. இன்னொரு சான்று: "ஜோதிட மும் தெரியாது ஆருடமும் பழக்க மில்லை" என்று கிண்டலடித்து இவற் றில் கொஞ்சமும் நம்பிக்கை இல்லாத வராகத் தன்னை அறிவித்துக் கொண்ட வ.ரா. பின்னாளில் தான் ஆசிரியராக விருந்த 'பாரத தேவி'யில் ஜோதிடத்திற் கென்று 'நட்சத்திர பலாபலன்' என்ற தனிப் பகுதியே ஆரம்பித்தார். தவிர ஜென்ம நட்சத்திர பலன், கோசார பலன், நட்சத்திர குணாதிசயங்கள் என்ற பெயர்களில் கட்டுரைகளும் அவ்வப்போது உண்டு.

கவனிக்க (கண்டிக்கவும்) வேண்டிய மோசமான பழைய சனாதனத்தின்



படிப்பகம்

www.padippakam.com

குரல் பளிச்சென வெளிப்படுவது 'வாழ்க்கைத் தத்துவம்' கட்டுரையில். இராஜாஜி, பாரதியாரை 'வேதாந்தி'யாகச் சித்திரித்ததை, வ.ரா. 1944இலேயே 'மகாகவி பாரதியார்' நூலில் கடுமையாக மறுத்து எழுதிவிட்டார். அம்மறுப்பிலிருந்து சில சொற்களை எடுத்து வைத்துக்கொண்டு சிலம்பம் விளையாடுகிறார் இரண்டாவது பகுதியின் நூலாசிரியர். "வேதாந்தப் பயிற்சி இல்லாதவர் வ.ரா. பாரதியாரின் வேதாந்தப் பாடல்களில் வ.ரா.விற்கு பயிற்சி இல்லை'' என்றெல்லாம் குற்றஞ் சாட்டுகிறார்.

"சாதிச் சனியனே வேண்டாமென்று கலப்புமணம் செய்து கொண்ட வ.ரா.வை, கலப்பு மணத்தால் பிறந்த தன் மகனை எந்தச் சாதியில் சேர்ப்பார்" என்று கேட்டது எவ்வளவு அபத்தமோ அவ்வளவு அபத்தம் இந்த வேதாந்தப் பயிற்சி விஷயமும். வேதாந்தச் சனியன்தான் நமது நாட்டு மக்களைச் சோம்பேறிகளாக்கி, திண்ணைப்பேச்சு வீரர்களாக்கி, தோல்வியை ஏற்றுக்கொள்பவர்களாக்கி அடிமைகளாக்கியது என்று கருதியவரை வேதாந்தப் பயிற்சி எடுக்காதவர் என்று சொல்வது கேலி செய்வதாகும். பாரதியாரின் வேதாந்தப் பாடல்களை வ.ரா. படிக்கவில்லை என்பதும் கல்கி வ.ரா.வை நிரட்சர குட்சி என்றதும் ஒரு கோட்டில் நிற்கும் விருப்பு வாதங்களே.

'பாரதியார் ஆஷாடபூதி, வேதாந்தியே அல்ல' என்ற வ.ரா.வின் வாக்கியத்தைக் கொண்டு, இப்படி அவர் சொல்லும் போது 'பாரதியார் உண்மையான வேதாந்தி என்னும் பொருள் தொக்கி நிற்கிறதல்லவா?' (பக். 299-300) என்று பரிதாபமாய்க் கட்சி பேசுகிறார் இ.ப. நூலாசிரியர். வ.ரா. சொல்லியதில், தனக்கு வேண்டியதை மட்டும் கொண்டு மற்றதை சௌகரியமாய் மறந்துவிடும் இ.ப. நூலாசிரியர் மகாகவி பாரதியார் நூலின் 154ஆம் பக்கத்தில் 'பாரதியாரை வேதாந்தி என்று அழைப்பது பெரும் பிழை' என்று எந்த (அடைமொழி) குழப்பமும் இல்லாமல் சொல்லியிருப்பதைக் கவனித்திருக்கலாம்.

வ.ரா. கேட்கிறார்: "வேதாந்தத்தின் அடிப்படைக் கொள்கையான மாயையைக் கண்டால் பாரதியார் சீறி விடுவார். 'தங்கச் சிலை போல நிற்கிறாளே மனைவி. நமது துயரத்துக்கெல்லாம் கண்ணீர் விட்டுக் கரைந்தவள். நமது மகிழ்ச்சியின் போதெல்லாம் உடல் பூரித்தாள். நமது குழந்தைகளை வளர்த்தாள். அவள் பொய்யா? குழந்தைகளும் பொய்தானா? பெற்றவர்களிடம் கேட்கிறேன், குழந்தைகள் பொய்யா?' என்று பாரதியார் ஆத்திரத்தோடு கேட்கிறார். எனவே பாரதியாரை வேதாந்தி என்ற அழைப்பது பெரும்பிழையாகும்" (மகாகவி பாரதியார் - பக். 154).

மொத்தமாக பார்க்கிறபோது, வ.ரா.வின் வாழ்க்கையையும் இலக்கியத்தையும் ஆராய்கிற போர்வையில் வ.ரா.வைப் பழைய சனாதனக் கட்டுக்குள் கொண்டு சேர்க்கும் முயற்சியையே இந்நூல் செய்கிறது.

சனாதனக்கட்டுக்குள் அடங்காமல் திமிறும் வ.ரா.வைக் கடிந்து கொள்ளவும் தயங்கவில்லை இரண்டாவது பகுதி ஆசிரியர். ஒருமுறை இராஜாஜி, பார்ப்பனர் சங்கத்தில் பேசும்போது இப்படி பேசியிருக்கிறார்: 'பரம்பரை மூலமாக பிராம்மணர்களுக்கு கிடைத்திருக்கும் அவர்களுடைய சிறப்பான நாகரிக வாழ்க்கைப் பண்பைப் பற்றி நான் பெரிதும் கர்வப்படுகிறேன். அதைப் பாதுகாப்பதற்காக வீட்டிற்கு ஒரு பிள்ளையை ஒதுக்கி வையுங்கள். அவர்கள் வேதம், உபநிஷதம், இதிகாசம், சாஸ்திரம் முதலியவைகளைக் கற்று உணர்ந்து அந்தப் பண்பைக் காப்பாற்றட்டும்.'' இந்த யோசனையை வ.ரா. 'ஆரியஸ்தான்' யோசனை என்று குறிப்பிட்டதோடு, நம்மவர்களை அடிமைப்படுத்த பிரிட்டிஷாரும், நம்மவர்களை அழிப்பதற்கு அணுகுண்டும் தேவையில்லை. ஜின்னாவின் பாகிஸ்தான், ராமசாமி பெரியாரின் திராவிடஸ்தான், அம்பேத்காரின் ஹரிஜனஸ்தான், ராஜாஜியின் ஆரியஸ்தான் போன்ற யோசனைகளே போதுமானவை' என்று விமர்சித்தார்.

இவ்விமர்சனத்தைத்தான் இ.ப. ஆசிரியர், ''உணர்ச்சிப் பெருக்கில் அலைப்புண்ட விமர்சனம்" என்கிறார் (பக். 282). ''ஜின்னா பரிந்துரைத்த பாகிஸ்தான் தவிர பிற ஸ்தான்கள் எதுவும் இந்திய தேசிய ஐக்கியத்திற்கு அறைகூவலாக அமையவில்லை...'' என்று சொல்லும் நூலாசிரியரின் உட்கருத்து என்ன? இராஜாஜியின் ஆரியஸ்தான் யோசனை, மிக நல்ல யோசனை. பார்ப்பனர்களை மக்கள் சமூகத்தினரிடமிருந்து தனித்துக் காட்டி உயர்த்திக்காட்டும் நிலையாகவே இந்த யோசனை பயன்பட்டிருக்கும். தற்போது ஏற்பட்டிருக்கும் 'இந்துஸ்தான்' நிலைக்கும் நன்றாகப் பயன்பட்டிருக்கும் என்ற எண்ணம்தானே!

'ஸமூகத்தொண்டை பொருத்தமட்டில் அவர் (வ.ரா.) ஒரு கருகிய மொட்டு. சிதைந்த சீர்திருத்தவாதி'' என்ற வ.ரா.வைப் பற்றி (மோசமான) கருத்தறிவித்த கு. சீனிவாசன் அவர்களின் கருத்தையே பிரதானப்படுத்த முயலும் (இந்நூல் அவருக்கே காணிக்கையாகவும் ஆக்கப்பட்டிருக்கிறது) நூலாசிரியர்கள் வ.ரா.வை இலக்கிய வட்டத்துக்குள் மட்டுமே பார்க்க விரும்புகிறார்கள். ஆனால் சமூகத் தளத்தில் வ.ரா. தெரிவித்த கருத்துகளின் விளைவாய் அவருக்குத் திராவிட இயக்கத்தவரால் அளிக்கப்பெற்ற பிரபலமடைந்த வாழ்த்துத் தொடரின் ஒரு பகுதியைத் தலைப்பாக்கியிருக்கிறார்கள். இந்த வியாபாரத் தந்திரத்தை என்ன சொல்வது?

அடுத்த பதிப்பில் திருத்தம் செய்து கொள்ள இந்நூலில் உள்ள சில தகவல் பிழைகளை எடுத்துக் காட்டுகிறோம்.


அப்படியே நிற்கட்டும்

அந்த மரம்

*(கவிதைகள்)*

ராஜமார்த்தாண்டன்

''கவிதை ஒரு மோகனமான கனவு... மாபெரும் கனவு. இந்த பிரபஞ்சத்தையே அளக்க முயலும் கனவு. எனவே பிரபஞ்சத்திற்குள் பட்ட எல்லாமும் கவிதைக்கான விஷயங்களாகின்றன."

*விலை ரூ. 20*

அஜிதா பதிப்பகம்
இடையன் விளை, சந்தையடி
கொட்டாரம் 629 703
கன்னியாகுமரி மாவட்டம்


(1) பக்கம் 70இல் தினமணி இதழ் தொடக்கம் 17.9.1934 என்றும் பக்கம் 73இல் 11.9.1934 என்றும் இரு தேதிகள் குறிக்கப்பட்டுள்ளன. பின்னதே சரியானது. (பவ ஆண்டு ஆவணி மாதம் 26ஆம் தேதி செவ்வாய்க்கிழமை.)

(2) பக்கம் 226இல் 'மழையும் புயலும்' நூலில் உள்ளவை 45 கட்டுரைகள் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. அவை 44 கட்டுரைகள்.

(3) பக் 266இல் வீரேசலிங்கம் பந்துலு 'கன்யா சுல்கம்' நூலின் ஆசிரியர் என்று குறிப்பிடப்படுகிறது. கன்யா சுல்கத்தை எழுதியவர் குருஜாடா அப்பா ராவ்.

(4) பக் 272இல் காதரைன் மேயோ 'மதர் இந்தியா' என்ற நூலை 1928இல் வெளியிட்டார் என்ற தகவலும் பிழை. அது வெளிவந்த ஆண்டு 1927.

(5) பக் 372இல் மாயா மேயோ அல்லது மேயோவுக்கு சவுக்கடி எனும் நூல் 1929இல் வெளிவந்ததாகக் குறிப்பு உள்ளது. அது வெளிவந்த ஆண்டு 1928 ஆகும்.

(6) பக் 335இல் வ.ரா. எழுதியவை என்ற தலைப்பில் வ.ரா.வின் படைப்புகளின் பெயர்களும் வெளிவந்த ஆண்டுகளும் தரப்பட்டுள்ளன. அதில் பல பிழைகள் உள்ளன. சான்றுக்கு இரண்டு:

(அ) 'பர்டோலிக்கதை' 1936இல் வெளியானதாகக் குறிப்பு உள்ளது. அது வெளியானது 1935.

(ஆ) ஜவஹர்லால் நேருவின் சுயசரிதை (வ.ரா. மொழிபெயர்த்தது) வெளியான ஆண்டாக 1937ஐக் குறிக்கிறார்கள். 1937இல் வெளியானதாக குறிப்பிடும் இந்நூலுக்கு கு.ப.ரா 6.12.1936இல் 'ஜெய பாரதி'யில் விமர்சனம் எழுதியிருக்கிறார். கு.ப.ரா.வின் விமர்சனம் கற்பனைப் பெருக்கில் அலைப்புண்ட விமர்சனமாக இருக்க வாய்ப்பில்லை. அதனால் அதையும் கவனிக்கவும். ■



படிப்பகம்

www.padippakam.com



# மகா பாரதத்தின் உளவியல் இடைச்செருகல்

யுவன் சந்திரசேகர்



மொழியின் எழுத்து வடிவம் தோன்றுவதற்குப் பலகாலம் முன்பே புனைகதை தோன்றியிருக்க வேண்டும். சொற்கள் வழியாக நிகழ்வுகள் பரிமாறிக் கொள்ளப் படும்போதே புனைவின் அம்சமும் உடன்தோன்றி விடுகிறது. எழுத்தறிவு உண்டாவதற்கும், அச்சுக் கலை கண்டு பிடிக்கப்படுவதற்கும் பல காலம் முன்பே தோன்றிய இதிகாச, புராணங்கள் தம் ஆயுளைச் சொல்கதைகளாகவே நீடித்துக் கொண்டிருக்கும். சொல் கதையாகப் பராமரிக்கப்பட்ட மகா பாரதத்தை அதன் உற்பத்தி ஸ்தானத்துக்கு மீண்டும் கொண்டு சென்றிருக்கும் முயற்சியாகவே எஸ். ராமகிருஷ்ணனின் உப பாண்டவம் தென்படுகிறது.

நிகழ்ந்து முடிந்த ஞாபகக் கதையாக அன்றி, நிகழும்போதே சொல்லப்படும் வாய் வழிக்கதையாக உப பாண்டவம் நகர்கிறது. இரு சூதர்களின் நாவிலும், கேட்கும் பயணியின் செவியிலும் மட்டுமே நிகழ்ந்து கொண்டிருக்கும் கதை ஏற்கனவே அறியப்பட்ட மகா பாரதத்தை ஒரு சந்தர்ப்பமாக மட்டுமே கொண்டிருக்கிறது. கதை சொல்லும் சூதர்களும், பயணியும் வேறு நிலப் பரப்பைச் சார்ந்தவர்களாக இருந்திருக்கும் பட்சத்தில், சொல்லப்பட்டிருக்கும் புனைகதை இராமாயணமாகவோ, வேறு மாகாவியமாகவோ, எதுவாகவுமோ இருந்திருக்க முடியும். இந்தத் தற்செயல் தன்மை, மகா பாரதத்தின் நிகழ்வுகளைப் பின்னொதுக்கிவிட்டு, நிகழ்வுகளின் அடியோட்டமாகத் தொடரும் உணர்வுக் கொந்தளிப்புகளை முன்நிலைப்படுத்துகிறது.

சொல்கதைகளாகத் தம் இருப்பைத் தொடர்ந்து வந்திருக்கும் இதிகாசங்கள் மையப்படுத்தும் கதாபாத்திரங்களின் உறவுநிலைகளும், நிகழ்வுகளும், அவற்றின் விளைவுகளும் நிலையானவை. மூல நிகழ்விலோ, அதன் விளைவிலோ இடைச்செருகல் செய்யும் பிற்காலப் படைப்பாளி, ஏற்கெனவே சொல்லப்பட்டுவிட்ட நிகழ்வுக்கு அனுசரணையான இன்னொரு நிகழ்வைத்தான் கோர்க்க முடியும். ஆனால், நிகழ்வுகளை நிகழ்த்தும் அல்லது எதிர்கொள்ளும் கதாபாத்திரங்களின் உணர்வோட்டங்கள் ஏகப்பட்ட இடைவெளிகளைத் தம்முள் கொண்டிருக்கின்றன. வாசக நிலையிலிருந்து இதிகாசத்துடன் தொடர்புகொள்ளும் மனம் இந்த இடைவெளிகளைப் பிரக்ஞையற்றுக் கடந்து செல்கிறது, அல்லது தன் சொந்த வாழ்வின் கூறுகளால் நிரப்பிப் புரிந்து கொள்கிறது. ஆறுதலும், சுய பச்சாதாபமும், தார்மாவேசமும், தலைகுனிவும் கொள்கிறது. எத்தனை முறைகள் மீள்வாசிப்புக்குப் பிறகும் இதிகாசமும், அது முன்னிறுத்தும் விழுமியங்களும் விசாரணைக்கு அப்பாற்பட்டு, தாம் தோன்றிய இடத்திலேயே நிலைகொண்டிருக்கின்றன.

பின்வரும் காலத்தின் படைப்பாளி, இந்த இடைவெளிகளைப் பார்வை கொள்ளும்போது அவற்றைத் தன்வயமாக்கிக் கொண்டு, தன் படைப்பாளுமையின் சுனைகொண்டு நிரப்புகிறான். அவன் மனைவிக்கு ஒரு நியாயம், அடுத்தவன் மனைவிக்கு வேறொரு நியாயமா என்று அகலிகையின் சார்பாகப் புதுமைப்பித்தன் எழுப்பும் கேள்வியை இங்கு நினைவு கூரலாம்.

எஸ். ராமகிருஷ்ணன் பாரதக் கதாபாத்திரங்களின் உணர்வாழங்களையே தன் எழுத்து நிகழும் களமாகக் கொண்டிருக்கிறார். மகா பாரதம் போன்ற மாபெரும் கட்டமைப்பின் தர்க்கக் கூறுகளைக் கொஞ்சமும் சிதைக்காமல், கதா பாத்திரங்களின் அடிப்படை குணாம்சங்களைத் திருகாமல், அவர்களின் அந்தரங்கத்தின் மடிப்புகளுக்குள் எட்டிப் பார்த்துச் சொல்லும் கதைசொல்லியின் பணியை மேற்கொள்கிறார். உபபாண்டவத்தில் வரும் பயணியும், மகா பாரதத்தை இயற்றியவராகச் சொல்லப்படும் வியாசரும் மேற்கொள்ளும் நிலைப்பாடுகள் வேறு வேறானவை அல்ல. தன் அபிப்பிராயமாகவோ, பாத்திரங்களின் சார்பாகவோ எதையும் சொல்லாமல், நிகழ்வுகளின் பௌதிகத் தளத்தில் பொத்தல் இடுவதன் மூலம், அவற்றின் அ–பௌதிகப் பின்புலத்தைக் கவனத்துக்குக் கொண்டு வருகிறார் ராமகிருஷ்ணன்.

உப பாண்டவம் எனக்கு ஞாபகப் படுத்திய மற்றொரு நூல், ஐராவதி கார்வேயின் யுகாந்தா. யுகாந்தா, மகா பாரதத்தின் அசாதாரண நிகழ்வுகளுக்கு பௌதிகத்தளத்தில் இருக்கும் சாத்தியத் தன்மைகளை, நிகழ்வுகளின் பின்னுள்ள சமூகவியல் பின்னணிகளை, ஆராய்கிறது. உப பாண்டவமோ, மிகச் சாதாரணமாகத் தென்படக்கூடிய சம்பவங்களுக்கும் ஒருவித மாயத் தன்மையை ஏற்றிவிடுகிறது. புலன் அனுபவங்களின் நுகர்முனைகளைக் கலைத்துப் போடுவதன் மூலம் சொல்முறையில் இயல்பாகவே மாயத்தன்மை ஏறிவிடுகிறது.

> இருளின் கதகதப்பை அவர்கள் ருசித்துக் கொண்டிருந்தார்கள்...
>
> திருதராஷ்ட்ரன் காலம் சுழல்வதைத் தன் நாசியால் அறிந்தான்...
>
> அவன் நெருப்பின் கால் தடத்தை மட்டும் கண்டான்...
>
> பகடையோசையின் துகள்கூட அவள் உடல் நரம்புகளை முறுக்கேற்றிவிடுகிறது...

என்பது போன்ற வரிகளின் மூலம் மனிதர்கள் புலன் துறந்த அசரீரிகளாக மாறிவிட்ட களம் உருவாக்கப்பட்டு, அதில் அவர்களின் உணர்ச்சிப் பரபரப்புகள் அடர்த்தியாகச் செயல்படுவது சித்திரமாகிறது.



படிப்பகம்

www.padippakam.com

மகா பாரதத்தை, குழுக்களாய் ஒன்றுபடும் மனிதர்களின் நிலைகளில் உண்டாகும் ஏற்றத்தாழ்வுகளின், அடிப்படையில் மூன்று காலகட்டமாகப் பிரிக்கலாம். கதை ஆரம்பிக்கும் காலத்திலிருந்து, பாண்டவர்களின் பால பருவம் உள்ளிட்டு, சூதாட்டத் தோல்வி வரையிலான காலகட்டம். இதில் தார்மிகமாகப் பாண்டவர்களின் தரப்பும், அரசியல் ரீதியாகக் கௌரவர்கள் தரப்பும் ஓங்கியிருக்கின்றன. சூதாட்டத் தோல்விக்குப் பிறகு, வனவாசம், அஞ்ஞாத வாசம் எனத் துரத்தப்பட்டுப் பாண்டவர்கள் அடையும் சிரமங்களும் அவர் களுக்குக் கிடைக்கும் சம்பந்தங்களும், உதவிகளுமான இரண்டாவது கட்டம். போரும் போருக்குப் பின்னுமான மூன்றாவது கட்டம். இம் மூன்று கட்டங்களிலும் மனிதர்கள் குழுக்களாகவும், குழுவுக்குள் இருக்கும் உறவின் நெருக்கமும் இரண்டு தரப்பிலும் இருப்பதான தோற்றம் இருக்கிறது.

உப பாண்டவத்தின் வழி பார்க்கும் போது, மனிதர்கள் அனைவருமே ஆதரவற்றவர்களாகவும், தனியர்களாவும், மனவாசிகளாகவும், தத்தமது வாழ்வின் ரணங்களை அந்தரங்கமாய்ப் பரிபாலிப்பவர்களாகவும் உருப்பெறுகிறார்கள். அரசனான திருதராஷ்ட்ரனும், வேடுவனான ஏகலைவனும், பாண்டவர்களுக்குத் தங்க இடம் கொடுத்தவனாக அறிமுகமாகும் குயவனும் ஒரேவிதமான தனிமைப் பீடிப்புக்கு ஆளானவர்களாயிருக்கிறார்கள். குறிப்பாக, ஸ்திரீகள். மகா பாரதம் வேறு ஏதோ காலகட்டத்தில் வாழ்ந்த தனியர்களின் கதையாக மீள் கூறப்படுகிறது. அஸ்தினாபுரம், இந்திரப்பிரஸ்தம், விராடநகரம் போன்ற நகரங்களும்கூடத் தனிமையின் தகிப்பில் புழுங்கும் கதாபாத்திரங்களாக உருமாறுகின்றன.

நகரங்கள் நபர்கள்போலும், மனிதக் கதாபாத்திரங்கள் உணர்ச்சிச் சுழல்கள் புரளும் தரைவெளியாகவும் உருக்கொள்கின்றன. நிராதரவின் குமுறல் புத்தகம் முழுவதும் ரகசியமாகக் கேட்டவாறிருக்கிறது.

நகரங்கள் பற்றி ராமகிருஷ்ணன் எழுதிச் செல்லும் பகுதியை இப்புத்தகத்தின் ஆதாரமான பகுதி என்று சொல்லலாம். காணும் நகரின் உள்ளே காணாத நகரங்கள் புதைந்திருப்பதைக் கண்டேன் என்ற வரியில் உப பாண்டவம் நூலின் கருமையம் பிரகடனமாவதாகவே கொள்ளலாம். சொல்லப்பட்ட மனிதர்களின் உள்ளே சொல்லப்படாத உணர்ச்சிக் குமிழ்கள், மூலக்கதையில் சொல்லப்படாத பாத்திரங்களின் வழி கூறப்படும் சொல்லப்பட்ட பாத்திரங்களின் வேதனைகள், காட்டப்பட்ட உறவுநிலைகளின் உட்புறத்தில் காட்டப்படாத மன அரசியல் – பாஞ்சாலி சுயம்வரத்திற்குச் சற்று முன்னாக யுதிஷ்ட்ரனின் மனோநிலையும், சுயம்வரத்துக்குப் பின் பீமனின் உள்ளக்கிடக்கையும், அர்ஜுனனின் மனதின் மகள் வேண்டும் என்ற ஏக்கமும் முன்னுதாரணமான சான்றுகள் – இவற்றின் வழி நகர்கிறது உப பாண்டவம்.

> புதிய நகரங்களுக்கு மனிதர்களை வரச் செய்துவிடுவது போல பறவைகளை வரச்செய்வது இயல்பானதில்லை...
>
> தன்னை மறைத்துக்கொள்ள அணியும் ஒரு ஆடையைப் போல நகரத்தையே தன் உடல்மீது போர்த்திக் கொள்கிறான்...

என்பது போலத் தெறிந்து விழும் வரிகள், கதையின் புனைவுக்களத்திற்கு அப்பாலும் தம் அதிர்வுகளைச் செலுத்துகின்றன. பூமி என்னும் பௌதிக வெளி, புலன் அனுபவமாக அளிக்கும் திடத்தன்மை உருகி, திரவ நிலை பெறுகிறது.

புனைகதை, சம்பவங்களின் காலக்கிரமமான அடுக்குமுறையை முன்வைப்பது. நவீனக் கதைசொல்லி, கால அடுக்கைக் குலைத்துப்போடுவதன் மூலம், கதை கேட்கும்/வாசிக்கும் மனத்தின் கால – வெளி அனுபவத்தை முன்னும் பின்னும் அசைக்க முயல்கிறான். இந்த வகையில் புனைகதை என்பதே ஒழுங்கமைக்கப்பட்ட அல்லது ஒழுங்கு குலைக்கப்பட்ட பட்டியல்தான் என்று கொள்ளலாம். ராமகிருஷ்ணன் மகா பாரத நிகழ்வுகளின்மீது ஏற்றும் பட்டியல் முறைமை, பாரதத்தினுள் செயல்படும் கால அமைப்பை முற்றாக மாற்றியமைக்கிறது. உப பாண்டவத்தினுள், பிறப்பின் அடிப்படையிலும், பிராயத்தின் அடிப்படையிலும் வெவ்வேறு தலைமுறைகளைச் சேர்ந்தவர்கள் அடுத்தடுத்துக் கிடக்கிறார்கள். வியாசரும், துரோணரும், துரியோதனாதியரும் கருவாகத் திரளும் வகைமை அடுக்கப்படும் விதத்தில் தலைமுறைகளின் இடைத் தொலைவு அர்த்தமிழக்கிறது. சந்தனு ராஜனும், அவன் பேரனான திருதிராஷ்ட்ரனும் ஆண்ட பூர்வநகரமான அஸ்தினாபுரமும், அவன் கொள்ளுப்பேரனான அர்ஜுனன் நிர்மாணித்த இந்திரப்ரஸ்தமும் அடுத்தடுத்துக் கிடக்கின்றன. அர்ஜுனன் காலத்திய மாயசபையும், அவன் பேரன் பரீட்சித்து காலத்திய நாக சபையும் அடுத்தடுத்துக் கிடக்கின்றன. காரணமும், நிகழ்வும், விளைவும் என்றான முப்பட்டை அமைப்பு கேள்விக்குரியதாக்கப்பட்டு, மைய அச்சின் பார்வையில் முன், பின் என்ற கால நிர்ணய அடுக்கு நிராகரிக்கப்படுகிறது. காலம் என்ற கருத்துருவம் வெறும் மனோதளமே என ஸ்தாபிதமாகிறது.

மகா பாரதப் பாத்திரங்களின் பெயர்கள், அவர்களுக்கிடையிலான உறவு முறைகள் பற்றி மேலோட்டமான பரிச்சியம் உள்ள வாசகனும் உள்நுழைவதற்கு வழிசெய்கிறது இந்தப் பட்டியல் முறை. இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பக்கமும் மற்றொரு பக்கத்தின் உள்ளடக்கத்தைச் சாராமலிருக்கிறது. புத்தகத்தின் ஏதோவொரு பக்கத்தின் வழியாக வும் வாசகன் உள்நுழைந்துவிட முடியும். சம்பவங்களின் கால அடுக்குமுறையிலிருந்து கதை விடுவிக்கப்பட்டு உணர்ச்சிகளைப் பின் தொடர்வதால், ஒவ்வொரு உபதலைப்பின் கீழ் வருவனவும் தன்னளவில் முழுமையாக இருக்கிறது.

மகா பாரதத்தின் சுவாரஸ்யமான அம்சம் அதற்குள் செலுத்தப்பட்டிருக்கும் இடைச்செருகல்கள். கதையோட்டத்தில் ஒரு கிளைக்கதையாக மட்டுமின்றி, கதாபாத்திரங்களின் மனவோட்டத்திலும் இடைச்செருகல்கள் சாத்தியமாகும் வண்ணம், மகாபாரதத்தில் பதிக்கப் பட்டிருக்கும் பாத்திரங்களின் எண்ணிக்கை, மனிதார்த்தச் சந்திகள், தர்ம சங்கட நிலைகள் போன்றவை அபரிமிதமானவை. அர்ஜுனன் ப்ருஹன்னளை என்ற பேடியாக மாற இயல்வது ஊர்வசியின் சாபத்தினால் என்று ஒரு பூர்வ கதை இருக்கிறது. ராமகிருஷ்ணனின் விவரிப்பிலோ, விழை



வின் தீவிரம் சார்ந்த தியானநிலையின் பயனாக அவன் பேடியுருக் கொள்வதாக அமைகிறது. இரண்டுமே சாத்தியமானவையாகத்தான் தென்படுகின்றன.

அதே போல ஐவருக்கு மனைவியாக இருந்த திரௌபதிக்கு பீமனிடம் மட்டுமே மெய்யான காதல் இருந்தது என்றும், அவன் ஒருவன் மட்டுமே தனக்காக எதையும் செய்யக்கூடியவனாக இருந்தான் என்றும், மறுபிறவி என்று ஒன்று இருக்குமானால், அந்தப் பிறவியில் தான் பீமன் ஒருவனுக்கு மட்டுமே மனைவியாக இருக்கவேண்டும் என்றும் திரௌபதி விரும்பியதாக ஐராவதி கார்வே, மஹாபாரத நிகழ்வுகளை மட்டுமே வைத்து நிறுவுகிறார். உப பாண்டவத்தில்,

> தான் யாருடைய மனைவியாக நடந்துகொள்வது என்பதை அவள் மட்டுமே அறிந்திருந்தாள். ஐவரில் அர்ஜுனன் மட்டுமே அவளுக்கு வசீகரனாயிருந்தான். பீமன் ஒரு திருப்தியற்ற வன விலங்கென்பதை அறிந்துவிட்டாள். அவன் காமத்தைப்


படிப்பகம்

www.padippakam.com

பற்களால் ருசித்திட விரும்பியவ
னாக இருந்தான்.

என்று எழுதிச் செல்கிறார் ராமகிருஷ்ணன். இரண்டுமே சாத்தியம்தான். இரண்டின் அடிப்படையுமே, ஐவருக்கு மனைவியாக ஒரு பெண் இருப்பதில் நேரிடும் ஆண்மனச் சிக்கல்கள்தாம்.

மகா பாரதத்துடன் ஏதாவது ஒரு வகையில் அறிமுகமானவர்கள், உப பாண்டவத்தை வாசிக்கும்போது தங்கள் ஞாபகங்களின் நீட்சியைத் தேடிவருவார்களானால், புதிய ஞாபகங்களுடன் வெளியேறுவார்கள், எனினும் மகாபாரதம் சம்பந்தமாக ஏற்கனவே உள்ள ஞாபகங்களும் கணக்கில் கொள்ளப்பட வேண்டியவையே.

என்னுடைய ஞாபகத்திலுள்ள பாரதத்தில், பாரத நிகழ்வுகள் இரு உலகங்கள் சம்பந்தப்பட்டவை. பூமிக்கோளம் மட்டுமின்றி, வானுலகமும் பங்குகொள்ளும் கதையாகவே பாரதத்தை நான் அறிந்திருக்கிறேன். கந்தர்வர்களையும், தேவர்களையும், பாரதத்திலிருந்து பிரித்துவிட முடியாது. குரு வம்சத்தின் பாதுகாவலராக உருவெடுக்கும் பீஷ்மரே சாபமேற்ற அஷ்டவசுக்களில் ஒருவராகச் சொல்லப்படுபவர்தான். அசுரகுருவான சுக்ராச்சாரியாரிடம் சிரஞ்சீவினி மந்திரத்தைக் கற்க வந்து அவருடைய மகள் தேவயானியின் காதலுக்குப் பாத்திரமாகும் கசனின் துயரமும், பரசுராமரிடம் அந்தணன் என்று பொய்சொல்லி அஸ்திரப் பயிற்சி எடுக்க வந்த கர்ணனின் துயரமும் ஒன்றுக்கொன்று சமானமானவை. தவிர, பாண்டவர்களின் பிறப்பில் தேவலோகத்துக்கு இருக்கும் பங்கும் கவனிக்கத்தக்கது. பீஷ்மர் பிரம்மச்சரிய விரதம் மேற்கொள்ளும் போதும் சரி, அபிமன்யு போர்க்களத்தில் வீரமரணம் எய்தும்போதும் சரி, மகாபாரதம் முழுக்கத் தீயவனாகச் சித்திரிக்கப்படும் துரியோதனன் மற்போரில் தவறான முறையில் கொல்லப்படும்போதும் சரி – தேவர்கள் பூமாரி பொழிகிறார்கள். கையில் பூக்குடலைகளுடன் பூமியின் நிகழ்வுகளை அக்கறையாய்க் கவனித்துக் கொண்டிருக்கும் வானுலக வாசிகள் இன்மை உப பாண்டவத்தில் ஒரு முக்கியமான விடுதலாகத் தோன்றுகிறது.

கிருஷ்ணனின் தகப்பனான வசுதேவனின் சகோதரியே குந்தி என்று வாசித்த நினைவு. உப பாண்டவம், கிருஷ்ணனைப் பாண்டவர்களின் தாய் மாமன் என்கிறது.

அதேபோல, இந்திரப்பிரஸ்தத்தில் பீமனைப் பார்க்கத் தன் தாய் இடும்பியுடன் வந்து, அவமானப்பட்டுத் திரும்பிச் செல்லும் கடோத்கஜன், குருக்ஷேத்திரத்தில் பாண்டவர்கள் சார்பாகப் போரிட்டு இறக்க வருவதற்குக் காரணமான மனமாற்றம் எங்கும் பதிவுபெறாதிருக்கிறது. ஒவ்வொரு சின்னச்சிறு மனமாற்றங்களும், கவனத்திற்குத் தப்பிவிடக்கூடிய சிறுசிறு நிகழ்வுகளும் மகாபாரதத்தின் தர்க்கவலைப்பரப்பில் இறுக்கமாகப் பின்னப்பட்டவை. உதாரணமாக, ஒரு ஆணுக்குப் பிறக்கும் உலக்கையால் யாதவ குலம் அழியும் என்றொரு சாபம் இருக்கிறது. அதன்படி பிறக்கும் உலக்கையை எரித்துக் கடலில் கரைக்க, அதன் சாம்பல் துகள்களை உறிஞ்சி வளரும் நாணல்கள், அழிவு நாளில் குடிவெறியில் அடித்துக் கொள்ளும் யாதவர்கள் பிடுங்கியெடுக்கும்போது ஒவ்வொரு நாணலும் ஒவ்வொரு உலக்கையாய் மாறின என்று ஒரு கதை இருக்கிறது. அப்படியானால் யாதவனான கிருஷ்ணன் மட்டும் ஒரு வேடுவனின் அம்பினால் சாகிறானே என்றால், அதற்கும் ஒரு கதை இருக்கிறது. கிருஷ்ணனின் உள்ளங்காலில் பாய்ந்த அம்பின் நுனி, ஒரு மீனின் வால் என்றும், உலக்கைச் சாம்பலை உண்ட மீன் அது என்றும்.

இதுபோன்ற சிறு சிறு விடுதல்கள், உபபாண்டவம் முன்னிலைப்படுத்தும் மைய அக்கறையின் பார்வைக் கோணத்தில் முக்கியமற்றவையாய்க் கூடத் தோன்றலாம். இவற்றில் சில பின்னாட்களில் இடைச்செருகப்பட்டவையாகவும் இருக்கலாம். என்றாலும், மகாபாரதத்தின் முழு விஸ்தீரணத்தை இதுபோன்ற அம்சங்களும் சேர்ந்தே நிர்ணயம் செய்கின்றன.

மகாபாரதம் திறந்து வைத்திருக்கும் இடைவெளிகள் பன்முகமானவை. அரசியல், சமூகவியல், யுத்தவியல், தத்துவம், மெய்யியல் என்ற பல்வேறு வாசல்களில், உளவியல் என்ற வாசலின் வழியாக ராமகிருஷ்ணன் மகாபாரதத்திற்குள், ஒரு முழு மகாபாரதத்தையே இடைச்செருகல் செய்திருக்கிறார்.

உப பாண்டவத்தை வாசிக்கத் தொடங்கும் வாசகனுக்கு உடனடியாய்க் கிளர்ச்சி தரக்கூடியது அதன் மொழி நடை. ஆனால் எனக்கிருக்கும் முக்கியப் புகாரே ராமகிருஷ்ணனின் மொழியின் மீதுதான். மெய்யில் விசாரணை நடத்தப்படும் மொழிக்கும், மிகையுணர்வின் தழுதழுப்பு பொங்கும் மொழிக்கும் இடையில் உள்ள கோடு மிகவும் மெல்லியதாகப் படுகிறது. அந்தக் கோட்டின் மீது பிறழ்ந்து பிறழ்ந்து நடந்திருக்கிறார் ராமகிருஷ்ணன்.

இரு உடல் சுடர்...

ஆண்பெண் என்பது உயிரோட்டத்தின் திரிபு...

வெயில் ஒற்றைப் பசுவைப் போல முடிவற்ற வெளியை மேய்ந்து கொண்டிருந்தது...

ஒரு நிகழ்வு அதன் ஓராயிரம் கிளை வெடித்துப் பெருகி, திரும்பத் திரும்ப கிளைத்துக் கொண்டே யிருப்பதை...

உடலில் ஓடும் ரத்தத்தின் பல்லாயிரம் கண்கள் யாவையும் கண்டிருக்கின்றன...

கடலின் தீராத வாசனைதான் முத்து வடிவம் கொள்கிறதோ?...

என்பது போன்ற, அடர்த்தியும் ஆழமும் கொண்ட வரிகளின் மூலம், உரைநடையில் சவாரி செய்தபடியே கவிதையின் ரகசியத் தாழ்வாரங்களில் பிரவேசிக்க முயன்றிருக்கிறார் ராமகிருஷ்ணன். இவ்வரிகள் கிளர்த்தும் அதிர்வலைகள் விரிந்து விரிந்து நகரக் கூடியவை.

ஆனால், பொருளேதும் தராத வெற்று வாக்கியங்களும் மலிந்து கிடக்கின்றன புத்தகத்தினுள். மொழியிலக்கணத்தின் அடிப்படை நிபந்தனைகளைக் கவிதை மீறும்போது கவிதையின் கவர்ச்சி கூடிவிடுகிறது. கவிதை தன்னளவிலேயே முழுமையான சந்தர்ப்பமாக (context) இருப்பதால் இது சாத்தியமாகிறது. உரைநடை, சந்தர்ப்பத்தை நெய்து உருவாக்கி, அதன்மீது நிகழ்வுகளையும், அவைபற்றிய விவாதத்தையும் கட்டியெழுப்புவது. உரைநடையில் அதே மீறல் நடக்கும் போது வாசகனின் மனம் நிகழ்வின் பின் தளங்களில் குவிவதற்குத் தடையேற்படுகிறது.

ஒருமையில் துவங்கிப் பன்மையில் முடியும் வாக்கியங்கள், செய்வினையில் துவங்கிச் செயப்பாட்டுவினையில் முடியும் வாக்கியங்கள், தன்மை ஒருமையில் துவங்கிப் படர்க்கைப் பன்மையில் முடியும் வாக்கியங்கள் போன்றவையும், பால் விகுதிகள் தன்னிச்சையாகப் பிறழ்வதும் (இந்த இடத்தில், புத்தகத்தில் கொட்டிக் கிடக்கும் அச்சுப்பிழைகளை எண்ணும் போது மிக மிக வேதனையாக இருக் கிறது) வாசக மனதின் ஓர்மையைக் குலைத்து விடக்கூடியவை.

தவிர, மிகத் தீவிரமான நிகழ்வை விவரித்துச் செல்லும்போது குறுக்கிடும், விசேஷ அர்த்தம் எதையும் தராத/ தட்டையாகக் குறுகும் வாக்கியங்கள் வாசிப்பின் தீவிரத்தையும் குலைப்பவையாய் இருக்கின்றன.

ஓடிக் கொண்டிருந்த மானின் உரோமத்தில் நெருப்பு பற்ற, வலிய உயிர் துறந்தது என்று வாசிக்கும்போது, உயிர் துறந்தது மானா, கரடியா என்று சந்தேகம் உண்டாகிறது.

இன்னமும் வெடித்து உலகம் அறியாது உறங்கும் முட்டையினுள் வாழ்ந்த இறந்த எருதுகள், விலங்குகள், முயல்கள்... (இவை எல்லாமே பாலூட்டிகள்)

தண்ணீரைப் போல எதையும் தன்னுள் அனுமதித்து அழித்துவிட வேண்டியதுதான். (மீன்களும், ஆமைகளும், தவளைகளும், பாசியும் நினைவில் வருகின்றன.)

தண்ணீரின் முன் அவள் பிம்பம் படர்கிறது... (நீரின் செங்குத்து வடிவத்தை மனதில் எப்படி வரித்துக் கொள்ள?)

அவன் நினைவில் குருதியில் நனைந்த பாண்டவர்களின் முகம் அலைபாய்கிறது... (திருதராஷ்ட்ரன் பிறவியிலேயே பார்வையற்றவன்.)

விராடராசனின் அரண்மனையில் அகன்ற கதவுகளுக்குள் அவர்கள் வேறு திசைகளில் பிரிந்து நுழையும்


படிப்பகம்

www.padippakam.com

போது காவல் வீரர்களும், ஒன்றிரண்டு குதிரை வீரர்களும் பிருகன்னளையின் வடிவு கண்டு வெட்கி தன்னை உருவத்திற்கு ஏற்ற ஸ்திரியென கழற்றி அலைந்தனர். (இந்தப் பத்தியின் பொருளை விளங்கிக் கொள்வது சுலபமாயில்லை.)

மகா பாரதத்தின் உள்ளே செயல்படும் காலஅமைப்பு குலைத்துப் போடப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டேன். ஆனால் மகா பாரத காலத்துக்கும், என் சமகாலத்துக்குமான அகண்ட இடைவெளியைப் பிரக்ஞையிலிருந்து கழற்றுவது அத்தனை சுலபமல்ல.

இடைக்காலத் தமிழில் புழங்கிய கொங்கை போன்ற சொற்கள், தட்டளிதல் போன்ற வட்டாரச் வழக்குச் சொற்கள், சமகாலத்தமிழில் தனக்கேயான பொருட்புலம் உண்டாகிவிட்ட சொற்களின் பிரயோகம், (அவன் அவளைக் கண்டபடி பேசிக் கொண்டிருந்தான் என்பதில் கண்டபடி என்பது சுவாதீனமான வாசிப்பில், தாறுமாறாக என்றே அர்த்தமாகிறது. அவன் தன் குடியேறிய கண்களுடன் சொன்னான் என்பதில் குடியேறிய என்னும் சொற்றொடர் குடியமர்ந்த என்று பொருள் தருவது. போதையைச் சுட்டுவதில்லை.) மற்றும் தவறான சொற்பிரயோகங்கள், (குதிரையின் சாரம் – சேணம் என்பதே சரியான சொல். தலைமாற்றி வைக்கப்பட்ட மணற்குடுவை – மணற்கடிகை என்பதே சரி, துடி போன்றதொரு இசைக் கருவியை மீட்டியபடி – துடி என்பது தோற்கருவி, தந்திக்கருவியையே மீட்ட முடியும்) இவையத்தனையுமே அக்கறையான மீள்தொகுப்புப்பணி (re-editing) யின் மூலம் களையப்பட்டிருக்கக்கூடியவை. மகாபாரதத்தில் பார்வைபடாத குறுக்குச் சாலைகளைப் பார்க்கக் கிடைத்த மன அவசத்தில் இவை எழுதப்பட்டிருக்கலாம். ஆனால், ஒரு நுட்பமான வாசகனுக்கு அதே அவசம் அதே அழுத்தத்தில் தொற்றுவதற்குத் தடையாகவே இருக்கும்.

தமிழில் எவ்வளவோ நூல்கள் வெளியாகின்றன. விதவிதமான காரணங்களுக்காக அதீத கவனத்தைப் பெறுவதும், கவனிக்கப்படாமல் அந்த காரத்தில் வீசப்படுவதுமாக அவற்றின் கதி உருமாறுகிறது. அவற்றில் ஒரு நிகழ்வு என்று சொல்லத்தக்க நூல்கள் வெகு அபூர்வம். உப பாண்டவம் தமிழ்ச் சூழலைப் பொறுத்தவரை மட்டும் அல்லாது, மகா பாரதத்தைப் பொறுத்தும் கூட, மிக முக்கியமான ஒரு நிகழ்வு என்றே குறிப்பிடத் தோன்றுகிறது.

*(8-10-2000 அன்று கோட்டாறு நாராயணகுரு பள்ளியில் நடைபெற்ற நெய்தல் சந்திப்பில் படிக்கப்பட்ட கட்டுரை)*

உப பாண்டவம் - எஸ். ராமகிருஷ்ணன்; அட்சரம், 130/11, மதுரா கோட்ஸ் காலனி, விருதுநகர் 626 001; பக்.312; விலை ரூ.110; (2000)

# வள்ளுவம்

(இரு திங்கள் இதழ்)



ஆசிரியர் : *பல்லடம் மாணிக்கம், இ. சுந்தர மூர்த்தி*

வெளியீடு : *திருக்குறள் பண்பாட்டு ஆய்வு மையம்*
*கவிதா நிலையம்*
*31 பணிபூண்டார் வீதி*
*விருத்தாச்சலம் 606 001*

ஆண்டுச் சந்தா : ரூ.125

அ. கா. பெருமாள்

தமிழில் தனிப்பட்ட கவிஞன் அல்லது புலவனை முன்நிறுத்தி ஞான சம்பந்தன், பாரதி, கம்பன் போன்ற இதழ்கள் வந்துள்ளன. இவை பெரும்பாலும் குறிப்பிட்ட சார்புடன் வந்தவை. வள்ளுவம் இதழ் இவற்றிலிருந்து வேறுபட்டது. வள்ளுவனை முன்நிறுத்திய செய்திகளுக்காகவே வருவது இந்த இரு திங்கள் இதழ்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சில அரசியல், சமூகக் காரணங்களுக்காக வள்ளுவனை முன்நிறுத்திய போக்கு இருந்தது. இந்து சமய வேதங்களையும், மனுவின் கொள்கைகளையும் காரசாரமாக எதிர்த்தவர்கள் இவற்றிற்குப் பதிலியாகத் திருக்குறளையே முன்நிறுத்தினர். திருக்குறளில் தம் வாதங்களுக்குரிய காரணங்கள் இருப்பதாக உரைவிளக்கமும் தந்தனர். இதற்குரிய சூழ்நிலையும் அன்று இருந்தது. இதற்கு முந்திய நூற்றாண்டில் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பாதிரிகளும் சமய இலக்கியங்களுக்குப் பதிலியாகக் குறளைக் கொண்டதற்கும் இதுவே காரணம். சீறாப்புராண உரையாசிரியர்கள் – கம்பனைப் போன்ற உமறுவின் பாடல்களுக்குக்கூட குறளை வலிந்து மேற்கோள் காட்டியதும் இதனால்தான்.

தமிழில் உள்ள பெரும்பாலான பக்தி இலக்கியங்களுடன் தங்களைத் தொடர்பு படுத்த விரும்பாமல் – ஆனால் தமிழுடன் தங்களை இணைத்துக் கொள்ளுபவர்களுக்கு திருக்குறள் எப்போதுமே கைகொடுத்து இருக்கிறது.

அய்யன் திருவள்ளுவன் சிலை நிறுவப்பட்ட பின்பு திருக்குறள் வியாபாரம் அமோகமாக நடக்கிறது. உழவர் சந்தை வந்த பிறகு நாட்டுக் காய்கறிகளை வாங்கும் கூட்டம் மோதுவது மாதிரி ஆகிவிட்டது. எல்லா பதிப்பகங்களும் ஒரு திருக்குறள் நூலைப் பதிப்பிப்பது தேவை என்பதை உணர்ந்துவிட்டன. துணுக்கு எழுத்தாளர்கள்கூட உரை எழுத ஆரம்பித்துவிட்டனர். பத்து உரையைப் பார்த்து பதினொன்றாம் உரையைத் தயாரிக்கும் தொழில் கூடங்கள் நிறையவே வந்துவிட்டன.

என்றாலும் இந்த இதழை வெளியிடுபவர்கள் காலச் சூழ்நிலையைப் பயன்படுத்தி ரெடிமேடு உணவுப் பொடிகள் தயாரிக்கும் வியாபாரிகள் அல்லர்.

ஒரு குறிப்பிட்ட படைப்பாளியை அல்லது நூலை மட்டும் மையப்படுத்தி பாராட்டும் செயலுக்காகவே ஒரு பத்திரிகை நடத்தினால் ஏற்படக்கூடிய சிரமத்தை இந்த இதழ்களைப் படித்தால் தெரியும். கலை, இலக்கியம், மரபு சார்ந்தகளன் என்று முத்திரை குத்திக்கொண்டு வையாபுரிப் பிள்ளையிலிருந்து பிக்காசோவரை உள்ள விஷயங்களை வெளியிட்ட பத்திரிகைகளுக்கே கடைசியில் விஷயப் பஞ்சம் வந்துவிட்டது. இந்த நிலையில் வள்ளுவனை மையப்படுத்தும் இந்தப் பத்திரிகை தொடர்ந்து எப்படித் தாக்குப் பிடிக்கப் போகிறதோ ?

முக்கியமாக இந்த ஆறு இதழ்களின் அட்டை, அச் சாக்கம், வடிவமைப்பு, பிழையில்லாமல் பார்த்துக்கொண்ட கரிசனம் ஆகியன பாராட்டுக்குரியன. ■

## ப்ரிய ரேகா

காலச்சுவடு இதழ் 32இல் என்னைத் தாக்கியது தலைஞாயிறு கருணாநிதி அவர்களின் மறைவு குறித்த அஞ்சலி. 1983ல் இருபது வயது இளைஞனாக கீழ்த்தஞ்சையின் கடைக்கோடி கிராமமான தலைஞாயிறில் தனியனாய் இருந்த காலத்தில் தானாக தேடிவந்து அறிமுகம் செய்து கொண்டு நட்பு வளர்த்தவர் கவிஞர் ப்ரிய ரேகா. வறட்டுக் கோஷங்களையே கவிதைகளாக நினைத்திருந்த அந்த நேரத்தில் கசடதபற போன்ற இலக்கிய பத்திரிகைகளை படிக்க வைத்து என் எழுத்தின் போக்கையும் இலக்கியத்தின் மீதான மதிப்பீடுகளையும் மாற்றியவர் அவர்.

**அன்பாதவன்**
**ஆனத்தூர்**



படிப்பகம்

www.padippakam.com



# சத்ரு

**பவா. செல்லதுரை**

அவன் காசிரிக்கா நாரினால் கயிற்றுக் கட்டிலோடு இழுத்துக் கட்டப்பட்டிருந்தான். சுற்றி நின்றிருந்தவர்களின் முகங்களில் மரண மேறி இருந்தது. சிலர் ஆர்வத்தின் நுனியிலிருந்தார்கள். அவன் பிடிவாதமாய் கண் திறக்காமல் கிடந்தான். ரங்கநாயகி கிழவி தனி பொம்பளையாக பதட்டமின்றி, அவன் தலைமாட்டில் குந்தி இருந்தாள். அவள் நிதானத்தில் அனுபவம் குழைந்திருந்தது. மௌனம் எல்லோருக்கும் பொதுவாய் பரவி இருந்தது. அந்த சின்னக் குடிசை, தன் உள்புறம் இதற்குமேல் ஒரு ஆளையும் அனுமதிக்காத பிடிவாதத்தில் இருந்தது.

வீட்டின் வெளி, புதுசாய் பார்க்கிற எவரையும் பயமுறுத்தும். நீண்டு, அகன்ற பரவியிருந்த பாறைகளின் நடுவில் ஒதுங்கியிருந்த மணதிட்டில், கட்டியிருந்த கூரையின் வெளியில் நின்ற பார்த்தால், கருங்கோடுகளாய் நீண்டுகொண்டே போகும் பனை மரக் கறுப்பும், பீவேலி மரங்களும், கோடையின் மத்தியான அனலில், அவளும் சின்னாப்புவும் அனுக்கு மலை காட்டுக்குள் நுழைந்து மலை ஏறினார்கள். உக்கிரத்தை அநாவசியமாக்கும் எட்டி மர இலைகளும், இந்த அத்துவான வெளியில் வீடு கட்டின பாண்டு ஒட்டனின் தைர்யத்திற்கு துணைநின்றன.

அவன் உளியின் நுனிகளால் பாறைகளைத் தின்று குழிகளாக்கினான். விழுந்த குழிகளில் கறுப்பு மருந்தேற்றி, திரி பற்றவைக்கும் லாவகம் வேறெங்கும் காணமுடியாதது. வெடித்துச் சிதறிய கற்பாறைகளின் துகள்களுக்கும், எழும் கரும் புகைக்கும் நடுவில் ஒவ்வொரு முறையும் வெற்றியோடு வெளிப்படுவான். பெரும் சத்தங்களும், கலவரமும், குழப்பமும், ஆபத்துக்களையும் சதா சந்தித்த அவன் விநாடிகள், நேர் எதிராக நிரந்தர அமைதி தேங்கி நின்ற, இந்தப் பாறையின் நடுவில் நிலைத்திருந்தது கூரையாய். கண்டாட்சிபுரம், மேவாலைப்பக்கம் கல் உடைக்கப் போனவன் இன்னமும் திரும்பவில்லை. காலம் அவனை மீட்டுத் தரும் நம்பிக்கையை இழந்து, அவன் பாறைகளுக்கு நடுவில் மறைந்தது குறித்து அவ்வப்போது எழுந்த கதைகளையும் ஈவிரக்கமின்றி அழித்து அவன் பாறை வீட்டை ஊராருக்கு பொதுவாக்கி தந்திருந்தது.

தேங்கி நின்ற மௌனத்தின்மீது சிறு கல்லெறிந்து பார்க்கவும் அவர்களுக்குள் தயக்கம் இருந்தது. அவனுக்கு எதிரான உரையாடல் மொழி இழந்து, நடுக்கத்திலிருந்தது. இத்தனைக்கும் அவன் கண் திறக்காமலேதான் கிடந்தான். பின் கதவு சத்தமின்றி திறக்கப்பட்டு, அவர்களை பின்புற பாறையில் உட்கார்த்தி வைத்தது.

சைகை மூலம் ரெங்கநாயகி கிழவி அழைக்கப்பட்டாள்.

அவர்களின் பேச்சு அவர்களுக்கே கேட்காதவாறு இரகசிய மாக்கப்பட்டது. அவன் பிடிபட்டதின் அதிகபட்ச கஷ்டங்களும், அவன் மரணத்தின் அவசியமும் ஓரிரு வார்த்தைகளால் ரெங்கநாயகிக்கு சுருக்கப்பட்டது. விடிகிற பொழுதின் முதல் நாழிகை, அவன் பிணம் எரியூட்டப்பட வசதியாக அவன் மரணம் சௌகரியப்படுத்தப்பட்டது.

பதட்டமற்று இருந்த கிழவியின் முகம் இருளத் துவங்கியது. புள்ளத்தாச்சி பொம்பளைகளுக்கு குச்சி வைத்து, ரத்தப் பெருக்கில் புரளும் சதைப் பிண்டங்களை வாரி வீசிய கைகள்தான். எனினும் ஒரு முழு மனிதனின் மரணத்தின் எதிர்கொள்ளல் அவளுக்கு நடுக்கமேற்படுத்தியது. சமாளித்துப் பேசினாள்.

"ஊராருக்கு நான் கட்டுப்படறேன். ஆனா அவனை நேருக்கு நேரா மொகமெடுக்க முடியலை. வண்டி கட்டி என் வூட்டுக்கு ஆளனுப்பின நம்பிக்கையை நான் கெடுக்கலை சாமீகளா. இந்தப் பகலுக்கும், மலை காட்டுல சுத்தி வெஷ தழை பறிச்சியாறன். என்கூட ஒரு ஆளு இருந்து, இருட்டனப்புறம், பாறையில கொட்டி, ஒட்ட ஒட்டவரைக்கனும். ரெண்டு வெண்கல சருவ சட்டி வேணும். சீரா தண்ணி ஊத்தி, தழையை அரைச்சுட்டா போதும். விடியற நேரம், அவன் திமிராம கொள்ளாம, நாலு பேரு புடிச்சிக்குங்க, ரெண்டு கையையும் ரெண்டு பக்க சருவ சட்டியில தொவைச்சி புடிச்சிக்குங்க. ஒரே ஒரு மணி நேரம்தான். ஆளு வெரைச்சிடுவான்.

நான் ஒத்தை வீட்டு பொம்பளை. அவன் கை கால ஒதைச்சிகிறத பாக்க முடியாது, தழை அரைச்சி கொடுத்ததும் எனக்கு வெடை குடுங்க சாமீங்களா."




படிப்பகம்

www.padippakam.com

யோசனையின் கச்சிதம் எல்லோருக்குமே பிடித்திருந்தது. தலையில் முடி பொசுங்கும் அந்த மத்தியான அனலில், அவளும் சின்னாப்புவும் அனுக்குமலை காட்டுக்குள் நுழைந்து மலை ஏறினார்கள்.

கண் திறக்காமல் கட்டிலில் கிடக்கும் பொட்டு இருளனின் திருட்டு சாகசங்கள், அந்த மலைகாட்டு மத்தியானத்தில் ரங்கநாயகி கிழவிக்கு கதையாக்கப்பட்டு, பகல் நகர்ந்தது.

அந்த பஞ்சத்தின் உக்கிரத்தை சொல்லவாவது சில குழந்தைகளை நெட்டித்தள்ளி ஒதுக்க மிச்சமின்றி, பொசுக்கியது காலம். அந்த ஈரமற்ற நாட்களில் மனிதர்கள் உலர்ந்து, காய்ந்து கருகினார்கள். பிள்ளை பெற்ற பொம்பளைகளின் முலை



காம்புகள், பச்சை குழந்தைகளுக்கு சொரிவதற்கு ஒரு சொட்டு பாலின்றி வெடித்திருந்தன. வளர்ந்த குழந்தைகள், ஈரம் தேடி மலை காடுகளின் பாறை நிழலுக்குள் சதா அலைந்து திரிந்தன. வற்றி வெடித்த பூமியின் முகம் கோரமேறி மனிதர்களை விழுங்கிவிட தயாராய் இருந்தன. வைத்த ஒவ்வொரு அடியும், பூமியின் வெடிப்பில் விழுந்துவிடாதவாறு எச்சரிக்கை அடைய வேண்டியிருந்தது.

எட்டி மரங்களின் பச்சையும், காய்களின் சிவப்பும் பார்க்கிற எவரையும் ஏமாற்றி, சிரித்து ஏளனப்படுத்தியது. தண்ணி முட்லான் செடிகளின் காய்ந்து போகாத பசுமை, பள்ளிக்கூடம் விட்டகன்ற பிள்ளைகளுக்கு நம்பிக்கையின் மரணத்தை தள்ளிப் போட்டு வேடிக்கை காட்டியது.

அவர்கள் காய்ந்த பூமியில் கால் பதித்து, வெறி கொண்டு கிழங்கு தோண்டினார்கள். பூமி தன் இரகசிய மார்பில், தான் தேக்கி வைத்திருந்த தண்ணி முட்லான் கிழங்குகளின் ஈரத்தை தன் குழந்தைகளின் நாக்கில் நனைத்து, தன் ஈகையில் நிலைத்தது.

அந்தப் பஞ்சத்தை வகைபடுத்த முடியாது. தலைமுறைகளில் தப்பி பிழைத்திருந்த கிழவன்களும், கிழவிகளுமே பார்த்தறிந்திராத பஞ்சமது. அரசாங்க புள்ளி விவரங்களுக்குள் வர மறுத்து, ஊர் பொதுத்திட்டில் வைத்து, அளக்கப்பட்ட மக்காசோளத்திற்கு அடங்க மறுத்த பசித்த மனிதர்களைப் போல.

தானிய குதிர்களில் ரத்தம் சுண்டிய பெருச்சாளிகள் வளைதோண்டி ஏமாந்தன. ஒத்தையான பாதைகளிலும், கள்ளிகளடர்ந்த ரெட்டை மாட்டு வண்டிப் பாதைகளிலும் பாம்புகள் குறுக்காலும் நெடுக்காலும் செத்து எலும்புகள் தெரிய கிடந்தன. வெளுத்து தெரிந்த, ஊர்ந்த அதன் முள்ளெலும்புகள் அச்சப்படுத்தின.

பிறக்கும் குழந்தைகள் இரத்த பிசுபிசுப்பின்றி உலர்ந்து செத்துப் பிறந்தன. தண்ணீரற்று காய்ந்து கிடந்த கிணறுகளில், எப்போதோ வாழ்ந்த அடையாளத்தில், நண்டுகள் செத்து, ஓடுகள் மட்டும் உடையாமல் ஒட்டி இருந்தன. ஒரு சிறு குச்சியின் உராய்வில், ஒரு சிறு கல்லின் விழுதலில், உடைந்து சிதறும் அதன் மக்கிய ஓட்டின் சத்தமே, நண்டுகளின் வாழ்ந்த காலத்தின் ஞாபகத்தில் மீந்தது.

மலைகாட்டு பாறை பொந்துகள் வெப்பத்தால் வெளியேற்றிய, காட்டு பன்னிகளும், குள்ளநரிகளும், பெரும் கூச்சல்போட்டு பஞ்சம் நெருக்கியிருந்த குரல்வளைகளை, தங்கள் அகோர சப்தத்தால் நிறுத்தின.

ஆடுகளும், மாடுகளும் வந்த விலைக்கு, கிடைத்த சோளத்திற்கு, கம்பந்தட்டைக்கென்று, கை மாறின. பூர்ச மரக் கிளைகளில் உரிக்கப்பட்ட ஆடுகளின் வரிசை தெரிந்தது. மக்கள் உப்பு போட்டு அவித்து இறைச்சி தின்றார்கள். ஊராகாலிகள் யாருமற்ற அனாதைகளானார்கள். யாரும், யாரையும் தின்றுவிடக்கூடிய வெறியை பஞ்சம் ஏற்றியிருந்தது. மனிதர்கள் அவர்கள் வீட்டு ஆடுகள், மாடுகள் போல் அவர்கள் மலைகளின் பெருநரிகள் போல் சிரிப்பற்றுப்போன முகத்தோடு திரிந்தார்கள். அவர்களின் ஒட்டு மொத்த தேடலும், ஒரு சொட்டு ஈரத்தை நோக்கியதாய் மட்டுமே இருந்தது.

அந்த துளியூண்டு ஈரம் மாரியம்மனின் கண்களுக்குள் இருப்பதாக உறுதியாய் நம்பினார்கள். அதைத் தொட்டு உணர்ந்துவிட குதிர்களை துடைத்து, பானைகளை அலசி, கதிர் அறுத்து நாள் கடந்த வயல்களை பெருக்கிச் சேர்த்த எட்டு மரக்கா கேவுரும், அஞ்சி படி கம்பும் தான் மாரியம்மனின் கருணை நிறைந்த கண்களுக்குப் படைக்கப் படப் போகும் கூழ் ஊற்றல். நம்பிக்கையின் கடைசி படியில் ஒட்டியிருந்த இரவில்தான் பொட்டு இருளன் அதில் கை வைத்து, கையும் களவுமாய்ப் பிடிபட்டது.

அந்த ஊரே விசித்திரங்களால் அடுக்கப்பட்டிருந்தது. கல் மலைகளும், தரையில் படர்ந்திருந்த பாறைகளும், பாறைகளுக்குள் அடங்கி இருந்த குகைகளும், அங்கங்கே தெரிந்த மண் திட்டுகளில் கட்டியிருந்த வீடுகள், தெருக்கள் என்ற ஒழுங்குக்குள் வர மறுத்தன. பாறைகளுக்குள் மறைந்துகொண்ட வெப்பால மரத்து வேர்கள் இக்காய்ச்சலுக்கும் தாக்கு பிடித்தன.

துவரம் மிளாறுகளிலான பட்டிகளில், ஒலித்த ஆடுகளின் குரல்கள், இரவுகளில் படிந்து, அந்த ஊரின் விசித்திரத்திற்கு சப்தமேற்படுத்தி தந்திருந்தது.

பாறையை துளைத்து உரல் குடையப்பட்டிருந்து. எட்டு பங்காளிகளின் வீடேறி, கொண்டு வந்த கம்பு இடிபட்டு மாவாகிக் கொண்டிருந்தது. இடிப்பவளின் முகமே இருண்டிருந்தது. உலக்கையின் நிழலோடு இன்னொரு நிழல் விழுவதைக் கவனித்தாள். கை தானாக நின்று முகம் திருப்பினாள்.

மூன்று பொம்பளை புள்ளையோடு ஒருத்தி. முகம் வேற்றுமுகம்.



படிப்பகம்

www.padippakam.com

சாயல் அவளூர் சாயல் இல்லை. கெழக்கத்தி கூட்டமா? நிதானிக்க முடியவில்லை.

பார்வைகளால் அவர்கள் நால் வரும் பாறையில் திரண்ட, பச்சை மாவை தின்று கொண்டிருந்தார்கள்.

அந்த பார்வைகள் மீறி, மாவிடித் தலுக்கு கைகள் வலுவற்று இருந்தன.

என்ன தாயீ பாக்கற?... பதிலற்ற கேள்விகள் தொடர்ந்தன.

கெழக்கத்தி பொம்மனாட்டியா நீ?

கழுத்துல ஒண்ணையும் காணோம். புருஷன் செத்துட்டானா? இந்தப் பஞ்சத்துல எவன் பொழைச்சான்? ... அவளின் தொடர்ந்த கேள்விகள் எதிர் நிற்பவளின் கறுத்த முகத்தில் மோதி பாறைகளில் விழுந்தது.

பசியின் பார்வைகள் பச்சை மாவை கேட்பது போல் அவள் உணர்ந்து,

மாவு வேணுமா?

ஆமா என் புள்ளைங்களுக்கு, கூழுக்கு, மாவுகரைக்க, மாவு தர் நீயா? நாளைக்கே திருப்பி தர்றேன்.

அதெப்படி நாளைக்கே திருப்பி தருவே? இங்க என்ன மழை ஊத்தி வெள்ளம் பொத்து, வெள்ளாமையை அறுக்க முடியாம அருவா ஒடிஞ்சி ஓலக்கடத்துக்கா நடக்கோம்...

நாளைக்கு திருப்பி தந்துடுவேன். ...அவள் குரலில் தெறித்த உறுதி இவளை நிலை குலையவைத்தது.

அதான் எப்படி?

நாளைக்கு சத்திமா திருப்பி தந்து டுவேன். என் புள்ளைங்க வயிறு குளிர்ணனும் தாயி... அவள் குரலில் குழைந்திருந்த கனிவு அதுவரை அவள் கேட்டிராதது.

நிமிடத்துக்கு நிமிடம் வேறுபட்ட அவள் வார்த்தைகளுக்கு இவள் ஆச்சர்யப்பட்டாள்.

அந்த வார்த்தையில், காய்ந்து வெடித்திருந்த அவள் முலைக் காம்பு கள் பால் சொரிந்தது மாதிரி உணர்ந் தாள்.

சட்டி வச்சிருக்கியா தாயி?

அவள் மூத்த மக, கருஞ்சட்டியை நீட்டினாள். கம்பம்மாவு சட்டியில் நிரம்பியது... போட... போட... நிரம்புகிறது... இன்னும்... இன் னும்... பாறையின் குழி அவள் மார் மாதிரி சுரந்து, சட்டியில் நிரம்பிக் கொண்டே இருக்கிறது... அவள் இடக்கண் முந்திக் கொண்டு ஒரு சொட்டை உதிர்க்கிறது.

காலம் கருணையில் நிரம்பி வழிந்தது.

உச்சி மத்தியானத்தில், மாரியம் மன் சிலையின் இடக்கண்ணிலிருந்து ஒரு சொட்டு விழுந்ததை கூட்டாத் தான் பார்த்ததை திருப்பி, திருப்பி சொல்லிக் கொண்டிருக்க,

தலைமுடி பொசுங்க, மலை காட் டில் விஷ தழைபறிக்க அலைந்த ரங்கநாயகியின் நெற்றிப் பொட்டில் அத்துளி விழுந்தது.

பூமியை இருளின் நாக்கு ஒரே நொடியில் கவ்விக் கொண்டது. வானம் கிழிந்து ஊற்றுகிறது. எதன் பொருட்டும் அதன் உக்கிரம் குறைய வழி இல்லை. மரங்கள் முறிய, பாறைகள் கரைய, நீரின் வன்மம், விநாடிக்கு விநாடி அதிகரித்துக் கொண்டே போகிறது. மலர்தலுக்கு பதிலான மனித முகங்களில் பீதி பற்றிக் கொண்டது.

இனி விடிதலுக்கான, சாத்திய மற்ற இருள் அது. மழையினால் பூமியைத் தின்ன, வெறி பிடித்து வானம் வாய் பிளந்து நிற்கிறது.

மடியில் பறித்த விஷத் தழை களோடு, பாறைச் சுனையில் ரெங்க நாயகி கிழவி மல்லாந்திருந்தாள். விஷத்தழை ஊறின உடல், யானை யளவிற்கு பெருத்து மிதந்தது.

சின்னாப்பூ அங்கு மலை கட்டில் ஏதாவதொரு பாறையிடுக்கில் குரல் வளை அறுபட்டு கிடக்கக் கூடும்.

நீரின் வன்மம் பெருகிக்கொண்டே போகிறது. இத்தனை வருடத்து பூமி யின் வெடிப்பை, ஒரே நொடியில் இட்டு நிரப்பி செல்கிற காலத்தின் விசித்திரத்தில் ஊர் கிடந்தது.

கதவிடுக்குகளின் இடைவெளி களில் பார்த்த கண்களுக்கு நீரின் மட்டம் பாறைகளில் தெரிந்தது.

ஒரு நீண்ட ராத்திரியின் மிச்சத் தில் மாட்டி, ஒரு பகல் முழுக்கக் கண் திறக்காத பிடிவாதத்தில் கிடந்த பொட்டு இருளனை, மழைதான் எழுப்பியது. சுற்றிலும் ஆட்களற்ற பாண்டு ஒட்டனின் வீடு, அவனை பெரிதும் பயமுறுத்தியது. மரண வெறி கொண்ட சில மனிதர்கள்கூட பக்கத்தில் இருந்தால் தேவலாம் போல் உணர்ந்தான். இந்த பிரள யத்தை மூழ்கடிக்கும் வல்லமை யோடு மல்லுக்கட்டும் மழை கொடுத்த தனிமை அவனால் தாங்கிக்கொள்ள முடியாததாய் இருந்தது. விசித்திரமான ஒலிகளை மாற்றி மாற்றி எழுப்பி தன் தனி மையை வென்றுவிட முயன்றான்.

தலை விரித்தாடிய தாண்டவம் முடிய ஒரு முழு இரவு தேவைப்பட் டது. வானத்திலிருந்து சொட்ட இனி ஒரு துளியும் மீதியில்லை என்ற உறுதியில் அது தன் கோர ஆட் டத்தை நிறுத்தினபோது, விடிந்தது. இரவில் நீடித்த வன்முறையில் நில வும், நட்சத்திரங்களும் எங்காவது தெறித்து விழுந்திருக்கலாம்.

அவர்கள் பத்திருபது பேர்கள், ஈர பாறைகளில் கால் மாற்றி, கால் மாற்றி வைத்து, பாண்டு ஒட்டனின் வீடடைவதற்கு பல மணி நேரம் தேவைப்பட்டிருந்தது.

ராக் கண் விழித்து, பெரும் கலக் கத்திலிருந்த அவனுக்கு அவர்களை பார்த்த விநாடி மீண்டும் தான், மரணத்தின் பற்களில் நசுங்கப் போகும் கனம் நினைவு வந்துவிட்டது. ஆனால் தெப்பலாக நனைந்திருந்த அவர்களின் முகங்களில் தெரிந்த கருணை, ஒரே கணத்தில் அந்த நினைப்பைப் புரட்டிப் போட்டது.

ஒரு குழந்தை மாதிரி மலங்க மலங்க அவன் அவர்களைப் பார்த்தான்.

காசிரிக்கா நாரின் இறுக்கம் தளர்த்தப்பட்டு, கட்டு அவிழ்க்கப் பட்டது. புஜத்தில் கசிந்த ரத்தம் கண்டு அவர்களில் பலர் “இச்” கொட்டினார்கள்.

நடப்பது குறித்த பிரக்ஞையற்று இருந்தான்.

அவர்கள் முகங்கள் வன்மமற்று, குழந்தை முகங்களாகி, புன்னகை புதைந்திருந்தது.

இனி ஜென்மத்துக்கும் திருடாத. மாரியாத்தா கண் தொறந்து மழை கொடுத்திருக்கா! போ, போய் பொழைச்சிக்க.

எல்லோர் குரலும் நனைந்திருந்தது.

அலைகள் மாதிரி, நீர் தளும்பிய சத்தம் கேட்டுக்கொண்டே ஏரிக் கரையில் நடந்தான். சொத சொதப் பான பூமி, கட்டுப்பட்டு விடுபட்ட கால்களுக்கு, இதமாய் இருந்தது. ஏரிக்கரையின் முடிவிலிருந்த தேவ தானப்பேட்டை மலைமீது கால் வைத்து நிமிர்ந்தான்.

வெள்ளம் மலை முழுக்க, சிறு அருவிகளாகி இறங்கிக் கொண்டிருக் கும் பேரழகை எதிர்கொண்டு ஏறு கிறான். நீர்த்துளிகள் முகத்தில் மோதி, சிதறி மலையில் தெறிக்க, தெறிக்க... ஏறித் திரும்பினான்.

ஊர் ஈரத்தில் நனைந்திருந்தது.

ஓவியங்கள் : கு. பாலசுப்பிரமணியன்

■



படிப்பகம்

www.padippakam.com

# விளம்பரங்களை முன்வைத்து சில குறிப்புகள்

— சுரேஷ்பால்




விளம்பரங்களின் செல்வாக்கு, ஆதிக்கம் பற்றி பலரும் பேசினாலும் தனிப்பட்ட முறையில் விளம்பரங்கள் அவர்களைப் பாதிக்கிறதா என்று கேட்டால் இல்லை என்றுதான் பதில் வரும். "நான் தினந்தோறும் பல்வேறு விளம்பரங்களைப் பார்க்கின்றேன். ஆனால் அந்தப் பொருட்களையெல்லாம் நான் வாங்குவதில்லையே. இப்படியிருக்க விளம்பரங்கள் என்மீது செல்வாக்கு செலுத்துகின்றன என எப்படிச் சொல்ல முடியும்" எனக் கேட்கின்றனர்.

ஒரு விளம்பரத்தைப் பார்த்துவிட்டு உடனே அந்தப் பொருளை வாங்க வைத்துவிடமுடியும் என அந்த விளம்பரத்தைத் தயாரித்த விளம்பர நிறுவனம்கூட நினைப்பதில்லை. விளம்பரங்களின் அடிப்படைத் தன்மை கவன ஈர்ப்புதான். ஒருசில நொடிகளேனும் நமது கவனத்தை முற்றிலுமாக ஈர்த்துக் கொள்வதில் விளம்பரங்கள் வெற்றியடைகின்றன. இந்த கவன ஈர்ப்புத் தன்மை மீடியாவைப் பொறுத்தளவில் மிகவும் முக்கியமான ஒன்று. தொலைக்காட்சித் தொடர்களும் இன்ன பிற சங்கதிகளும் நேயர்கள் தங்கள் கவனத்தைத் தவற விட்டுவிடக்கூடாது என்பதற்காக குறிப்பாக பிற அலைவரிசை நிகழ்ச்சிகளுக்குத் தாவிவிடக் கூடாது என்பதற்காகப் போட்டிக் கேள்விகள், பரிசு மழைகள் போன்றவற்றை அறிவிக்கின்றன அல்லவா? ஏனெனில் நேயர்களின் கவனம் அவர்களுக்கு பணரீதியான ஒரு வரவு.

ரிமோட் என அழைக்கப்படும் தொலை இயக்கக் கருவி வந்தபின் தொலைக்காட்சி நிகழ்ச்சி தயாரிப்பாளர்கள், குறிப்பாக விளம்பர தயாரிப்பாளர்கள், புதுப்புது யுக்திகளைப் புகுத்தி தங்கள் விளம்பரங்களை மக்கள் பார்க்கும்படி செய்ய முயல்கின்றனர். சமீபத்திய புள்ளிவிவரம் ஒன்றின்படி ஏழு வினாடிகளுக்கு ஒரு முறை சானல்கள் மாற்றப்பட்டுக்கொண்டே இருக்கின்றனவாம். சராசரி தொலைக்காட்சி விளம்பரத்தின் நீளமோ பத்து வினாடிகள்தான். முதலிரண்டு வினாடிகளில் அது நேயரின் மனதைக் கவரவில்லையென்றால் அதற்கு மரணம் உடனே சம்பவித்துவிடுகின்றது.

அச்சு விளம்பரங்கள் நிரந்தரத் தன்மை பெற்றவை எனினும் இந்த அவசர யுகத்தில் அவற்றைப் பொறுமையாகப் படிக்க எவருக்கும் நேரம் இருப்பதில்லை. வானொலி விளம்பரங்களை, தொலைக்காட்சி, பத்திரிகைகளைப் போல நினைத்தவுடன் தவிர்த்துவிட முடியாது. எனினும் வானொலியுடன் ஆன நமது உறவு முதன்மை நிலைப்பட்டதல்ல. நாம் வேறு ஏதாவது செய்துகொண்டு பின்னணி விவரமாகத்தான் வானொலியை உபயோகிப்பதால் அதன் விளம்பரங்கள் நம்மை நெருக்கமாகச் சென்றடைவது இல்லை.

குறைந்த செலவில் சேவைகள் வாடிக்கையாளர்களுக்குக் கொடுக்கவும் அதே சமயம் அதிக அளவில் லாபம் ஈட்டவும், தொடர்பு சாதன நிறுவனங்களுக்கு விளம்பரங்கள் உதவுகின்றன. பெருமளவில் விற்பனையாகும் வரவேற்பு பெற்றிருக்கும் செய்தி ஊடகங்களில் செய்தியின் அளவைவிட விளம்பரங்களின் அளவு அதிகமாக இருப்பதைக் காண முடியும். ஆனால் மீடியா வாடிக்கையாளர்களைப் பொறுத்த அளவில் அவை தொல்லைகள்தான். அருமையாய் மெய் மறந்து பார்த்துக்கொண்டிருக்கும் நிகழ்ச்சிகளின் நடுவே விளம்பர இடைவெளி வரும்போது எவ்வளவு எரிச்சலும் கோபமும் வருகிறது. இப்படி நித்ய கண்டம் பூர்ண ஆயுசாய் விளம்பரங்கள் இருப்பதால்தான் அவை அதிகமான அளவில் அடிக்கடி கண்களில் பட வேண்டியிருக்கின்றது. இப்படி துரத்தப்பட்டு துண்டாடப்பட்டு பார்க்கப்பட்டாலும் விளம்பரங்கள் எப்படியோ மனதில் போய் இடம் பிடித்துக் கொள்கின்றன. விளம்பரத்தைத் தீவிரமாக தவிர்ப்பவர்கள்கூட என்னென்ன விளம்பரங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன என்பது பற்றிய அறிவைக் கொண்டிருப்பது நிச்சயம்.

விளம்பரங்கள் மிகவும் நுட்பமாகவும் நூதனத் தன்மையுடனும் நம் மீதும் நமது கலாச்சாரத்தின் மீதும் செயல்படுகின்றன. இதைப் புரிந்து கொள்ள விளம்பரங்கள் நம்மீது இயங்கும் முறை பற்றி நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு தனிப்பட்ட விளம்பரம் நம்மீது நேரடியாக எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை. ஆனால் தொடர்ந்து நம்மீது திணிக்கப்படும் விளம்பரங்களினால் முதலில் பொருட்களின்மீது ஒரு பரிச்சயமும் பின்னர் அதன்மீது ஒரு ஆசையும் ஏற்படுகின்றன. பின் இந்த ஆசை ஒரு தேவையாக மனதினுள் உருவெடுக்கின்றது. பின்னர் இந்தத் தேவை இயல்பான நியாயமான ஒன்றாக வடிவெடுக்கின்றது. இந்தத் தேவையும் ஆசையும் அடி மனதில் நிரந்தரமாகத் தங்கிவிட ஒரு வாய்ப்பு வந்தவுடன் அந்தத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்கிறது மனது. வாங்கும் சக்தியுள்ள மனிதன் அந்தப் பொருளை வாங்கிவிடுகின்றான். வாங்க சக்தியற்ற மனிதர்களுக்கு அது அவர்கள் அடைய வேண்டிய லட்சியமாக மாற்றப்பட்டுவிடுகின்றது. இரண்டு சாரருமே விளம்பரப் படுத்தப்படும் அந்தப் பொருள் / சேவை இயல்பான தேவையான ஒன்று என நினைக்கும் மனோ நிலைக்கு வந்துவிடுகின்றனர்.

இப்படிச் சொல்லும்போது வேறொரு விஷயத்தையும் சேர்த்துப் பார்க்க வேண்டும். அது அவ்விளம்


படிப்பகம்

www.padippakam.com

பரங்கள் இயங்கும் சமூகச் சூழல். ஏனெனில் இந்தச் சூழலின் பெரும்பான்மை போக்குகளுக்கு ஆதரவாகவே விளம்பரங்கள் வெளிவருகின்றன. எனவே விளம்பரங்கள் மனித மனதில் செயற்கையானதொரு தேவையை ஏற்படுத்துகின்றன எனும்போது அந்தத் தேவையை உருவாக்க வேண்டிய சமூகச் சூழலும் அந்தத் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய உற்பத்தி நிலைமைகளும் அங்கு இருக்கின்றன என்பதையும் சேர்த்து புரிந்துகொள்ள வேண்டும். சந்தைப் பொருளாதாரச் சூழலில் நுகர்வோர் பொருட்களுக்கான சந்தையை உருவாக்க வேண்டி இத்தகைய தேவை உருவாக்கப்படுகின்றது. பின்னர் சந்தை நுகர்வோருக்குத் தனது நுகர்வு பொருட்கள் மூலம் அந்தத் தேவையை நிவர்த்தி செய்கின்றது. இதன் மூலம் ஒரு நுகர்வு சந்தை உருவாக்கப்படுகின்றது. அல்லது நுகர்வு சந்தைக்கான வாடிக்கையாளர்கள் உருவாக்கப்படுகின்றார்கள்.

விளம்பரங்கள் கொடுக்கும் தீர்வுகளைப் பார்த்தால் அவை மந்திரத் தன்மை கொண்டவைகள் போலத் தோற்றமளிக்கும். கறைபடிந்த சட்டை திடீரென வெண்மையாக மாறிவிடும். உபயம் அந்தக் குறிப்பிட்ட டிடர்ஜென்ட். அதுபோல வியர்வை நாற்றமா? தலைவலியா? பொடுகுத் தொல்லையா? எதுவாக இருந்தாலும் கவலையில்லை. உடனடியாகத் தீர்வுகள் உண்டு. இந்தத் தீர்வுகள் பிரச்சனைக்கான நிஜத் தீர்வுகள் கிடையாது. ஒருவித மாயத் தீர்வுகள். இந்தப் போலித் தீர்வுகள் பிரச்சனையின் நிஜக் காரணங்களை நோக்கி நம்மை நகரவிடாமல் செய்துவிடுகின்றது. தொலைக்காட்சி விளம்பரம் ஒன்றில் ஒருவர் தொடர்ந்து வெகுநேரம் கம்ப்யூட்டர் முன் அமர்ந்து வேலைசெய்து களைத்துப் போய் கடைசியில் I want a break என்பார். ஆனால் அவனுக்கு ஓய்வுக்குப் பதிலாக காட்பரீஸ் பிரேக் சாக்லேட் கொடுக்கப்படும். அதைச் சாப்பிட்டுவிட்டு பழையபடி வேலையைத் தொடங்குவார். இங்கே நிஜப் பிரச்சனைகள் திசை திருப்பிவிடப்படுகின்றன. மாறாக போலியான தீர்வு முன்வைக்கப்படுகின்றது. கடுமையான சலிப்பூட்டும் தொடர்ந்த வேலைப் பளுவை அனுபவிக்கும் அனைவரும் அந்த நபரில் தங்களைக் காண்பது எளிது. அவர்களது பிரச்சனையிலிருந்து விடுவிக்க விளம்பரம் கொடுக்கும் தீர்வு பிரேக் எனும் சாக்லேட்.

விளம்பரங்கள், நுகர்வு பொருட்கள்மீது அதீத மரியாதையைத் தோற்றுவிக்கின்றன. மனிதர்களைவிடவும் மனித உணர்வுகளைவிடவும் நுகர்வு பொருட்கள் மேலானவை என்பது போலவும் மனித உணர்வுகளை உறவுகளை நுகர்வுப் பொருட்கள் மூலம் அளவிட்டுவிடலாம் என்பது மாதிரியுமான ஒரு தோற்றத்தை ஏற்படுத்துகின்றன. பொருள் கலாச்சார சூழலில் மனிதனின் மதிப்பு என்பது அவன் வைத்திருக்கும் அல்லது அவனது அதிகாரத்துக்கு உட்பட்டிருக்கும் பொருட்களின் அளவைக் கொண்டே மதிப்பிடப்படுகின்றது. இந்தக் கலாச்சாரத்தின் முக்கிய தூதுவர்களுள் ஒன்றாகச் செயல்படும் விளம்பரங்கள் இந்தப் போக்கைத் தக்க வைத்துக்கொள்ள பெரிதும் உதவுகின்றன. மனித உணர்வுகளைப் பொருட்கள் பயன்படுத்துவது வெகுகாலமாக இருந்துவரும் போக்குதான். ஆனால் இன்றைய விளம்பர உலகில் இதில் இரண்டு முக்கிய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. ஒன்று அவ்வுணர்வுக்கு எவ்விதத்திலும் சம்பந்தமில்லாத பொருட்களைப் பயன்படுத்துவது. (மனைவியை நேசிப்பவர்கள் ப்ரஸ்டீஜ் வாங்கிக் கொடுப்பார்கள்...) கூடவே ஒரு மலர், பழம், பூங்கொத்து என்றிருந்தவை விற்பனைப் பெயர் கொண்ட பொருளாக மாறியிருப்பது இரண்டாவதாகும். வெறும் குக்கர் அல்ல, ப்ரஸ்டீஜ் பிரஷர் குக்கர். வெறும் சுவீட் அல்ல, அர்ச்சனா ஸ்வீட்ஸ். வெறும் கைக்கடிகாரம் அல்ல, டைட்டன் கைக்கடிகாரம் என்பவை போல. காலம் காலமாக வழங்கப்பட்டுவரும் கலாச்சார குறியீடுகள் விளம்பரங்களால் கையகப்படுத்தப்படுவதோடு அவற்றை தங்கள் விற்பனை நோக்கத்திற்கும் பயன்படுத்துகின்றன. விருந்தினர்களுக்கு நீர் மோர் என பகிர்ந்துவந்த கலாச்சாரம் போய் பெப்ஸி, கோக் என மாறிவருவதற்கு இதுவும் ஒரு காரணம்.

விளம்பரங்கள் நவீன உத்திகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டாலும் பார்ப்பதற்கு மிக நவீனமான ஒன்றாகத் தெரிந்தாலும் அதன் மதிப்பீட்டுத் தளமானது புதுமையானது அல்ல. விளம்பரங்கள் பழமையைக் கேள்விக்குட்படுத்துவதென்பது உண்மைதான். ஆனால் அடிப்படையான விஷயங்களில் அது மௌனமாகவே இருக்கும். பல சமயங்களில் இன்றிருக்கும் சமூக அமைப்பைக் கட்டிக் காக்கும். ஏனெனில் விளம்பரங்கள் பெரும்பான்மை மக்கள் கலாசாரத்தின் (Popular Culture) அடிப்படையில்தான் செயல்படுகின்றன. அங்கு நிலவும் மனித பயங்கள், ஆசைகள், கோபங்கள், கனவுகள்தான் விளம்பரங்களுக்கு அடிப்படை. அவற்றின் அடிப்படையைக் கேள்விக்குட்படுத்தாமல் தனக்கு வேண்டிய ஒரு சின்ன மாற்றத்தை மட்டும் பரிந்துரை செய்கின்றன. பெண்களின் அடிப்படைத்தன்மை அழகு என்பது பொதுக் கருத்து. அதை விளம்பரங்கள் கேள்விக்குட்படுத்தாது. மாறாக அந்த அழகை அதிகரிக்க என்ன செய்யலாம் என வழிமுறைகள் கூறும். சிகப்பு நிறம்தான் அழகு என்பது பொதுக்கருத்து. எனவே அந்த 'சிகப்பழகு' பெற என்ன செய்யலாம் என ஆலோசனை கூறும். மேலை நாடுகளில் கறுப்பாவதற்கு (tan) வழிமுறைகள் சொல்லும் இதே விளம்பரங்கள் இங்கு சிவப்பாவதற்கு யுக்திகள் சொல்லிக் கொடுப்பதன் நோக்கம் இதுதான்.

விளம்பரங்கள் முன்வைக்கும் மதிப்பீட்டுத்தளமும் நமது அபிலாஷைகளும் ஒத்துப் போவதால் விளம்பரங்கள் நமக்குள் மிக எளிதாக நுழைந்துவிடுகின்றன. இவை நமக்குள் நிலவும் மதிப்பீடுகளை மீண்டும் உறுதி செய்கின்றன அல்லது சமூகப் பெரும்பான்மை மதிப்பீடுகளை நமக்கு அறிமுகம் செய்து வைக்கின்றன. சமூகமயமாக்கலில் மிகப் பெரிய காரணியாக விளம்பரங்கள் செயலாற்றுகின்றன.

இருசக்கர வாகன விளம்பரங்கள் பல வருகின்றன. அவை எல்லாவற்றிலும் இடம்பெற்றிருப்பது ஆண்களே. பெண்களுக்கான இரு சக்கர வாகனங்கள் என விளம்பரப்படுத்தப்படுபவை மிகவும் குறைவே. பெண்கள் ஓட்டுவதுபோலக் காட்டினால் ஒரு ஆண் அவளுக்கு ஓட்டக் கற்றுக் கொடுப்பது போல காட்சி அமைக்கப்படுகின்றது. ஆனால் சிறு பையன்கள்கூட தாங்களாகவே ஓட்டுவதுபோல காண்பிக்கப்படுகின்றனர். குழந்தை உணவு விளம்பரங்களிலே ஆண் குழந்தைகளும் அழகு சாதன விளம்பரங்களில் பெண் குழந்தைகளுமாக இருப்பதை நீங்கள் கவனித்திருக்கக்கூடும்.

இவை சின்னச் சின்ன மிகவும் நுட்பமான விஷயங்கள்தான். பலதடவை நமது பார்வைக்கும் கணிப்புக்கும் அகப்படாமல் செல்கின்ற விஷயங்கள்தான். ஆனால் இதன் மூலம்தான் சமூக யதார்த்தம் குறித்த பிம்பம் கட்டமைக்கப்படுகின்றது. எது இயல்பானது? எது சரியானது? என்பதற்கான கருத்துருவ செயல்பாட்டை விளம்பரங்கள் முன்வைக்கின்றன. விளம்பரப் படங்களில் கறுப்பு மனிதர்களையே காண முடிவதில்லையே. குடிசை



படிப்பகம்

www.padippakam.com

கள் இடம்பெறுவதில்லையே. இந்துக்கள் தவிர பிறமதத்தினர் தென்படுவதில்லையே. பெண்கள் ஏன் எப்போதும் குளித்துக் கொண்டும் துணி துவைத்துக் கொண்டும் அழகுபடுத்திக் கொண்டும் இருக்கின்றனர்? என்பது போன்ற கேள்விகளுடன் விளம்பரங்களை அணுகும் போது அதன் கருத்தியல் தன்மை தெரியவரும்.

விளம்பரங்கள் போலியான சமத்துவ உணர்வைத் தோற்றுவிக்கின்றன. இங்கு ஜாதி மத இன துவேஷங்கள் வேறுபாடுகள் இல்லை. எவர் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம் என்பதான ஒரு உணர்வு முன் வைக்கப்படுகின்றது. சமூக யதார்த்தத்தைப் பலர் காண முடியாமல் போவதற்கு உதவும் திரையாக இது செயல்படுகின்றது. சமூக நெருக்கடிகள், மோதல்கள் போன்றவை ஏதுமில்லாத எங்கும் அமைதி தவழும் சந்தோஷம் ததும்பும் எல்லாவிதப் பிரச்சனைகளுக்கும் உடனடித் தீர்வு காணும் உலகம் நேயர்கள் முன் கட்டமைக்கப்படுகின்றது. அந்த சந்தோஷ சுக வாழ்வை அடைய பணம் ஒரு தடையாக இருக்கக் கூடாது. அதற்கான பல்வேறு கடன் திட்டங்கள், கடன் கார்டுகள், லாட்டரிச் சீட்டுகள் என மீடியாவை நுகர்வோர் அனுபவிக்கத் துடிக்கும் சொர்க்க உலகைப் படைத்துக் காட்டுகின்றது.

ஒவ்வொரு விளம்பரத்தையும் பார்த்தால் அதற்குள் ஒரு கதையாடல் இருப்பதைக் காணலாம். அந்தக் கதையாடலின் பின்னே ஒரு கருத்துருவமும் அரசியலும் ஒளிந்து கொண்டிருக்கின்றது. நம்மையெல்லாம் நுகர்வோர்களாக மாற்றும் பணியை விளம்பரங்கள் மிகவும் நுட்பமாகச் செய்து கொண்டிருக்கின்றன. மீடியாவின் பொருளாதார முதுகெலும்பாக விளம்பரங்கள் இருப்பதால் மீடியா அவற்றுடன் மிக நெருக்கமான உறவைக் கொண்டிருக்கின்றன. விளம்பரம் செய்யப்படும் பொருட்களையே விளக்கிச் செய்திக் கட்டுரைகளாக வெளியிடும் அட்வட்டோரியல்கள் ஒருபுறமிருக்க, எது விளம்பரம், எது செய்தி என்று பிரித்தறிய முடியாவண்ணம் தொடர்பு சாதனங்களுக்குள் விளம்பரங்கள் விரவிக் கிடக்கின்றன. விளம்பரதாரர்களுக்கு ஏற்ற வாடிக்கையாளர்களை உருவாக்குவதில் மீடியா வரிந்து கட்டிக்கொண்டு நிற்கின்றது. நாம் நினைத்துக் கொண்டிருப்பதுபோல மீடியா நமக்கு விளம்பரங்களை விற்கவில்லை. மாறாக நாம் தான் நமது சம்மதமின்றி நமக்குத் தெரியாமலேயே விளம்பரதாரர்களுக்கு விற்கப்பட்டு விடுகின்றோம். ஜீரணிக்க கடினமாக இருந்தாலும் இதுதான் உண்மை.

இந்தியாவைப் பொறுத்த அளவில் விளம்பரங்களைக் குறித்துப் போதுமான ஆய்வுகள் செய்யப்படவில்லை. விளம்பரங்களை உயர் கல்வி நிறுவனங்கள் பெரும் பொருட்டாக நினைக்கவில்லை என்பதும் இதற்குக் காரணமாக இருக்க முடியும். தமிழ் நாட்டில் நிலைமை இன்னும் மோசமாக இருக்கின்றது. பல்கலைக்கழகங்களில் மீடியா தொடர்பான ஆய்வுகளே குறைவாக இருக்கையில் விளம்பரங்கள் பற்றிய ஆய்வுகள் குறைவாக இருப்பதில் அதிக வியப்பேதும் இல்லை. எந்தவொரு தொடர்பு சாதனத்துக்குமே உடனடி விளைவுகள் தொலை விளைவுகள் இருக்கின்றன. விளம்பரங்களைப் பொறுத்த அளவில் விற்பனை என்பது அதன் உடனடி விளைவாக உள்ளது. இது எவ்வளவு வெற்றிகரமாக உள்ளது என்பதை விளம்பர நிறுவனங்கள் தொடர்ந்து பல்வேறு சந்தை ஆய்வுகளின் மூலம் தெரிந்துகொண்டு தங்கள் யுக்திகளையும் பாணிகளையும் மாற்றிவருகின்றன. உடனடி விளைவுகளைவிட அதிகமான அளவில் கவனம் செலுத்தப்பட வேண்டியது அதன் நீண்டகால விளைவுகளே. விளம்பரம் அறிமுகம் செய்யும் பொருளை வாங்காதோர் கூட அவ்விளம்பரத்தின் நீண்ட கால விளைவின் பாதிப்பு வலைக்கு உட்படுகின்றனர். தலைக்கு சிகைக்காய் தேய்த்துக் குளித்துக்கொண்டிருந்த நாம் விதவிதமான ஷாம்புகளுக்கு மாறியது இதன் காரணமாகத்தான். இதில் எந்த ஷாம்பூவை நாம் உபயோகிக்கின்றோம் என்பது முக்கியமல்ல. ஆனால் தலையில் ஷாம்பூ போட்டுக் குளிப்பதுதான் சரியானது, நாகரீகமானது, விஞ்ஞானபூர்வமானது என நாம் நினைக்கத் தொடங்கியிருப்பது தான் இதில் முக்கியமானது.

ஏற்கனவே சொன்னது போல விளம்பரங்கள் நவீன வாழ்க்கையின் ஓர் அங்கம். அவை இல்லாமல் இயங்க முடியாது. அதே சமயம் அது நம்மீது எப்படிச் செயல்படுகின்றது? அதன் சமூக, பொருளாதார, கலாச்சார பாதிப்புகள் என்னென்ன? என்பனவற்றையும் நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். தமிழகத்தைப் பொறுத்தவரையில் 1975ல்தான் தொலைக்




காட்சி வருகின்றது. 1982ல்தான் வண்ணத்திற்கு மாறுகின்றது. அப்போதும் தமிழ் ஒளிபரப்பு நேரமென்பது வெகு குறைவு. 90களில்தான் புதிய சானல்கள் 24 மணிநேர ஒளிபரப்பு என தொலைக்காட்சி எனும் தொடர்பு சாதனத்திற்குப் புதிய முகமும், வேகமும் கிடைத்திருக்கின்றது. போன தலை முறையைச் சேர்ந்தவர்களுக்கு இந்த மாற்றங்கள் புரியும். விளம்பரங்கள் அவர்கள் கண்ணுக்குத் தெரியும். ஆனால் தற்போதைய தலைமுறை அதிலேயே வளர்ந்து வருகின்றது. விளம்பரங்களும் செய்திகளும் பொழுதுபோக்கு அம்சங்களும் ஒன்று கலந்து எதிலிருந்தும் எதையும் எளிதாகப் பிரித்துப் பார்க்க முடியாதபடி அவர்களை ஆக்ரமித்துக் கொள்கின்றது. அவர்களுக்கு தொடர்பு சாதனங்களைப் பற்றியும் குறிப்பாக விளம்பரங்களின் செயல்பாடுகள் பற்றியும் அதிகம் சொல்லித்தரப்பட வேண்டிய சமூகத் தேவை ஒன்று எழுந்துள்ளது.

கொலாஜ்: அனந்து


படிப்பகம்

www.padippakam.com


With Best Compliments
from

தினமலர்
தேசிய தமிழ் நாளிதழ்

# DINAMALAR

National Tamil Newspaper

*Printed simultaneously at*

Chennai ✧ Coimbatore

Erode ✧ Vellore

Pondicherry ✧ Tiruchi

Tirunelveli ✧ Madurai

Nagercoil

Advt




படிப்பகம்

www.padippakam.com

# மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை

பெருமாள் முருகன்

புரட்சிகரக் கட்சி (சி. பி. ஐ. எம். எல்) ஒன்றின் ஆதரவாளனாகவும் அதன் கலை இலக்கிய அமைப்பில் செயல்படுபவனாகவும் சில ஆண்டுகள் இருந்தேன். அப்போது ஊர்வலம், ஆர்ப்பாட்டம், பொதுக்கூட்டம், மாநாடு எனப் பலவற்றில் பங்குபெற்றேன். அவற்றில் தடை செய்யப்பட்டவையாகவும் சில இருந்தன. சிலவற்றிற்குக் காவல்துறை அனுமதி கொடுத்திருக்கவில்லை. என்றாலும் கைதாகிச் சிறைசெல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவே இல்லை. கட்சி சார்ந்த என் அனுபவங்களை அசைபோடும் வேளைகளில், இது ஒரு குறையாகவே தோன்றுவதுண்டு.

'ஒருமுறைகூடச் சிறைக்குப் போகாமல், புரட்சிகரக் கட்சியில் செயல்பட்டேன் என்று சொல்லிக்கொள்வது வெட்கக்கேடானது' என்று எண்ணம் ஓடும். இது ஒரு விஷயத்தைக் கொண்டே நான் புரட்சிக்காரன் இல்லை என்று யாரேனும் ருசிப்பிக்கக்கூடும் என அஞ்சுவதுமுண்டு. ஆனால், சிறைப் பக்கமே செல்லாதவனும் அல்ல நான். சிறை என்னும் அந்தத் தியாகசாலையில் ஒருநாள் இருந்திருக்கிறேன். அந்தப் பெருமையை உலகறிய அறிவிக்க வேண்டியது என் கடமை.

ஒருமுறைகூடச் சிறைக்குப் போகாமல், புரட்சிகரக் கட்சியில் செயல்பட்டேன் என்று சொல்லிக்கொள்வது வெட்கக்கேடானது என்று எண்ணம் ஓடும். இது ஒரு விஷயத்தைக் கொண்டே நான் புரட்சிக்காரன் இல்லை என்று யாரேனும் ருசிப்பிக்கக்கூடும் என அஞ்சுவதுமுண்டு.



சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆய்வு மாணவனாக இருந்த சமயம். அனேகமாக 1989, 1990 ஆக இருக்கக்கூடும். எனக்கு 'சீனியராக' இருந்தவர்கள் சிலர் சேர்ந்து 'தமிழ் ஆராய்ச்சியாளர்கள் பேரவை' என்று ஓர் அமைப்பைத் தொடங்கியிருந்தனர். பலரை ஒருங்கிணைக்கும் செயல்திறம் கொண்டிருந்த நண்பர் திரு. குணசேகரன் என்பவர் அதன் தலைவராக இருந்தார். பேரவையின் நோக்கமும் கோரிக்கைகளும் மிகவும் நியாயமானவை. தமிழ் இலக்கியத்தில் எம். பில்., பிஎச்.டி. வரை முடித்தவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தும் அவர்களுக்கான வேலை வாய்ப்புகள் ரொம்பவும் குறைவாக இருப்பதை அரசுக்குச் சுட்டிக் காட்டி, அக்குறையைப் போக்க முயல்வது தான் பேரவையின் நோக்கம். தமிழ் இலக்கியம் படித்தவர்களுக்கான வேலை வாய்ப்புகள் எந்தெந்தத் துறைகளில் இருக்கின்றன, எவ்வளவு இடங்கள் காலியாக இருக்கின்றன என்பவற்றைப் புள்ளி விவரங்களோடு தொகுத்துக் கொடுத்து, அவற்றையெல்லாம் உடனே நிரப்ப வேண்டும் என்று பேரவை கோரிக்கை வைத்தது. சமூகத்திற்குப் பயன்படும் வகையில் புதிய வேலை வாய்ப்புகளையும் உருவாக்கமுடியும் என்று கூறிய பேரவை, அவற்றையும் முன்வைத்து அரசுக்கு வேண்டுகோள் விடுத்தது.

இந்தப் பேரவையில் இணைந்து செயல்படுவதில் தொடக்கத்தில் எனக்குத் தயக்கம் இருந்தது. 'சமூக மாற்றத்திற்கான கோரிக்கை எதுவும் இதில் இல்லை' என்றும் 'அரசுக்குக் கோரிக்கை வைத்துப் பயனில்லை. புரட்சிக்காகப் போராடுவது தான் பிரச்சினை தீரும் வழி' என்றும் வறட்டுத்தனமான கருத்துக் கொண்டிருந்தேன். எனக்கும் வேலை என்பது பிரச்சினையாக இருந்த காரணத்தாலும், பிரச்சினை தீர்கிறதோ. இல்லையோ கோரிக்கை வைத்துப் போராடுவதன் வழியாக அரசை அம்பலப்படுத்த முடியும் என்று ஒரு நியாயம் தோன்றியதாலும், முன்னின்றவர்கள் எல்லாம் என் சீனியராக இருந்தாலும் -இப்படிப் பல காரணங்களின் காரணமாகப் - பேரவையின் செயல்பாடுகளில் இணைந்து கொண்டேன்.

பேரவையின் முக்கிய சாதனை, தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் அனைத்திலும் பயின்று கொண்டிருந்த தமிழ் இலக்கிய ஆய்வு மாணவர்களை ஒருங்கிணைக்க எடுக்கப்பட்ட முயற்சி. மிகச் சிலர் சேர்ந்து இந்த முயற்சியில் பெருமளவு வெற்றியும் பெற முடிந்தது. கோரிக்கைகளை விளக்கித் துண்டறிக்கைகள் வெளியிடப்பட்டன. அரசுக்குக் கோரிக்கை மனுக்கள் அனுப்பப்பட்டன. கல்வி அமைச்சரைச் சந்தித்துப் பேசியதாகவோ பேச முயற்சி செய்ததாகவோ ஞாபகம். அதன்பின் ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் அறிவிக்கப்பட்டது. சேப்பாக்கம் சிதம்பரம் விளையாட்ட



படிப்பகம்

www.padippakam.com

ரங்கின் முன் அமைக்கப்பட்ட பந்தலில் உண்ணாவிரதம். தமிழ் நாட்டின் பல இடங்களில் இருந்தும் சொந்தச் செலவில் ஆய்வு மாணவர்கள் வந்து குழுமியிருந்தனர். பேராசிரியர்கள் உண்ணாவிரதத்தை வாழ்த்திப் பேசினர். அளவளாவலும் சாத்தியமானது. எல்லோருக்கும் சந்தோசமாக இருந்தது. அரசின் காதில் எப்படியும் சங்கொலியைக் கொண்டு சேர்த்துவிட முடியும் என்னும் நம்பிக்கை பிறந்தது.

ஓரிரு மாதங்கள் கழிந்து, சாலை மறியல் போராட்டம் அறிவிக்கப்பட்டது. அண்ணா சாலையில் சிம்சன் கம்பெனி இருக்குமிடத்தில் உள்ள பெரியார் பாலத்தின் பக்கத்தில் காமராசர் சிலையருகே கூடி மறியல் செய்வது எனத் தீர்மானிக்கப்பட்டது. வழக்கம்போல், காவல்துறை அதற்கு அனுமதி கொடுக்கவில்லை. ஆனால் முடிந்தால் மறியல் செய்வது, இல்லையேல் கைதாவது என்று முடிவு செய்யப்பட்டது. அந்த குறிப்பிட்ட நாள் காலையில் மறியலில் ஈடுபடச் சென்றேன். சிம்சன் நிறுத்தத்தில் இறங்கி மறியலுக்காகக் குறிப்பிட்டிருந்த இடத்தை நோக்கி நடந்தேன். காவல் துறை வாகனமும் கீழே நின்றிருந்த காவலர்களும் தெரிந்தனர். காவலர்களின் எண்ணிக்கை பதினைந்துக்கு மேலிருக்கும். மறியல் செய்ய வந்தவர்கள் எவரையும் காணோம். எனக்குத் தயக்கம். ஆனாலும் நடந்தேன். அருகே செல்லும்போது பேரவைத் தலைவரின் தலை தென்பட்டது. அவருடன் இன்னும் இருவரும் நின்றிருந்தனர். தெம்பாக இருந்தது. அவர்களைப் பார்த்துச் சென்றேன். என் முகத்தைப் பார்த்ததும் மறியலுக்காகத்தான் வந்திருப்பேன் என்பதை ஊகித்துக்கொண்ட காவலர், 'அங்க போயி நில்லுங்க' என்று வழி காட்டினார்.

நான் மறியலில் பங்கேற்க வந்தது பற்றி மகிழ்ச்சி தெரிவித்த தலைவர், இவ்வளவு நேரமாகியும் மற்றவர்கள் வரவில்லையே என ஆதங்கப்பட்டார். மறியல் செய்ய விடமாட்டார்கள் எனவும் கைதாகிவிடலாம் எனவும் கூறினார். அடுத்த அரைமணி நேரத்தில் இன்னும் சிலர் வரக் கிட்டத்தட்டப் பத்துப்பேர் சேர்ந்துவிட்டோம். உடனே எங்களைக் காவல் துறை வாகனத்தில் ஏறி உட்காரச் சொன்னார்கள். தலைவர் மட்டும் வருபவர்களுக்கு வழிகாட்ட வேண்டி கீழே நின்று கொண்டார். வாகனத்தில் சந்தோசமாகப் பேசிக் கொண்டிருந்தோம். வெளியூர் ஆட்கள் ஒன்றிரண்டு பேர்களே வந்திருந்தனர். இன்னும் அரைமணி நேரத்தில் இன்னொரு பத்துப்பேர். அவர்களையும் வண்டியில் ஏற்றியதும், 'இன்னும் வருவார்களா, அவ்வளவுதானா' என்று கேட்டுக் காவல் துறை 'அவ்வளவுதான்' என்று உறுதிப்படுத்திக் கொண்டது. ஒன்றிரண்டு காவலர்களை மட்டும் எச்சரிக்கையாக அங்கேயே விட்டுவிட்டு எங்களோடு வாகனம் புறப்பட்டது. திரைப்படத்தில் வருகிற மாதிரி கைகளில் விலங்கு மாட்டித்தான் கைது செய்வார்கள் என்னும் எதிர்பார்ப்பு பொய்யாகிப் போனது பற்றிப் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தோம்.

எல். ஐ. சி. கட்டடத்திற்குப் பக்கத்தில் இருந்த காவல் நிலையத்திற்குப் போனது வாகனம். நீள பெஞ்சுகளில் எங்களை அமர வைத்தார்கள். காவலர்கள், துணை ஆய்வாளர் எல்லோரும் எங்களிடம் மரியாதையாகப் பேசினார்கள். வீட்டுக்கு வந்த விருந்தாளிகளை உபசரிப்பது போலிருந்தது அவர்களது நடவடிக்கை. பெரிய குறிப் பேட்டைக் கொடுத்து, அதில் வரிசையாகப் பெயர் எழுதிக் கையொப்பம் இடச் சொன்னார்கள். பல்கலைக்கழக வருகைப் பதிவேட்டில் கையொப்பம் இடுவது தினசரி வழக்கம். ஒருநாள் இங்கே கையொப்பம் இடுகிறோம், இரண்டும் ஒன்று தானே என்று யாரோ காதைக் கடித்தார்கள். இந்தக் கையொப்ப நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கும் போதே, துணை ஆய்வாளர் ஒரு காவலரை அழைத்து ஏதோ கட்டளையிட்டார். யாரையோ விசாரிக்கச் சொல்லி ஆணையிடுவது புரிந்தது. காவலர் உள்ளிருந்த அறைகளை நோக்கிச் சென்றார்.

துணை ஆய்வாளர் எங்களிடையே ஒரு சிற்றுரை நிகழ்த்தத் தொடங்கினார். நாங்கள் எல்லாம் படித்தவர்கள் என்பதை அழுத்தமாகக் கூறிய அவர், படித்தவர்கள் நடத்த வேண்டிய நாகரிகமான போராட்ட முறைகளைப் பற்றி விளக்கினார். படித்தவர்கள் சாலைக்கு வந்து மறியலில் ஈடுபடக் கூடாது; மனுக்கள் எழுதலாம் என்பதுதான் அவருடைய உரையின் சாராம்சம். அதை அவர் அறிவுரையாகக் கூட இல்லாமல் கட்டளையிடும் தொனியில் விளக்கினார். கிட்டதட்டப் பேராசிரியர் ஒருவரின் விரிவுரை போலவே இருந்தது. விரிவுரை நடந்து கொண்டிருந்தபோதே உள்ளே போன காவலர், கம்பிகள் போட்ட சிறைக்குள் இருந்து ஒருவரை அழைத்து வந்தார். ஆள் ஒல்லி. நல்ல உயரம். நாற்பது வயதிருக்கும். உடம்பில் நைந்துபோன ஜட்டி ஒன்றைத் தவிர வேற எதுவுமில்லை. எங்கள் கண்களில் படும்படியாகச் சற்று தூரத்தில் அவரை நிற்க வைத்துக் காவலர் விசாரிக்கத் தொடங்கினார். விசாரணை என்பது ஒன்றுமில்லை. கையில் இருந்த தடியால் கண்மண் தெரியாமல் அடிப்பதும் உதைப்பதும்தான். அவர் அலறும் கூச்சல் மட்டும் தான் எங்களுக்குக் கேட்டது. காவலர் என்ன கேட்கிறார் என்பது புரியவில்லை. ஏதோ 'பிக் பாக்கெட் கேஸ்' என்பது புரிந்தது. வன்முறை பிரயோகம் ஐந்து நிமிடம் வரை நடந்திருக்கும். எங்களில் யாருமே அப்படியொரு வேகமான தாக்குதலை அதற்குமுன் பார்த்ததில்லை. எங்கள் பக்கம் பெரும் நிசப்தம். எல்லோர் கண்களும் அங்கேயே விறைத்திருந்தன. துணை ஆய்வாளரின் சமிக்ஞை வந்ததும் அடிபட்டவரைக் காவலர் உள்ளே கூட்டிச் சென்றார். ரணத்தோடும் வலியோடும் கண்ணீர்விட்டபடி மெல்ல நடந்து செல்லும் அந்த மனித உருவம் மறைந்ததும்தான் எங்களுக்கு உணர்வு திரும்பியது. ஆய்வாளர் எங்களைப் பார்த்துச் சிரித்தார். சிரிப்பதுபோல் நாங்களும் வேறு வழியற்று முகம் காட்டினோம். அவருடைய விரிவுரையின் தொடர்ச்சிதான் நடந்த விசாரணை என்பது புரிந்தது. காவல் துறையின் உளவியல் மிரட்டல் இது. நாங்களும் கைதி; அடிபட்ட ஆளும் கைதி. எங்களுக்கு முழு உடை; அந்த ஆளுக்கு ஜட்டி மட்டும். நாங்கள் உட்கார வைக்கப்பட்டிருக்கிறோம்; அவர் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறார். எங்களுக்கு அறிவுரை; அவருக்கு அடி. படித்த கனவான்களை நடத்துவதற்கும் பிக்பாக்கெட்காரனை நடத்துவதற்குமான வேறுபாடு எங்களுக்குக் காட்டப்பட்டிருக்கிறது.

நாங்கள் மனு எழுதாமல் மறியலில் இறங்கினால் எங்களை நடத்தும் முறை எப்படி இருக்கும் என்பதைக் கண்ணெதிரிலேயே உணர்த்தியிருக்கிறார்கள்.

அங்கே நடந்தது அவ்வளவுதான். வாலாஜா சாலையில் இருக்கும் காவல் நிலையத் தோட்டத்தில் அன்று முழுவதும் சிறைவைக்கப்பட்டிருந்தோம். கம்பிச் சிறை இல்லை. தோட்டத்தில் சுதந்திரமாகத் திரிந்து கொண்டிருந்தோம். மாலையில் வெளியே அனுப்பப்பட்டோம்.

அதற்குப் பின் 'தமிழ் ஆராய்ச்சியாளர் பேரவை' என்னவாயிற்று? எனக்குத் தெரியாது. என்னைப் போலவே பிறருக்கும். ■




படிப்பகம்

www.padippakam.com


# INDO - SWISS

## THE REAL LEADER IN SYNTHETIC GEMS

The Indo - Swiss synthetic gem manufacturing company is a pioneer in the manufacture of a variety of rough synthetic gem stones for different applications : to add beauty, brilliance and colour to jewellery, to add precision and sharpness to the manufacture of Jewel bearings for watches & electrical meters, watch glasses, knife edges, spherical balls for ball bearings, rods, plates, thread guides, orifices and so on.


**THE INDO - SWISS SYNTHETIC GEM MANUFACTURING COMPANY LIMITED**

REGD. OFFICE :

21-1-60 & 61, Main Road
Mettupalayam - 641 301
Phone - Office : 22136

Factory : Vellipalayam Road
Mettupalayam - 641 301
Phone : 22087 & 22137

*Fax* : 91-4254-26266, *E-Mail* : indoswiss@eth.net *Grams* : "Indoswiss"

SELLING AGENT

**G.P. & COMPANY**

HEAD OFFICE

No.6, Jaffer Sahib Street, Tiruchirapalli - 620 008.

Phone : 702960 & 704006, Grams : "Geepeeco"

Advt

MANUFACTURERS OF ROUGH SYNTHETIC GEM STONES ( SPINAL AND CORUNDUM ) IN VARIOUS COLOURS




படிப்பகம்

www.padippakam.com

# தேவதேவன்

## கண்டேன்

பள்ளத்தாக்கின் சிறுமரத்தை
மலையோடு போட்டி போட்டு
வானளாவ வளரச் செய்ததைப்

புல்லை, மூங்கிற்
பெருமரமாகச் செய்ததைக்

கண்டேன் அந்தக் கானகத்தில்
நான் நின்ற வேளை.

## தவளைகள்

குதித்துக் குதித்துக் குதித்தே
நிதம் சாகின்றன
தூரம் வந்துவிட்ட தவளைகள்.

## அய்யோ பாவம்!

அவனைத் தொட்டு எழுப்பிவிட்டு,
தனி சமிக்ஞையைப் புரிந்துகொண்டு
பின் தொடர்வான் என்ற முழு நம்பிக்கையில்
திரும்பிப் பாராமல், செல்லும் சூரியனை -
அய்யோ பாவம், அவன் அறியவில்லை.

இருள் சூழ்ந்தும் ஏற்றிய அறை விளக்கொளி
வீதியில் விழுந்ததையும்
விளக்கணைத்துப் படுத்துக் கொண்டதும்
வீதி விளக்கொளி அறைக்குள் விழுந்ததையும் -
அய்யோ, பாவம், அவன் அறியவில்லை.

## விரும்புவதெல்லாம் ஒன்றே

விரும்புவதெல்லாம்
இந்த மரத்தைப் போலவும்
இந்தப் பறவையைப் போலவும்
இந்த மிதிவண்டியைப் போலவும்
இவ்வுலகில் வாழத்
தகுதி பெற்றிருத்தல்
ஒன்றே.



## வீடும் யாத்ரீகனும்

எந்தெந்த தேசங்களிலெல்லாமோ
நான் சந்திக்க நேர்ந்த அந்த யாத்ரீகன்
அன்று ஒரு வீட்டின்முன் நின்றுகொண்டு
வீதியையே பார்த்துக்கொண்டிருக்கக் கண்டேன்.

நிலையான அச்சித்திரத்தின் முன்னே
வந்து மறைந்து கொண்டிருந்தனர் வழிப்போக்கர்கள்.
வழிப்போக்கன் விழியில்
சற்றுநேரம் தெரிந்து மறையும் சித்திரம் அது.

## அவரை நான் பார்த்ததில்லை

"அவரை நான் பார்த்ததில்லை
நிழற்படத்தில்தான்
அவரைப் பார்த்திருக்கிறேன்"
என்றார் அவர்.

பெரும்பான்மை மனிதர்களின்
அவலமே அதுதான்.



படிப்பகம்

www.padippakam.com

பாலை நிலவன்

## வருகையும் வரவேற்பு

*1.*

கதவு திறக்கையில்
விருப்பத்தோடு நுழையும்
முதல் வெயில்
அன்றைய தினத்தை
ஒளிர்த்து வைக்கிறது

வெயில் மறைய மறைய
அன்றைய தினம்
சவ ஊர்வலத்தை
ஞாபகப்படுத்தி இருட்டுகிறது

*2.*

இருட்டை உடைத்து
கதவு வழிநுழைந்த முதல் வெயில்
நன்மை நிறைந்த வரவேற்பாளனை
தேடிக் கொண்டிருந்தது
அந்த நாளை அவனுக்காக மட்டும்
ஆசீர்வதிக்க
அவன் தேநீர் கோப்பையுடன் வந்தான்
ஆழ்ந்த சிநேகத்தின் நகைப்போடும்

## மழை வெயில்

மணலின் நறுமணம்
காற்றில் வெதுவெதுப்புடன்
பரவிக் கொண்டிருக்கும்
அதிகாலையின் கூட்டில்
பூமியின் இருப்பு
கைக்குழந்தைபோல்
வெகு பத்திரத்தோடிருக்கிறது

நறுமணத்தை முகர்ந்து கடக்கிறவன்
நேற்றைய மழையை
சுமந்து செல்கிறான்
அல்லது
ஆதிகாலத்தின்
முதல் வெயிலை இன்னும்
கொஞ்ச நேரத்தில்
தர்சித்து விடுவான்

## சவமணம்

கொலை செய்யப்பட்ட உடலோடு
நடமாடித் திரியும்
ஒருவனை
உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறேன்

பாறையில் விழுந்து கிடக்கும்
பறவையின் பிணமொன்றினை
முகர்ந்து திரும்புவீர்கள் . . .

மத்தியான வெயில்
உங்கள் தலையில் இறங்கி
மனசை கொன்று கொண்டிருக்கும்
பிறகு.



Rafique Sayed



படிப்பகம்

www.padippakam.com

# ஒரு மாலையும், இன்னொரு மாலையும்

இந்தியப் பெண்களின் வாழ்வியக்கம் வரையறுக்கப்பட்ட மிகச்சிறிய பரப்பிற்குள் அடங்கி விடக்கூடியது. கடைத்தெருக்கள், வழிபாட்டுத்தலங்கள், நெருங்கிய உறவினர்களது வீட்டு விசேஷங்கள், சடங்கு முறையிலான பொது நிகழ்வுகள் மற்றும் பணியிடங்கள் போன்ற கண்காணிப்பின் இறுக்கம் மிகுந்த இடங்களுக்கான சில பயணங்களைத் தவிர்த்து, வீடு என்னும் ஒற்றைப் பரப்பிற்குள் வாழ்ந்து மடிந்துவிடக்கூடிய ஜீவன்களாகவே இந்தியப் பெண்கள் இருந்து வந்திருக்கிறார்கள். நவீன வாழ்வு, பெண்களின் வாழ்வியக்கத்திற்கான பரப்பைப் பெருமளவு விரிவுபடுத்தியிருக்கும் போதிலும், வீடு தனது கூண்டுகளுடன் அவளது காலடிச் சுவடுகளைப் பற்றிப் பின் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. தகப்பன் (தாய்), கணவன், சகோதரன், அண்டை வீட்டினன் என்று வீட்டிற்குள் உலவும் மனிதர்கள், வெவ்வேறு பெயர்களோடும், வெவ்வேறு முகங்களோடும் அவளைச் சூழ்ந்துகொண்டு அவளது இருப்பை, வாழ்வியக்கத்தைத் திணறலாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தியப் பெண்கள் தம் மீதான ஒடுக்கு முறைகளை மௌனமாக ஏற்றுக் கொண்டிருப்பவர்கள் அல்லர். அந்தரங்கமான கனவுகள், தமக்குள்ளாகப் பகிர்ந்து கொள்ளத்தக்க புனைவுகள், ரகசிய மீறல்கள், உரத்த தேம்புதல்கள், நீண்ட சச்சரவுகள் என்பன போன்ற எண்ணற்ற நுட்பமான வழிமுறைகளில் போராடி வருபவர்கள்தான். முனகல்களையொத்த சிறு கவிதைகளை எழுதுவதிலிருந்து, ஒடுக்குமுறையின் சகல வடிவங்களையும் எதிர்க்கும் அமைப்பு ரீதியிலான மற்றும் அறிவுத்துறை சார்ந்த பற்பல செயல்பாடுகள்வரை இந்தியப் பெண்களின் எழுச்சி பல தளங்களுக்கு விரிவடைந்திருக்கிறது.




*ஆசிரியர் : சல்மா*
*காலச்சுவடு பதிப்பகம்*
*669 கே.பி. சாலை*
*நாகர்கோவில் 629 001*
*பக். : 80; விலை ரூ. 40*

— தேவிபாரதி —

நவீன வாழ்வின் ஒளிச்சிதறல்கள் தீண்டாத பிரதேசங்களில் வாழும்படி நிர்ப்பந்திக்கப்பட்ட பெரும்பாலான இந்தியப் பெண்களின் இருத்தலுக்கான ஒற்றை வெளியாக இருப்பது வீடு மட்டும்தான். ஒவ்வொரு வீடும் பெண்களின் நடமாட்டத்திற்கான தனி ஒற்றையடிப் பாதைகளை உள்ளடக்கியது. வீட்டின் புறவுலகத் தொடர்புகளுக்கான எண்ணற்ற ஜன்னல்களில், அவளுக்காகத் திறந்து வைக்கப்பட்டிருக்கும் கதவுகளின் எண்ணிக்கை, மிகச் சொற்பமானது. தனது சகல தேவைகளையும் ஆணின் வழியாகவே நிறைவேற்றிக்கொள்ள வேண்டிய கட்டாயத்திலிருக்கும் இந்தியப் பெண், ஆணின் நலன்களை வலியுறுத்தும் ஒப்பந்தங்களை ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பவள்.

சல்மாவின் கவிதைக்குரல் இந்தப் பெண்களின் துக்கங்களை, பெருமூச்சுக்களை, இன்மைகளை, சிறு சந்தோஷங்களைக் கூடக் குறித்து வைத்துக்கொள்ள முடியாத, பெரும் ஒடுக்குமுறைகளை, அவற்றின் நுட்பமான வடிவங்களை, இவற்றையெல்லாம்விட முக்கியமான அவர்களது தனிமையைப் பற்றி நனைந்த வார்த்தைகளால் பேசுகிறது – வியர்வையால், கண்ணீரால் நனைந்த வார்த்தைகளால்.

வீடு என்னும் வெளியைத் தமது இயங்குதளமாகக் கொண்ட சல்மாவின் கவிதைகள், அதன் பௌதீக அடையாளங்களைப் பற்றிப் பேசுவதற்கு மறுத்து விடுகின்றன. தனது பாதங்களுக்குச் சொந்தமில்லாத வீட்டின் பிற, புறப் பரப்புக்களைப் பற்றிப் பேசுவதற்குத் திட்டவட்டமாக மறுத்துவிடுகிறாள் சல்மாவின் கவிதைப் பெண். தனக்குப் பாதுகாப்பையும், சௌகரியங்களையும் தரும் வீடு, அவளுக்கு எண்ணற்ற ஜடப்பொருட்களோடும், ஒரு மனிதனோடும் தொடரவியலா வாழ்க்கையாகத் தொடந்து கொண்டிருப்பதற்கான ஒரு இடமாக இருக்கிறது. விருந்தினருக்காகக் காத்திருக்கும் பாத்திரங்கள் நிரம்பிய அறை, வெளியிலிருந்து எதையும் கொண்டு வராத ஜன்னல்கள், காற்றைத் தேடி ஓடிவிடாதவாறு அவளைக் கட்டுப்படுத்தும் மின் விசிறி, எஜமானின் ஆயுதமான கட்டில், பேச மறுக்கும் நிலைக்கண்ணாடி, சுவரில் தொங்கும் வரைபடத்தின் பயனற்ற நிழல், தனிமையின் குறியீடான அவளது கைக்குழந்தை உறங்கும் தொட்டில், வண்ணத்துப் பூச்சிகள் வெளியேற வழியற்ற பூட்டியகதவுகள், அந்தரங்கத்தை உறுதி செய்யாத மொட்டை மாடியின் திறந்த வெளி, நிர்வாணம் பற்றிய அருவெருப்பின் பயத்தை மூட்டும் குளியலறை, பரிச்சயம் கொள்ள யாருமற்ற நடமாட்டங்கள் நிறைந்த வரவேற்பறை என்று தொகுப்பில் இடம் பெற்றிருக்கும், அநேகமாக எல்லாக் கவிதைகளிலும் வீட்டைப் பற்றிய அழுத்தமான கோடுகளாலான கருப்பு வெள்ளைச் சித்திரங்களின்மீது, அதன் பரப்பிற்குள் திணறும் வாழ்வைப் பற்றிய இருண்ட வண்ணங்களைப் பூசுகிறது, சல்மாவின் கவிதை மனம்.

மயானத்திற்கு ஈடான அமைதியுடன் இருக்கும் வீடு, சல்மாவின் கவிதைப் பெண்ணுக்கு அதனுடன் தொடரவியலாத உறவாக மாறிச் சங்கடப்படுத்துகிறது. தன் வீடு யாரோ ஒருவருடைய வீடாகத் தோற்றம் தருகிறது. உன் வீடு என்று வெறுப்பை உமிழச் செய்கிறது. ஆனாலும் கலங்கலானதே எனினும் சிறிது அன்பைப் பெறவும், வெளியுலகிலிருந்து கருத்தடை சாதனங்களையும், சானிடரி நாப்கின்களையும் பெறவும், அவளது குழந்தையின் தாய் என்ற பொறுப்பை நிறைவேற்றவும், தனக்கான சிறிதளவு அதிகாரத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ளவும், உடல்களுக்கிடையேயான மர்மம் தீர்ந்து விட்ட பிறகும் பாவனையாக நீளும் புணர்ச்சிக்காக, எந்தக் கதகதப்பையும் ஏற்படுத்தாத படுக்கை விரிப்புக்களின்மீது விரிகிறது அவளுடைய யோனி. இரண்டாம் ஜாமத்தில் விபரீதமான கனவுகள் பெருகுகின்றன. சுவரோவியத்தில் அமைதியாக இருக்கும் புலி, அவளது தலை மாட்டில் வந்தமர்ந்து கொண்டு அவளை உற்றுப் பார்க்கிறது. காலத்தாலும் வரலாற்றாலும் தெளிவாக்கப்பட்டிருக்கிறது, அவளுடைய நிலைப்பாடு.

இயக்கங்களால் வரையறுக்கப்பட்ட உடலையும், ஒடுக்குமுறைக்குள்ளான மனதையும் கொண்டவள் சல்மாவின் கவிதைப் பெண். எனினும் வண்ணத்துப்பூச்சியின் வண்ணங்கள் உதிர்ந்துபோன மெல்லிய சிறகுகளைப் பெற்றுக்கொண்டு பறக்கத் தொடங்குகிறது, அவளுடைய கவிதை மனம். அதன் ரகசியமான பயணம், நட்சத்திரங்களை இலக்காகக் கொண்டு, முகில்களின் வழியே வானத்தைக் கடந்து செல்லும் முனைப்புக் கொண்டது. அந்தப் பயணத்தின் எந்த ஒரு புள்ளியோடும் தன்னைப் பிணைத்துக் கொள்ளவியலாத உடலியக்கத்தின் பலவீனம், சல்மாவின் கவிதைப் பெண்ணுக்குத் தன் மீதே நம்பிக்கையிழக்கச் செய்கிறது. அவளது அன்றாடக் கடமைகளில் பதற்றங்களும் ஓட்டைகளும் தென்படத் தொடங்குகின்றன. படுக்கையறையிலும் இன்றைக்கு என்ன என்ற கேள்வி. இறுதியில், தனிமையைத் தனது புகலிடமாகக் கொள்கிறாள் சல்மாவின் கவிதைப் பெண்.

தனிமையைப் பிறர் அறியாத அந்தரங்கமாகப் பேணுகிறது அவளுடைய மனம். தனிமையை ரசிக்கிறது, விரும்புகிறது, வெறுக்கிறது. தனிமை அதற்கொரு சுமை. அது இந்த வாழ்வின் நிர்ப்பந்தமாயிருக்கிறது. யாருமில்லாத இடத்தில் தனியாகத்தான் இருக்க முடியும் என்று தனது தனிமையின் காரணத்தை, சப்தங்களற்ற விம்மல்களினூடாகச் சொல்கிறது. மிக நிராதரவான நிலையில்தான் தொடங்கிற்று தனிமையுடனான எனதிந்த உறவும் என்று கூறும் சல்மாவின் கவிதைப்



படிப்பகம்

www.padippakam.com

பெண்ணுக்கு, நசிந்து வரும் இடுக்காகத் தனிமை, குளியலறையில் நிர்வாணம் பற்றிய அருவருப்பின் பயத்தை மூட்டுவதாயிருக்கிறது. தோட்டம், மொட்டைமாடி, சாய்வு நாற்காலி என ஏற்கனவே பயங்கரமாகிவிட்ட வெளிகளை நிராகரிக்கும் அவளுடைய மனம் தனது குழந்தையின் தொட்டிலைக் கேட்கிறது. குழந்தைமையை, அதன் தனிமையின் பாதுகாப்பை நாடுகிறாள். தன்னைத் துன்புறுத்தும் இரைச்சல்களின் உள்ளிருந்து தனக்கான தனிமையை உருவாக்கவும் முற்படுகிறாள். புற உலகுடனான உறவை முற்றாகத் துண்டித்துக் கொள்ளும் சல்மாவின் கவிதைப் பெண், பாழ் வெளியில் ஒரு அரண் அமைத்துத் தன்னைக் காத்துக் கொள்கிறாள். வழி தவறி வந்த தேவதைகள் சிலவும் ஏமாற்றத்துடன் திரும்பிப் போயிருக்கக்கூடும் என தனது தனிமை தனக்கேற்படுத்தும் இழப்பைப் பற்றி ஆற்றாமையுடன் குறிப்பிடுகிறாள். தனிமை பற்றிய சல்மாவின் மிக எளிய படிமங்கள் ஏற்படுத்தும் அதிர்வுகள் தீவிரமானவை. தீரவே தீராத தனிமை என்ற புழக்கத்தின் எளிய சொற்கள், ஒரு வாக்கியமாகக் கவிதையில் இடம் பெறும்போது, வாசக மனத்தில் எழுப்பும் துக்கம் பயங்கரமானது.

சல்மா உருவாக்கும் கவிதைப் பெண்ணின் புறவுலகத் தொடர்புகள் வெறும் நினைவுகளாலானவை. அவற்றை ரகசியமானவையாகப் பேணுபவை. தொலைபேசியின் பிரியமான குரல் அவளது ஆன்மாவிற்கு உயிரூட்டுகிறது. அவளது துயரங்களுக்கும், தனிமைக்கும் காரணம் கேட்கிறது, வருந்துகிறது, தோழமை கொள்ளவும் முன் வருகிறது. எனினும் அந்த உறவு ஏற்படுத்தும் அச்சத்திலிருந்தும் பதற்றத்திலிருந்தும், குற்ற உணர்ச்சியிலிருந்தும், பாதுகாப்பின்மையிலிருந்தும் விடுபட முடியவில்லை அவளால். ஒரே புள்ளியை மையமாகக் கொண்டு வரையப்பட்ட, வெவ்வேறு அளவுகளாலான வட்டங்களின் ஒழுங்கையும் நேர்த்தியையும் கொண்டிருப்பவை, சல்மாவின் கவிதைகள். புள்ளிகள் மாறுபட்டிருந்தால் வட்டங்கள் ஒன்றையொன்று வெட்டி, வேறு வேறு சித்திரங்களை அளித்திருக்கக் கூடும். திரும்பத் திரும்ப வரும் ஒரே மாதிரியான சொல்லாடல்களும், படிமங்களும் ஆயாசத்தை உருவாக்குகின்றன. இது தற்போதைய பல தமிழ் கவிகளுக்கும் பொருந்தும். சல்மாவிடமிருந்து இன்னும் அடர்த்தியான கவிதைகள் வெளிவரக்கூடும். பூச்செண்டுகளுக்குப் பதிலாக வரும் கள்ளிச்செடிகளைப் பெற்றுக் கொள்ளும் அனுமதியைத் தனது கவிதைப் பெண்ணுக்கு அளிக்க முன்வரவேண்டும், சல்மா. அப்போது முட்களின் கீறல்களிலிருந்து பெருகும் குருதி அவரது கவிதைகளின் வண்ணங்களை மாற்ற வாய்ப்பிருக்கிறது. ■

# வரப்பெற்றோம்

ரஜினி சில முகங்கள்; ச. ராஜநாயகம்; சிலம்பம், பண்பாடு – மக்கள் தொடர்பகம், லயோலா கல்லூரி, சென்னை 600 034; ரூ.20

தமிழகப் பிரபலங்களின் நதிமூலம்; மணா; ருத்ரா பதிப்பகம், 14 அ. முதல் தெரு, அருளானந்த அம்மாள் நகர், தஞ்சாவூர்; ரூ.75

பாசிசம்; எம். என். ராய்; விடியல் பதிப்பகம், 3 மாரியம்மன் கோவில் வீதி, உப்பிலிபாளையம், கோவை 641 015; ரூ.25

தமிழில் நாட்குறிப்புகள்; எஸ். ஜெயசீல ஸ்டீபன்; இந்திய – ஐரோப்பியவியல் ஆராய்ச்சி நிறுவனம், 49 செல்வராஜூ செட்டியார் வீதி (முதல் மாடி), புதுச்சேரி 605 012; ரூ. 115

இயந்திர மாலை; ஆர். ராஜகோபாலன்; மதி நிலையம், 45 செல்லப்பிள்ளையார் கோயில் தெரு, இராயப்பேட்டை, சென்னை 600 014; ரூ.40

கால்நடை மருத்துவனின் காலடிச்சுவடு; டாக்டர் வி. ஞானப் பிரகாசம்; சாந்தி பப்ளிகேஷன்ஸ், 44 அண்ணாசாலை, சென்னை 600 002; ரூ.30

எழுபதுகளில் கலை இலக்கியம் (ஆய்வுக்கட்டுரைகள்); ரூ. 40

சிதைவுகளின் ஒழுங்கமைவு (பின் நவீனத்துவப் பிரச்சினைப் பாடுகள்); பிரேம் : ரமேஷ், ரூ. 150

ஆராரோ; சுந்தரபாண்டியன்; Kaavya, 16,17th 'E' Cross, Indiranagar 2nd Stage, Bangalore 560 038, ரூ. 30

எங்கள் தேசம் (சிறுகதைகள்); முருகபூபதி; ரூ.36

மண்ணும் மல்லிகையும்; விமல் குழந்தைவேல்; ரூ.40

வேட்கை; நீர்வை பொன்னையன்; ரூ. 50

இலட்சியக் கனவுகள் (நாவல்); செ. கணேசலிங்கன்; ரூ.48

அவர்களுக்கென்று ஒரு குடில் (சிறுகதைகள்); பொ. கருணாகரமூர்த்தி; ரூ. 70

நோயில் இருத்தல் (நாவல்); ரூ. 85

குமரன் பப்ளிஷர்ஸ், 3 மெய்கை விநாயகர் தெரு, வடபழனி, சென்னை 600 026

அறுபடை வீடுகளின் தத்துவங்கள்; மாங்காடு கண்ணப்ப மனோகரன்; ரூ. 54

ஒரு ஜீவநதியின் தாகம் (கவிதைகள்); ஏரல் ராஜன்; ரூ. 18

சிநேகிதன் (சிறுகதைகள்); விழி. பா. இதயவேந்தன்; ரூ. 36

மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, 4 தணிகாசலம் சாலை, தியாகராய நகர், சென்னை 600 017

இவர்கள் வித்தியாசமானவர்கள் (வாழ்க்கைக் குறிப்புகள்); அந்தனி ஜீவா; ரூ.40

பண்பாட்டுச் சிந்தனைகள்; சி. தில்லைநாதன், விலை குறிப்பிடவில்லை

குமரன் பப்ளிஷர்ஸ், 3 மெய்கை விநாயகர் தெரு, வடபழனி, சென்னை 600 026

இன்குலாப் ஜிந்தாபாத்; ஜீவன்; மீனாட்சி நிலையம், மயூரா வளாகம், 48 தாணப்பமுதலி தெரு, மதுரை 1; ரூ.30

நிழல் (கவிதைகள்); இந்தியன் சமஸ்; New Indian Publishers 28, சஞ்சீவி தெரு, மன்னார்குடி 614 001; ரூ.15

தமிழ் – சிங்கள இலக்கண உறவு; டாக்டர் இரா. அறவேந்தன்; திருவரசு, 1–61 நடுத்தெரு, வி. சாத்தனூர் அஞ்சல், விக்கரவாண்டி வழி, விழுப்புரம் 605 602; விலை குறிப்பிடவில்லை

விளையாட்டு மூலம் கல்வி; பி. ஜான் பிரிட்டோ; Manitham, Center for Research in Education, Communication & Development, Post Box No. 262, 12 Narmadhai Street, Yagappa Nagar, Thanjavur 613 007; ரூ.30

மூன்று இதழ்களும் கொஞ்சம் தூரிகையும் (ஹைக்கூ கவிதைத் தொகுப்பு); ரோஜா பதிப்பகம், 48, கும்பேஸ்வரர் திருமஞ்சன வீதி, கும்பகோணம் 612 001; ரூ. 20

ஊமையன் கண்ட கனவுகள் (கவிதைகள்); பா. துளசிமணி; தமிழ் மணிநிலையம், 7 எஸ். எஸ். சாஹிப்தெரு, அமைந்தகரை, சென்னை 600 029; ரூ.27

வெஞ்சினம் தீர்த்த வேந்தன் மகள் (நாடகம்); இரா. பாலசுப்பிரமணியன்; நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், 41–பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை 600 098; ரூ.18

நதிமூலம் (கட்டுரைகள்); மணா; ருத்ரா பதிப்பகம், 14அ முதல் தெரு, அருளானந்த அம்மாள் நகர், தஞ்சாவூர்; ரூ.75

யுத்தத்தின் இரண்டாம் பாகம் (சிறுகதைகள்); சக்கரவர்த்தி; Exil (Exil Idee Literature) B. P.204, 92604 Asnieres Cedex, France; ரூ.65

மைலாஞ்சி (கவிதைகள்); ஹெச். ஜி. ரசூல்; சரம், 21/77 ஞானியார் வீதி, தக்கலை 629 175; ரூ.50

சாயும் காலம் (சிறுகதைகள்); ஜீ. முருகன்; தாமரைச் செல்வி பதிப்பகம், 31/48 இராணி அண்ணாநகர், கே. கே. நகர், சென்னை 600 078; ரூ.45

ஒரு கதவும் கொஞ்சம் கள்ளிப்பாலும் (கவிதைகள்); தாமரை; காந்தளகம், 834, அண்ணாசாலை, அஞ்சலக வீதி, சென்னை 600 002; ரூ.25

இரேனியஸ் தமிழியல் முன்னோடி; தொ. பரமசிவன்; தமிழியல் துறை, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி; ரூ.30

உதயம் (நாவல்); பூங்கோதை; அருண்மொழிப் பதிப்பகம், 35, என். ஜி. ஓ காலனி, புதுக்கோட்டை; ரூ.50



படிப்பகம்

www.padippakam.com

தமிழ் இனி 2000

# ஒரு கனவு நனவான கதை



தமிழ் இனி 2000 ஒரு பெரும் கூட்டு முயற்சி. இந்த அளவுக்கு அனைத்துத் தரப்பைச் சேர்ந்த தமிழக இலக்கிய ஆளுமைகளும் அயல்வாழ் இலக்கியவாதிகளும் பங்கெடுத்த இன்னொரு இலக்கிய நிகழ்வு இல்லை. அதே போல் இந்த அளவுக்கு உலகெங்கும் பேச்சையும் விவாதத்தையும் எதிர்ப்பையும் உற்பத்தி செய்த மற்றொரு இலக்கிய நிகழ்வும் நடைபெற்றதில்லை.

உலகெங்கும் பல்வேறு நாடுகளில் இந்த அரங்கு வெற்றிபெற உழைத்தவர்கள் பலர். இவர்கள் அனைவரையும் இங்கு முழுமையாக நினைவுகூர இயலாது எனினும் சிலரையேனும் குறிப்பிட்டு நன்றி அறிவிப்பதும் முறை. முதலில் தமிழ் இனி 2000 பன்னாட்டுக் குழுவிலும் ஆலோசகர் குழுவிலும் இருந்து உதவியர்கள் அனைவருக்கும் நன்றி. இவர்களுடைய ஆலோசனையும் பங்களிப்பும் இன்றி இந் நிகழ்வு உலகம் தழுவியதாக அமைந்திருக்காது.

தமிழ் இனி 2000 அரங்கின் பகுதியாக நிகழ்ந்த நாடக அரங்குகளும் ஓவியக் கண் காட்சியும் பிற செயல்பாடுகளும் இந்நிகழ்விற்கு மெருகூட்டின. தமிழ் இனி 2000 அரங்கில் நிகழ்ந்த நாடகங்களுக்குக் காரணமான வ. ஆறுமுகம், ந. முத்துசாமி ஆகியோருக்கும் 'கண்ணுக்குள் வெளி' ஓவியக் கண்காட்சியை சாத்தியப்படுத்திய பா. அகிலனுக்கும் த. சனாதனனுக்கும் நன்றி.

தமிழ் இனி 2000 அரங்கின் கடைசிக் கட்ட ஆலோசனைக் கூட்டம் சென்னையில் பிப்ரவரி மாதம் நிகழ்ந்தபோது கைவசம் நிகழ்விற்கான பணம் எதுவும் இருக்கவில்லை. இந்நிலையில் இக்கூட்டத்திற்கு பல விதங்களிலும் உதவி செய்தவர்கள் சரிநிகர் நண்பர்கள். இத்தகைய நிகழ்விற்கான தேவையை பலருக்கும் உணர்த்தி பெருந்தொகையை திரட்ட முடியும் என்ற நம்பிக்கை அப்போது இருந்தது. எதிர்பார்த்த பல இடங்களிலிருந்து உதவி கிடைக்காது போக, எதிர்பாராத பல இடங்களிலிருந்து உதவி வந்தது. அதே போல் பின்னர் மாநாட்டை நிகழ்த்துவதற்கான நண்பர்கள் உதவியையும் சரிவரத் திட்டமிடவில்லை. முன்பின் அறியாதவர்களும் பரிச்சயமானவர்களும் நண்பர்களும் இத்திட்டத்தால் வேகம் பெற்று தங்கள் இல்லத்து விழாவைப் போல இந்நிகழ்வை கவனித்தனர். பெரும் கனவை முன் வைக்கும்போது உருக்கொள்ளும் இயக்கத்தையும் அதன் இயங்கியலையும் தமிழ் இனியில் கண்கூடாகப் பார்க்க முடிந்தது களிப்பும் லகரியும் தந்த அனுபவம்.




சென்னையில் தமிழ் இனி 2000 அலுவலகத்தில் எங்கள் உதவியாளராக செயல்பட்டவர் க. ராஜா.

## கண்ணன்

சென்னை வாழ் எழுத்தாளர்கள் பலர் இவரது அயராத தொல்லையால் கட்டுரைகளை உரிய நேரத்தில் அனுப்பி வைத்தனர். அதே போல் பல நண்பர்களின் ஆலோசனையின் பேரில் பல்வேறு நிறுவனங்களை அணுகி அவர்களிடம் இருந்து சிறு தொகைகளாக ஒரு கணிசமானத் தொகையைத் திரட்டினார். இவரது உழைப்பும் ஆர்வமும் நன்றிக்குரியவை.

பெங்களூர் நண்பர் மகாலிங்கம் என்னோடு மின்னஞ்சலில் அன்றாடத் தொடர்பு வைத்துக்கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். அத்தோடு மூன்றுநாள் அரங்கச் செயற்பாடுகளை முழுவதுமாகக் கவனித்துக்கொண்டார். இப் பணியில் அவருக்குத் துணை நின்றவர்கள் அய்யனாரும் சிபிச்செல்வனும்.

தமிழ் இனி நிகழ்விற்காக உழைத்தவர்கள் ரொனால்டு ரோஸ், பா. சுப்பிரமணி, சுபஸ்ரீ, அனிதா ப்ரியா, பி.கே. சரவணன், வெ. பிரகலாதன், எஸ். முத்துக்கிருஷ்ணன், பிரசன்னா இன்னும் பலர். நிகழ்வின்போது தோன்றி அயராது உழைத்து பின் மறைந்த இவர்களை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

ஜெர்மனி நா. கண்ணன் நிகழ்விற்கு பல நாள் முன்னரே சென்னை வந்து அரங்கு அமைப்பிலிருந்து அமர்வுகள் வரை பல்வேறு பொருள்கள் பற்றி எங்களுக்கு ஆலோசனைகள் வழங்கினார். இலக்கியமும் இணையமும் அமர்வை நிகழ்த்தும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டார்.

இந்த அரங்கிற்கான மொத்தச் செலவுத் திட்டத்தில் கணிசமான பகுதி தனிநபர் பங்களிப்பில் இருந்து உருவானது. இவர்களுடைய பட்டியலையும் வெளியிடுவோம். இத் தொகையைத் திரட்ட பல்வேறு மையங்களில் முயன்றவர்கள் க.வை. பழனிசாமி, சிபிச்செல்வன் (சேலம்), மகாலிங்கம், சிவராம கிருஷ்ணன், டி.வி. ராமச்சந்திரன் (பெங்களூர்), மு. வேலாயுதம், நாஞ்சில் நாடன் (கோவை), சுரேஷ் (டில்லி), அ. செல்வராஜ், கமீலா நாசர், அரவிந்தன். ஜி (சென்னை), சி. உமாபதி (கோவில்பட்டி), வெ. நாராயணன் (காஞ்சிபுரம்) ஆகியோர்.

ஹோட்டல் அட்லாண்டிக்கின் பணியாளர்கள் அனைவரும் தங்களுடைய முழுமையான ஒத்துழைப்பை நல்கினர். இந்நிகழ்விற்கு இன்னும் பல விதங்களில் உதவியவர்கள் ஆடிட்டர் கந்த



படிப்பகம்

www.padippakam.com

சாமி, ரவி சுப்பிரமணியம், பிரசன்னா ராமசாமி, கல்பனா, டி. ஐ. அரவிந்தன், தளவாய் சுந்தரம் இன்னும் பலர்.

சென்னை ஆன் லைன் / ஆறாம் திணை பணியாளர்கள் பலர் தங்களுடைய முழுமையானப் பங்களிப்பை அளித்தனர்.

காலச்சுவடு பதிப்பகத்தின் எட்டு நூல்களை பதிப்பிப்பது பற்றி சென்னையில் மே 6ஆம் தேதி நடைபெற்ற ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில் அறிவித்தோம் என்றாலும் அதை நிறைவேற்றுவதில் பல தடைகளும் தாமதங்களும் ஏற்பட்டன. இது ஏற்படுத்திய நெருக்கடிகளால் தமிழ் இனி நிகழ்விலிருந்து எங்கள் கவனம் சிதறும் சூழல் ஏற்பட்டது. இந்த நிலையில் புத்தகங்களின் அச்சாக்கப் பொறுப்பை தமிழினி பதிப்பகம் வசந்தகுமார் ஏற்றுக்கொண்டார். தன்னுடைய சில திட்டங்களை நிறுத்திவிட்டு இந்த நூல்களை உரிய நேரத்தில் தயாரித்துக் கொடுத்த அவருக்கு எங்கள் நன்றி. இந்த நூல்களின் உருவாக்கத்தில் அவசியம் ஏற்பட்டபோது பின்னிரவு வரை நின்று தயாரிப்பில் ஈடுபட்ட எம். எஸ்., அ. குமார், சி. லீலா, குமாரி, மஹாதேவன் ஆகியோரின் உதவி ஆதாரமானது. இந்தப் புத்தகங்களின் வரவாலும் தமிழ் இனியை ஒட்டி பிற பதிப்பகங்கள் வெளியிட்ட நூல்களின் பிரசுரத்தாலும் இதைத் தொடர்ந்து உருவான தீவிரமான புத்தகங்களின் விற்பனையாலும் மாநாட்டின் மெருகு கூடிற்று.

காலச்சுவடு சார்பாக சென்னை வந்த பணியாற்றிய திரவியம், அமுதா ஆகியோருக்கு நன்றி.

தமிழ் இனி அரங்கு மற்றும் மேடையை ஒப்பனை செய்யும் பணியை முழுமையாக ஏற்றுக்கொண்டு கவனித்தவர் ட்ராட்ஸ்கி மருது அவர்கள். ■

இவர்கள் அனைவருக்கும் என் நன்றி.


தமிழ் இனி 2000

ஒளிப்பேழை (VHS), குறுந்தட்டுகள் (CD)

மினி D.V. format இல் ஒளிப்பதிவு செய்யப்பட்டது

| நன்கொடை | | |
|---|---|---|
| | VHS | CD (இரண்டு) |
| இந்தியா | ரூ.500 | ரூ.1000 |
| வெளிநாடு | US $ 40 | US $ 60 |

கேசட்டுகள்/சிடிகள் இந்தியாவிற்குள்ளும் வெளிநாடுகளுக்கும் கூரியர் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். வெளிநாடுகளுக்கு அஞ்சல் மூலம் அனுப்ப அனுமதி இல்லை.

**காலச்சுவடு அறக்கட்டளை**
669 கே. பி. சாலை, நாகர்கோவில் 629 001
தொலைபேசி : 04652 - 22525
மின்னஞ்சல் : kalachuvadu@vsnl.com
தொலைநகல் : 04652 - 31160


## மாநாட்டுத் தீர்மானங்கள்

தமிழ் இனி 2000 தொடர்பாக எழுந்துள்ள பல்வேறு சர்ச்சைகளில் ஒன்று மாநாட்டுத் தீர்மானங்கள் தொடர்பானது. இதில் எழுந்துள்ள முக்கியமான கேள்வி இலக்கிய மாநாட்டில் அரசியல் தீர்மானங்களா என்பது. இந்தத் தீர்மானங்கள் உருவான பின்னணியை பகிர்ந்துக்கொள்வது சில தெளிவுகளை ஏற்படுத்தலாம்.

தமிழ் இனி 2000 நிகழ்வை ஒட்டி பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தமிழறிஞர்கள் ஒன்று சேர இருக்கும் அரிய வாய்ப்பை சில அழுத்தமான கோரிக்கைகளை அரசின், வாசகர்களின் கவனத்திற்குக் கொண்டுவரும் விதத்தில் செயல்படலாம் என்று நினைத்தோம். சில லண்டன் வாழ் தமிழ் அன்பர்களிடமிருந்து இலங்கைத் தமிழர் பிரச்சனையை இந்த மாநாட்டில் கவனப்படுத்த வேண்டும் என்ற வேண்டுகோளும் வந்தது. ரவிக்குமாருடனும் சேரனுடனும் இதுபற்றி அவ்வப்போது பேசிவந்தேன். சென்னையில் மாநாட்டிற்கு முன்னர் சந்தித்து இதுபற்றி விவாதிக்கலாம் என்று இருந்தோம். எஸ்.வி.ஆரை அணுகி ஆலோசனை கேட்கவேண்டும் என்ற திட்டமும் இருந்தது.

தமிழ் இனி அரங்கிற்கு சரிநிகர் ஆசிரியர்கள் விக்கியும் சிவாவும் சென்னை வரும் தேதி கடைசி நேரத்தில் தள்ளிப் போனது. ஆகஸ்ட் இறுதியில் சேரன், ரவிக்குமார், விக்கி, சிவா, நான் ஆகியோர் ஒரு நெருக்கடியான சூழலில் சந்தித்து தீர்மானங்கள் பற்றிப் பேசினோம். ஈழத்தமிழர் பிரச்சினை, தமிழ்வழிக் கல்வி, அகதிகள் உரிமை, அயல் தமிழ் வெளியீடுகளை தமிழகத்தில் விநியோகிப்பதில் இருக்கும் இடர்ப்பாடுகள் ஆகியவற்றைக் கவனப்படுத்தலாம் என்றும் யார் யார் எதைப் பற்றிய அறிக்கைகளை தொகுப்பது என்பதையும் முடிவு செய்தோம். இவ்வறிக்கையில் ஈழத்தமிழர் தொடர்பான தீர்மானத்தை எழுதியது விக்கியும் சிவாவும்; மரணதண்டனை, அகதிகள் உரிமை தொடர்பானதை எழுதியவர் ரவிக்குமார்; தமிழ் வழிக்கல்வி தொடர்பானதை பேராசிரியர் கல்யாணியின் ஆலோசனையுடன் எழுதியவர் ரவிக்குமார். கடைசித் தீர்மானம் என்னால் எழுதப்பட்டது.

மீண்டும் மாநாட்டின் கடைசி நாளன்று சந்தித்து விவாதித்து சில திருத்தங்களுடன் இறுதிப் பிரதியை ரவிக்குமார் தயாரித்தார். இத்தீர்மானங்களை புதுமைப்பித்தன் அரங்கில் ரவிக்குமாரும், கைலாசபதி அரங்கில் நானுமாக செப்டம்பர் 3ஆம் தேதி மாலை வாசித்தோம்.

இன்னும் பல பொருள்கள் பற்றி தீர்மானம் நிறைவேற்றி இருக்கலாம் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. பல நெருக்கடிகளுக்கு இடையில் குறைந்த நேரத்தில் செய்யக்கூடியதைச் செய்தோம். பல்வேறு பொருள்கள் பற்றிய நுட்பங்களை அறிந்தவர்களை தொடர்புகொண்டு ஆலோசனைப் பெற அவகாசம் இல்லாது போயிற்று. அவகாசமும் ஆதரவும் அவசியமும் இருந்தால் இன்னும் பல பொருள்களைச் சேர்ப்பதில் எங்களுக்கு மறுப்பேதுமில்லை.

இலக்கிய மாநாட்டில் சில அரசியல் தீர்மானங்களை நிறைவேற்றியது எனக்கு பொருத்தமற்றதாகப்படவில்லை. ஒவ்வொரு தீர்மானத்தையும் அது அதற்கான தனி மாநாடு கூட்டி விவாதித்து நிறைவேற்றுவது நல்ல யோசனை என்றாலும் தமிழகச் சூழலில் சாத்தியமானதல்ல.

மேலும் எங்களுக்குத் தொடர்பில்லாத பொருள்களை நோக்கி நாங்கள் திடீரென்று நகரவில்லை. மரண தண்டனைப் பற்றியும் தமிழ்வழிக் கல்வி பற்றியும் காலச்சுவடு சிறப்புப் பகுதிகளை வெளியிட்டுள்ளது. கோவை குண்டு வெடிப்பு, நெல்லைப் படுகொலை, கொடியங்குளம் கலவரம் போன்ற பிரச்சனைகளையும் ஈழப்பிரச்சினையையும் காலச்சுவடில் கவனப்படுத்தி வந்திருக்கிறோம். சரிநிகரும் இத்தகைய பொருள்களில் தொடர்ந்து ஆர்வம் காட்டி வந்துள்ளது. ■



படிப்பகம்

www.padippakam.com

## தமிழ் இனி 2000 கடிதங்கள்

தமிழ் இனி 2000 விழாவில் கலந்துக் கொள்ள இயலாத சூழ்நிலையில் அந் நிகழ்வுக் குறித்து இதழ்களின் வாயிலாக அறிய நேர்ந்த விஷயங்களை, குறிப்பாக தமிழ் இனி 2000 x அ. மார்க்ஸ் பற்றி சிலவற்றை பகிர்ந்துக் கொள்ளவே இக் கடிதம் எழுதுகிறேன்.

நிறப்பிரிகை இதழில் (செப். 2000) அது முன்வைத்து செயல்பட்டு வந்த பல் வேறு பார்வைகள், சிந்தனைகள், அணு கல் முறைகள் ஆகியவற்றுக்கு மேலும் அழுத் தம் கொடுத்து செயல்படுத்த வேண்டிய 'அவசர சூழல் உருவாகியிருப்பதால்' நிறப் பிரிகை மீண்டும் கொண்டு வரப்பட்டதாய் தலையங்கம் கூறுகிறது. இரண்டரை வருடங்கள் கழித்து உருவான அவசர சூழல் தமிழ் இனி 2000தான் என புரி கிறது. நிறப்பிரிகையின் இந்த இதழில் வெளியாகியிருந்த தமிழ் இனி 2000 என் கிற கும்பமேளா கட்டுரைக்கு போகும் முன் காலச்சுவட்டில் (நவ.–டிச. 2000) வெளியான கண்ணனின் விளக்க கட் டுரை பற்றி சில பகிர்தல்கள்.

மௌனத்தின் சிறகடிப்பில் அ. மார்க்ஸ் மேற்கொண்ட சில நடவடிக்கைகளை அறிந்தபோது பெரிதும் வருத்தமுற்றேன். மனுஷ்ய புத்திரன் கூறியிருப்பது போலவே 'நான் மிகவும் மதிக்கிற ஒரு நபர் அவர்.' பின் நவீனத்துவம் போன்ற காத்திரமான விஷயங்களை தமிழுக்கு வழங்கியிருப்ப தால் அவர்மீது பெருமதிப்பு கொண்ட வன் மட்டுமின்றி அவருடைய தீவிர வாசகன் என்றே என்னை குறிப்பிட்டுக் கொள்ள விரும்புகிறேன். என்னதான் காலச் சுவடுக்கு மாற்று அணியில் இயங்கி வந்தா லும் நயத்தக்க சில நாகரிகங்களை அவர் மீறியிருப்பது அதிர்ச்சி கலந்த வருத்தமளிக் கிறது. சரிநிகர் ஆசிரியர் குழு சென்னை வந்திறங்கியவுடன் தெ. மதுசூதனுடன் சென்று அவர்களை கலைக்க முற்பட்ட தும், மாநாட்டுக்கு அழைக்கப்பட்டவர் களை தனித்தனியாக சந்தித்து உரையாடி யதும், பின்னர் ஆறாம் திணையின் அவசர பேட்டியும் அவருடைய தகுதிக்கு உரிய தன்று. அந்த 'கும்பமேளா' கட்டுரையின் இறுதியில் நிறப்பிரிகை இந்த விழாவிலி ருந்து ஒதுங்கி நிற்பதாகவும் இதனை புறக்கணிக்க வேண்டும் என யாரையும் கோரவில்லை எனவும் பிரகடனப்படுத்தி விட்டு இப்படி அவர் செய்திருக்கலாமா?

'கும்பமேளா' என்கிற வார்த்தையை அ. மார்க்ஸ் பயன்படுத்தி இருப்பதற்கு கார ணம் குழும இருக்கும் நபர்களின் எண் ணிக்கைக் குறித்தே என நான் கருது கிறேன். அது உண்மையெனில் குடந்தை யில் அவர் கூட்டிய புதுமைப்பித்தன் கருத் தரங்கிற்கு 10 பேர்தான் வந்ததாக குறிப் பிட்டதற்கு (திரு. ரவிக்குமார்) வருத்தத்தை அளிப்பதாக குறிப்பிடும் பொ. வேல்சாமி அன்றைய குறிப்பேட்டில் 33 பேர் கையெ ழுத்திட்டு இருப்பதாகவும், பின்னர் அதே குடந்தையில் அவர்கள் நடத்திய தமிழ் சினிமா கருத்தரங்கில் 300 பேர் வரை கலந்து கொண்டதாகவும் பெருமையுறு கிறார். சொன்னவரை யாரோ என ஒதுக் கிட இயலாது. அவர் நிறப்பிரிகையின் பொருளாதார முதுகெலும்பு. மேலும் ஒரு நாள் காணாவிட்டாலும் அ. மார்க்சின் உள் ளத்தை பரபரக்க வைப்பவர். எனவே 300 என்னும் எண்ணிக்கையை தாண்டுகிற விழாக்கள் கும்பமேளா பட்டியலில் சேருகிறதா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

அந்த கும்பமேளா கட்டுரையில் எனக்கு சில சந்தேகங்கள் எழுகின்றன. 'சிறு பத்திரிக்கைகள் மீது ஆயிரம் விமர் சனங்கள் இருந்தபோதிலும் அவற்றின் சிறப்பம்சம் அவை காத்து வந்த சிறு தன்மைதான்' எனக் குறிப்பிட்டு காலச் சுவடு அந்த அம்சத்தை இழந்துவிட்டதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. காலச்சுவடை கடுமையாக எதிர்த்து வந்த காலங்களில் இது குறித்து ஏன் பாராட்டவில்லை? இருக்கும் வரை ஒருவரை தூற்றிவிட்டு இறந்தபின்பு 'புகழஞ்சலி' செலுத்துவது போல் இருக்கிறது இது.

அதுபோலவே எழுத்து என்பது அதன் தகுதியைக் கொண்டு நிர்ணயம் செய்யப் படுகிறதா இல்லை அதனை எழுதுபவ ரின் தொழிலைக் கொண்டு நிர்ணயம் செய்யப்படுகிறதா? புலம் பெயர்ந்த எழுத் துக்களில் சேரன், ஜெயபாலன் போன்ற பேராசிரியரின் எழுத்துக்களை நிராகரித்து 'கோப்பை கழுவுபவரின்' எழுத்துக்களை குறிப்பிடுகிறார். (இவர்களின் எழுத்துக் களையும் மாற்றுக் குறையாது நான் மதிக் கிறேன்.) இதே தமிழகச் சூழலில் பேரா சிரியர்களான அ. மார்க்ஸ் முதலானவர் களின் எழுத்துக்களை புறமொதுக்கி தள்ளு வண்டியில் பழம்விற்கும் தேனி சீருடை யான், ஆட்டோ ஓட்டும் சிவதாணு போன் றோரின் எழுத்துக்கள் மட்டுமே சிறப்புடை யது என நான் வாதிட்டால் எவர் ஏற்றுக் கொள்ள தயாராக இருக்கிறார்கள்?

காலச்சுவடின் மீதும் தமிழ் இனி 2000 மீதும் ஏதேனும் மாற்றுக் கருத்து இருப்பின் இன்னொரு மாற்று கருத்தரங்கம் ஏற்பாடு செய்து அதனை விவாதிப்பதே நாகரிகம். ஏற்கனவே அரசியல் மயமாகிவரும் சிற்றி தழ் உலகில் அதன் சாக்கடை தன்மையை யும் ஏற்றுவது அவசியம்தானா? அ. மார்க்ஸ் போன்றோரிடமிருந்து நான் இன்னமும் அதிகமாக எதிர்பார்த்தேன். எதிர்பார்க் கிறேன்.

அதேபோல் இப்படியொரு அமர்வை நீங்கள் ஏற்பாடு செய்திருக்கும்போது அதி லும் முதன் முறையாக செய்யும் போது சில பல குறைகள் ஏற்படுவது இயல்பு. புரிந்து கொள்ளத்தக்கது. அடுத்த அமர்வில் இந்த குறைகளை நிவர்த்தி செய்யும் பொறுப்பும் உங்களுக்கு இருக்கிறது. பல இடது சார்பு எழுத்தாளர்கள் அழைக்கப்படவில்லை (அ) பங்கேற்கவில்லை எனவும் குரல் இருக்கிறது. அதையும் கவனத்தில் கொள் ளுங்கள். சில எழுத்தாளர்கள் பங்கேற்கா தது குறித்து தங்களின் விளக்கம் சரியான முறையில் தரப்பட்டிருக்கிறது. எது எப்படி இருப்பினும் உலகத் தமிழ் மாநாடு என்கிற பெயரில் நடைப்பெற்று வந்த அரசியல் மாநாட்டுக்கு மாற்றாக முதன் முறையாக ஒரு உண்மையான தமிழ் கருத்தரங்கம் காலச்சுவடு ஏற்பாடு செய்தமைக்கு என் போன்ற உண்மையான தமிழ் ஆர்வலர் களின் இதயங்கள் உங்களை வாழ்த்தும். கூக்குரல்களை கணக்கிடாமல் இந்த அமர்வு இனி உண்மையான தமிழ்


நாடகக் கலைஞர்கள் சந்திப்பு


வெளி ரெங்கராஜன்


மாலதி, எம். ஸ்ரீலக்ஷ்மி, வ. கீதா


ச. தமிழ்ச்செல்வன்


த. சனாதனன்


சிற்பி



படிப்பகம்

www.padippakam.com

மாநாடாக தொடர வேண்டும் என்பதே என் ஆசை. காலச்சுவடு இதை கணக்கில் கொள்ள வேண்டும். யார் கண்டது, அடுத்த அமர்வில் அவர்களே கட்டுரை படிக்கலாம்.

**வீ. நக்கீரன்**
அம்மாபேட்டை

தமிழ் இனி 2000 தமிழ் இலக்கியத்தின் மீது கொஞ்சம் அதிகப்படியாகவே கருத்து செலுத்தி நடந்த முதல் மாநாடாகவே கருதலாம். உலகின் பல்வேறு திசைகளிலிருந்து தங்கள் பங்களிப்பைப் பலர் செய்து முடித்தது நினைவுகூரத் தக்கது.

எந்தவிதக் கட்சி, சாதி, மத, இன பின்னணியும் இல்லாமல் – இளைய தலைமுறையிலிருந்து முதிய தலைமுறை வரை – நவீன தமிழ் இலக்கியத்திற்காக இந்தப் பொருள் மேலாண்மைச் சூழலில் கூட்டப்பட்டது மறக்கமுடியாத நிகழ்வாகும்.

'கும்பமேளா' என்று கூறி ஒரு சிலர் இதை ஒதுக்கினாலும் இந்த உலகத் தமிழ் இலக்கிய அரங்கை நடத்திய அமைப்பாளர்களும் ஆதரவாளர்களும் பாராட்டத்தக்கவர்களே! இன்றைய வணிகமையச் சூழ்நிலையில் ஏறக் குறைய ஆறு இலட்சம் ரூபாய் அளவுக்கு நவீன தமிழ் இலக்கியப் புத்தகங்கள் விற்பனையாகி இருக்கின்றன என்பதைப் பார்க்கும்போது வந்திருந்த படைப்பாளிகளையும் படிப்பாளிகளையும் சாதாரணமாக எடை போட்டு விட முடியாது.

எல்லாரும் சந்திக்க, கலந்து பேச, கருத்துகளைப் பரிமாறிக்கொள்ள ஒரு வாய்ப்பு கிடைத்ததே – அதையே நாம் நினைத்து மகிழலாம்.

கடந்த நூற்றாண்டின் சிறுகதை, நாவல், மற்றும் தமிழின் பல்முனை இலக்கியங்களும் விவாதிக்கப்பட்டது வரவேற்கத் தக்கதாகும்.

பல்வேறு அமர்வுகளில் குறிப்பிடத் தக்கதாக இன்னும் நினைவில் இருப்பது மொழிபெயர்ப்புகள் குறித்த அமர்வுதான். ஒரு மொழிபெயர்ப்பாளன் தன்மொழியில் ஏன் ஒரு படைப்பை மொழிபெயர்க்கிறான்? அவன் மேற்கொள்ளும் சிக்கல்கள் என்னென்ன? இன்றைய தமிழ் இலக்கியச் சூழலில் மொழிபெயர்ப்புகளுக்கு எந்த இடம் தரப்பட்டுள்ளது என்பதைக் கலந்து கொண்ட ஸ்ரீராமும் இந்திரனும் சிறப்பாக எடுத்துரைத்தனர். முருகேச பாண்டியன் கட்டுரை சில புள்ளி விவரங்களைத் தந்தது.

நா. கண்ணன் ஒரு நடுத்தரத் திரையையே கொண்டு வந்து காட்டினார். இணையத்தை தமிழ் இனி எப்படிப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று 'இலக்கியமும் இணையமும்' அமர்வில் மிகச் சிறப்பாகப் பொருத்தமாக சுஜாதா நிகழ்த்தினார். அது அவரால் மட்டும்தான் முடியும்.

சிறுகதை அமர்வில் வாசிக்கப்பட்ட நாஞ்சில் நாடனின் கட்டுரையும் நாவல் அமர்வில் வாசிக்கப்பட்ட அம்பையின் கட்டுரையும் புதுநடையைக் கொண்டு கேட்பவர்க்கு அலுப்பு தட்டாமல் இருந்தது குறிப்பிடத்தக்கது.

"செம்மலர், தாமரை படைப்புகளைச் சான்று கூறி கட்சியையும் இலக்கியத்தையும் ஒருங்கே வளர்ப்பதாகவும்; இதையும் அதையும் சேர்த்துக் குழப்ப வேண்டாம்; ஏன் எங்களை இன்னும் சந்தேகக் கண்ணுடன் பார்க்கிறீர்கள்" என்று கேட்டார் சிறுகதை அமர்வில் தமிழ்ச் செல்வன்.

நாவல் அமர்வில் கருத்துரை வழங்கிய பாவண்ணன் "ஒரு நாவலின் ஒரு பாத்திரத்தின் குரலை வைத்துக்கொண்டு இது தான் நாவலாசிரியன் எண்ணம் என வாதிடல் கூடாது. ஒரு நாவலுக்கு சில சமயம் ஒரு நாவலே பதிலாக முடியும்" என்று கூறினார்.

மரபுக் கவிதை பற்றிய சிற்பியின் கட்டுரை தமிழ் இலக்கிய வரலாற்றில் கவிதை பற்றிப் படிப்பது போல் இருந்தது. "புதுக் கவிதை வளர்ச்சி பெற்றதற்காக மகிழும் அதே நேரத்தில் மரபுக் கவிதை வீழ்ந்து விட்டதே என வருத்தப்படுகிறோம்" என்று கருத்துரை வழங்கினார் ஞானக்கூத்தன். ஆனால் விழுந்ததை மீட்டெடுப்பதைப் பற்றி ஒன்றும் கூறவில்லை.

முதல் நாள் இரவு ஆறுமுகத்தின் "தூங்கிகள்", இரண்டாம் நாள் இரவு முத்துசாமியின் "தெனாலி ராமன்" நாடகங்கள் பார்வையாளர்களுக்கு சுவையூட்டின. விரும்பிய கட்டுரைகளை வேண்டுபவர்கள் பெற்றுக்கொள்ள வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

ஆனால் சில நடைமுறைக் குறைபாடுகளும் இருக்கத்தான் செய்தன. கட்டுரையாளர்களுக்குப் பக்க வரையறை கூறப்படாததால் இரண்டு மூன்று மாதங்கள் உழைத்து சற்று விளக்கமாகக் கவனத்துடன் எழுதிவிட்டார்கள். அவற்றைக் குறிப்பிட்ட காலத்திற்குள் யாராலுமே படிக்க முடிய வில்லை.

அமர்வுகளுக்கு மிகக்குறுகிய நேரமே கொடுக்கப்பட்டிருந்ததால் யாருக்குமே மனநிறைவின்றி முடிந்தன. எல்லோருமே அதிக நேரம் வேண்டும் என எடுத்துக் கொண்டனர்.

"இவ்வளவு கால அவகாசம் தரப்படும் நான் கட்டுரை எழுதித் தரவில்லை" என்று தமிழ்த் திரைப்படங்களில் பாட்டும் வசனமும் பற்றிக் கட்டுரை தர வேண்டிய சுரேஷ்பால் கூறியது வியப்பளித்தது. தமிழகத்தின் சின்னச் சின்ன கிராமங்களிலிருந்துகூடத் தங்கள் மூன்று நாள்கள் வேலைகளை ஒதுக்கிவிட்டு வந்த பார்வையாளர்களின் உணர்வை அவர் போன்றோர் உணரவில்லையோ என்று எண்ணத் தோன்றுகிறது. அந்த அமர்வுக்கு வந்திருந்த நாசரின் வருகையும் வீணாகப் போனது.

சிறுகதை அமர்வும் குழப்பமாக முடிய அமைப்பாளர்களே காரணம். எஸ். ராமகிருஷ்ணன் கட்டுரையை நேரம் இல்லாததால் அவர் படிக்கவில்லை. படிக்காத அக் கட்டுரை பற்றி சுதாகர் கதக் கருத்துரை வழங்கிப்போக, ராமகிருஷ்ணன் கட்டுரை படிக்க நேரம் வேண்டும் என அடம் பிடித்தார்.

எல்லாம் சரி; இனி 2000த்தில் என்ன செய்யப்போகிறோம்? மிரட்டுவது போன்ற தோற்றத்துடன் விலை அதிகமாய் சிற்றிதழ்கள் புதிதாய்த் தோன்றி உள்ளன. வெகுஜனப் பத்திரிகைகளின் விலகல் குறைந்துள்ளது. பெரிய மெகா நாவல்கள் வரவு அதிகமாக உள்ளது. பல சிறுபத்திரிகைகளில் படைப்பாளர்களுக்குள் வெற்று உரசல் நீடிக்கிறது. கவிதைகளில் மட்டுமன்றி



சித்ரலேகா மௌனகுரு



மௌனகுரு



அரவிந்தன்



ஆ. சிவசுப்பிரமணியன்



மனோஜ் குமார்



பெருமாள் முருகன்



படிப்பகம்

www.padippakam.com

சிறுகதைகளில்கூட புரியாமை நீடிக்கிறது. எல்லாம் சரி; என்ன செய்யலாம்?

"எல்லாரும் வாருங்கள். ஒன்று கூடி உட்கார்ந்து பேசலாம். ஈகோவை விட்டு விடுங்கள். தனிப்பட்ட தாக்குதல்கள் வேண்டாம். படைப்பாளியிடம் சேர்ந்து விளக்கம் கேட்போம்" என்ற பாவண்ணனின் கருத்துரைதான் திரும்பும்போது நினைவில் நிற்கிறது.

**வளவ. துரையன்**
கிருட்டினாபுரம்

தமிழ் இனி 2000 பற்றிய செய்திக் குறிப்பும் அதை ஏற்பாடு செய்த விதமும் நடந்த முறையும் பற்றி கண்ணன் எழுதிய விரிவான குறிப்பினைப் படித்தேன். இன்னும் தொடரும் என தெரிவித்துள்ளது. தமிழிற்காக ஒரு மாநாடு (சிறிய விஷய மல்ல என்பது உண்மை) நடத்தபட்டது தமிழுக்கு சிறப்பு என்பதோடு, காலச்சுவடும் பெருமைப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

இயங்கும் போது விமர்சனங்கள் எழுவது இயல்பானது. இம்முயற்சி ஏற்படவில்லை எனில் தமிழ் இனி 2000 நடைபெற்றிருக்காது. வீமரிசனங்களும் ஏற படாது. ஆனால் நம்பிக்கையோடு ஒரு வருட முயற்சியினால் நடந்தேறிய தமிழ் இனி 2000 தமிழ் இலக்கியததிற்கு ஒரு மைல் கல். அதைப்பற்றி ஆலோசித்து முன்னேறும்போது இடையூறுகளெல்லாம் பற்றி கவலைப்படவேண்டிய தேவை எதற்கு?

**மா. வல்சகுமார்**
குலசேகரம்

காலச்சுவடு இதழ் 32ல் ஆர். சிவகுமார் தமிழ் இனி 2000 குறித்துச் சில மனப்பதிவுகளைத் தந்திருக்கிறார். அக்கட்டுரையில் நான் மரபுக்கவிதை குறித்துச் சில பலவீனமான வாதங்களை முன் வைத்ததாகவும் ஞானக்கூத்தன் அவற்றைச் செல்லாதவை ஆக்கியதாகவும் எழுதி இருக்கிறார்.

என்னுடைய கட்டுரையில் வலிந்து பேசிய வாதங்கள் இல்லை, அது மரபுக் கவிதை குறித்த ஒரு வரலாற்றுப் பதிவு தான். ஞானக்கூத்தன் சொல்லிய கருத்துக்களுக்குக் கட்டுரையாளர் பதில் தரவும் வாய்ப்புத் தரப்படவில்லை. எடுத்துக்காட்டாகப் பாரதியை உருவாக்கிய ஆற்றல்களுள் மனோன்மணியம் சுந்தரனாரும் ஒருவர் என்பது கட்டுரைச் செய்தி. இதனை ஞானக்கூத்தன் மறுத்தார். ஆனால் சின்னச் சங்கரன் கதையில் சுந்தரம் பிள்ளை குறித்துப் பாரதியார் எழுதியுள்ள அற்புதமான செய்திகளை அவர் அறிந்திருக்கவில்லை. அதனால் தான் பாரதியார் சுந்தரனாரைக் கற்றதில்லை என்பதுபோல் கருத்துத் தெரி வித்திருக்கிறார்.

டி. எஸ். எலியட் மரபு பற்றித் தெரிவித்திருந்த கருத்து என் கட்டுரையில் மேற்கோளாக வந்தது. அதில் ஏதோ குழப்பம் என்கிறார் சிவகுமார். என்ன குழப்பம் என்று சொல்லி இருக்கலாமே. அவரவர் கருத்து நிலைக்கேற்ப மனப்பதிவுகள் இருப்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. ஆனால் விஷமங்களை ஆங்காங்கே விதைத்துப் போவதில்தான் விபரீதம் இருக்கிறது.

கட்டுரைகள்தான் புத்தகமாக வரப் போகிறதே. விமர்சனங்களை முன் வைக்க இன்னும் வாய்ப்பு இருக்கிறது.

**சிற்பி பாலசுப்பிரமணியம்**
பொள்ளாச்சி

தமிழ் இனி கருத்தரங்குக்குப் போய் வந்ததிலிருந்து, அதுவும் இலங்கைக்காரர்கள் பேசுவதைக் கேட்டதிலிருந்து, எனக்கும் நல்ல தமிழில், இங்கிலிஷ் கலக்காத தமிழில் பேசவேண்டும், எழுத வேண் டும் என்றெல்லாம் ஆசை வந்துவிட்டது! ஒரு கடிதமாவது எழுதுவோமே என்று இதை எழுதுகிறேன். புலம் பெயர் இலக்கியத்தை வெகுவாகப் பேணும் நீங்கள், 25 – 30 ஆண்டுகளாக டில்லி, ஆந்திரப் பிரதேசத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நான் தப்பும் தவறுமாக ஏதாவது எழுதியிருந்தால் மன்னித்துத் திருத்திப் பிரசுரிக்கவும்.

டி. வி.யும் இங்கிலிஷும் கொடி கட்டிப் பறந்து கொண்டிருக்கும் இந்த காலத்தில், உலகமயமாதலைப்பற்றி சதா கேள்விப் பட்டுக் கொண்டிருக்கும் இந்த சமயத்தில், நல்ல உயர்ந்த தமிழ் இலக்கியத்தில் அக்கறை உள்ளோர் அத்தனை பேர்களையும் (ஒரு ஆயிரம் பேர் வந்திருப்பார்களா?) சேர்த்து வைத்து கருத்தரங்குகள் நடத்தியது ஒரு மகத்தான சாதனை. ஒவ்வொரு அமர்விலும் முன்னூறு, நானூறு நபர்கள் உட்கார்ந்து கூர்ந்து கவனித்துக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். உன்னிப்பாக கவனித்தால் தான் விஷயங்களை உள்வாங்க முடியும் என்ற வகையில் உரைகளும், சர்ச்சைகளும் அமைந்திருந்தன. எனக்குப் பல புது விஷயங்களைக் கற்க முடிந்தது.

அரங்குகளில் பேசினவர்கள் உரைகளை நிறைய சிரமமெடுத்துக்கொண்டு எழுதியிருக்கிறார்கள் என்பது நன்றாகத் தெரிந்தது. ஆனால் அவர்களுக்கு நேரம் போதாமல் இருந்தது. இந்த சங்கடம் எல்லா கருத்தரங்குகளிலும் பார்க்க முடியும். கருத்தரங்கு நடத்துவோர் போதிய உரைகள் வந்து சேரவேண்டுமே என்ற கவலையில் பல பேருக்கு அழைப்பு விடுத்து, நிறைய உரைகள் வந்த பிறகு அவற்றிற்கு போதிய நேரம் கொடுக்க முடியாமல் தவிப்பது; சரியாக, உரை தூடு பிடிக்கும்போது மணி அடித்து அல்லது சீட்டுக் கொடுத்து முடிக்கச் சொல்லுவது – இதெல்லாம் வழக்கமாக நடப்பவைதாம். இரண்டு, மூன்று, ஐந்து நிமிடங்கள் எல்லாம் கொடுத்தால் வாயைத் திறந்து கொட்டாவிகூட விட முடியாது. என்னைக் கேட்டால் ஒரு அமர்வுக்கு ஒரு உரை இருந்தால் போதும் – அரை மணியோ, 40 நிமிடங்களோ உரை தயார் செய்து கொண்டு வந்தவர்கள் திருப்தியாக அவர்கள் சொல்ல வந்த விஷயத்தைச் சொல்லட்டும் – அதன் பிறகு அங்குள்ளவர்கள் அபிப்ராயங்கள், சர்ச்சைகள் செய்யட்டுமே. கருத்தரங்குகளுக்கு வருபவர்கள், அவர்கள் எவ்வளவு பெரியவர்களாயிருந்தாலும் சரி, பேசத்தான் வரணுமா என்ன, கேட்க வரக்கூடாதா?

ஹோட்டல் அட்லாண்டிக்கில் உள்ள கூடங்கள் கல்யாண விசேஷங்களுக்கு, மெல்லிசைக் கூச்சல் பார்ட்டிகளுக்குத் தகுந்த கூடங்கள், ஒரே எதிரொலியும் இரைச்சலுமாக. எனக்கு இரண்டு காதுகளையும் இறுக்கப் பொத்திக் கொண்டால் தான் கேட்க முடிந்தது. அடுத்த முறை நல்ல இடமாகப் பார்க்கவேணும்.

இதையெல்லாம்விட குறைபாடாக எனக்கு இன்னொரு விஷயம் தோன்றிற்று. கவிதை, கதை வாசிப்பு அமர்வுகள் (Poetry, Story reading sessions) ஒன்றிரண்டு வைத்திருக்கலாம். நிஜ உலகத்திற்கும் கற்பனை உலகத்திற்கும் நடுவே நேரும் எழுத்தாளனின், வாசகரின் சஞ்சரிப்பு, சந்திப்பு இலக்கிய அனுபவம் – அதன் இன்பம் வேறு; இலக்கிய விமர்சனங்களில் உணரும் அனுபவம் வேறு. இலக்கியம் தனிமையில், தனிமையில் தான் உணரப்படவேண்டும் என்றும் சொல்லலாம். ஆனால் ஒருங்கிய உள்ளங்கள் (like minded people) ஒன்று சேரும்போது அதைக் கூட்டனுபவமாகச் செய்வதில் தப்பில்லை என்று தோன்றுகிறது. மாறாக கருத்தரங்குக்கு ஒரு மெருகு ஏற்படும் என்று தோன்றுகிறது. நாடகம் வைத்தோமே என்று நீங்கள் சொல்லலாம். என்னவோ எனக்கு கதை, கவிதை வாசிப்பு அமர்வுகள்கூட வைத்திருக்கலாம் என்று தோன்றியது. கருத்தரங்கு வெளியே சிலர் ஒன்றிரண்டு இலங்கைக் கவிதைகளை ஜாலராவை மெதுவாகத் தட்டிக்கொண்டு பாடிக் காண்பித்தார்கள். அவற்றில் தெறித்த சோகமும் துயரமும் உடனே என்னை வந்து தொற்றிக் கொண்டது.

மொத்தத்தில் எனக்கு தமிழ் இனி 2001ஐ பற்றிய தினவு ஆரம்பமாகிவிட்டது! மனிதனுக்கு மொழிப்பற்று இவ் வளவு ஆழமாக இருக்கக் காரணம் என்ன என்று யோசித்துக் கொண்டிருக் கிறேன்.

**உமாசங்கரி**
சித்தூர்

(தமிழ் இனி 2000 பற்றி ஆறாம் திணை ஸ்பெஷலாக கேட்டு பெற்று வெளியிட்ட அறிவுமதியின் ஒரு கவிதை பின்னர் 'தலித் முர'சில் வெளி வந்தது. இது பற்றி 'தலித் முர'சில் வெளிவந்த ஒரு வாசகர் கடிதத்தை இங்கு பிரசுரிக்கிறோம்.)

அக்டோபர் இதழில் அறிவுமதியின் கவிதை அருவருப்பாக உள்ளது. 'தமிழ் இனி 2000'இல் மார்க்சியவாதிகள், பெண்ணியவாதிகள், தலித்தியவாதிகள், தமிழ்த் தேசியம் பேசுகிறவர்கள் என்று பலதரப்பட்டவர்கள் கலந்து கொண்டு – தங்களின் கருத்துரைகளை வழங்கினார்கள். கருத்தியலின் ஊடாக, பார்ப்பனீயம் கடுமையாக விமர்சிக்கப்பட்டதும் சுந்தர ராமசாமி உட்படப் பலர் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளானதும் கலந்து கொண்டவர்கள் அறிந்த உண்மை.

இவற்றை எல்லாம் கருத்தில் கொள்ளாமல், 'மலம் துடைத்து விருந்துண்ணும் உறவுகள்' என்றும் 'அடையாளத் தேடலுக்கு அலைபவர்கள்' என்றும் கொச்சைப்படுத்துவது – மனிதத்தை இழிவுபடுத்துகிற செயலன்றி வேறென்ன?

**பேரா. ராஜமுருகுபாண்டியன்**
கிராமத்துமேடு



படிப்பகம்

www.padippakam.com



# கென் சறோ – வீவாவின் படுகொலை

சேரன்
*cheran@cheran.net*

கென் சறோ - வீவா 1995 நவம்பர் மாதம் பத்தாம் நாள் தூக்கில் இடப்பட்டார். அவர் ஒரு கவிஞர். எழுத்தாளர். நைஜீரியாவின் நைகர் ஆற்றுப் பிரதேசத்தில் வாழ்ந்து வருகிற ஒகோனி (Ogoni) மக்களின் தன்னாட்சிப் போராட்டத்தில் முக்கியமான பங்கு வகித்தவர். ஒகோனி மக்கள் வாழ்கிற பகுதிகளில் எண்ணெய் வளம் செழிப்பாக உள்ளது. பல்தேசியக் கூட்டுத்தாபனமான 'ஷெல்', நைஜீரியாவின் அப்போதைய ராணுவ ஆட்சியாளருடன் கூட்டுச் சேர்ந்திருந்து ஒகோனி பிரதேசங்களின் வளத்தையும் மக்களையும் பெருமளவுக்குச் சுரண்டி வந்தது. இந்தச் சுரண்டலை எதிர்த்தும் ஒகோனி மக்களுடைய சுற்றுச் சூழல் அழிக்கப்படுவதை எதிர்த்தும் ஒகோனி மக்கள் கிளர்ந்தெழுந்தபோது அக் கிளர்ச்சிக்கும், அதன் விளைவாகத் தொடர்ந்த எதிர்ப்புப் போராட்டத்திற்கும் தலைமை ஏற்றவர்களுள் கென் சறோ - வீவா முதன்மையானவர்.

கென் சறோ - வீவாவின் பன்னிரண்டு நூல்கள் இதுவரை வெளியாகியுள்ளன. Soza Boy என்னும் அவருடைய நாவல் ஆபிரிக்க இலக்கியங்களில் முதன்மையான ஒன்று. நாவல்களோடு தொலைக்காட்சித் தொடர்கள் தயாரிப்பதிலும் கென் சறோ -வீவா ஈடுபட்டிருந்தார். அவர் எழுதித் தயாரித்திருந்த Basi and Company என்கிற தொலைக்காட்சித் தொடர், ஆபிரிக்கத் தொலைக்காட்சி வரலாற்றிலேயே மிகவும் பிரபலமானது என சறோ - வீவாவின் நண்பரும் எழுத்தாளருமான வில்லியம் பொய்ட் தெரிவிக்கிறார்.

ஆபிரிக்காவிலும் உலக அரங்கிலும் கென் சறோ - வீவாவின் மரண தண்டனை பெரிதும் கண்டனத்துக்கு உள்ளான ஒன்று. அவரோடு கூடவே வேறு பத்துப் பேரும் மரண தண்டனைக்கு உள்ளானார்கள். ஒகோனி மக்களுடைய போராட்டத்தில் நைஜீரிய இராணுவ அரசால் தூக்கிலிடப்பட்ட பதினொரு போராளிகளது வாழ்வும் வரலாறும் படுகொலையும் ஒகோனி மக்களின் தன்னாட்சிப் போராட்டத்தைக் கொஞ்சக் காலமாவது உலக அரங்கில் எழுப்பியிருந்தது.

கென் சறோ - வீவா கைது செய்யப்பட்டு, போலிக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு இராணுவத் தீர்ப்பின் மூலம் மரண தண்டனை விதிக்கப்பட்டபோது, அவருடைய விடுதலையைக் கோரி மேற்குலகின் பல பாகங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்தன. சர்வதேச மன்னிப்புச் சபை உட்பட வேறு பல மனித உரிமை நிறுவனங்களும் மரண தண்டனை ஒழிப்பு அமைப்புகளும் கென் சறோ - வீவாவினதும் அவரது தோழர்கள் பதின்மரதும் மரணதண்டனையை நீக்கக் கோரிப் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டிருந்தன. கென் சறோ - வீவாவின் தம்பி ஓவென் வீவாவும் அவருடைய குடும்பமும் கனடாவிலேயே அரசியல் தஞ்சம் கோரியிருந்தார்கள். மரண தண்டனைத் தீர்ப்புக்கு எதிராகவும் ஒகோனி மக்களுடைய தன்னாட்சிப் போராட்டத்துக்கு ஆதரவாகவும் கனடாவின் பல்கலைக்கழகங்களில் பெருமளவில் கூட்டங்கள் நிகழ்ந்தன. கனடாவின் McMaster மற்றும் Windsor பல்கலைக்கழகங்களில் ஒகோனி, கிழக்குத் திமோர், ஈழம் ஆகிய போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் நிகழ்வுகள் இடம் பெற்றன. இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டபோதுதான் கென் சறோ - வீவாவின் குடும்ப அங்கத்தவர்கள் சிலரையும் ஓவன் வீவாவையும் சந்திக்கிற ஒரு வாய்ப்புக் கிட்டியது.

கென் சறோ - வீவா கைது செய்யப்பட்டபோது நாட்டை விட்டு வெளியேறிய ஓவென் - வீவா இப்போதுதான் நைஜீரியா திரும்பியிருக்கிறார். கென் சறோ - வீவா மற்றும் அவருடன் கொல்லப்பட்ட ஏனைய பதின்மரின் புதைகுழிகளைத் தேடிக் கண்டு பிடித்து ஒரு 'நாகரிகமான' மரணச் சடங்கை நிறைவேற்றுவதே சிரமமான காரியமாக இருக்கிறது என்று வேதனைப்பட்ட ஓவென் - வீவா, கென் சறோ - வீவாவை விடுதலை செய்ய எடுத்து முயற்சிகள் பற்றியும் அவை தோல்வியில் முடிந்தமை பற்றியும் பேசினார்.



கென சறோ - வீவா

நைஜீரியாவில் இராணுவ ஆட்சியாளராக இருந்த ஸானி அபாச்சாவிடம், கென் சறோ - வீவாவையும் அவருடைய தோழர்கள் பதின்மரையும் விடுதலை செய்யும்படி முக்கியமான எல்லா அரசுத் தலைவர்களுமே கேட்டிருந்தனர். எனினும் நெல்சன் மண்டேலா இது தொடர்பாக நடந்துகொண்ட முறைதான் ஆச்சரியம் தருவதாகவும் நெல்சன் மண்டேலாவின் வரலாற்றில் பெருங்கறை பூசுவதாகவும் அமைந்துள்ளது.

கென் சறோ - வீவா தூக்கிலிடப்படுவதற்குச் சில வாரங்களுக்கு முன்பாக கென் சறோ - வீவா விவகாரத்தில் நேரடியாகத்



படிப்பகம்

www.padippakam.com

தலையிட்டு விடுதலை பெற்றுத் தரும்படி நெல்சன் மண்டேலா கேட்கப்பட்டிருந்தார். நைஜீரிய சர்வாதிகாரியான ஸானி அபாச்சாவிடம் நெல்சன் மண்டேலாவின் வேண்டுகோளுக்கு ஒரு மதிப்பு இருக்கும் என்பது ஆப்பிரிக்காவின் தலைவர்களுக்குத் தெரிந்திருந்தது. கூடவே அப்போதைய தென்னாபிரிக்க அரசு - மண்டேலாவின் தலைமையில் - நைஜீரியாவின் இராணுவ அரசின் மீது நிறைந்த செல்வாக்குப் பெற்றதாகவும் இருந்தது எனினும், கென் சறோ - வீவாவையும் அவரது பத்துத் தோழர்களையும் விடுவிக்கும் படி நேரடியாக கேட்க மறுத்துவிட்டார் நெல்சன் மண்டேலா. மரண தண்டனை வழங்கப்பட்ட பிற்பாடும் நைஜீரிய இராணுவ அரசின் மீதான தடை உத்தரவுகளுக்கு ஆதரவளிக்கவும் நெல்சன் மண்டேலாவும் அவருடைய அரசும் தயாராக இருக்கவில்லை. 'அமைதியான இராஜ தந்திரம்', 'ஆக்கப்பூர்வமான ஒத்துழைப்பு' ஆகியவற்றினூடாக மட்டுமே நைஜீரிய அரசை வழிக்கு கொண்டு வர வேண்டும் என்று நெல்சல் மண்டேலா அறிவித்திருந்தார். 'ஆக்கபூர்வமான ஒத்துழைப்பு' என்பதும் 'அமைதியான இராஜ தந்திரம்' என்பதும்தான் மார்க்ரெட் தாட்சர் தென்னாப்பிரிக்க நிறவெறி அரசுடன் இங்கிலாந்தின் உறவுகளை வர்ணிக்கப் பயன்படுத்திய தொடர்கள் என்பது நாம் நினைவில் கொள்ள வேண்டிய ஒன்று.

கென் சறோ - வீவா தூக்கிலிடப்பட்டு ஐந்து வருடங்களுக்குப் பின்பு, இப்போது, கென் சறோ - வீவாவின் மூத்த புதல்வன் - அவருடைய பெயரும் கென் - தனது தந்தையாருடனான நினைவுகள், அவர் தூக்கிலிடப்பட்டமை மற்றும் தனது வாழ்வு அனுபவங்கள் குறித்த நூலொன்றை வெளியிட்டுள்ளார்.

In the Shadow of a Saint : A son's journey to understand his father's legacy என்ற தலைப்பில் வெளியாகியிருக்கும் இந்த நூலில் கென் சறோ - வீவா தூக்கிலிடப்படுவதற்குச் சில மணி நேரம் முன்பு நிகழ்ந்தவற்றைப் பற்றிய அத்தியாயம் வேதனையுடன் கூடிய திகிலூட்டுவதாக அமைந்துள்ளது. அதிலிருந்து சில பகுதிகளை மொழிபெயர்த்துத் தருகிறேன்.



ஓவென் வீவா

அப்பா தூக்கிலிடப்பட்ட அன்று முரண்பாடான பல உணர்வுகளை உணர்ந்திருப்பார் என்று தோன்றிற்று. அன்று தான் தூக்கிலிடப்படுவோம் என்று அவருக்கு உறுதியாகத் தெரிந்திருக்காது எனினும் தனது வாழ்நாட்கள் முடிவடைந்து வருகின்றன என்பது பற்றிய ஒரு உள்ளுணர்வு அவரிடம் இருந்தது. அவருடைய வாழ்நாளில் பெரும்பாலான நாட்களைப் போலவே அன்றும் மிக அதிகாலையில் அவர் எழுந்துவிட்டார். சிறைக்கு வெளியே ஒரே இருளாக இருந்தது. அன்றைய நாள் எதனைக் கொண்டு வந்தாலும் அதற்கு முகம் கொடுக்க அவர் தயாராக இருந்தார். அவர் நிம்மதியாகக் கூட இருந்திருக்கக்கூடும். முடிவு தெரியாத ஒரு வாழ்வின் அவலத்தைவிட இறந்துபோவது ஆசுவாசம் தரக்கூடிய ஒன்றாக அவருக்கு அமைந்திருக்கக் கூடும்.

இறுதிக் கணத்தில் தன்னை விடுதலை செய்துவிடுவார்களா அல்லது தூக்கிலிடத்தான் போகிறார்களா? என்னதான் நடக்கும்? மேன்முறையீடுகளுக்குச் சாத்தியம் இன்னும் உண்டா? போன்ற, ஏராளமான கேள்விகளுக்குள் சிக்குண்டு மனம் நிலையற்றுச் சிதறிக் கொண்டிருந்திருக்கும். இவற்றைவிட மரணம் இரக்கமும் அனுதாபமும் மிக்க ஒரு நல்ல முடிவு என்று அவர் முடிவு செய்திருந்திருப்பார்.

பதினெட்டு மாதம் சிறையில் இருந்தபோது அவருக்குக் கிடைத்த தனிமையை அவர் நன்றாகவே சுவைத்திருந்தார். பைபிளையும் குர்ஆனையும் பெருமளவுக்கு மனப்பாடம் செய்துவிட்டிருந்தார். அசிங்கமும் அருவருப்பும் நிறைந்து, எந்நேரமும் நுளம்புகள் அட்டகாசம் செய்கிற ஒரு சிறைக்கூண்டுக்குள்தான் ஒளிமிக்க ஆழ்மன அமைதியை அவர் பெற்றுக் கொண்டார் என்பது ஒரு துயரமான முரண்நகை. தன்னுடைய சிறைக் கூண்டை 'வாழும் நரகம்' என்றுதான் அவர் முன்பு குறிப்பிட்டிருந்தார்.

குளிர் பரவி, ஈரமாக இருந்த சிறைச்சாலையின் சீமெந்துக் கதிரையில் அன்று காலை அவர் அமர்ந்திருந்தபோது தன்னுடைய பணி முடிவடைந்துவிட்டது என்பதை அவர் உணர்ந்தார். விதி கைகளைச் சூழ இருந்தது. அவருடைய நேரம் வந்துவிட்டது. அவர் முழுமையான ஒரு வாழ்வை வாழ்ந்திருக்கிறார். இன்று சாவிற்கு முகம் தர அவர் தயாராக இருக்கிறார்.

சற்று நேரம் கழிந்த பிற்பாடு, வெளிச்சம் மெல்ல மெல்ல சிறைக் கூண்டுக்குள் வர ஆரம்பித்தது. அப்போதுதான் அவருடைய மனம் அலைமோதத் துவங்கியிருக்க வேண்டும். அவருடைய உயிரைக் காப்பாற்றுவதற்கு எடுக்கப்படுகிற ஏராளமான முயற்சிகள் பற்றி அவர் அறிந்திருந்தார். எப்போதும் தன்னுடைய தலைவிதியைத் தானே கைகளில் எடுத்து வைத்திருப்பதாகப் பெருமையடித்துக் கொண்டவர் அப்பா. இப்போதோ தன்னுடைய தலைவிதி வேற்றவர்கள் கையில் என்று தீர்க்கமாகத் தெரிந்துவிட்ட பிற்பாடு, அவருடைய முகத்தில் மெல்லிய முறுவல் அரும்பியிருக்கும்.

ஒடுக்குமுறையாளர்களை என்றென்றைக்கும் பீதியூட்டுவதாகவும் அதே நேரம் எமது எதிர்காலத் தலைமுறைக்கு ஆதரவு தருவதாகவும் சில வார்த்தைகளைக் கூறிவிட்டே மரணிக்க வேண்டும் என்று அப்பா ஏற்கனவே தீர்மானித்திருந்தார். தன்னுடைய இறுதி வார்த்தைகளை அவர் மனப்பாடம் செய்து வைத்திருந்தார். பொருத்தமான, உணர்ச்சிகரமான ஒரு கணத்துக்காக அவர் காத்திருந்தார். என்னென்ன சாத்தியப்பாடுகள் ஏற்படக்கூடும் என்பது பற்றியும் அவர் மனதுக்குள் படம் போட்டுப் பார்த்துவிட்டார். எனினும் கடைசி நேரத்துப் பயங்கரம் எப்படித் தாக்கப் போகிறது என்பது பற்றி அவருக்குத் தெளிவாகப் பிடிபடாமல் தான் இருந்திருக்கும்.

சிறைக் கூண்டைத் திறக்கிறபோது சாவி ஒலி எழுப்பிற்று. வெளியே நின்ற படையினர் உள்ளே வருகிறார்கள். அதிர்ச்சி அடைந்தது போலக் காட்டிக்கொள்ள அப்பா விரும்பவில்லை. இந்தக் கணத்தில் தான் நடந்து கொள்கிற முறைதான் எஞ்சியிருக்கும் தனது நேரத்தின் தொனிப்பையும் தீர்மானிக்கப்போகிறது என்பதை அவர் உணர்ந்திருந்தார். நிமிர்ந்து நிற்கிறார். கடைசிக் கணத்திலும் கலங்கேன் என்ற உறுதி துணிவு. அதைத்தான் வரலாறும் எழுதப் போகிறது.

அவர்கள் வந்தபோது மணி 11.30. கைகளிலும் கால்களிலும் விலங்குகள் பூட்டப்பட்டன. Black Maria வாகனத்துள் அப்பா ஏற்றப்பட்டபோது ஏற்கனவே அதனுள் ஜோனும், பர்போரும், பரீன் இயோல்லும் இருக்கிறார்கள். ஒருவர் விழிகளை மற்றவர் பார்க்கவே தயங்குகிறார்கள். அச்சம் நிறைந்துள்ள அமைதி.



படிப்பகம்

www.padippakam.com

போர்ட் ஹார்கோர்ட் சிறைச் சாலைக்குள் வளைவில் திரும்புகிறது வாகனம். எல்லோரும் இறக்கப்படு கிறார்கள். இந்தச் சிறைச்சாலையை அல்பாமா என்று அழைக்கிறார்கள். அதனுடைய C பிரிவுக்கு அப்பாவை இட்டுச் செல்கிறார்கள். இங்குதான் மரண தண்டனை பெறப் போகும் கைதி களை நிறைத்து வைத்துள்ளனர். அப்பா வுடன் தூக்கில் இடப்படப் போகும் ஏனையை ஐந்து பேரும் இங்குதான் இருந்தார்கள். அப்பாவைக் கண்டதும் அவர்கள் அழ ஆரம்பித்துவிட்டார்கள்.

"இந்த மாதிரியாகவா சாகப் போகிறோம்?"

விம்மலுடன் அனுங்கி அனுங்கி வருகிறது நோர்டு ஈவோவின் குரல். மரண தண்டனைக்கு முன்பாக வழமை யாக இசைக்கப்படும் கீதம் கேட்கிறது.

"மகிமை. கடவுளுக்கு மகிமை கிடைக்கட்டும்!

ஆமென். அல்லேலுயா..."

*11.55* மணிக்கு இராணுவ ஆளு நர், லெப்டினண்ட் கேர்ணல் தானுதா கோமோ வருகிறார். அவரைத் தொடர் பவர்கள் மாநில நீதித்துறை ஆணை யாளரும் நீதியாளர் நாயகமும்.

தூக்கு மேடைக்கு முதலாவதாகச் செல்ல முன் வருகிறார் அப்பா. அவரைத் தொடர்ந்து செல்கிறார் ஒரு பாதிரி. கொஞ்ச நேரம் அமைதி. திடீரென அப்பா வெளியே வருகிறார். தூக்கு மேடை வேலை செய்யவில்லை யாம். மின்சாரம் தடைபட்டுவிட்டது. தமக்குள் சில நிமிடங்கள் ஆலோ சனை செய்கிறார்கள் வெட்டியான் கள். பிறகு ஜோனைப் பிடித்து உள்ளே தள்ளுகிறார்கள். இதோ ஜோனின் காலடியின் கீழ் மேடை சரிகிறது. பிறகு இயோபல். ஒவ்வொரு உடலாக எடுத்து வந்து சுவரோரமாகக் கிடத்து கிறார்கள்.

அப்பாவைத் தள்ளுகிறான் ஒரு வன். அவருக்குக் கோபம் வருகிறது. அவனைத் தள்ளிவிட்டு முன்னே செல்கிறார். வெட்டியான்கள் உள்ளூர்க் காரர்கள் அல்ல. வெளியில் இருந்து கொண்டு வரப்பட்டவர்கள். அப்பா யாரென்று அவர்களுக்குத் தெரிந் திருக்க நியாயமில்லை. எல்லாக் கொலைக் குற்றவாளிகளைப் போலத் தான் இவர்களும் என்று அவர்கள் நினைத்திருக்கக்கூடும்.

அப்பாவைத் தூக்கில் இட ஐந்து முறை முயற்சி செய்ய வேண்டி இருந்தது. அவருடைய இறுதி வார்த் தைகள் கூடமெங்கும் எதிரொலித்த பிற்பாடு மேடை திறந்தது. அதன்கீழ் புகை கிளம்பலாயிற்று. ■


## காலச்சுவடு பதிப்பகத்தின் நூல்கள்

**புதுமைப்பித்தன் கதைகள்**
முழுத் தொகுப்பு
பதிப்பாசிரியர் : ஆ. இரா. வேங்கடாசலபதி
பக்கம் 824; விலை ரூ. 350
புதுமைப்பித்தனின் அனைத்துக் கதை களும் கொண்டது. திருத்தமான பாடம். பல பின்னிணைப்புகளுடன். பல லாண்டுக் கால ஆராய்ச்சியில் உருவான செம்பதிப்பு.

❖

**காட்டில் ஒரு மான்**
சிறுகதைகள்
அம்பை
பக்கம் 168; விலை ரூ. 75
பெண் நிலை நோக்கின் முதல் கலா பூர்வமான வெளிப்பாடுகளாகக் கருதப் படும் அம்பையின் 17 கதைகள் அடங்கிய புதிய தொகுப்பு.

❖

**நீ இப்பொழுது இறங்கும் ஆறு**
சேரன் கவிதைகள் ஒரு நூறு
பக்கம் 208; விலை ரூ. 90
ஈழத்தின் முக்கிய கவிஞரான சேரனின் நூறு கவிதைகளின் தொகுப்பு. போர்ச் சூழலின் கொடுமைகள், புலம்பெயர்ந்த வாழ்வின் அந்தர நிலை ஆகியவற்றுக்கி டையே இடைவிடாது பெருகும் மெல்லிய உணர்வுகளைப் பதிவுசெய்யும் கவிதைகள்.

❖

**காகங்கள்**
சிறுகதைகள் : 1950 – 2000
சுந்தர ராமசாமி
பக்கம் 656; விலை ரூ. 295
சுந்தர ராமசாமி எழுதிய சிறுகதைகளின் முழுத்தொகுப்பு

❖

**அந்தக் காலத்தில் காப்பி இல்லை முதலான ஆய்வுக் கட்டுரைகள்**
ஆ. இரா. வேங்கடாசலபதி
பக்கம் 232; விலை ரூ. 100
நவீனத் தமிழக உருவாக்கத்தின் பின் புலத்தில் சமூக பண்பாட்டு மாற்றங் களை ஆராயும், சுவையும் விறுவிறுப்பும் மிக்க நடையில் எழுதப்பட்ட கட்டு ரைகள்.

**தோட்டியின் மகன்**
மலையாள நாவல்
தகழி சிவசங்கரப் பிள்ளை
தமிழில் : சுந்தர ராமசாமி
பக்கம் 152; விலை ரூ. 65
பிரபல மலையாள எழுத்தாளர் தகழி ஐம்பது ஆண்டுகளுக்கு முன் எழுதிய நாவல், சுந்தர ராமசாமியின் மொழி பெயர்ப்பில்.

❖

**தமிழகத்தில் கல்வி**
**வே. வசந்தி தேவியுடன் உரையாடல்**
சந்திப்பு : சுந்தர ராமசாமி
பக்கம் 208; விலை ரூ. 90
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் வே. வசந்தி தேவியுடன், எழுத்தாளர் சுந்தர ராமசாமி நிகழ்த்திய, இன்றைய தமிழகத்தின் கல்வி குறித்த, விரிவான உரையாடல்.

❖

**ஒரு மாலையும் இன்னொரு மாலையும்**
கவிதைகள்
சல்மா
பக்கம் 80; விலை ரூ. 40
பெண் கவிதை மொழி சார்ந்து புதிய தடங்களை உருவாக்கும் இளம் கவிஞர் சல்மாவின் முதல் கவிதைத் தொகுப்பு.

❖

**விரிவும் ஆழமும் தேடி**
கட்டுரைகள்
சுந்தர ராமசாமி
பக்கம் 304; விலை ரூ.120
இலக்கியம், மொழி, சமூகம் குறித்த ஆழமாக சிந்திக்கும் கட்டுரைகள்.

❖

**இடமும் இருப்பும்**
கவிதைகள்
மனுஷ்ய புத்திரன்
பக்கம் 104; விலை ரூ.40
காலத்தின் சிதைந்த வெளிகளில் தன்னையும் இப்பிரபஞ்சத்தையும் மீட் கும் ஒரு வழிமுறையாக மனுஷ்ய புத்திரன் எழுதிய 59 கவிதைகள்

விற்பனை உரிமை :
**சிதைவுகள் (ஆப்பிரிக்க நாவல்) - சினுவா ஆச்சிபி**
தமிழில் : என். கே. மகாலிங்கம் - பக்கம் 182; விலை ரூ.75 – காலம் வெளியீடு
*ஐம்பது உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நைஜீரிய நாவல்.*

காலச்சுவடு சந்தாதாரர்களுக்கு 10% கழிவு உண்டு

காலச்சுவடு பதிப்பகம்
669, கே. பி. சாலை, நாகர்கோவில் 629 001
✆ 04652 - 22525 மின்னஞ்சல் : kalachuvadu@vsnl.com
தொலைநகல் : 04652 - 34604




படிப்பகம்

www.padippakam.com

# மௌனத்தின் சிறகடிப்பு

கண்ணன்

## கடிதமும் வெடி குண்டும்

எக்ஸில் 10 இதழில் தமிழ் இனி 2000 பற்றியும் காலச்சுவடு பற்றியும் கலவையான கட்டுரை ஒன்று வெளியாகியுள்ளது.

இடதுகை செய்வது வலது கைக்குத் தெரியவில்லை என்பார்கள். இக்கட்டுரையில் தமிழ் இனி 2000 நிகழ்விற்கு ஒருங்கிணைப்பாளர் சேரன் எக்ஸில் குழுவினரை அழைத்த விபரமும் அவர்கள் இணைந்து கொள்ள மறுத்ததும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எக்ஸில் குழுவினரை தமிழ் இனிக்கு அழைக்கவில்லை என இங்கு நிறப்பிரிகையின் அறிக்கை குற்றம் சாட்டுகிறது. [பாரதிதாசனை (ஜெர்மனி) அழைக்கவில்லை என குற்றம் சாட்டிய நிறப்பிரிகை அறிக்கையை தமிழ் இனி அரங்கில் அவர் படித்துக் கொண்டிருந்தது மிகவும் சுவையான ஒரு காட்சி.] நிறப்பிரிகை என்பது இப்போது அ. மார்க்சின் இடு குறிப்பெயர். அ. மார்க்சின் வலது கை எக்ஸிலை தமிழ் இனியில் கலந்து கொள்ள வேண்டாம் என்று தடுக்க, இடதுகை எக்ஸில் நண்பர்களை அழைக்கவில்லை என்று குற்றம் சாட்டியது.

தமிழ் இனியை விமர்சிக்கும் இந்தக் குறிப்பில் ஸ்ரீராம் சிட்ஸ் நிறுவனம் குறிப்பிடப்பட்டு முதல் ஆதரவாளர்களான ஆறாம்திணையை விமர்சிப்பது தவிர்க்கப்பட்டுள்ளது. அ. மார்க்சின் அறிக்கையிலும் ஆறாம் திணையை பட்டும் படாமலும் உரா யும் போக்கைக் காணலாம். இதன் காரணத்தை அறிய ஆறாம்திணையின் இலக்கிய அரசியலைப் பார்ப்பது அவசியம். ஆறாம்திணையின் சிற்றிதழ்ப் பக்கத்தில் நிறப்பிரிகை முழுமனத்தோடு தூக்கிப் பிடிக்கப்படும். எக்ஸிலும் அவ்வாறே. காலச்சுவடும் பாரிஸில் எக்ஸில் இதழுக்கு இன்னொரு தரப்பில் இயங்கிவரும் உயிர்நிழல் இதழும் கேவலமாக அவதூறு செய்யப்படும். இவ்விதழ்களை ஆறாம் திணையில் 'விமர்சிப்பவர்' அ. மார்க்சின் 'நண்பர்' வளர்மதி.

வளர்மதியைப் பற்றிய சிறு அறிமுகக்குறிப்பு இந்த வாதத்தை வலுப்படுத்த உதவும். வளர்மதி தமிழ் இனியில் நிறப்பிரிகை அறிக்கையை விநியோகித்தவர். சென்னையில் சென்ற ஆண்டு நடைபெற்ற மரண தண்டனைக்கு எதிரான மாநாட்டில் குடிவெறியில் எஸ். வி. ராஜதுரை, சுந்தர ராமசாமி, பொழிலன் போன்றவர்களை வசை பாடியவர். தமிழ் இனி அரங்கில் புலம்பெயர்ந்தோர் அமர்வில் தங்கள் துக்கத்தைப் பகிர்ந்து கொண்டிருந்த பெண்களிடமும் இன்னும் பலரிடமும் குடிபோதையில் அடாவடித்தனம் காட்டியவர். இவர்தான் ஆறாம்திணையின் 'நடுநிலை விமர்சகர்.'

○

காலச்சுவடு 30ல் 'கேட்டிருப்பாய் காற்றே' என்ற தலைப்பில் காலச்சுவடுக்கு வந்த ஈழத்து நண்பர்களின் கடிதங்களைத் தொகுத்து வெளியிட்டிருந்தோம். அங்கு நிலவும்



பலவித மனப்போக்குகளை இக்கடிதங்கள் வெளிப்படுத்துவதாக பல நண்பர்கள் கருத்துத் தெரிவித்தனர். இங்கும் அயலிலும் பரவலான கவனத்தை இந்தப் பகுதி பெற்றது. எக்ஸில் கட்டுரையில் இக்கடிதங்கள் காலச்சுவடால் தயாரிக்கப்பட்டவை என்ற பொருள்பட கட்டுரையாளர் எழுதியுள்ளார். இந்த சந்தேகத்தைத் தீர்க்க மிக எளிமையான திட்டம் ஒன்றை முன் வைக்கிறோம். இக்கடிதங்களை சில தமிழக நடுவர்களின் பார்வைக்கு வைக்கத் தயாராக இருக்கிறோம்.

கட்டுரையில் கீழ்க்கண்டவாறு உள்ளது.

> நாய்களே வெடிச்சத்தம் தெரியுமாடா உங்களுக்கு! தெரிந்தால் இப்பிடியெல்லாம் எழுதிக் கொட்ட மாட்டீர்கள்... தனிப்பட்ட/அரசியல் காரணங்கள் குறித்து எழுதியவர்களின் பெயர்கள் குறிப்பிடவில்லை என்கிறார்கள். தனிப்பட்ட/அரசியல் காரணங்கள் எழுதியவனுக்கா? காலச்சுவடிற்கா?

இக்கடிதங்களை எழுதியவர்களின் பெயர்களை வெளியிடுவது அவர்களுக்கு சில நேரங்களில் ஆபத்தாக முடியலாம் என்பதே எங்கள் கருத்து. குருவி சுடும் சத்தத்தை மட்டுமே கேட்டிருக்கும் நிலையில் நாங்கள் எடுத்த முடிவு இது. மனிதர்களைக் கொல்லும் சத்தங்களை கேட்டிருக்கக்கூடிய கட்டுரையாளருக்கு இந்த எச்சரிக்கை தேவையற்றதாகவும் படலாம். மேலும் பெயர்களை வெளியிடுவது ஆபத்தா இல்லையா என்பதை போரின் பிராந்தியத்தில் இருப்பவர்களே இறுதியாக முடிவு செய்ய முடியும்.

கடிதங்களை பார்வையிட எங்கள் முன்நிபந்தனை இதுதான். எழுதியவர்களின் பெயரை ஒருபோதும் யாரிடமும் வெளியிடக்கூடாது. பிற சந்தேகங்களை நடுவர்கள் பார்த்து தெளிவுபடுத்தட்டும்.

மேலும் கட்டுரையாசிரியர் காலச்சுவடு தமிழ் சிறுபத்திரிகைச் சூழலை விழுங்கிவிட்டதாக குற்றஞ்சாட்டியிருக்கிறார். காலச்சுவடு புது ஆசிரியர் குழுவின் பொறுப்பில் வெளிவரத் துவங்கிய பிறகு தமிழகத்தில் உருவாகியிருக்கும் சிற்றிதழ்கள் இவை: காலக்குறி, பவளக்கொடி, சொல் புதிது, ஆரண்யம், புது எழுத்து, வேறு வேறு, விசை, யாதுமாகி, உன்னதம் இன்னும் சில. தமிழ் வாசகனுக்கு சிற்றிதழ்கள் வழியாக இப்போது கிடைக்குமளவுக்கு தீவிரமான செய்தி அடங்கிய பக்கங்கள் முன்னர் எப்போதும் கிடைத்ததில்லை. புத்தக வெளியீட்டு நிகழ்வுகள், இலக்கிய சந்திப்புகள் போலவே தீவிர இதழியலிலும் காலச்சுவடு விரிவான செயல்பாடுகளுக்கான தூண்டுதலை ஏற்படுத்தி வருவதையே இது உணர்த்துகிறது.

## எதிர்ப்பு அரசியலின் வரையறையும் வன்முறையும்

இது தமிழ்ச் சூழலில் 'கலக நடவடிக்கை', 'கலக மொழி', 'அதிகார எதிர்ப்பு', 'உடைப்பு', 'தூக்கி வீசுவது', 'கவிழ்த்திப் போடுவது', 'தலைகீழாக்குவது', 'தோலுரிப்பது', 'சிதறடிப்பது' இன்னும் பிற புல்டோசர் வார்த்தைகளின் காலகட்டம். எனவே இந்த எதிர்ப்பின் அரசியலை சற்று நுட்பமாகப் பார்ப்பது தகும். 'எதிர்ப்பு அரசியல்' எங்கு நிகழ்த்தப்படுகிறது, 'கலகம்' எங்கு யாரால் செய்யப்படு



படிப்பகம்

www.padippakam.com

கிறது என்பதை நாம் பார்க்க வேண்டும்.

ஒரு மரண தண்டனை எதிர்ப்பு மாநாட்டிலும், தமிழ் இனி 2000 அரங்கிலும், சிற்றிதழ்கள் நிகழ்த்தும் பல்வேறு மாற்று அரங்குகளிலும் 'கலகங்கள்' நிகழ்த்தப்படுகின்றன. இத்தகைய நிகழ்வுகளை அவதூறு செய்வது புரட்சிகரக் குழுக்களுக்கும் இழப்புகள் எதுவும் இல்லாத, போலி பிம்பங்களை எளிதில் ஏற்படுத்திக் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது.

சில கேள்விகள் :

1. எந்தக் கட்சியின் ஒரு தெருக் கோடிக் கூட்டத்திலாவது நமது 'கலகக்கண்மணிகள்' ஒரு கேள்வியை எழுப்பியதுண்டா?

2. எந்த வெகுஜன இதழ்/சினிமா/பண்பாட்டு நிகழ்விலாவது இவர்கள் தங்கள் மறுப்பைப் பதிவு செய்ததுண்டா?

3. உலகத் தமிழ் மாநாடு நடக்கும் இடத்தில் இவர்கள் ஒரு துண்டறிக்கையை விநியோகிப்பார்களா?

4. வளர்மதி ஒரு ஆர்எஸ்எஸ் நிகழ்விற்குச் சென்று முக்கியஸ்தர்களை வசைப்பாடுவாரா?

5. கற்சுறா பாரிஸில் 'இந்து பாசிச கொடியுடன் தேர் இழுப்பதாக' வருந்தியுள்ளார். அங்கு சென்று அவரால் 'நாய்களா' என்று விளிக்க முடியுமா?

6. வீ. அரசு ஏதாவது ஒரு பல்கலைக்கழக அரங்கில்/எம். எஸ். சுவாமிநாதன் பவுண்டேஷன் நிகழ்வில் ருத்ர தாண்டவம் ஆடுவாரா?

இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் வெளிப்படையானவை. அரசிற்கும் பெரும் அமைப்புகளுக்கும் அப்பாற் பட்டு இயங்கும் மாற்றுக் களங்களில் மட்டுமே 'கலகங்கள்' நடைபெறுகின்றன. அதாவது 'கலகங்கள்' எங்கு செய்யப்பட வேண்டுமோ அங்கு செய்யப்படுவதில்லை. எங்கு நிகழ்த்த முடியுமோ அங்கே நிகழ்த்தப்படுகின்றன.

உலகத் தமிழ் மாநாட்டில் துண்டறிக்கை விட்டால் அதிகாரம் பாயும். தமிழ் இனியில் துண்டறிக்கைவிட்ட வளர்மதிக்கு முழு விருந்தோம்பலுடன் அமர்வுகளில் இடையூறு செய்ய சுதந்திரமும் (?) அளிக்கப்பட்டது.

இத்தகைய அடாவடித்தனங்களில் ஈடுபடுபவர்கள் 'கலகக்காரர்கள்!' இவற்றை மௌனத்தால் எதிர்கொள்பவர்கள் 'அதிகாரிகள்!' இந்த மௌனம் தரும் அதிகாரத்தை நாங்கள் விரும்பவில்லை. அத்துடன் இந்த 'கலகக்காரர்கள்' பிறர் மீது அதிகாரத்தைச் செலுத்த எந்த அளவிற்குப் போவார்கள் என்பதையும் நாம் பார்க்க வேண்டும். தமிழ் இனிக்குத் தடை ஏற்படுத்த அ. மார்க்ஸ் வெகுஜன ஊடகம், அரசு என்று எந்தச் சக்தியுடனும் கை கோர்க்கத் தயாராக இருந்தார்.

மாற்றுக் களங்களை உருவாக்குவதும் அவற்றை தக்க வைப்பதுமே அசலான அதிகார எதிர்ப்புச் செயல்பாடுகள். இதைச் சாதிக்க கடந்த நூறு ஆண்டுகளில் நமது இலக்கிய/கலாச்சார ஆளுமைகளுக்கு ஏற்பட்டிருக்கும் இழப்புகளே இதற்குச் சான்று. இவற்றை விவாதமின்றி 'கலகங்கள்' மூலம் அழிக்க எடுக்கப்படும் முயற்சிகள் எப்படி அதிகார எதிர்ப்பாக முடியும்? மாற்றுக் களங்களை உருவாக்குபவர்கள் அச்சுறுத்துவது எப்படி 'கலக'மாக முடியும்? ஒரு சந்திப்பில் 'கலகம்' நடக்கும் போது சில காலத்திற்கு அந்த பிராந்தியமே ஒரு காலாச்சார வெட்டாந்தரையாக மாறிப் போகிறது. மாற்றுக் கலாச்சார வாதிகள் அனைவருக்கும் செயல்பட அது தயக்கத்தை ஏற்படுத்துகிறது.

பொய்களின் வன்முறையை, வசைகளின் வன்முறையை, பழியின் வன்முறையை, குடிவெறியின் வன்முறையை, துரோகத்தின் வன்முறையைப் பிறர் மீது கூசாமல் பிரயோகிப்பவர்களுக்கு அதிகார எதிர்ப்புப் பற்றிப் பேச என்ன உரிமை இருக்கிறது? இவர்கள் கைவசமிருக்கும் 'பேராசிரியர்', 'பின் நவீனத்துவப்' படைப்பாளி, 'கலகக் கண்மணி', 'குடிகாரன்' இன்னும் பிற பட்டங்களை வைத்துக்கொண்டு போடும் ஆட்டத்தைப் பார்க்கும்போது நமது சராசரி அரசியல்வாதிகளின் மீது ஒரு வித மரியாதை ஏற்படுகிறது. அரசையும் அமைப்பையும் விடுங்கள். இந்த 'கலக வீரர்களின்' எந்த நிகழ்விலாவது யாரேனும் ஒரு மறுப்பைப் பதிவு செய்துவிட்டு மீண்டதுண்டா? இவர்கள் கைவசமிருக்கும் எந்த ஊடகத்திலாவது மாற்றுத் தரப்பினரின் கருத்துகளுக்கு உரிய இடமளிக்கப்பட்டதுண்டா?

பாரீஸில் இரண்டு இதழ்களுக்கிடையில் 'எக்ஸில்' என்ற திருவுரு வேண்டி ஒரு சிறு பிரச்சினை. அதிகார மறுப்பையும் அனார்க்கிசத்தையும் முன்னிறுத்தும் எக்ஸில் இதழில் கீழ்க்கண்ட அறிவிப்பு வெளியாகியுள்ளது.

### அறிவித்தல்

எமது எக்ஸில் நிறுவனத்தின் ஒரே இதழாக "எக்ஸில்" இதழ் மட்டுமே வெளியிடப்படுகிறது என்பதையும் "உயிர் நிழல்" என்கின்ற பத்திரிகை எமது வெளியீடு அல்ல என்பதையும் வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம். மற்றும் எமது வெளியீட்டு நூல்களான "நிஷ்டை", "யுத்தத்தின் இரண்டாம்பாகம்" என்பன வெளி யிடப் பட்டதுபோல் தொடர்ந்தும் எமது வெளியீடுகள் குறித்த அறிவிப்புகள் எக்ஸில் இதழில் உத்தியோக பூர்வமாக வெளியாகும். மாறாக தங்கள் இதழ்களையோ, தொகுப்புகளையோ பிரபலமாக்கும் வண்ணம் எக்ஸில் நிறுவனத்தின் பெயரையும் சின்னத்தையும் பயன்படுத்துபவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின் றோம்.

(அழுத்தம் என்னுடையது.) ■


**காலாதீத இடைவெளியில்**

ரவிசுப்ரமணியன்



ஆர். எம். பழனியப்பனின் கோட்டோவியங்களுடனும், கலா ப்ரியாவின் பின்னுரையுடனும் வசீகர வடிவமைப்பில் ரவிசுப்ரமணியனின் மூன்றாவது கவிதைத் தொகுப்பு

பக்.128; விலை ரூ.50

*வெளியீடு :*


மதி நிலையம்
4 (39) பிருந்தாவன்
அடுக்கு குடியிருப்பு
தணிகாசலம் சாலை, தி. நகர்
சென்னை 600 017
தொலைபேசி : 4311838
மின்னஞ்சல் : mathinilayam@eth.net



படிப்பகம்

www.padippakam.com

# நாவல் பழ இளவரசியின் கதை



பிரபஞ்சன்

அவர்கள் காட்டுக்குள் பிரவேசித்துப் பல யுகங்கள் ஆனாற்போல பெரியவன் உணர்ந்திருக்க வேண்டும். அவர்கள் இரண்டு பேர். ஒருவன், பெரிய ஆகிருதியும், படர்ந்த பாதங்களையும் கொண்டிருந்தான். எதிர்ப்படும் மரங்களைத் தோள்களால் தள்ளிவிடக்கூடும் எனும்படி முன்னே நடந்து சென்றான். பெரியவனின் மார்புக்கு மட்டில் வளர்ந்தவனாக சின்னவன் இருந்தான். பெரியவன் இழுத்துச் செல்லும் குதிரை; பின்னால், சக்கரங்களில் உருளும் சிறு தேர் போலச் சின்னவன் இருந்தான்.

சின்னவன், பெரியவனின் முதுகைப் பார்த்தபடி நடந்தான். விசாலமான புல் முளைத்த மைதானம் போல அது இருக்கவே, முன்னால் இருந்ததை அவன் பார்க்கக்கூடாமல், பக்கவாட்டில் மட்டும் பார்த்துக் கொண்டு சென்றான். சூரியன் உச்சிக்கு வந்தபோது அவர்கள் காட்டுக்குள் பிரவேசம் ஆனார்கள். என்றாலும், இருள், பச்சை இருளாய்ப் பக்கவாட்டு மரங்களிலும், கரிய இருளாய் நேராகவும் இருந்தது. விசித்திரமாக, முயல் தலை போல் இரு கைகளிலும் நீண்டு, முகம்போல கீழ் நோக்கிப் படுத்த இலைகளை ஆச்சரியமாகப் பார்த்தபடி நடந்தான் சின்னவன்.

படி வைத்த இருட்டுப் பெட்டிக்குள் இறங்குபவனாய்ப் பெரியவன், ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்தான்.

‘சாயங்காலத்துக்குள்ள ஊரைப் பார்க்க போயிடலாமாண்ணே’ என்று கேட்ட சின்னவன், குரலைக் கேட்காதவன் போல பெரியவன் சொன்னான்.

இப்பொழுதே கறுப்பைக் கரைத்துக் கொட்டி மெழுகினாற்போலத் தோன்றும் இந்தக் காடு, நூற்றைம்பது இருநூறு வருஷத்துக்கு முன்னாலே என்னவாக இருக்கும் பார். பேய்கள் புகாத இங்கதான் அந்த மனுஷன் புகுந்தான். விரட்டிக் கொண்டு, காட்டு வாசலுக்கு வந்த நாய்கள், சரேலென்று திகைத்து நின்றுவிட்டன என்றால் பார்த்துக் கொள். நாய்கள், துப்பாக்கிகளில் மருந்து கெட்டித்து வச்சு இருந்தன! சுட்டு விரல் முனையில் அந்த மனுஷனின் உயிர், இரும்புக் கொக்கியில் மாட்டிய உரித்த கோழியெனத் தொங்கியது. ரத்தம் சொட்ட அவன் காட்டின் இருதயத்துக்குள் மிதித்து முன்னேறினான்.

நாய்களில் இரண்டு வகை. ஒன்று, உள்நாட்டு நாய்கள். மற்றொன்று வெளிநாட்டு நாய்கள். காட்டின் வரம்பைக் கிழித்துக்கொண்டு உள்ளே புக வெளிநாய்கள் தயங்கின. ஆனால், உள்நாட்டு நாய்களோ, மிகுந்த மோப்ப சக்தி கூடி, இடங்களைப் பற்றிய சங்கேதங்களை அறிந்து இருந்தன. நிலங்களை முகர்ந்து, அவைகளோடு பேசும் சக்தி உடையவையாக இருந்தன. நிலம், ரகசியம் அற்று, காயப் போட்ட, வேஷ்டியாக வெறுமனே, வெள்ளையாக விரிந்து கிடக்கும் இயல்பு உடையதுதானே? நாய்கள், மூக்கைத் தரைமீது வைத்தபடி உள்ளே புகுந்தன.

அந்தக் காலத்தில், இந்தக் காடுகளுக்குள் புலிகள் உயிர் வாழ்ந்து இருந்தன. அவன் மாதிரி மனிதர்களைப் புலிகளுக்குப் பிடித்திருந்தன. ஆகவே, அதுகள், தங்கள் அரசியின் தலைமையின் கீழ் ஒன்று திரண்டு, கூடிவந்து, மனுஷனுடன் ஒரு ஒப்பந்தம் பண்ணிக்கொண்டன. தங்களால் மனுஷனுக்கு எந்த தீமையும் வராது. அவனாலும் தங்களுக்கு ஹதம் வரக்கூடாது என்பது ஒப்பந்தம். நீங்கள் என் எதிரிகள் அல்லர். என் பகை வேறு என்று அவன் சொன்னான். புலிகள் பச்சிலைகள் கொணர்ந்து, அவன் காயங்களை சொஸ்தம் பண்ணின. அவனை மாற்றி மாற்றித் தம் முதுகில் சுமந்து கொண்டு காட்டைச் சுற்றிக் காட்டின. ஆனால், என்ன பண்ண? நாய்களோ அவனை ஒரு நாள் அதிகாலையில் உடைத்து ஊற்றிய முட்டை மாதிரி வெளிச்சம் பரவி வருகையில், சுற்றி வளைத்து, கோரைப் பற்களால் கிழித்துப் போட்டன.

அடப் பாவமே என்றான் சின்னவன். யார் பாவம் என்று கேட்டான் பெரியவன். நகரம் சாராமல் வாழும் பல பட்சிகளின் குரல்கள் அவர்களுக்குக் கேட்க வாய்த்தது. இதை ஏதோ சத்தம் என்று எண்ணிவிடக் கூடாது என்றான் பெரியவன். இவைகள் பறவைகள். மற்ற பறவைகளுக்கும், ஏனைய மிருக ராசிகளுக்கும், ஊர்வனவற்றுக்கும் கொடுக்கும் சமிக்ஞைகள் என்று அவன் சொன்னான். புதியவர்களை, அதிலும் குறிப்பாக மனிதர்களைக் கண்டால் அவைகள் பதற்றம் அடைகின்றன என்றான் அவன். அவநம்பிக்கை. முன் காலத்தில், மனிதர்கள் வாழும் இடத்தண்மை, தாவரம், மிருகம் பட்சிகள் என்று என்னவெல்லாம் உண்டோ அவைகள் எல்லாம்



படிப்பகம்

www.padippakam.com

சாதாரணமாக வந்து, பேசி மகிழ்ந்து, நட்பு பாராட்டிவிட்டு போயின. அப்படி வந்துபோய்க்கொண்டிருந்த பசுக்கள், குதிரைகள், கழுதைகள், குரங்குகள் போன்றவற்றை ஏமாற்றியும் வஞ்சித்தும் தமக்கு ஏவல் பண்ணுமாறு பண்ணிவிட்டான் மனிதன். ஆனால், நரிகள், பாம்புகள், சிங்கம், புலிகள் முதலானதுகள், புத்திசாலிகள் மற்றும் தந்திரசாலிகள் ஆகையால், மனிதனை விட்டுத் தப்பித்து ஓடிவிட்டன. எனக்குத் தெரிந்து, நாவல்பழ இளவரசி என்று ஒருத்தி இருந்தாள். பல காலங்களுக்கு முந்தின சமாச்சாரம்.

அவள், ஆசைப்பட்டுக் கார்க்கோடன் என்ற பாம்பைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு, ரொம்ப சந்தோஷமாக வாழ்ந்தாள். இரவில் சம்போகமும், பகலில் குடித்தனமுமாக அவர்கள் வாழ்ந்தார்கள். இது பொறுக்காமல், மருதன் என்கிற மனுஷன் என்ன பண்ணினான் தெரியுமா? ஒருநாள், நாவல்பழ இளவரசியின் அறைக்குள் மருதன் புகுந்துகொண்டான்.

அது என்ன நாவல்பழ இளவரசி? நாவல் பழத்துக்கும் அவளுக்கும் என்ன உறவு? சின்னவனின் குரல் கேட்டுச் சிரித்தான். ஒரு காலத்தில் இந்த தேசம் முழுக்கவும், நாவல் மரமே அதிகமாக இருந்தது. மதுரைக்குத் தெற்காலும், வட மதுரைக்கு வடக்காலும் எங்கு பார்த்தாலும் நாவல் மரங்கள். அப்போ எல்லாம் மனுஷன், மரத்தில் ஆந்தை, வௌவால், குரங்கு, கரடிகளோடும் வாழ்ந்து இருந்தான். நாவல் பழங்கள் தின்று வாழ்ந்ததால், நாம் நாவற்பழ நிறத்துக்கு ஆகிவிட்டோம். அது வேறு கதை. இளவரசியின் கண்கள் இரண்டிலும், கன்னங்கள் இரண்டிலும், முலைகள் இரண்டிலும், நாவல் பழங்கள், பழுத்து இருந்தன. அதனால் அந்தப் பெயர்.

'சரி தான்.'

எங்கே விட்டேன்? ஆங்... அந்த மருதன், இளவரசியின் சயன அறைக்குள் புகுந்துகொண்டு, மறைந்து இருந்தான். ராத்திரி போஜனம் முடிந்து, வாசனைப் பாக்கு, கிராம்பு, பத்திரி, ஏலம், கசகசா, கடுக்காய் இத்யாதிகளால் சேர்த்துக் கட்டிய மசாலாக்களால் வெற்றிலைத் தாம்பூலம் போட்டுச் சிவந்துவிட்டது என்று உதட்டைப் பார்த்துத் தெரிந்துகொண்டு, இளவரசியும் கார்க்கோடனும் சயன அறைக்குள் புகுந்து, பரஸ்பரம் லாகிரியோடு எட்டெட்டுக் கரணங்களால் ஆன சையோக போகங்களில் ரச்மித்துக்கொண்டு கிடக்கையில்...

'அஃதென்ன எட்டெட்டுக் கரணம்' என்று சின்னவன் விளங்காமல் வினவ, சிரித்து, காலக்கிரமத்தில் எல்லாம் புரிய வரும் என்ற பெரியவன் தொடர்ந்தான்.

இடிச் சத்தம் கேட்டுக் குகைகளில் புகுந்து ஒளிவது மாதிரி, இருவரும், ஒருவருக்குள் ஒருவர் பிணைந்து இருக்கையில், வாளை உருவிக் கொண்டு மருதன் கார்க்கோடனை வெட்டினான். கார்க்கோடன் சாகும் முன்பு, மனிதன் மேல் விஷத்தைப் பாய்ச்சினான். இப்போதும்கூட, நாவல்பழ இளவரசி இந்தப் பக்கங்களில்தான் சுற்றித் திரிகிறாள் என்று பார்த்தவர்கள் சொல்கிறார்கள்.

நான் பார்த்தது இல்லை என்று பதில் சொன்னான் பெரியவன். ஆனால் அவள் குரலைக் கேட்டிருக்கிறேன். மரங்களின் கிளைக்குப் பின்னால், இலைகளுக்குப் பின்பக்கத்தில் அவள் இருந்துகொண்டு சப்த அலைகளை எழுப்பிப் பேசுவாள். வார்த்தைகள் ஒன்றோடு ஒன்று முடிச்சு போட்டுக் கொண்டு, வெயில் ஒளிச் சிதறலில் கொசுக்கூட்டம் போல் பறப்பதை நாம் காண முடியும்...

அவர்கள், திடுமென எதிர்ப்பட்ட திறந்த வெளியைக் கடக்க நேர்ந்தது. காற்றில் நீரின் மணம் கலந்து வந்தது. அழுகிய, சொதசொதத்த, புற்கோரைகள் வீச்சம், காற்றில் கரடு தட்டிய சிரங்காய் வீங்கி இருந்தது.

எப்போது நகரத்துக்கு வந்து திரும்பினாலும், இங்குதான் தங்கி, கொண்டு வந்த புளி, எலுமிச்சைச் சோற்றை நாங்கள் சாப்பிடுவோம் என்று பெரியவன் தன் அனுபவத்தைச் சொன்னான். சுற்றி விளிம்புகளில் இலைச் சருகுகள், கிளைக் குச்சிகள் மிதக்கும் ஏரியில் துண்டை விரித்து மீன் பிடிப்போம். நீரில் போட்ட காக்காய்ப் பொன் தாளில் பட்டுப் பளீரிட்டுச் சிலிர்க்கும். கிழிந்த காகித மீன்கள் படகின் வயிற்றுக் குழியாய் உருக்கொண்ட துண்டுகள் வந்து விழும். சுள்ளியைக் கொளுத்தி, சின்னச் சின்னப் பொட்டலங்களில் கொண்டு வந்த உப்பு மிளகாய்த் தூளைத் தூவி, சூடு ஆவி பறக்கத் தின்போம். உதடுகளில் புகையும் ஆவி. மீன்களில் மூச்சுக் காற்று.

'அண்ணே. நூறு முறைக்கு மேலா, இங்க வந்திருப்பீங்க, போல?'

சிரிப்பைப் பதிலாகத் தந்தான் பெரியவன். தலை விரித்துக் கிடந்த பேய் மரத்தின் கீழ்ப் போய் உட்கார்ந்தான் பெரியவன்.

'நீங்க மட்டும் வரலைன்னா, அந்த தேவடியாப் பையன் பணம் தந்திருக்க மாட்டான்.'

அனிச்சையாக மடியைத் தொட்டுப் பார்த்துக்கொண்டான் சின்னவன். கத்தைப் பணம், தொப்புளுக்கும் கீழே மடிந்து மேடிட்டுக் கிடந்தது.

எத்தனை வாட்டி என்னை இழுத்தடித்தான்? பத்திரம் செல்லாது என்றான். அறுவடை முடியட்டும் என்றான். தை பிறக்கட்டும் என்றான். பொண்ணு கல்யாணம் வச்சாச்சு என்றான். கடைசியில் அண்ணண் வந்து கிண்ணென்று நின்றதும்தான் பணம் தலைகாட்டியது.

'அண்ணே, வச்ச நிலத்தை மீக்கணும்.'

பெரியவன், ஆம் என்பது போலத் தலை அசைத்தான். அவன் கண்முன் நிகழ்ச்சிகள் விரிந்தன. குடும்பம் தலை நிமிர்கிறது. சின்னவனுக்குக் கல்யாணம் ஆகிறது.

"அத்தை மவ வேற காத்திருக்கா."

சின்னவன் விரலால் தரையில் எதையோ எழுதி அழித்தான். அரைத்த உளுந்து வாசனை வீசும் அவள் மேல் படுத்துக் கிடக்கிறான் சின்னவன். நாவல்பழ இளவரசி மேல் சின்னவன் படுத்துக் கிடந்தான். மூச்சை உள்ளிழுத்துப் பழங்கள் பருத்துப் பெரிசாயின.

அவர்கள் இருட்டும் முன்பு, காட்டைக் கடந்தாக வேண்டும்.





படிப்பகம்

www.padippakam.com



சதுப்பு நிலம் போன்று தரை கால் உள்வாங்கியது. ஆபத்தான வெளி. சருகுகள், குப்பைகள் மூடி, மண்ணின் முகம் மறைந்து கிடந்தது. அங்கிருந்த மரத்தின் பருத்த கிளையை ஒடித்து எடுத்தான் பெரியவன். அந்தக் கொம்பால் தரையை ஊன்றித் தடம் பார்த்து முன்னே நடந்தான். பெரியவன் வைத்த காலடிக்கு மேல் தன் அடியை வைத்து ஜாக்கிரதையாக நடந்து சென்றான் சின்னவன். சதுப்பு நிலத்தைத் தாண்டிக் கட்டாந்தரையைக் கடக்கையில், சுகந்தமான முல்லை மணம் அவர்களைச் சுருட்டி மூடியது. பெரியவன், மார்பு கொண்ட மட்டும் மூச்சை இழுத்து உள்ளே ஸ்தம்பம் பண்ணியதைச் சின்னவன் பார்த்தான்.

அடுத்த ரெண்டு கல்லும் முல்லைக்காடுதான். கார்கோடன், அதன் சந்ததியர் படுத்துக் கிடக்கும். ஓய்வு எடுத்துக்கொண்டு இருக்குமாய்க் காணும். என்னத்துக்கு ஓய்வு என்றால் சண்டை போட்ட களைப்புதான். பல காலங்களுக்கு முன்னால் கிருஷ்ணனும் அர்ஜுனனும் அவர்கள் பந்துமித்திரர்களோடு கார்கோடன் வம்சத்தாரோடு சண்டைக்கு வந்தார்கள். காண்டவ வனம் உள்ளிட்ட பூமியின் பரவலில் சொந்தம் கொண்டாடுவது கிருஷ்ணன், அர்ஜுனரின் நோக்கமாக இருந்தது. கார்கோடன், மலையின் உச்சியில் ஏறி நின்றுகொண்டு சொன்னான். இந்த மலைபோல் லட்சம் கோடி மலைகள் தேய்ந்து தேய்ந்து மண் ஆன கல்ப கோடி வருஷங்களாக நாங்கள்தான் இங்கே குடி இருக்கிறோம். இது எங்கள் பூமி. என்றாலும் யாரும் அவன் பேச்சைப் பொருட்படுத்துவதாக இல்லை. சண்டை பல ஊழிகள் தொடர்ந்தது. இன்னும்தான். சண்டைக்குள்ளாகச் சற்றே ஓய்வு கொள்கிறான் கார்கோடன்.

அவர்கள் முல்லைக் காட்டைக் கடந்துகொண்டிருந்தார்கள். முல்லைச் செடிகள் மரம்போல், அங்காந்து பார்க்க வைத்தன.

'இதேது. ஆச்சரியமாய்த் தோணுதே'

ஆச்சர்யம் ஏதும் இல்லை. யோசிக்கையில் ஆச்சர்யம் என்று ஏதும் இல்லை. எதுவும் உள்ளதுதான். நாம்தான் பார்ப்பது இல்லை. அந்தக் காலத்தில், ஏன், இப்போதும்தான் இந்த இடத்தில் கொள்ளைக்காரர்கள் பதுங்கிக் கிடப்பார்கள். ஆறலைக் கள்வர் என்பது அவர்கள் பெயர். பாலைச்சுரத்து வாழ்பவர்கள். இந்தப் பக்கம் போகும் பயணிகளை மருட்டி இருப்பதைப் பிடுங்குவார்கள். இப்படித்தான், ஒரு சமயம், கல்யாணப் பெண்ணையும் அவள் சொந்த பந்தங்களுடன் இந்த வழியாகக் கூட்டிப் போய்க்கொண்டிருந்தோம். காவல்காரர்களில் நானும் ஒருவன். அந்தி சாயும்போதுதான் இந்த முல்லைக் காட்டைக் கடந்தோம். இருட்டும், பயமும், சீக்கிரம் ஊருக்குப் போய்விட வேண்டும் என்ற தவிப்பும் எல்லோருடைய பைகளிலும் பெட்டிகளிலும் நிரம்பி வழிந்தன. வழியில், விதவிதமான புதுசான சத்தங்களை நான் கேட்டேன். இவை காட்டின் சத்தம் இல்லை. எனக்குத் தோன்றியது. இது சத்தம் அல்ல. சமிக்ஞை. மரங்களின் உச்சந்தலையைக் கவனித்தேன். உச்சந்தலையில் கட்டின ரிப்பனைப் போல, மனித உடம்புகள் தெரிந்தன. வேல்க் கம்பியை எறிந்து ஒருத்தனை வீழ்த்தினேன். திபுதிபு என்று திருடர்கள் எங்களைச் சூழ்ந்துகொண்டார்கள். நான் கம்பைச் சுழற்றினேன்.

பெரியவன், தன் கையில் இருந்த கம்பைச் சுற்றத் தொடங்கினான். அவன் காவலாளி. கல்யாணப் பெண்ணைக் காப்பாற்றும் கடமை சாலி. அவன் ஏந்திய கம்பு, முனை வளர்ந்து, நீண்டு, நெளிந்தது. பாம்பின் பிளந்த நாக்கு நெளிந்து நெளிந்து, கம்பு கீழிறங்கும் போதெல்லாம், ஒருவன் சுருண்டு வீழ்ந்தான். கார்கோடனின் நாக்கு. விஷம் கொட்டிவைத்த் சால். அவன் வைத்த கால்த் தடங்களில் நெருப்புக் கனல் தெறித்தது. பூமி வாய்பிளந்து புகையை உமிழ்ந்தது. கம்பு, வானத்துக்கும் பூமிக்குமாக எம்பி எம்பித் தாழ்ந்தது. பெரியவன் ஒரு நாழிகை தரையில் கால்பதியாதவனாக அந்தரத்தில் வீடு கட்டிச் சுற்றி வந்தான். அவன் வெற்று உடம்பில் தாரை தாரையாக வியர்வையும் ரத்தமும் வழிந்தது. தரையில் விழும் சொட்டுகளை கார்கோடன் வம்சத்தார் நக்கிக் குடிப்பதைச் சின்னவன் பார்த்து நடுங்கினான்.

போதும் போதும் என்று கத்த வாய் திறந்தான். பேச்சுக் காற்றாய் வழிந்தது. அவன் கண்களின் கருவிழிகள், மேல் அரைவட்ட விளிம்பில் மறைந்தன.

பெரியவன் ஏந்திய கம்பு, கிளைகளாய் கிளைத்தன. மரத்தை ஏந்தியவனாய் அவன் இருந்தான். பலவான். எட்டுத் திக்கிலும் மரம், கீழ் இறங்கியது. ஒவ்வொரு திசையிலும் அது தரைக்கு வந்தபோது அலறல்கள் கேட்டன. யானைகள் பிளிறின. குதிரைகள் கனைத்து விழுந்தன. வீரர்கள் ஊளையிட்டார்கள். எட்டாம் திசைக்கு மரம் இறங்கிய போது, அது, சின்னவன் தலையில் இறங்கியது.

பெரியவன் ஓய்ந்தான். கம்பைத் தரையில் ஊன்றி நின்றான். நிதானப்பட வெகு நேரம் ஆனது. தரையைப் பார்த்தான். ரத்தக் குழம்பில், சின்னவன் மிதந்தான். பெரியவன், கம்பை எறிந்தான். நிதானமாகச் சின்னவன் பக்கத்தில் குத்துக் காலிட்டு அமர்ந்தான். அவன் இடுப்புப் பக்கத்தில் தடவி, ரூபாய் நோட்டுகளை எடுத்தான். மடியில் சொருகிக் கொண்டான்.

காட்டைக் கடக்கத் தொடங்கினான்.

ஓவியங்கள் : மருது

**பிழை திருத்தம்**
**இதழ் 32**

பக். 22 : தாமரை பாரதியின் 'நிகழ்வுகளின் பிடியில்...' கவிதையில் 6வது வரி தங்களை சந்திக்க முடிந்ததென்றும், என்றும் 12வது வரி சொல்லக் கூடுமோயிந்த என்றும் இருக்கவேண்டும்.

பக். 68 : பெட்டிச் செய்தியில் டி. டி. கோசாம்பியின் நூல்கள் பட்டியலில் Illusion and Reality என்பது **Myth and Reality** என்றிருக்க வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

# வேட்டை



**அதிரடிப்படையினரின் அத்துமீறல்களை பாதிக்கப்பட்டவர்களின் வாக்குமூலங்களினூடாக அறிந்தபோது மனிதர்களால் இப்படிக்கூட நடந்துகொள்ள முடியுமா என்று தோன்றியது. நம் பத்திரிகையாளர்களைப் பார்த்தபிறகு அந்த கேள்வி எவ்வளவு அபத்தமானது என்பது விளங்கிவிட்டது.**

ரவிக்குமார்

ராஜ்குமார் விடுவிக்கப்பட்டார். ஆனாலும், வீரப்பன் செய்திக்கதைகளின் மையத்தில் தொடர்ந்து கொண்டேயிருக்கிறார். எல்லைப் பாதுகாப்புப்படை வருகிறது, ஹெலிகாப்டரில் தேடுகிறார்கள், நவீன ஆயுதங்கள் குவிகின்றன. இப்படி தினம் ஒரு செய்தியாக வந்துகொண்டிருக்க, வீரப்பன் யாழ்ப் பாணத்துக்கு தப்பிச்சென்றுவிட்டதாகவும், கைதுசெய்யப்பட்டு விட்டதாகவும் கூட கதைகள் வருகின்றன.

நம் பத்திரிகைகள் வீரப்பன் விஷயத்தில் பிடிவாதமாக சில தர்மங்களைக் காப்பாற்றி வருகின்றன. தவறியும்கூட வீரப்பன் இப்படி உருவானதற்கான சமூக அரசியல் பின்னணிகளைப் பேசிவிடக்கூடாது; வீரப்பனை காரண மாகக் காட்டி அதிரடிப்படை செய்துள்ள அட்டூழியங்களை பேசக்கூடாது என்பதில் அவை உறுதியாக இருக்கின்றன. எப்படியாவது வீரப்பனை விடுதலைப்புலிகளோடு சேர்த்துவிடவேண்டும் என்பதும் நம் பத்திரிகைகளின் நோக்கங்களில் ஒன்றாக இருக்கிறது.

நவம்பர் 26ந்தேதி கொளத்தூரில் "பாதிக்கப்பட்ட மக்கள் மாநாடு" ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சுமார் ஆயிரம் பேர் கூடிய அந்த மாநாட்டிற்கு வந்த நிருபர்கள், பத்திரிகையாளர்களின் எண்ணிக்கை சுமார் 150 இருக்கும். தமிழ் நாட்டின் ஒரு மூலையில் ஒரு கிராமத்தில் நடக்கும் மாநாட்டுக்கு இவ்வளவு பத்திரிகையாளர்களா என வியப்பாக இருந்தது. பாதிக்கப்பட்ட மக்கள் சொல்லிய துயர சம்பவங்கள் அந்த பத்திரிகையாளர்களை நெகிழ வைத்திருக்கும் என்று நினைத்தேன். இந்தப் பிரச்சனை நாட்டு மக்களின் கவனத்துக்கு எடுத்து செல்லப்பட்டுவிடும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர்கள் வந்தது அதற்காக அல்ல என்பது பிறகுதான் புரிந்தது. அன்று பிரபாகரனின் பிறந்த நாள் என்பதைக் கண்டுபிடித்து அதுபற்றி நெடுமாறன் ஏதாவது பேசுவார் என எதிர்பார்த்து அவர்கள் வந்திருக்கிறார்கள். கண்ணீர் மல்க தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் பற்றி பாதிக்கப்பட்ட பெண்கள் கூறியவை அங்கு வந்திருந்த பெண் நிருபர்களுக்கும் பொருட்டாகப் படவில்லை. அந்த பெண்களிடம் பேசவேண்டும் என்றுகூட தோன்றவில்லை. அதிரடிப்படையினரின் அத்துமீறல்களை பாதிக்கப்பட்டவர்களின் வாக்கு மூலங்களினூடாக அறிந்தபோது மனிதர்களால் இப்படிக்கூட நடந்துகொள்ள முடியுமா என்று தோன்றியது. நம் பத்திரிகையாளர்களைப் பார்த்த பிறகு அந்த கேள்வி எவ்வளவு அபத்தமானது என்பது விளங்கிவிட்டது.

சென்ற ஆட்சியில் நடந்துகொண்டது போல இப்போது அதிரடிப்படையினர் நடந்துகொள்ள மாட்டார்கள் என தமிழக முதல்வர் கூறியிருக்கிறார். கடந்தமுறை அதிரடிப்படை என்ன செய்தது? வீரப்பன் தேடுதல் வேட்டை என்ற பெயரில் தமிழக கர்னாடக அரசுகள் சுமார் 160 கோடி ரூபாய் செல விட்டுள்ளன. அது எங்குபோய் சேர்ந்தது? விசாரணைக்காக பிடித்து செல்லப்பட்ட சுமார் அறுபது பேர் என்ன ஆனார்கள்? தொண்ணூறு பெண் களைக் கற்பழித்து முன்னூறுபேருக்கும் மேற்பட்டவர்களை நிரந்தரமாக ஊனமாக்கி அதிரடிப்படை செய்த அட்டூழியங்களுக்கு என்ன தண்டனை வழங்கப்பட்டது? இந்த கேள்விகளை பத்திரிகையாளர்களும் கேட்கவில்லை, தமிழக முதல்வரும் பதில் சொல்லவில்லை.

காஷ்மீரிலும், பஞ்சாபிலும் ஆயிரக்கணக்கானோர் காணாமல் போயிருக் கின்றனர். அந்த முறை தமிழ்நாட்டிலும் கையாளப்பட்டிருப்பது இப்போது தான் வெளியே தெரிந்துள்ளது.

ராஜ்குமாரை மீட்டுவந்த நெடுமாறன் தலைமையிலான குழுவினர் அதிரடிப்படையின் அத்து மீறல்களை மக்களுக்கு எடுத்துரைத்து, குற்றவாளி களைத் தண்டிக்க அரசை வற்புத்தி பிரச்சார பயணம் மேற்கொண்டுள்ளனர். தமிழ்த் தேசியவாதிகள் மனிதஉரிமை செயல்திட்டத்தை "ஹைஜாக்" செய்ய லாமா என்பது போன்ற அபத்தமான கேள்விகளை ஒதுக்கிவிட்டு இப்போ தாவது இந்தப் பிரச்சனையின் மற்ற பரிமாணங்களை நாம் பார்க்கவேண்டும்.

பாதிக்கப்பட்டவர்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை, வன் முறையை எடுத்துச் சொல்லும்போது நாம் என்னவாக மாறுகிறோம்? பார்வை யாளராக (Voyeur) இருக்கிறோமா? அல்லது அந்த துயரத்தில் கரைகிறோமா?

சதாசிவா கமிஷன் முன்பாக, தமிழ்நாடு மனித உரிமை கமிஷன் முன் பாக, அளிக்கப்பட்ட வாக்குமூலங்களிலிருந்து ஒருசில இங்கே தரப்படுகின்றன.

மீண்டும் துவங்கியுள்ள அதிரடிப்படை நடவடிக்கை மேலும் இப்படியான வாக்குமூலங்களை உருவாக்குமா என்பது இனிமேல்தான் தெரியவரும்.



படிப்பகம்

www.padippakam.com

**சின்னப்பொன்னு, மேட்டுப்பனையூர்**

நான் மேற்படி கிராமத்தில் வசித்துக் கூலிவேலை செய்து வருகிறேன். கடந்த 1993ம் ஆண்டு தமிழக அரசும் கர்நாடக அரசும் இணைந்து வீரப்பனைப் பிடிப்பதற்குச் சிறப்பு முகாம் அமைத்துத் தேடி வந்தனர்.

இந்நிலையில் 7 ஆண்டுகளுக்கு முன்பு (சரியான வருடம், மாதம், தேதி நினைவில் இல்லை) எனது மகன்கள் இருவரையும் நல்லூரில் கைது செய்தனர். அதன் பிறகு அவர்களைச் சுட்டுக் கொன்று விட்டனர். இதனால் நான் 1993ம் ஆண்டில் ஈரோடு மாவட்டம் திருப்பூரில் பிச்சை எடுத்துப் பிழைப்பு நடத்திக் கொண்டு வந்தேன். இவ்வாறிருக்கையில் என்னைத் திருப்பூரில் தமிழக சிறப்பு அதிரடிப் படை போலீஸார் கைது செய்தனர். அங்கிருந்து என்னைப் பண்ணாரி முகாமில் 2 நாட்கள் வைத்து "என் மகன், மகள், மருமகன், பேரப்பிள்ளைகள் வீரப்பனுடன் இருந்தார்களா" என்று விசாரித்தனர். "அவர்களைப் பற்றி எதுவும் தெரியாது" என்று சொன்னேன். இதனால் என்னை அங்கிருந்த மாதேஸ்வரன மலையில் உள்ள கர்நாடகா அதிரடிப் படை காவலர்களிடம் ஒப்படைத்தனர்.

மாதேஸ்வரன் மலையில் என்னைக் கண்ணைக் கட்டி விட்டு நிர்வாணப்படுத்தி உட்கார வைத்திருந்தனர். அப்போது வீரப்பன் இருக்கும் இடம், அவனோடு யார் யார் இருக்கிறார்கள், அவர்களைப் பற்றிய விவரம் சொல் என்று கேட்டு என்னை அடித்தனர். என்னுடைய உடலில் கண்புருவம், காது, மார்பு மற்றும் பிறப்புறுப்பு ஆகிய இடங்களில் கரண்ட் ஷாக் கொடுத்து சித்திரவதைப்படுத்தினர். மேலும், என் கையையும், காலையும் அடித்து காயப்படுத்தி, ஊனப்படுத்தி விட்டனர். என் கண்ணில் போலீசார் லத்தியை விட்டுக் குத்தியதால் எனது வலது கண் பாதிப்படைந்துள்ளது. இவ்வாறாக என்னை இரண்டு மாத காலம் மாதேஸ்வரன் மலையில் உள்ள முகாமில் வைத்து சித்திரவதை செய்துவிட்டு அங்கு நடந்தது பற்றி வெளியில் யாரிடமும் சொல்லக்கூடாது என்று மிரட்டி வெளியில் அனுப்பிவிட்டனர். மேற்படி சித்திரவதையின் விளைவாக என் மனநிலை மற்றும் உடல்நிலை கடுமையாகப் பாதிக்கப்பட்டுவிட்டது.

மேலும் எனது 2 மகன்கள் மற்றும் மருமகன் பொன்னுசாமி, அவரது மகன்கள், எனது பேரன்கள் மணி, குமஸ்தா ஆகிய அனைவரையும் காவல்துறையினர் சுட்டுக் கொன்றுவிட்டனர். நான் இப்போது அனாதையாக வாழ்ந்து வருகிறேன்.

மேலும் மேற்படி போலீஸ்காரர்கள் அவ்வப்பொழுது எங்கள் ஊருக்கு வந்து என் போன்று சித்திரவதை செய்யப்பட்ட பலரை இன்னும் மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

**அலமேலு, காளையனூர்**

நான் மேற்படி விலாசத்தில் என் கணவருடன் வசித்து வந்தேன். எங்களுக்கு ஒரு பெண் குழந்தை இருக்கிறது. நாங்கள் விவசாயக்கூலி வேலை செய்து பிழைத்து வந்தோம்.

கடந்த 1993ஆம் ஆண்டு வைகாசி மாதம் 27ஆம் நாள் மதியம் 2 மணியளவில் கருங்கலூர் பஸ் ஸ்டாப்பில் பஸ்சுக்காக காத்துக்கொண்டிருந்த என் கணவரை தமிழ்நாடு அதிரடிப்படை போலீஸ் பிடித்துச் சென்றுள்ளனர். இதனை பஸ் ஸ்டாப்பிற்கு எதிரேயுள்ள டீக்கடைக்காரர் பார்த்துள்ளார். இதன் பிறகு 10 – 15 நாட்களுக்குப் பிறகு என் கணவரின் மாமா மேட்டூர் முகாமில் பார்த்து வந்து எங்களிடம் என் கணவர் மேற்படி முகாமில் இருப்பதாகக் கூறினார். அதன்பின்னர் மறுபடியும் மேற்படி என் கணவரின் மாமா மேற்படி முகாமிற்கு பார்க்கச் சென்றபோது அங்கிருந்த தமிழ்நாடு அதிரடிப்படை போலீசார் அவரிடம் என் கணவர் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் வீட்டுக்காரியான என்னை அழைத்து வரும்படி அவரை அனுப்பியதாக என்னிடம் கூறி மேற்படி முகாமிற்கு எங்களைக் கூப்பிட்டார். நானும் பதறியடித்துக்கொண்டு என் தாய் தகப்பன் மற்றும் மகளுடன் மேற்படி முகாமிற்குச் சென்றேன். என்னை அங்கிருந்த போலீசார் மேட்டூர் அரசு மருத்துவமனைக்குச் செல்லுமாறு கூற நாங்கள் மேற்படி மருத்துவமனைக்குச் சென்றோம். அங்கே மேட்டூர் அரசு மருத்துவமனையில் போஸ்ட் மார்ட்டம் செய்யப்பட்டு அவரது உடல் கிடத்தப்பட்டிருந்தது. அருகில் சென்று அவரது முகத்தையாவது பார்க்கலாமென்று சென்றபோது முகம் அழுகிப் போய் பார்க்கவே முடியாதவாறு துர்நாற்றம் வீசியது. அப்போது அருகில் இருந்தவர்கள் இறந்து 6 – 7 நாட்கள் இருக்கும் என்று கூறினார்கள். எங்களிடம் போலீசார் வந்து என் கணவரின் உடலை இங்கேயே உடன் புதைக்க வேண்டும் என்று கூறினார்கள். நான் எனது ஊரில் கொண்டு போய் புதைத்துக்கொள்கிறேன் என்று கூற மேற்படி போலீசார் நாங்கள் சொல்வதுபோல் இங்கேயே புதைக்காவிட்டால் உனக்கும் இதே கதிதான் ஏற்படும் என்று மிரட்டினார்கள். ஆகவே நானும் பயத்தில் அவர்கள் சொல்லியவாறே வேறு வழியின்றி என் கணவரின் உடலை மேட்டூரிலேயே புதைத்துவிட்டோம். அப்போது அங்கே வைத்து போலீசார் என்னிடம் சில வெற்றுக் காகிதங்களில் கைநாட்டு வாங்கினர்.

இதற்கிடையில் என் கணவர் வீரப்பனுக்கு நெருங்கிய கூட்டாளியாக இருந்தவர் என்றும் மேற்படி வீரப்பனுடன் போலீசார் 2 மணி நேரம் நடத்திய துப்பாக்கிச் சண்டையில் சுட்டுக்கொல்லப்பட்டார் என்றும் பத்திரிகையில் செய்தி வெளியானது. இச்செய்தியைப் படித்த என் ஊரைச் சேர்ந்த பலரும் நான் ஊருக்குத் திரும்பியதும் மேற்படி போலீசார் மேட்டூர் முகாமில் இருந்து என் கணவரை தண்டாவிற்கு மேற்கே மலைப்பகுதிக்குக் கொண்டு சென்று சுட்டுக் கொன்று என் கணவரின் உடலை ரத்தம் வடிந்த நிலையில் அவர்களது வண்டியிலேயே கொண்டு வந்ததை பார்த்ததாகக் கூறினர்.

ஊரில் விவசாய வேலை செய்து கொண்டிருந்த அப்பாவியான என் கணவரை எக்காரணமும் சொல்லாமல் பலரறிய ஒரு பொது இடத்தில் வைத்து அழைத்துச் சென்று மேட்டூர் கேம்பில் 10 நாட்கள் வைத்திருந்ததற்கு சாட்சியும் இருக்கின்ற வேளையில் அவர் எப்போது தப்பித்துச் சென்று வீரப்பனுக்கு நெருங்கிய கூட்டாளியானார் என்று எனக்கு இன்னும் புரியவில்லை. அதுவும் வீரப்பனுடன் நடந்த 2 மணிச் சண்டையில் மேட்டூர் கேம்பில் அதற்கு முதல்நாள் வரை இருந்த என் கணவர் மட்டும் எப்படிப் பலியானார் என்பதை என்னால் நம்ப முடியவில்லை. ஆகவே என் கணவரைப் போலீசார் திட்டமிட்டுச் சுட்டுக் கொன்றுவிட்டு பொய்யாக பத்திரிகையில் மேற்படி செய்தியைக் கொடுத்திருப்பதாக நான் நம்புகிறேன். என் கணவர் இறந்தபின் அவரது வீட்டில் எனக்கு எந்த ஆதரவும் இல்லாத நிலையில் நான் தற்போது என் தாய் வீடான கத்திரிப்பட்டியில் வந்து கூலி வேலை செய்து என் மகளும் நானும் கஷ்டத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். இதற்குக்காரணம் மேற்படி தமிழக அதிரடிப்படைப் போலீசாரின் சட்டத்திற்குப் புறம்பான செயல்தான்.

மேலும், மேற்படி போலீசார்களும் அவ்வப்போது எங்கள் ஊருக்கு வந்து என் போன்ற பாதிக்கப்பட்ட பலரையும் மேற்படி விஷயங்களை யாரிடமும் சொல்லக்கூடாது என்று மிரட்டிக்கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில், எங்கள் நிலையறிந்து கடந்த மார்ச் மாதம் பத்திரிகையாளர்களும், மனித உரிமை அமைப்புகளைச் சேர்ந்த வழக்கறிஞர்களும் என்னை சந்தித்து எனக்கு நடந்த கொடுமைகள் குறித்து சட்டப்பூர்வமாக உதவி செய்வதாகக் கூற, நானும்


படிப்பகம்

www.padippakam.com

அவர்களிடம் எனக்கு நடந்த கொடுமைகளைக் கூறினேன். இவ்வாறு பத்திரிகையாளர்களும், வழக்கறிஞர்களும் எங்களைப்போன்ற பலரைச் சந்தித்து செல்வதை அறிந்த மேற்படி அதிரடிப்படை அதிகாரிகள் மறுபடியும் வந்து யாரிடமும் விஷயத்தைக் கூறக் கூடாது என்று தொடர்ந்து மிரட்டி வந்தனர்.

**கே. குமார், கொளத்தூர்**

நான் மேற்படி விலாசத்தில் வசித்துக்கொண்டு வியாபாரம் செய்து வந்தேன். 1993ம் ஆண்டு முதல் வீரப்பனை பிடிக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசும், கர்நாடக அரசும் கூட்டாக சிறப்புக் காவல் படையமைத்து தீவிர நடவடிக்கை எடுத்தனர். அதே வருடம் மே மாதம் 23ம் தேதி காலை 11 மணியளவில் கொளத்தூர் வீட்டிலிருந்த போது கர்நாடக காவல்படையைச் சேர்ந்த ஆய்வாளர் டைகர் அசோக்குமார் மற்றும் ஜெயன்னா ஆகியோர் காவலர்களுடன் வந்து என்னை கைது செய்து மேட்டூருக்கு அழைத்துச் சென்றனர். அங்கே எனது தந்தையை அடையாளம் காட்டச் சொன்னார்கள். பின்னர், மாதேஸ்வரமலையில் உள்ள ஒர்க்ஷாப்பிற்கு அழைத்துச் சென்று 21 நாட்கள் அங்கு வைத்திருந்தனர்.



அவ்வாறு சட்ட விரோத காவலில் நான் வைக்கப்பட்டிருந்தபோது என் கைகளை பின்புறமாக கட்டி நீண்ட கயிற்றால் விட்டத்தில் உள்ள உருளையில் மாட்டி மேல் நோக்கி இழுத்து சுய நினைவை இழக்கும்வரை அடித்தனர். கண், காது, மூக்கு, மார்பு மற்றும் உயிர் தளத்தில் கிளிப் மாட்டி மக்கர் பாக்ஸை சுற்றி அதன்மூலம் மின் அதிர்ச்சி கொடுத்தனர். படுக்க வைத்து கால்களின் மீது உலக் கையை வைத்து இரண்டு பேர் ஏறி நின்று உருட்டினர். ஆனால் இவ்வளவு சித்திரவதைகளையும் ஏன் செய்தார்கள் என்றே எனக்குத் தெரியவில்லை. அவ்வாறு சித்திரவதை செய்ததால் எனக்கு நரம்புத் தளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

என்னை சட்டவிரோதமாக காவல்நிலையத்தில் வைத்திருந்தபோது யாரையும் பார்க்க அனுமதிக்கவில்லை. கைது செய்ததிலிருந்து 21 நாட்களுக்குப் பிறகு கர்நாடகா சிறப்புக் காவல் படையைச் சேர்ந்த அதிகாரி முசலையா என் மீது தடா வழக்கு பதிவு செய்தார். 14.06.93 அன்று மைசூர் மத்திய சிறையில் அடைத்துவிட்டனர். சிறைக்கு வந்ததும் 15 நாட்கள் கழிந்து மைசூர் வழக்கறிஞர் டி.எச். கௌடா, சென்னை வழக்கறிஞர் இளங்கோ மற்றும் சில உறவினர்களிடம் பணம் பெற்றுக்கொண்டு என்னைப் பார்க்க அனுமதித்தனர். மைசூர் மத்தியச் சிறையில்தான் சிறை மருத்துவர் என்னை பரிசோதித்து மருந்து கொடுத்தார். இவ்வாறு 14.06.93லிருந்து 1997 மே மாதம் வரை மூன்று வருடம் 5 மாதம் 11 நாட்கள் சிறையில் இருந்தேன். பிணையில் வந்தபிறகும் நீதிமன்ற உத்தரவின்படி மாதேஸ்வரமலையில் தங்கியிருந்து ஞாயிற்றுக்கிழமை தோறும் காவல்நிலையத்தில் கையெழுத்திட்டு வருகிறேன். அதனால் எனது வியாபாரத் தொழிலை செய்ய முடியாமலும், என் மனைவியைப் பிரிந்தும் அல்லல்படுகிறேன்.

மேற்படி நிபந்தனைகளை தளர்த்தக்கோரி மைசூர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு நிராகரிக்கப்பட்டுவிட்டது.

எங்கள் மீதான குற்றப்பத்திரிக்கையும் எங்களுக்குத் தெரிந்த தமிழ் மொழியில் தரப்படவில்லை. கன்னடத்தில் அமைந்துள்ள அக்குற்றப்பத்திரிக்கையின் நகல் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக தராமல் சில வழக்கறிஞர்களுக்கு மட்டுமே தரப்பட்டுள்ளது. எனவே எங்கள் மீது வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து நீதிபதி விசாரித்தபொழுது எங்களால் சரியான பதில் தர இயலவில்லை.

மேலும் மேற்படி போலீஸ்காரர்கள் அவ்வப்பொழுது எங்கள் ஊருக்கு வந்து என்போன்று சித்திரவதை செய்யப்பட்ட பலரை இன்னும் மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கிடையில் எங்களின் நிலையறிந்து கடந்த மார்ச் 99ம்மாதம் மதுரை மற்றும் பெங்களூரைச் சேர்ந்த மனித உரிமை அமைப்புகளின் வழக்கறிஞர்களும் மற்றும் பல பத்திரிக்கையாளர் களும் எங்களை சந்தித்து எங்களுக்கு நடந்த கொடுமைகள் குறித்து சட்டப்பூர்வமாக உதவி செய்வதாகக் கூறி நடந்தவைகளை எங்களிடம் கேட்டனர். நானும் அவர்களிடம் எனக்கு நடந்தவைகளை கூறினேன். அவர்கள் சென்ற பின்பு மேற்படி போலீஸ்காரர்கள் எங்களிடம் வந்து நாங்கள் கூறியும் பத்திரிக்கையாளர்களிடமும், வழக்கறிஞர்களிடமும் கூறுகிறீர்களா? திரும்பவும் அடிபடாமல் இருக்க வேண்டுமென்றால் இனி யாரிடமும் கூறக்கூடாது என்று மிரட்டிவிட்டுச் சென்றுவிட்டனர். மேலும், நான் ஒவ்வொரு முறை காவல் நிலையத்திற்கு கையெழுத்திடச் செல்லும்போது மேற்படி போலீசார்கள் 'என்னடா மறுபடியும் ஏதோ எங்கள் மீது வழக்கறிஞர்களிடம் கூறி வழக்குப் போடப் போறீங்களாம்ல, அடிபட்டது ஞாபகமில்லையா, மறுபடியும் உங்கள வழக்குல சேக்கனுமா, ஜாக்கிரதையா இரு, யாரிடமாவது இனிமே பேசின நிச்சயம் உன்னைப் பிடிச்சு அடிச்சே கொன்னுருவோம் என்று மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள். எங்களுக்கு உதவி செய்ய வந்த வழக்கறிஞர்களிடம் எங்களுக்கு ஏற்பட்ட கொடுமைகளுக்காக சட்டப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென விரும்பி நாங்கள் அனைவரும் ஒன்றுகூடி பேசி 27.4.99 அன்று குளத்தூரில் ஒரு மாநாடு நடத்தி அம்மாநாட்டிற்கு மேற்படி வழக்கறிஞர்களையும், பல கட்சிகளைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களையும் அழைத்து அவர்களிடம் எங்களுடைய பிரச்சனைகளைக் கூறுவது என்று தீர்மானித்தோம். இதை அறிந்த மேற்படி போலீஸ்காரர்களும் உள்ளூர் காவல் நிலையத்தைச் சேர்ந்த போலீஸ்காரர்களும் இம்மாநாட்டுப் பணிகளைக் கவனித்துக் கொண்டிருந்த எங்களது தலைவர்களைக் கூப்பிட்டு மாநாடு நடத்தக் கூடாது என்று மிரட்டியும் மேற்படி மாநாட்டில் யாரும் கலந்து கொள்ளக் கூடாது, மீறினால் இதன் விளைவுகள் கடுமையாக இருக்கும் என்றும் மிரட்டிவிட்டுச் சென்றனர்.

**ஓவியங்கள் : மருது**



படிப்பகம்

www.padippakam.com

# குமரிக் கண்டம் – லெமூரியா குழப்பம்

சு. கி. ஜெயகரன்

இன்றைய தமிழகத்தின் தெற்கே, பல்லாண்டுகளுக்கு முன் குமரி எனும் நில நீட்சி இருந்ததாகவும், பின்னர் ஏற்பட்ட கடற்கோள்களால் இந்நிலப்பரப்பு கடலில் மூழ்கியதாகக் கூறும் மரபு தமிழர்களிடையே உள்ளது. கர்ண பரம்பரை கதைகள், வாய்மொழி இலக்கியம், வெகுசில சங்க இலக்கியக் குறிப்புகள், அவற்றிற்கு உரையெழுதியவர்கள் கூற்று என இம்மரபின் தோற்றுவாய்களை வகைப்படுத்தலாம். இம்மரபின்படி தமிழ் பழங்கதைகள் கூறும் தென் கண்டத்தில் பத்தாயிரம் ஆண்டுகட்கு முன்னர் தமிழ்ச் சங்கங்கள் தோன்றின. இதன் தலைநகரான தென் மதுரை கடலில் மூழ்கி அழிந்தது என்று கூறப்படுகிறது.

மேலும் ஒருசாரார் குமரிக்கண்டமே தமிழரின் தாயகம். அது மூழ்கியபோது தப்பியவர்களே சிந்துவெளி நாகரிகம் மட்டுமன்றி, சுமேரிய, எகிப்திய, பாபிலோனிய நாகரிகங்களையும் உருவாக்கினர் என நம்புகின்றனர். குமரிக்கண்டம் கருத்தாக்கத்தின் ஆதரவாளர், கடலில் மூழ்கிய நிலப்பரப்பே ஆதிமனிதத் தோற்றம் நிகழ்ந்த லெமூரியா எனும் பழங்கண்டம், இதுவே தமிழர்களின் தாயகம் எனவும் வாதிடுகின்றனர்.

இவற்றிற்கான அறிவியல் ஆதாரங்கள்தான் என்ன? இன்றைய தமிழகத்தின் தெற்கே 'கண்டம்' என்று நாம் அறியும் விதத்தில் ஒரு நிலப்பரப்பு இருந்ததா? இதை ஆராயாமல் அது கடலுக்குள் மூழ்கிவிட்டது எனும் பதில், உண்மையில் விளக்கத்தை அளிக்காமல் மூடி மறைந்துவிடுகிறது என்றே கூறலாம்.

கண்டம் போன்ற ஒரு பெரும் நிலப்பரப்பு கடலில் மூழ்கியிருந்தால், அது கடலின் அடியில்தானே இருக்கவேண்டும். முன்பு கற்பனை செய்தும் பார்த்திருக்க முடியாத விதத்தில் கடலியல் ஆய்வு கடலின் அடித்தளம் பற்றிய நம் அறிவைப் பெருக்கியுள்ளது. கடந்த ஐம்பது ஆண்டுகளில் மானிடவியல், புவியியல், கடலியல் போன்ற துறைகளில் ஏற்பட்ட அறிவியல் மேம்பாடு புதிய கண்டுபிடிப்புகளையும், ஆய்வு உபகரணங்களையும் தந்துள்ள நிலையில் இம்மரபு பற்றி மறுபரிசீலனை செய்வது அவசியம்.

கடந்த நூற்றாண்டில் மறைந்த கண்டத்தின் மரபை விளக்க வந்தவர்கள், மரபையே அடித்தளம் ஆக்கி குமரிக்கண்டம் கருத்தாக்கத்தை அறிவியல் ஆதாரம் எனும் அஸ்திவாரம் இல்லாத கோபுரமாக உருவாக்கினர். தமிழரின் தொன்மையை விளக்க இதன் கால கட்டம் மிகைப்படுத்தப்பட்டது. தமிழன், தமிழ் மொழி சார்ந்த கலாசாரத்தின் தொன்மையை மறுக்கவியலாது. ஆனால் தமிழரின் தொன்மையைக் கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திற்குக் கொண்டு செல்வது அறிவியலுக்கு முரண்பட்டது.

மறைந்த கண்டம் மரபின் ஆதரவாளர், கடல் கொண்ட நிலப்பரப்பு பற்றி எழுதும் போது குமரிக் கண்டம் - லெமூரிய அல்லது 'மு' எனும் நிலப்பரப்பு - கோண்டுவானக்கண்டம் எனும் வார்த்தைகளை, மூன்றும் ஒரே நிலப்பரப்பைக் குறிப்பதாக எண்ணி மாற்றி மாற்றி உபயோகிக்க குழப்பம் உருவானது. இவை மூன்றும் தனித்தனியானவை, காலத்தாலும் உருவாக்கத்தாலும் முற்றிலும் மாறுபட்டவை என்பதைச் சுட்டிக் காட்ட வேண்டிய அவசியம் உள்ளது.

கோண்டுவானக் கண்டம் : இந்தியா, ஆஸ்திரேலியா, தென்துருவம், தெற்கு அமெரிக்கா, ஆப்பிரிக்கா மற்றும் மடகாஸ்கர் அனைத்தும் அடங்கிய ஆதிக்கண்டம் பெர்மோ - கார்பானிஃபரஸ் காலத்தில் (இன்றைக்கும் 27 - 35 கோடி ஆண்டுகளுக்கு முன்னர்) இருந்தது. 19ம் நூற்றாண்டின் இறுதியில் எடுவார்ட் சூயஸ் (Edward Suess) எனும் ஆய்வாளர் பூமத்திய ரேகையின் தெற்குப் பகுதியில் உள்ள நிலப்பரப்புகளில் காணப்படும் படிவங்கள், பாறைகள் ஆகியவற்றில் காணப்படும் ஒற்றுமைகளைக் கண்டு இவை ஒருகாலத்தில் பிளவுபடாத கண்டமாக இருந்திருக்கவேண்டும் என்று கண்டுபிடித்தார். இந்த ஆதிக்கண்டத்திற்கு, மத்திய இந்தியாவில் வாழும் 'கோண்ட்' எனும் பழங்குடியினர் பெயர் கொடுக்கப்பட்டது. இக்கண்டம் பிளந்து, நகர்ந்து இன்றைய நிலையை அடைந்ததற்கு வெகுவான, அசைக்க முடியாத அறிவியல் ஆதாரங்கள் உள்ளன. சுமார் மூன்று கோடி ஆண்டுகளுக்குமுன் கண்டங்கள் ஓரளவு இன்றுள்ள நிலையை அடைந்தன. கண்டங்கள் நகர்ந்தபோது ஆதிமனிதயினம் தோன்றவில்லை என்பதை மனங்கொள்ள வேண்டும்.





படிப்பகம்

www.padippakam.com

ஐம்பதாயிரம் ஆண்டுகட்கு முன், ஆதிமனிதயினம் தோன்றியபின் ஏற்பட்ட கண்டங்களின் நகர்வு சில அடிகள் மட்டுமே. புவியியல் வரலாற்றில் ஆதிமனிதத் தோற்றம் அண்மையில் நிகழ்ந்த சம்பவம். எனவே மறைந்த கண்டம் பிளவுபட்டு நகர்ந்த போது ஆதிமனிதயினம் மிதப்புகள் மீது பயணித்துச் சென்றது என்பதில் உள்ள காலக்குழப்பம் தெளிவு. தமிழ் இலக்கியங்கள் குறிக்கும் நிலநீட்சிக்கும், கோண்டுவானா ஆதிக்கண்டத்திற்கும் எந்தவிதத்திலும் பந்தமில்லை.

பரிணாம வளர்வடைந்த ஆதி மனிதயினம் விவசாயம் செய்ய ஆரம்பித்து, குடியிருப்புகளை உருவாக்க ஆரம்பித்தகாலம் இன்றைக்குப் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் என்



பதை உலக அளவில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருளாய்வுகள் கணிக்கின்றன. கர்ண பரம்பரையாக வந்த பிரளயக் கதைகள், குடியிருப்புகள் உருவாகிய காலத்திற்குப்பின்னே ஏற்பட்ட பிரளயங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றன. தமிழ் இலக்கியக் குறிப்புகள் வரலாற்றுக் காலத்திலும், வரலாற்றுக்கும் சற்றே முற்பட்ட காலத்திலும் உண்டான கடற்கோள் பற்றிக் குறிப்பிடுகின்றன. பிரளயங்கள், கடற்கோள்கள் புவியியல் வரலாற்றில் அவ்வப்போது ஏற்பட்டவை. குமரிக்கண்ட மரபின் ஆதரவாளர், இவை பழந்தமிழகத்தை மட்டுமே சாடிய சாபக்கேடுகளாகச் சித்திரிக்கின்றனர். உண்மையில் கடற்கோள் மற்றும் பிரளயங்கள் பற்றி உலகம் முழுவதும் மரபுகள், கதைகள், புராணங்கள் உள்ளன.

ஆசியாவில்-இந்தியா, இலங்கை, பர்மா, திபெத், சீனா, பிலிப்பைன்ஸ் நாடுகளிலும், ஐரோப்பாவில்-கிரேக்க, ரோமானிய, வெல்ஷ், கெல்டிக், ஸ்கேண்டிநேவியன் புராணங்களிலும், அண்மைக் கிழக்கு நாடுகளிலும் - எகிப்திய, பெர்ஸியன், அஸிரியன், பேபிலோனியன், சேல்டியன், எபிரேய - யூதேய புராணங்களிலும், மத்திய தரைக் கடலைச் சுற்றியுள்ள நாட்டுப் புராணங்களிலும், அமெரிந்தியர் (செவ்விந்தியர்)களின் முன்னோர் பற்றிய கதைகளிலும், ஆஸ்திரேலியா பழங்குடியினர் (அபாரிஜினிகள்) ஆரம்பம் பற்றிய கதைகளிலும், ஆப்பிரிக்காவில் - கீன்யா, தன்சனியா, மொசாம்பிக், தென் ஆப்பிரிக்கா, கேமரூன், செனகால் போன்ற நாடுகளிலும் பிரளயங்கள் பற்றிக் கூறும் மரபுகள் உள்ளன.

உலக மக்கள் அனைவரும் ஒரு பெரிய கடற்கோள், பிரளயம் பற்றிக் கூறுகின்றனர். ஆகவே உலக மக்கள் அனைவரும் மத்திய இடம் ஒன்றிலிருந்து செல்லும் முன் இக்கடற்கோள் நிகழ்ந்திருக்க வேண்டும் என்பது ஒரு சாராரின் வாதம். இந்த வாதத்தின் அடுத்தபடி, அப்படி ஒரு இடத்தில் மானிடர் தோன்றி, நாகரிகம் அடைந்திருந்தால் அது மறைந்த கண்டம் ஒன்று ஆக இருந்திருக்க வேண்டும் என்பது. ஆனால் உலகம் முழுவதும் உள்ள கடற்கோள் அல்லது பிரளயங்கள் பற்றிய கதைகள் உண்மையில் மனித குலம் ஆரம்பித்தது முதல் உலகின் எங்கும் பல்வேறு இடங்களில், பல்வேறு கால கட்டங்களில் கடற்கோள்கள், பிரளயங்கள் ஏற்பட்டன என்பதைச் சுட்டிக் காண்பிக்கின்றன. பிரளயத்திற்குத் தப்பிப் பிழைத்த முன்னோர்களின் அனுபவங்களை, நினைவுகளைச் சுற்றி ஜோடிக்கப்பட்ட, உலகின் பல்வேறு இடங்களில் உருவாகிய மேற்கூறிய புராணங்கள் மற்றும் கதைகளில் ஒரு பொதுத் தன்மையை உணரலாம். சிலவற்றில் பிரளயம் ஏற்பட்டதற்கான காரணங்கள் பற்றியும் ஓரளவு அறிய வாய்ப்புகள் உள்ளன. மேலும் இவற்றால் அறியும் சில உண்மைகள் : உலகின் பல்வேறு பகுதிகளில், பல்வேறு கால கட்டங்களில், பலவிதமான காரணங்களால் பிரளயங்கள், கடற்கோள்கள் ஏற்பட்டுள்ளன. உதாரணமாக சில்லி நாட்டுக் கதை ஒன்று எரிமலை மற்றும் அதைச் சார்ந்து உண்டான நிலநடுக்கத்தால் ஏற்பட்ட கடற்கோள் பற்றிக் கூறுகிறது. அமெரிந்திய பிரளயக்கதை பனி உருகி கடல் மட்டம் உயர்ந்து, பிரளயம் உண்டான விவரத்தைக் கூறுகிறது. அமெரிக்காவில் ஆதி மனிதக் குடியேற்றம் பனிப்பரப்புகளில் எல்லைகளை ஒட்டி ஏற்பட்டது.

பிரளயக் கதைகள், பிரளயங்களுக்குத் தப்பித்தவர்களின் வழித் தோன்றல்கள், பல தலைமுறைகளாகக் கேட்ட கதைகள், மனு துவக்கம் நோவா ஈறாக, பிரளயம் ஏற்பட்ட போது மிதப்புகள் மீது ஏறி தப்பிப் பிழைத்து, உயரமான பகுதியை அடைந்து கரையிறங்கி பின், வம்ச விருத்தி செய்தனர் என்பது பிரளயக் கதைகளின் சாரம். இதில் ஆஸ்திரேலிய பழங்குடியினரின் (குல்லிபுல்) கதையில் தம் முன்னோர் உலகின் மத்திய பகுதியில் இருந்து வந்ததாகக் குறிப்பிடுவது ஒரு சுவாரஸ்யமான கதை. ஏனெனில் இன்றைய மானிடவியல் கண்டுபிடிப்புகள் இவர்கள் மேற்கிலிருந்து, ஆசியாவிலிருந்து வந்ததைக் குறிப்பிடுகின்றன.

லெமூரியா கருத்தாக்கம் : தமிழ் நாட்டில் சென்ற நூற்றாண்டில் நாற்பதுகள் துவக்கம் தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடும் நிலநீட்சியும் மறைந்த கண்டமாகக் கூறப்படும் லெமூரியாவும் ஒன்றே என்று வாதிடப்பட்டது. லெமூரியா - குமரிக்கண்டம் பற்றி அறிவியல் ஆய்வு போலத் தோற்றமளித்த நூல்கள், கட்டுரைகள் தமிழ் ஆர்வலர் பலரால் எழுதப்பட்டன. இக்கருத்தாக்கத்திற்கு பல மேனாட்டு ஆதரவாளர் இருந்தனர். மரபுகளையே ஆதாரமாக்கி எழுதியவர்கள் தம் வாதத்திற்கு வலிமை கூட்டும் வண்ணமாக மேனாட்டு அறிஞர் கூறியவற்றை மேற்கோள் காட்டும் பழக்கம் இருந்தது. மேற்கோள் காட்டப்படுபவர்களில் முதன்மையானவர் ஏர்னஸ்ட் ஹிக்கல் (Ernest Haeckel 1834-1919) எனும் ஜெர்மானிய உயிரியலார். இவர் கடவுளின் படைப்பால் உயிரினங்கள் தோன்றின என்று மதவாதிகள் போதித்ததை எதிர்க்கவும், தாம் உயிரியலார் என்ற நிலையிலும் டார்வினின் பரிணாம வளர்வு பற்றிய கோட்பாடுகளில் ஆர்வம் காட்டினார். ஜோடிக்கப்பட்ட ஆய்வுகளால் அறிவியல் உலகில் தன் நம்பகத் தன்மையை இழந்து விட்டாலும், சில சமுதாய, இன ஆதாயங்களுக்காக ஜெர்மானியர் இவரது விளக்கங்களை வரவேற்றனர். 'பிரயோகிக்கப்படும் உயிரியலே அரசியல்' எனும் இவரது கூற்றையும், இனவெறி, தேசப்பற்று மற்றும் சமுதாய டார்வினிஸம் (Social Darwinism) எனும் கோட்பாடுகளை நாஸி இனவெறியர் ஆரிய (வெள்ளைக்கார) இனம் மற்ற இனங்களைவிட மேலானது என நிரூபிக்க உபயோகித்



படிப்பகம்

www.padippakam.com

தார். சரி, லெமூரியா என்ற பெயர் எப்படி வந்தது? குரங்கு வகையைச் சேர்ந்த லெமூர் (lemur) எனும் விலங்கு பரிணாமப்படியில் ப்ரோமிசியன் (Promisian) எனும் உட்பிரிவைச் சார்ந்தது. லெமூர்கள் இன்று ஆப்பிரிக்காவின் தென்கிழக்கேயுள்ள மடகாஸ்கர் தீவிலும், அதின் அருகிலுள்ள கொமோரோஸ் (Comoros) தீவுகளில் மட்டுமே காணப்படுகின்றன. ப்ரோமிசியன் பிரிவிலுள்ள இதர விலங்குகளான தேவாங்கு இந்தியா உட்பட தென்கிழக்கு ஆசியநாடுகளிலும் போட்டோஸ் (Pottos) மற்றும் கலகாஸ் (Galagos) விலங்குகள் ஆப்பிரிக்காவிலும் வாழ்கின்றன. லெமூரின் உறவுவகை (பிரோமிசியன்) குரங்குகள் பரவியிருக்கும் விதத்தால், ஒரு காலத்தில் ஆப்பிரிக்கா, மடகாஸ்கர், இந்தியா, மலேஷியா ஆகியவற்றை இணைத்த நிலப்பாலங்கள் இருந்திருக்க வேண்டும் என்றார் ஹிக்கல். அத்தோடு நிற்காமல் அழிந்துபோன இந்த நிலப்பாலங்கள் இருந்த பகுதியில்தான் ஆதிமனிதன் தோன்றியிருக்க வேண்டும் என்று அறிக்கை விடுத்தார். தான் கூறியதை வலுப்படுத்த புள்ளி விபரங்களோ, அறிவியல் ஆதாரங்களோ இல்லாமல் ஹிக்கல் கூறியதைத் தொடர்ந்து ஃபிலிப் ஸ்கேலடர் என்ற ஆங்கிலேயர் இந்தியாவிற்கும் மடகாஸ்கருக்கும் இடையே இந்துமகா சமுத்திரத்தில் 'இருந்திருக்கக்கூடும்' எனக் கருதப்பட்ட நிலப்பாலத்தை 'லெமூரியா' எனக் குறிப்பிட்டார். எவரும் மறுப்புத் தெரிவிக்காத நிலையில் பலவீனமான ஒரு யூகம் மெதுவாக வேரூன்ற ஆரம்பித்தது. இது நடந்தது அறிவியல் உலகில் ஒரு முக்கியமான காலகட்டம் - டார்வினின் உயிரினங்களின் தோற்றம் பற்றிய விளக்கம் வந்த காலம். ஆனால் இது கண்டங்களின் பெயர்ச்சி பற்றிய விளக்கங்கள் வருவதற்கு முற்பட்ட காலம்; கண்டங்களின் பெயர்ச்சியினால் ஏற்பட்ட, பாறைகள், படிவங்கள் மற்றும் விலங்குகள், தாவரங்கள் ஆகியவற்றில் கண்ட ஒற்றுமைகளுக்கு விளக்கம் தேடிக்கொண்டிருந்த காலம். அன்றைய ஆய்வாளர்கள், அன்றைய அறிவியல் உலகு அறிந்தவற்றை மட்டுமே வைத்து விளக்கங்கள் தேடிக் கொண்டிருந்த காலம் அது. பல்வேறு கண்டங்களில் இருந்த விலங்குகள், தாவரங்கள் ஆகியவற்றில் இருந்த ஒற்றுமைகளை விளக்க, 'நிலப் பாலங்கள்' என்ற கோட்பாடு உருவாயிற்று. பின்னரே கண்டங்களின் பெயர்ச்சி பற்றி விளக்கப்பட்டது. இதனால் பல கண்டங்களில் உள்ள புவியியல் அமைப்பு, உயிரினங்களில்



காணப்படும் ஒற்றுமைகள் பற்றி தெளிவேற்பட்டது. 'நிலப்பாலம்' கோட்பாடு இன்றைய கண்டுபிடிப்புகளால் ஆதாரமற்ற கோட்பாடு என்பது உறுதியானது.

மறைந்துவிட்டதாக கருதப்படும் லெமூரியா, அட்லாண்டிஸ் எனும் கண்டங்கள் பற்றி பிரம்மஞான சபையினர் (Theosophical society) முதலில் எழுத ஆரம்பித்தனர். பிரம்மஞான சபை ஹெலினா ப்ளவாட்ஸ்கி எனும் (Helena Blavatsky) இரஷியப் பெண்மணியால் *1875*இல் நியூயார்க்கில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தியா, சீனா, திபெத், போன்ற கிழக்கத்திய நாடுகளில் போற்றப்பட்ட மரபுத் தத்துவங்கள், வாழ்க்கை நெறி ஆகியவற்றின் கதம்பமாக பிரம்மஞான சபையின் கோட்பாடுகள் உருவாகின. ப்ளவாட்ஸ்கி *1888*ல் தாம் எழுதிய *1500*க்கும் மேற்பட்ட பக்கங்கள் கொண்ட நூலில் பிரபஞ்சம், உலகம் அதில் மனிதனின் தோற்றம் பற்றி எழுதினார். ப்ளவாட்ஸ்கியின் எழுத்துக்கள், கொள்கைகள் சர்ச்சைக்குள்ளானவை. இவருக்குப்பின் பிரம்ம ஞான சபையினர், ஸ்க்லேடர் உருவாக்கிய 'லெமூரியா' எனும் பதத்தை தாராளமாகப் பிரயோகித்தனர்.

ஆப்பிரிக்கா, ஆசியா, பசிஃபிக் மற்றும் இந்துமகாக்கடல் வரை பரவியிருந்ததாக இவர்கள் நம்பிய நிலப்பரப்பைக் குறிக்க லெமூரியா என்ற பதத்தைப் பயன்படுத்தினர். இவர்களில் ஒருவர்தான், குமரிக்கண்டம் கருத்தாக்க ஆர்வலர்கள் அடிக்கடி மேற்கோள் காட்டும் ஸ்காட் எலியட் (Scott Eliot). இவர் *1925*இல் எழுதிய மறைந்த கண்டங்களாகக் கருதப்படும் அட்லாண்டிஸ் மற்றும் லெமூரியா (The story of Atlantis and lost Lemuria) என்ற நூலில் மனித இனத்தின் ஐந்து மில்லியன் ஆண்டு வரலாற்றை எழுத முயற்சி செய்யப்பட்டுள்ளது. மனித குலம் தோன்றியே ஒன்றரை மில்லியன் ஆண்டுகள் தான் ஆயின என்பதை அறியும்போது, எலியட் கூற்று ஆதாரமற்றது என்பது விளங்கும். இந்நூலுக்கான தகவல்களை இவர் ஞான திருஷ்டியால் பெற்றதாகக் கூறப்படுகிறது என்பதால், இவர் கூற்றுக்களை அறிவியல் ஆதாரங்களாக எடுத்துக்கொள்ள வியலாது. இவர் எழுதிய பலவற்றை ஜீரணிக்கவே முடியாது. எடுத்துக் காட்டாக, லெமூரியாவில் வாழ்ந்தவர்கள் முதலில் நுங்கு போன்ற வடிவற்ற உடலையும் பின்னர் திடமான உருவையும் பெற்றனர் என்பதும், *4.5* மீட்டர் உயரம் கொண்டவர்கள், இவர்களது கண்களுக்கு இடையே அகன்ற இடைவெளி இருந்தது என்பதும், அவர்களின் காதுகள் பிற்புறமாக அமைந்திருந்தது என்பதும், அவர்கள் இன்றைய மனிதர் போலத் தோற்றமளிக்கவில்லை என்பதும். லெமூரியா ஆதரவாளர்கள், இவை பற்றியெல்லாம் கூறாமல் 'ஸ்காட் எலியட், தெற்கில் ஒரு பெரும் நிலப்பரப்பு இருந்ததாகக் கூறினார்' என்று மட்டும் கூறிவிடுகின்றனர். இவ்வாறு தான் அறிவியல் பதங்களை பிரயோகித்து, ஆய்வுக்கட்டுரைகள் போன்று தோற்றமளிக்கும் ஆனால் அறிவியல் ஆதாரமற்ற, படைப்புகளை உருவாக்கும் மரபு ஆரம்பிக்கப்பட்டது எனலாம். *1800*களில் உருவாக்கப்பட்ட மரபுகள் யூகங்கள், ஹேஷ்யங்கள் ஆகியவற்றின் அடிப்படையில், ஸ்காட் எலியட் விளக்கியவற்றை *1920* துவக்கம், ஆய்வாளர் சிலர் அறிவியல் ஆதாரமற்றவை என நிரூபித்தனர். லெமூரியா கருத்தாக்கம் வெள்ளைக்கார (ஆரிய) இனம் உலகத்திலுள்ள அனைத்து இனங்களிலும் உயர்ந்தது என்பதை வலியுறுத்த வெள்ளைக்காரர்களால் உருவாக்கப்பட்டது. இக்கருத்தாக்கத்தின்படி லெமூரியன் ஆரிய இனத்தைவிட பரிணாம வளர்வில் தாழ்ந்தவன். தமிழனின் தொன்மையை உணர்த்த இக்கருத்தாக்கத்தைப் பிரயோகித்தவர் இவற்றை உணராமல் பிரயோகித்தனர். லெமூரியாக் கண்டம் பற்றிய மரபு உருவாகிய காலகட்டத்தில், அக்கருத்தாக்கத்தின், ஆதரவாளர்களின் கூற்றுகளுக்கு யாரும் முறையாக மறுப்புக் கூறவில்லை. தமிழரின் தொன்மையை போற்றும் இம்மரபின் நம்பகத்தன்மை, ஆதாரங்கள் பற்றிக் கேள்வியெழுப்பியோர் குரல்கள் எதிர்கொள்ளப்படாமலேயே போய்விட்டன. மேலும் வரலாற்று ரீதியான விவாதமோ, பரிசீலனையோ இல்லாது போய்விட்டது. குமரி/லெமூரியா கண்ட கருதுகோள் பற்றி நாற்பதுகள் துவக்கம் பலர் எழுதினர்.



படிப்பகம்

www.padippakam.com

பெரும்பாலோர் இக்கருத்தின் ஆதர வாளர்கள். இவர்கள் வலியுறுத்திய சில கருத்துக்கள் பின் வந்த கட்டுரை யாளர்களால் மேற்கோளாகக் காட்டப் படுகின்றன. இந்த விளக்கங்களில் ஒருவிதமான கவித்துவ சுதந்திரத்தைக் காணலாம்.

பன்மொழிப் புலவர் அப்பாத் துரை எழுதிய குமரிக் கண்டம் அல் லது கடல் கொண்ட தென்னாடு *(1941)* நூலில் லெமூரியாக் கண்டம் பற்றி அதன் நில அமைப்பு, அதில் வாழ்ந்த உயிரினம், மக்கள் பற்றிய விவரங்களைத் தருகிறார். "இலெமூ ரியாக் கண்டத்தில் கிழக்குப் பகுதி யின் மேல்பகுதியில் சில உயர்ந்த மலைகளே இன்று பஸிபிக் கடலின் தீவுகளாகியிருக்கின்றன. எரிமலை களும், நில அதிர்ச்சியும் அக்கண்ட முழுமையும் என்றும் குலுக்கிக் கொண்டே இருந்தன. இலெமூரிய வாழ்க்கைக்காலம் நடுக்கற்காலமா கும். உள்நாட்டுச் சதுப்பு நிலங்களி லும், கடற்கரையோரங்களிலும் டினோஸார்கள் வாழ்ந்தன. ஊன் வெறியால் அவை உறுமும் பொழு தும், மரஞ் செடி கொடிகளை நெரித்து அவை நடக்கும் அரவம் கேட்கும் போதும் இலெமூரிய மக்கள் கவலை யும், முன்னெச்சரிக்கையும் கொள் வர். இலெமூரிய மக்கள் தற்கால மக்களைவிட நெட்டையானவர். ஆற டிக்கு மேற்பட்டு ஏழடி வரையிலும் அவர்கள் உயர்ந்திருந்தனர். உடலின் எடை *160-200* கல் என்று கூறப்படு கிறது." மேற்கூறிய தகவல்கள் அறி வியல் ஆதாரமற்றவை என்பது தெளிவு. இதில் முக்கியமான குழப் பம் டினோசர்களையும் ஆதி மனித யினத்தையும் சமகாலத்தவராக்கி யது. டினோசர்கள் அழிந்து பல்லா யிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்னரே மனித இனம் தோன்றியது என்பது நாமறிந்த அறிவியல் தகவல்.

இலக்கியம் மற்றும் லெமூரி யாகக் கருதுகோள் பற்றி பிரம்மஞான சபையினர் கூறியவற்றை ஆதார மாகக் கொண்டு குமரிக்கண்டம் எப் படி இருந்திருக்கும் என்று பன் மொழிப்புலவர் அப்பாத்துரை ஒரு வரைபடம் உருவாக்கினார். இதையே இவருக்குப்பின் வந்த குமரிக் கண்ட மாயின் ஆதரவாளர், வரைப்படம் அதின் ஆதாரங்கள் பற்றிக் கேள்வி கள் ஏதும் கேட்காமல் தம் கருத்தை வலியுறுத்த பயன்படுத்தினர். தமி ழரின் தொன்மையை வலியுறுத்து மாறு குமரிக் கண்டம் கருதுகோள் உபயோகப்படுத்தப்பட்டது. குமரிக் கண்டத்தின் நிலப்படங்கள் தயா ரிக்கப்பட்டன.

குமரி எனும் நிலநீட்சி பற்றிய இலக்கியக் குறிப்புகள் : லெமூரியா கருத்தாக்கம் ஒரு காலகட்டத்தில், சங்க நூல்கள் குறிக்கும் நிலமாட்சி யுடன் சம்பந்தப்படுத்தப்பட்டது. இது பற்றி ஜோசப் எனும் வரலாற்று ஆய் வாளர் கூறுவதாவது

"தமிழர்களிடையே தம் முன் னோர்கள் கடலால் அழிந்து போன கண்டத்தைச் சேர்ந்தவர் கள் என்ற ஆழ்ந்த பாரம்பரியம் ஒன்று உள்ளது. இந்த மரபு மறைந்த கண்டத்திலிருந்த நாடு கள், அங்கு பாய்ந்த ஆறுகள், இருந்த மலைகள், அவ்வப்போது கடலில் மறைந்த பகுதிகள் பற்றி யும் கூறுகிறது. கி. பி. பத்தாம் நூற்றாண்டுக்குப் பின், தமிழ் காவியங்களுக்கு உரையெழுதிய வர்களால் உருவாக்கப்பட்ட சம் பிரதாயம் இது. இது பற்றி முதல் விளக்கம், நக்கீரர் தன் இறைய னார் அகப்பொருளுரையில் அளித் தது. பின் வந்த நச்சினார்க்கினி யார் மற்றும் அடியார்க்கு நல் லார் போன்ற புலவோரும் அதே சம்பிரதாயத்தைப் பின்பற்றினர். இந்த மரபை புராணக்கதை யென்று நாளாவட்டத்தில் வலு வடைந்ததாக எண்ணி ஒதுக்கி விடவும் முடியாது, அப்படியே உண்மை எனவும் ஒத்துக் கொள்ள வும் முடியாது. எப்படியிருந்தா லும், அன்றிருந்த நிலத்தின் ஒரு பகுதியை கடல் கொண்டது இந்த மரபின் சாரம். இந்த மர பிற்கு ஹிக்கல் மற்றும் டோபி னார்ட் போன்ற விஞ்ஞானிகள் ஆதரவு தந்தனர். ஹோல்டர் னஸ் மற்றும் ஸ்காட் எலியட் போன்ற எழுத்தாளர்களும் குறிப் பிட்டுள்ளனர். மறைந்த லெமூ ரியா பற்றிய கருத்தாக்கம், கடல் கோள் விழுங்கிய தமிழ்ச் சங்கம் இருந்த நிலப்பரப்பு பற்றிய மரபு, ஆகிய இருவேறு கருத்தாக்கங் கள் பற்றி ஒரு பெரும் குழப்பம் நிலவுகிறது. சங்கப் பாடல்கள் குறிப்புகளிலிருந்து உருவாகிய இம்மரபு, கி. பி. பத்தாம் நூற் றாண்டிற்குப் பிறகே, சங்கப் பாடல்களுக்கு உரையெழுதியவர் களால் உருவாக்கப்பட்டது. இந்த இரு மரபுகளும் கூறுகின்ற நிகழ்ச்சிகளுக்கு எந்த காலத்தி லும் எந்தவிதமான சம்பந்தமும் இருந்திருக்க முடியாது. இந்தியா விற்கும் தெற்கே இருந்ததாக சொல்லப்படும் நிலப்பரப்பு பழங் கற்காலத்தில் அழிந்தது என் றால், சங்கத்தை அழித்த கடற் கோளின் காலத்துடன் அந் நிகழ்வை ஒப்பிட்டால் பின்னது அண்மையில் நடந்ததே என்று கூறவேண்டும் (Joseph.P, Lemuria - Fresh Evidence, pages 121-130)."



லெமூரியா மரபு குறிக்கும் நிலப்பரப் பும், சங்க நூல்கள் குறிக்கும் கடற் கோள் கொண்ட நிலப்பரப்பும் வேறு வேறு என்பதும், இவையிரண்டிற் கும் எந்த சம்பந்தங்களும் கிடை யாது என்பதும் இவ்விளக்கத்தின் சாரம். சரி, அப்படித்தான் சங்க இலக்கியங்கள் கடல் கொண்ட நில நீட்சி பற்றி என்ன கூறுகின்றன?

தமிழகத்தின் தென்பகுதியிலி ருந்த நிலப்பரப்பை கடல் கொண்ட தாக சில சங்க இலக்கியப் பாடல் கள் கூறுகின்றன. மரபு வழிச் செய்தி யோடு, தமிழ் வளர்த்த தலைச்சங் கம் இடைச்சங்கம் இரண்டும், கடற் கோளால் அழிந்ததாகக் கூறப்படுவ தால், இந்நிகழ்வுகள் இலக்கிய வர லாற்றுடன் இணைந்துள்ளன. சங்கப் புலவர்கள் எழுதியவற்றிற்குப் பின்னர் (கி. பி. 10ம் நூற்றாண்டில்) உரை யெழுதியவர்கள் - நக்கீரரின் இறைய னார் அகப்பொருளுரை தொடக்கம் நச்சினார்க்கினியார், அடியார்க்கு நல் லார் முடிய, அனைவரும் இதே மரபைப் பின்பற்றினர். இலக்கியக் குறிப்புகளாலும், அவற்றிற்கு உரை காரர் கூறியவற்றால் நாமறிவதின் சுருக்கம் வருமாறு.

குமரித் தெய்வத்தின் வழிபாடு காரணமாக இந்நிலப்பரப்பிற்கு 'குமரி' என்ற பெயர் வழங்கப்பட்டது. இப்பகுதியை ஆண்ட மன்னர்கள் பழ மையை உணர்த்தும் 'பண்டு' எனும் பதத்திலிருந்து உண்டான 'பாண்டி யன்' எனும் பெயரால் அழைக்கப்பட்



படிப்பகம்

www.padippakam.com

டனர். குமரிப் பரப்பின் வடகோடியில் இருந்த குமரி ஆற்றுக்கும் தென் கோடியில் இருந்த பஃறுளி ஆற்றுக்கும் இடைப்பட்ட பகுதி எழுநூறு காவதம் நீளமானது. இப்பகுதியில் ஏழ் தெங்க நாடு, ஏழ் குன்ற நாடு, ஏழ் குணகரை நாடு, ஏழ் குறும்பனை நாடு என்ற நாடுகளும் குமரி, கொல்லம் போன்ற பன் மலை நாடுகளும் இருந்தன என்று அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகின்றார். குமரியின் தென்பகுதியில் குமரிக்கோடு இருந்தது. பஃறுளியாறு ஓடியது. இந்தப் பகுதியை ஆண்ட பாண்டிய மன்னன், நெடியோன் பற்றி,

முந்நீர் விழாவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலிலும் பலவே

எனும் (புறநானூறு *9:10–11*) சங்கப் பாடலால் அறிகின்றோம்.

முந்நீர் விழாவெடுத்த நெடியோன் நல்ல நீரையுடைய பஃறுளியின் மணலைவிட பலவாண்டுகள் வாழ்க என்பதாகப் பொருள்படும். இப்பாடலில் முந்நீர்க் கடலையும், நன்நீர் என்பது, உவர்ப்பான கடல் நீரினும் வேறுபட்ட ஆற்று அல்லது ஊற்று நீரைக் குறிப்பிடுகிறது. பாண்டியன் நெடியோன், பஃறுளி ஆற்றிலிருந்து கால்வாய்கள் தோண்டி விவசாயம் செய்ததாகவும், மேலும் ஆடிவடிவம்பலம், பாண்டியன் ஜெயமாகீர்த்தி என்றும் அழைக்கப்பட்ட இந்தப் பாண்டிய மன்னன், அருகிலுள்ள ஒளிநாடு, பெருவளநாடு, குமரிநாடு, போன்ற நாடுகளையும் ஆண்டதாகவும் கூறப்படுகிறது.

தமிழ் வளர்த்த தலைச் சங்கம் இயங்கிய, அன்றைய பாண்டியனின் தலைநகரான தென் மதுரை உள்ளிட்ட குமரியின் தென்பரப்பை ஒரு கடற்கோள் கொண்டது. இதையே சங்க இலக்கியங்கள் குறிக்கும் முதற் கடற்கோள் எனலாம். பாண்டிய மன்னன் ஒருவன் இமயத்தையும், கங்கையையும் கைப்பற்றித் தான் கடற்கோளால் இழந்த குமரிமலைக்கும், பஃறுளியாற்றிற்கும் ஈடு செய்து கொண்டான் என்பதையே,

அடியிற் றன்னள வரசர்க் குணர்த்தி
வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலையடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி

என்று இளங்கோவடிகள் (சிலப்பதிகாரம் - காடுகாண் கதை *17 - 22*) பாடினார் என்பதாக தேவநேயப் பாவாணர் குறிப்பிடுகின்றார். குமரியின் தென்பகுதியைக் கடல் கொள்ள, சற்றே வடக்கேயிருந்த கபாடபுரத்தை தன் தலைநகராக்கினான் பாண்டிய மன்னன். இங்கு இடைச் சங்கம் நிறுவப்பட்டு இயங்கியது. கபாடபுரத்தின் இதரப் பெயர்கள் கபாடம், கதவம், புதவம், அலைவாய் என்பன. 'அலைவாய்' என்பது கடற்கரையில் அமைந்த ஊரைக் குறிப்பது. இந்தப் பகுதியை கடற்கோள் அழித்தது. இதையே இரண்டாம் கடற்கோள் எனலாம். இதற்குத் தப்பிய பாண்டிய மன்னன் தன் குடிகளைத் தான் கைப்பற்றிய சேர, சோழ நாட்டுப் பகுதிகளில் குடியமர்த்தினான். இதனையே முல்லைக் கலிப்பாடல் *(104:1-4)*



மலிதிரை யூர்ந்துதன் மண் கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியோடு வில் நீக்கிப் புகழ்பொறித்த கிழர் கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர் தென்னவன் . . .

எனக்குறிப்பதாக அடியார்க்கு நல்லார் தம் உரையில் சுட்டிக் காண்பிக்கிறார்.

மேலும் இறையனார் அகப்பொருளுரையில் அமைந்த முக்கழக வரலாறு, மேற்கூறிய இரண்டு கடற்கோள்கள் பற்றிக் கூறுகிறது. கபாடபுரத்தையும் கடல் கொள்ள, மேலும் வடக்கில், குமரியாற்றின் கரையிலிருந்த மணவூர், பாண்டியனின் தலைநகரமாகியது. தொல்காப்பியர் காலத்தில் (சுமார் கி. மு. ஆறாம் அல்லது ஏழாம் நூற்றாண்டில்) குமரியாறு தெற்கு நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. 'தடநீர்க்குமரி வடபெருங் கோட்டின் காறுங் கடல்கொண்டொழிதலால்', என்று அடியார்க்கு நல்லார் கூறுவது, குமரி ஆற்றை கடல் கொண்ட நிகழ்ச்சியைக் குறிப்பதாகக் கொள்ளப்பட்டால், இது இலக்கியம் குறிக்கும் மூன்றாவது கடற்கோள். இங்கு மாடல மறையோன் குமரியாற்றில் குளித்ததாகக் குறிப்பிடும் சிலப்பதிகாரக் கதையின் முடிவில், 'தொடியோள் பௌவமென' இளங்கோவடிகள் குமரியைக் கடலாகக் குறிப்பிடுவதை நோக்க வேண்டும். குமரியாற்றின் கரையிலிருந்த மணவூரைக் கடல் கொள்ள, பாண்டியன் வடக்கு வந்து வைகைக் கரையிலுள்ள மதுரையைத் தலைநகராக்கி அங்கு கடைச்சங்கத்தை நிறுவினான்.

இதில் முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவென்றால், இலக்கியங்கள் குறிப்பிடும் கடற்கோள்கள் வரலாற்றுக் காலத்திற்கும் வரலாற்றிற்கு சற்றே முற்பட்ட காலத்திலும் நிகழ்ந்தவை.

மேற்கண்ட இலக்கியக் குறிப்புகளில் குமரிக் கண்டம் என்ற வார்த்தை புலப்படாததைக் கவனிக்கவும். எனவே குமரி எனும் நிலப்பரப்பை, கண்டமாக்கியது மரபு ஒன்றை உருவாக்கியவர்களின் திசை திருப்பிய வேலை என்றே கூறலாம். குமரி என்று சங்கப் புலவோர் குறிப்பிடும் நில நீட்சி இன்று நாம் கண்டம் எனக்குறிப்பிடும் அளவுக்கு விரிந்த நிலப்பரப்பா? அவனி வகைகளை விளக்கும் பிங்கல நிகண்டுப் பாடலைக் (ச. அவனி வகை - 457) காண்க;

'பைதிர மண்டிலம் பாடி தேயந்
தண்ணடை நீவரங் கோட்டஞ்
சனபதஞ் சும்மை யகலுள்
கண்ட மேணியென்றின்ன வீராச்
சிய முலகு நாடெனப்'

என்னும் இப்பாடல் நாடு என்ற சொல்லுக்குள்ள இதர பெயர்களைக் கூறுகிறது. அவற்றில் ஒன்று கண்டம் என்பது. எனவே கண்டம் என்ற சொல் இன்று நாம் குறிக்கும் கண்டம் எனும் பெரும் நிலப்பரப்பைக் குறித்தது அன்று. எனவே பழங் காலத்தில் யாரேனும் கண்டம் எனும் சொல்லால் ஒரு நிலப்பரப்பைக் குறிப்பிட்டிருந்தால் அது ஒரு நாட்டையே குறித்திருக்கும்.

குமரிக் கண்டத்தில் இருந்ததாகக் கூறப்படும் நாடுகளையும் ஏழ் தெங்கம், ஏழ் மதுரை, ஏழ் முன் பாலை, ஏழ் பின் பாலை,



படிப்பகம்

www.padippakam.com

ஏழ் குன்றம், ஏழ் குணக்கரை, ஏழ் குறும்பனை என்ற பட்டியலில் இறையனார் உரைகாரர் கூறும் நாற்பத்தி ஒன்பது நாடுகளையும் இன்றைய வழக்கோடு இணைத்துப் பெரும்பரப்பினதாகக் கருதுதல் பிழை ... நாடு என்பது அன்றைய தமிழில் கிட்டத்தட்ட இன்றைய தாலுக்காவிற்குச் சமம். இடைக்காலக் கல்வெட்டுகள், தமிழ்ப் பேரரசுகள் - மண்டலம், நாடு எனப் பிரிக்கப்பட்டுள்ளதைக் காட்டுகின்றன. இப்பிரிவு இன்றைய மாவட் டம், வட்டத்திற்குச் சமம். எனவே நாற்பத்தொன்பது நாடுகள் என்று கேட்ட அளவில் மிக விரிந்த பரப்பு கடலுள் அழிந்தது என்று கருத முடிவதில்லை, நாற்பத்தொன்பது தாலுக்காக்கள் என்பதே கருத்து

என்பதாக அறவாணன் (தமிழரின் தாயகம், ப. 114) குறிப்பிடுகிறார். மேலும் உரைகாரர் கூற்றுப்படி குமரி ஆற்றுக்கும் பஃறுளி ஆற்றுக்கும் இடைப்பட்ட பகுதி எழுநூறு காவதம் நீளமானதாக குறிக்கப்படுகிறது. காவதம் என்பது ஏறத்தாழ பத்து மைல்களைக் குறிக்கும். எனவே எழுநூறு காவதம் என்பது ஏழாயிரம் மைல்களைக் (11,200 கி.மீ.) குறிக்கிறது. இன்றைய குமரி முனைக்கும் தென்துருவ்மான அண்டார்டிகாவிற்கும் இடைப்பட்ட தூரம், 5,300 மைல் (8,500 கி. மீ.). இப்படியிருக்க இந்தக் கடற்பகுதியில் எவ்வாறு ஏழாயிரம் மைல் நீளமான நிலப்பரப்பு இருந்திருக்க முடியும்? அடியார்க்கு நல்லாரின் மிகைப்படுத்தல் நரியைப் பரியாக்கின கதையாகும். சங்க இலக்கியங்களில் மேற்கூறிய சில, தமிழகத்தின் தெற்கேயிருந்த நிலப்பரப்பை கடல் கொண்டதாகக் கூறுகின்றன. கடல் கொண்ட நிலப்பரப்பு எவ்வளவு பெரியது, எப்போது கடலில் மூழ்கியது என்பது புவியியல், கடலியல் ஆய்வு முடிவுகளைப் பொருத்தே தீர்மானிக்கப்பட வேண்டும்.

குமரி எனும் நில நீட்சிப் பற்றிய ஆய்வு எளிதானது அல்ல. தமிழர்களின் வரலாற்றை ஆய்பவருக்கு உள்ள இடஞ்சல்களாக, அரிதாக உள்ள மூலவிவரங்கள், முட்டுக்கட்டைகளாக உள்ள புராணங்கள் மற்றும் மரபுகள் என சுப்பிரமணியம் எனும் வரலாற்று ஆய்வாளர் குறிப்பிடுகிறார். இவர் கூறுவதை முத்தாய்ப்பாகப் பார்க்கலாம்;

"புராணங்கள் தமிழருக்குப் புதியவை அல்ல. ஐதிகம் என்பது தெளிவற்ற பழம் நினைவுகள். நம்மவர் இவற்றைக் கேள்விகள் கேட்காமல் நம்புவர். தமிழ் நாட்டில் வரலாறு என்ற பெயரில் எழுதப்பட்ட நூல்களில், புராணம், பழங்கதை, பழம்பெருமை பிணைந்திருப்பது கண்கூடு. எது வரலாற்றுபூர்வமான உண்மை எனக் கேட்கப்படுவதில்லை. ஒரு விதமான சமுதாய பாரம்பரியம் ஐதிகம் மற்றும் மரபுகளைத் தமிழரின் மனதில் ஊன்ற வைத்துவிட்டது. நம்மவர்களின் ஞானத்தின் மேல் இருக்கும் மரபுகளின் பிடி சாமான்யமானதல்ல. மரபு, ஐதிகம் வெறும் கட்டுக்கதையென்றால் அதிகம் பாதிப்பில்லை. ஆனால் அதை வைத்து பழம் வரலாற்று நிகழ்வுகளைக் கற்பனையால் மிகைப்படுத்தினால் இடையூறு விளைகிறது. இம்மாதிரியான மரபுகளில் தலையானது, குமரி முனைக்குத் தெற்கே பாண்டிய மன்னர்களால் ஆளப்பட்ட கண்டம் இருந்ததாகக் கூறுவது. இது கடற்கோளால் அழிந்தது என்பதும், அதனால் அரசன் தன் தலை நகரை வடக்கே அமைத்தான் என்பதும், கடவுளர் மற்றும் அகத்தியர் இச்சங்கத்தின் அங்கத்தினர் என்றும் கூறும் மரபு, உண்மைக்கும், கட்டுக் கதைக்கும் இடைப்பட்டது" (The Tamils - Their History, Culture and Civilisation, pp. 25-27).

■

*அஞ்சலி*

## எஸ். சிவபாதசுந்தரம்

தமிழ் இலக்கியத்துக்கும் எழுத்துலகத்துக்கும் நவம்பர் 8ஆம் தேதி ஓர் இழப்பு ஏற்பட்டது. சுமார் 50 ஆண்டுகளாக தமிழுக்காகப் பாடுபட்ட, ஊக்கமும் உழைப்புத் திறனும் கொண்ட எஸ். சிவபாதசுந்தரம் தமது 88வது வயதில் லண்டனில் தமது மகளுடைய இல்லத்தில் காலமானார். சுமார் 12 ஆண்டுகளாக அவர் லண்டனில் வாழ்ந்து வந்தார்.



இலங்கையில் ஆகஸ்ட் 27, 1912ல் பிறந்த சிவபாத சுந்தரத்தின் இலக்கிய வாழ்வு இளம் வயதிலேயே தொடங்கிவிட்டது. மாணிக்க வாசகர், சேக்கிழார், புத்தர் ஆகியோரின் விரிவான வாழ்க்கையை புதிய கோணத்தில், அவர்களின் அடிச் சுவட்டில் பிரயாண நூற்களாக எழுதியிருக்கிறார்.

பிரிட்டிஷ் மியூஸியத்திற்கு தொடர்ந்து சென்ற அவர் தற்செயலாக அங்கு தமிழின் முதல் (கவிதை) நாவலான ஆதியூர் அவதானி சரித்திரத்தைக் கண்டுபிடித்தார். 1894ல் வெளிவந்த ஸ்ரீமத் ராமநாத ராஜாங்க மகோதியானம் என்ற பெரிய நூலையும் அதே நூலகத்திலிருந்து அவரால் எடுக்க முடிந்தது.

பெ. கோ. சுந்தரராஜன் (சிட்டி)யுடன் சுமார் நாற்பது ஆண்டுகளாக இணைந்து இலக்கிய பணியில் ஈடுபட்டிருந்தார். இலக்கிய உலகில் இரட்டையர்கள் என்றே இவர்கள் அறியப்பட்டனர். மதுரை பல்கலைக்கழகத்திற்காக 1960களில் தற்கால தமிழ் இலக்கியம்பற்றி ஆராய்ச்சி நடத்தினர். தமிழ் இலக்கியம், நாட்டார் இலக்கியம் பற்றிய நிறைய எழுதியிருந்தாலும், தமிழ் நாவல் நூறாண்டு வரலாறு போன்ற ஏராளமான விவரங்களும் கூர்மையான விமர்சன நோக்கும் கொண்ட நூற்களே அவர்களுக்கு பெருமை சேர்த்தன. "இலக்கியத்திலும் விமர்சனத்திலும் எங்கள் இருவருக்கும் ஒரேமாதிரி பார்வையும் கருத்தும் இருந்தன. ஒரு நேர்மையான சிறந்த சிந்தனாவாதி அவர். அவரது ஆழ்ந்த ஆராய்ச்சியும் தீவிரமான உழைப்பும் தமிழ் நாவல் மற்றும் சிறுகதை வளர்ச்சி பற்றிய நூற்களை நாங்கள் எழுத துணைபுரிந்தன. சுமார் அரை நூற்றாண்டு நிலவிய எங்கள் இலக்கிய பிணைப்பு ஒரு அபூர்வ இலக்கிய நிகழ்வுதான்" என்கிறார் அவர் நண்பர் சிட்டி (91).

சிவபாதசுந்தரம் இலங்கையில் தமிழ், சமஸ்கிருதம், லத்தீன் போன்ற மொழிகள் கற்றார். படிப்பு முடிந்து, ஈழ கேசரி பத்திரிகையில் ஆசிரியராக பணிபுரிந்தார். தமிழ்நாட்டிலிருந்து கு. ப. ரா., புதுமைப்பித்தன் போன்ற மணிக்கொடி எழுத்தாளர்களை ஈழகேசரியில் எழுத வைத்தார். 1940ல் சிலோன் வானொலியில் சேர்ந்தார். 1947ல் லண்டன் சென்று பி. பி. சி. தமிழோசை பிரிவில் பணியாற்றினார். எழுத்துப் பணியில் தீவிரமாக ஈடுபட 1952ல் இந்திய குடியுரிமை பெற்று தமிழ்நாடு வந்தார்.

ஒலிபரப்பு கலை பற்றிய அவரது நூல் புகழ்பெற்றது. தமிழக முதல்வர் திரு. அண்ணாதுரையின் இறுதி ஊர்வலத்தின் போது நிகழ்த்திய வானொலி நேர்முக வர்ணனை பலருக்கும் நினைவிருக்கும். 1970களில் பாரதிய வித்யா பவனில் இதழியல் கற்பித்து வந்தார்.

சிவபாதசுந்தரம் தமிழகத்தில் உரிய அங்கீகாரம் பெறாதது ஒரு முரண்நகை என்றே கூறலாம்.

கே. ஆர். ஏ. நரசய்யா எழுதிய கட்டுரையிலிருந்து

*நன்றி: The Hindu*, 3.12.2000

*தமிழில்:* எம். எஸ்.



படிப்பகம்

www.padippakam.com



# எட்டுத் திக்கும் மதயானை

ஆசிரியர் : *நாஞ்சில் நாடன்*
வெளியீடு : *விஜயா பதிப்பகம்,*
*20 ராஜவீதி*
*கோவை 641 001*
பக். *278;* விலை ரூ. *100;* (1998)

அரவிந்தன்

தன்னுடைய விருப்பத்திற்கோ தேர்வுக்கோ அதிக இடமின்றி வாழ்க்கையின் நெருக்கடிகளால் ஓட ஓட விரட்டப்படும் ஒரு இளைஞனின் ஊசலாட்டம் எட்டுத் திக்கும் மதயானை என்ற கதையாக விரிகிறது. கிராமிய வாழ்வில் வலுவாகத் தன் ஆட்சியை செலுத்திக்கொண்டிருக்கும் ஜாதிசார்ந்த அதிகார அமைப்பின் குரூரம் பூலிங்கத்தைக் கடுமையாகத் தண்டிக்கிறது. அதனால் உசுப்பப்பட்டு ஒரு குற்றத்தை செய்துவிட்டு ஊரைவிட்டு ஓடிப்போகிறான் பூலிங்கம். அதிலிருந்து துவங்கும் அவனது ஓட்டம் அவனை ஊர் ஊராக விரட்டுகிறது. ரயில்வே நிலையங்களும், நடைபாதை ஓரங்களும் அவ்வப்போது கருணை காட்டும் சிலரது வீடுகளின் மூலைகளும், மும்பையின் நிழல் உலகமும் அவனுக்கு அடைக்கலம் தருகின்றன. பல விதமான மனிதர்களோடும், பலவிதமான தொழில்களோடும், உணவு முறைகளோடும், பெண்களோடும் சபலங்களோடும் குற்றங்களோடும் அவனுக்கு உறவு ஏற்படுகிறது. இலக்கற்று, அர்த்தமற்று நீளும் இந்த ஓட்டம் ஒரு மாபெரும் வெறுமையை நோக்கிச் செல்லும் விளிம்புக்குத் தள்ளப்படும்போது அவன் வாழ்வில் ஏற்படும் ஒரு திடீர் திருப்பம் இந்த இலக்கற்ற ஓட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கிறது. நாவலுக்கும்தான்.

விறுவிறுப்புடன் கதையை நகர்த்திச் செல்கிறார் நாஞ்சில் நாடன். மையப் பாத்திரமான பூலிங்கத்தின் ஆளுமையை வழக்கமான தமிழ்க் கதைகளின் நாயகன் அந்தஸ்துக்கு உயர்த்தாமல் அவனுடைய பலவீனங்களுடன் இயல்பாக நடமாடவிட்டிருக்கிறார். இந்த ஓட்டத்தின்போது அவனுக்கு வாழ்வின் மதீப்பீடுகள், நெறிமுறைகள், சட்டதிட்டங்கள் ஆகியவை கூட சில சமயம் சுமக்க முடியாத பளுவாகிவிடுவதையும் பூசி மெழுகாமல் அப்பட்டமாகவே சொல்கிறார். பூலிங்கம் செல்ல நேரும் இடங்களையெல்லாம் திரைப்படத்திற்கே உரிய காட்சித் தன்மையுடன் துல்லியமாகச் சித்தரிக்கிறார். பூலிங்கத்தை மையமாக வைத்து சுழலும் மனிதர்கள், இடங்கள், தொழில்கள், மதிப்பீடுகள் ஆகியவற்றை நமது அனுபவ உலகத்திற்குள் இடம்பெறச் செய்வதற்குத் தேவையான அளவு விவரங்களுடனும் அலுப்பூட்டாத அளவுக்குச் சிக்கனமாகவும் சொல்லும் கச்சிதமான மொழி இவருக்குக் கைவந்திருக்கிறது. குறிப்பாக சேட்ஜியின் குடும்பம் (அவரது வைப்பாட்டி உள்பட), ரயில் நிலையங்களின் இருண்ட மூலைகள், மும்பையின் நிழல் உலக சந்துகள் ஆகியவை மிக நேர்த்தியாகவும் யதார்த்தமாகவும் சொல்லப்படுகின்றன. பிழைத்திருப்பதற்கான பூலிங்கத்தின் போராட்டம், அவனுக்கும் மற்றவர்களுக்கும் இடையே ஆழமாக வேர்கொள்ள மறுக்கும் உறவு, கதாபாத்திரங்களின் பாலுறவுச் சிக்கல்கள் ஆகியவை வலுவாகவும் மிகையற்ற உணர்ச்சியுடனும் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. பிரச்சனைகள் மதிப்பீடுகளின் தளத்தில் அல்லாமல் அனுபவ தளத்தில் முன்வைக்கப்படுகின்றன.

இவை அனைத்தும் நாவலின் சாதகமான அம்சங்கள். ஆனால் பன்முகம் கொண்ட விரிவையும் ஆழத்தையும் கேட்டு நிற்கும் நாவல் என்ற பிரத்யேக கலை வடிவத்தின் வெற்றிக்கு இவை மட்டும் போதாது. வாழ்வின் பிரச்னைகள், பலவிதமான பாத்திரங்கள், வித்தியாசமான களங்கள், விதவிதமான சூழல்கள் ஆகியவை குறித்த சித்தரிப்புகள் எவ்வளவுதான் அற்புதமாக இருந்தாலும் அவை ஒரு நாவலின் மேற்பரப்பைத்தான் உருவாக்குகின்றன. இந்த வாழ்வு இப்படி இருக்கிறது என்று காட்டுவது சித்தரிப்பு. இந்த வாழ்வு ஏன் இப்படி இருக்கிறது என்ற கேள்வியை எழுப்பிக்கொள்வது தேடல். சித்தரிப்பில் வெற்றிபெறும் நாஞ்சில் நாடன் தேடல் என்ற அம்சத்தில் பின் வாங்குகிறார். பிரச்னைகளின் ஆணி வேரைக் காணும் தேடல் ஒரு சிறந்த கலைப் படைப்புக்கு இருந்ததாகவேண்டிய குணம். எட்டுத் திக்கும் மதயானையில் அதற்கான பிரயத்தனம் இல்லாதது ஏமாற்றம் தருகிறது. ஏற்கனவே தேர்ச்சி பெற்ற வித்தைகளைத் தனக்குப் பழக்கப்பட்ட தளங்களில் மறுபடியும் நிகழ்த்திக் காட்டும் நாஞ்சில் நாடனின் இந்த முயற்சி ஏமாற்றமளிக்கிறது. தமிழ் எழுத்தாளனுக்குள்ள சுதந்திரம் பற்றி முன்னுரையில் நாஞ்சில் நாடன் ஆதங்கப்பட்டுக் கொள்கிறார். ஏற்கனவே வசப்பட்டுள்ள சுதந்திரத்தை வைத்துக்கொண்டு என்ன சாதித்திருக்கிறோம் என்ற கேள்வியையும் கேட்டுக்கொள்வது நல்லது. படைப்பில் எடுத்துக் கொள்ளும் சுதந்திரம் இதுவரையில் சொல்லப்படாத விஷயங்களை சொல்வதற்காக மட்டுமா அல்லது ஆழமான தளங்களில் வைத்து அவற்றின் அடிப்படைகளை காலம், இடம் இவற்றின் பின்னணியிலும் இவற்றைத் தாண்டிய நிலையிலும் வைத்து ஆராய்வதற்கான முயற்சிக்கும் சேர்த்தா என்பதே இந்தக் கேள்வியின் விரிவான வடிவம்.

நாவலின் ஆழம் குறித்த அதிருப்தி ஒருபுறம் இருக்க, கதைப்போக்கில் காணப்படும் சினிமாத்தனம் அதிருப்தி கொள்ள வைக்கிறது. திடுக்கிடும் திருப்பங்களும் திடீர் சம்பவங்களும் நாவல் பூராவும் கொட்டிக்கிடக்கின்றன. பூலிங்கத்தின் பலவந்தமான ஓட்டம் நாவலின் ஆரம்பப் பக்கங்களில் இயல்பாக விரியும் விதம் நம் ஆர்வத்தை எழுப்புகிறது. ஆனால் போகப்போக நாவலின் போக்கு தமிழ் சினிமாவின் அடுத்த காட்சியை ஒரு சராசரி ரசிகன் யூகித்துவிடுவது போலவே சுலபமாக யூகித்துவிடக்கூடியதாக இருக்கிறது. கதையின் சுவாரஸ்யத்தில் ஆசிரியருக்கு இருக்கும் ஆர்வம் பல திருப்பங்களைக் கதையில் திணிக்கவைக்கிறது. பூலிங்கம் காலூன்றியிருக்கும் மும்பைக்கே செண்பகம் வந்து சேர்வதும் அதன் பிறகு நடக்கும் சம்பவங்களும் இதன் உச்சக்கட்டம். செண்பகம் மும்பைக்கு வந்ததும் கதை எப்படிப் போகும் என்பதை மிக சாதாரண வாசகனால்கூட யூகித்துவிட முடியும். நேர்த்தியான மொழி, பூசி மெழுகாத அப்பட்டமான சித்தரிப்பு போன்ற பல நல்ல அம்சங்கள் இருந்தாலும் நாவலை படித்து முடித்த பிறகு இந்த ஏமாற்றம்தான் எஞ்சி நிற்கிறது. நாஞ்சில் நாடன் போன்ற நேர்மையான, தேர்ந்த எழுத்தாளர்களிடமிருந்து இத்தகைய ஏமாற்றம் அளிக்காத படைப்பு உருவாவது எப்போது சாத்தியப்படும்? ■


மதுரையில் நல்லதோர் புத்தக மையம்

**பாரதி புக் ஹவுஸ்**

**D–28, மாநகராட்சி ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்**
பஸ் ஸ்டாண்ட் (உட்புறம் – தென்புறம்)
பெரியார் பஸ் நிலையம்
**மதுரை 625 001**
தொலைபேசி : 736416

காலச்சுவடு வெளியீடுகள், காவ்யா, அன்னம் - அகரம், வைகை வெளியீடுகள், தாமரைச் செல்வி பதிப்பகம், அலைகள் வெளியீட்டகம், ஸ்நேகா, தமிழினி, விஜயா பதிப்பகம், வைகறை, சவுத் விஷன், கீழைக்காற்று, நிறப்பிரிகை, நியூ செஞ்சுரி, திணை வெளியீடுகள், நேஷனல் புக் டிரஸ்ட், சாகித்ய அகாதெமி வெளியீடுகள் மற்றும் இலக்கியம், சமூகவியல் நுண்கலைகள் சார்ந்த அனைத்துப் புத்தகங்களும், அனைத்துச் சிற்றிதழ்களும் கிடைக்கும்.

ஞாயிறு விற்பனை உண்டு

Advt




படிப்பகம்

www.padippakam.com

# எனக்குள் பெய்யும் மழை

தொகுப்பும் தமிழாக்கமும் : *யமுனா ராஜேந்திரன்*
வெளியீடு : *எக்ஸில் (பிரான்ஸ்)*
இந்தியாவில் விநியோகம் : *தாமரைச் செல்வி பதிப்பகம்*
*31/48, ராணி அண்ணாநகர்*
*சென்னை 600 078*
பக். *175*; விலை ரு. *75*

**சி. சிவசேகரம்**

சில விடயங்களை விமர்சிக்க நாம் தயங்குகிறோம். காலத்துக்குக் காலம் ஒவ்வொரு செயற்பாட்டுத் தளத்திலும் சூழலிலும் சில புனிதங்கள் உருவாக்கப்படுகின்றன. புனிதங்களை உடைக்கிற போக்கிலும் நோக்கிலும் இந்த உருவாக்கம் நிகழ்வதைக் காணலாம். புனிதமானவற்றினின்று அவை தொடர்பான ஆக்கங்களிலும் ஆக்குவோர்களிலும் இப்புனிதம் தொற்றிக் கொள்கிறது. அண்மைக்கால உதாரணங்களுள் பெரியாரியம், தலித்தியம், பெண்ணியம், பின் நவீனத்துவம் போன்றன உள்ளடங்கும். இவற்றைக் கேடயங்களாக்கித் தமது குறைபாடுகளை மூடி மறைக்கிற ஒரு முனைப்புப் பற்றியும் நாம் கவனமாயிருக்க வேண்டும்.

'எனக்குள் பெய்யும் மழை', பெண்ணிய நோக்குடையோரெனக் கருதப்படும் சில பெண்களின் கவிதைகளின் தமிழாக்கங்கள் அடங்கிய தொகுதி. பெண்ணியப் பார்வைகள் வேறுபடுகின்றன. பெண்ணியமாக எதை அடையாளங்காண்பது என்பதும் அகச்சார்பானது. கவிதைகள் கவிஞர்களை எவ்வளவு தூரம் சரியாக அடையாளங்காட்டுகின்றன என்பது அவற்றின் தெரிவிலும் அவற்றின் மொழிபெயர்ப்பிலும் தங்கியுள்ளது. இவற்றுக்கும் மேலாகக் கவிதைகளையும் கவிஞர்களையும் பற்றி வழங்கப்படும் தகவல்கட்கும் ஒரு பங்குள்ளது. இவை அனைத்தையும் மனதிற்கொண்டே இந்த நூலை விமர்சிக்க முற்படுகிறேன்.

மொழிபெயர்ப்பாளரது தகைமை பற்றிய ஐயங்கள் முன்னுரையில் வருகிற சில மேற்கோள்களை ஒட்டியேகூட எழுகின்றன. அவற்றுள் மாக்ஸின் நன்கறியப்பட்ட வாசகமொன்றன் தமிழாக்கம் அடுத்து வரவுள்ளன பற்றிய ஒரு முன்னெச்சரிக்கையாகவே அமைகிறது :

"தத்துவவாதிகள் உலகை பல்வேறு வகைகளில் வியாக்கியானப்படுத்தியிருக்கிறார்கள். பிரச்சினை அதை மாற்றுவது."

பிரச்சினை என்ற சொல்லின் பிரயோகமே இங்கு பெரிதும் பிரச்சினைக்குரியது. மேற்கூறிய வாசகம் ஆங்கிலத்திற் பலவாறாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. எனினும் problem, question ஆகிய சொற்கள் 'நம் தேவைக்குரியது, உலகை மாற்றுவதே' என்கின்ற தொனியை வழங்கத் தவறியதில்லை. "பிரச்சனை அதனை மாற்றுவதே" என்கிற வாக்கியம் அவ்வாறான பாதிப்பை ஏற்படுத்துகிறதா என்பதை, வாசகர்களிடமே விட்டு விடுகிறேன். மொழிபெயர்ப்பின் குழறுபடிகள் பஞ்சமின்றி நூல் முழுவதும் பரவியுள்ளதால் ஒரு சில மேற்கோள்களுடன் நிறுத்துவது தகும்.

"நான் மணமுடிக்காதிருந்த வேளை / கண்ணைத் திறந்து சொர்க்கத்தை வாழ்த்தினாள்" (மெழுகு மாளிகை)

முதலாவது உதாரணம் ஒரு விறைப்பான சொற்பிரயோகம் என்றால் மற்றது heaven என்ற சொல்லின் பொருள் விளங்காதன் விளைவாகவே தெரிகிறது. கிறிஸ்துவ மரபில், heaven என்ற சொல் இறை என்ற பெருட்படப் பயன்படுகிறது. சொர்க்கம் என்ற சொல் நமது வழக்கில் அவ்வாறு அமைவதில்லை. மெழுகு மாளிகை என்பதும் house of wax அல்லது palace of wax என்பதன் தமிழாக்கம் என ஊகிக்கிறேன்.

"நேற்றைய கல்லறைகளைப் போல பவுடர் பூசிய / சவ முகங்கள் என்னைக் காண வருகின்றன. / மூளைகளின் கல்லறைத் தோட்டங்களின் / இம்மாதிரி / ஒப்பனைகள் பொருத்தமானவைதான்" (துர் சொப்பனம்)

இங்கே மொழிபெயர்ப்பு உயிரோட்டமின்றி இருக்கக் கல்லறைகள் காரணமில்லை. வரிப்பிரிப்பு, முதலாவது வரியில் குழப்பத்திற்குக் காரணமாகிறது. கவிதைத் தலைப்புக்கு "அரசு அதிகாரிகளாக அல்லது நிர்வாகிகளாக இருப்போரின் துர் சொப்பனம்" என்று ஒரு விளக்கக் குறிப்பும் உள்ளது. இதுவும் ஒரு தமிழாக்கமென ஊகிக்கிறேன். துர்ச்சொப்பனம் அதிகாரிகளுடையது அல்ல அதிகாரிகள் பற்றியது எனவே எண்ணுகிறேன்.

இதே கவிதையின் ஈற்றில்

"கத்தியைச் செய்கிற இரும்புப் பட்டறைக்காரன் கூட/ தான் தான் வெற்றியை எழுதுகிறேன்/ எனச் சொல்லிக் கொள்வதில்லை"

என வருகிறது. இதுவும் ஆங்கில மொழி வழக்குப் பற்றிய குறைபாடான விளக்கத்தின் விளைவே.

"எனக்கு நீ ஒரு ரகசியம் தர வேண்டும்"

(ரகசியங்களை அருந்த வடித்தல்)

இதற்குரிய மூலம், You owe me a secret என ஊகிக்கிறேன்.

"நியூசிலாந்து ஆடுகளுடன் சாப்பிட்டால்/ வைன் நன்றாகச் சேரும்" (போர் டாக்ஸி(!)லிருந்து வரும் வைன்)

எனினும் நகைச்சுவைக்கு :

"கோயிலுக்குப் போன/ ஒரு மிக ஏழைப்பட்ட பாம்பே பெண்ணின் / கண்களைப் போல் ஆனது" (இந்தியப் பெண் : வீடும் வெளியும்)

பாம்பு எப்படிப் பெண்ணின் கண்களைப் போல ஆகும் என்றும் ஏழைப்பட்ட பாம்புகள் உண்டா என்றும் யோசித்துச் சிறிது பின்னரே பாம்பே என்பது பம்பாய் (இப்போது மும்பாய்) எனும் நகரம் என்ற உண்மை தெளிந்தது.

பொதுவாக மொழிபெயர்ப்புக்களை ஒருசில தடவைகளாவது மீள வாசித்துச் சாராம்சத்தை நமக்குள் தெளிவுபடுத்தி மூலத்துடன் ஒப்பிடுவது நல்லது. அது தவறின்மைக்கு உத்தரவாதமல்ல. கவிதை மொழிபெயர்ப்பு என்பது மூலத்துக்கு இழைக்கப்படும் துரோகம் என்ற கருத்தைப் பலர் வாயிலாகக் கேட்டிருக்கிறேன். அவ்வகையில் நம்மிற் பலரும் துரோகிகளே. துரோகமே மொழிபெயர்ப்பின் அளவுகோலானால் யமுனா ராஜேந்திரன் கூசாத மொழிபெயர்ப்பாளர் ஆகிறார்.

கவிதைகளின் தெரிவு ஒரு பிரச்சனையாவதற்குக் காரணம் 'மூன்றாமுலகப் பெண்ணிலைவாதம் : இருபத்திரண்டு ஆசியக் கவிகள்' எனும் துணைத் தலைப்பாகும். இருவரது கவிதைகள் இருபத்தெட்டு. மிகுதி இருபதின்மருக்கு ஆளுக்கு ஒன்று. கிஷ்வர் நஹீத், சுஜாதா பட் எனும் இருவரை அடையாளங் காட்டுகிற அளவுக்குப் பிற கவிஞர்களை அடையாங் காட்ட இத்தொகுதிக்கு இயலவில்லை. இவர்களிற் சிலர் மூன்றாமுலகச் சூழலில் வாழாதவர்களுமாவர். பெருவாரியானோர் ஆசிய வம்சாவழியினரும், குறிப்பாகத் தென்னாசியருமாவர். இதை மூன்றாமுலகப் பெண்நிலைவாதம் என அறிவிப்பது நேர்மையான விளம்பரமல்ல. சிங்களப் பெண் கவிஞரான சீதா ரஞ்ஜினியின் கவிதையிற் பெண்ணிய அடையாளம் அற்பமானது. சிவரமணியினதும் இவ்வாறே. இவர்களது கவிதைகள் கூறும் நுண்ணுணர்வுடனும் மென்மையுடனும் மனிதநேயத்துடனும் எழுதியுள்ள பல ஆண்களை நாம் அறிவோம். சிவரமணியின் கவிதைகளில் அவருடைய பெண்ணிய நோக்கு சமூக நீதிக்கான ஒரு விரிவான பார்வையுடன் இணைந்து காணப்படுவதற்கான பிற கவிதைகளை நான் அறிவேன். சீதா ரஞ்ஜினி கவிதைகளுடன் எனக்குப் பரிச்சயமில்லை.

அடுத்துக், கவிதைகட்கு வழங்கப்பட்டுள்ள சில குறிப்புக்களை அவதானிப்போம்:

"குளிர் நாடுகளில் அனேகமாக நமது நிழலுக்கு அருகில் நாம் நடக்க முடியாது என்பதை நாம் ஞாபகம் கொள்ளலாம். வெள்ளையர்களால் சூரியனோடு நடக்க முடியாது என்பது இயற்கை சார்ந்த நிஜம்" (ப. 42)

இப்போது புலம் பெயர்ந்த தமிழர்களா நம்மூருக்கு வருகிற வெள்ளையர்களா சூரியனோடு நடக்கிறார்கள் என்று தெரியவில்லை. இப்படியான 'இயற்கை சார்ந்த நிஜங்களே' இந்துத்துவம் Fாஸிஸம், நிறவெறி, சாதியம் எல்லாவற்றையும் நியாயப்படுத்துகின்றன.

நியூமெக்ஸிகோ தென்னமெரிக்க நாடு என்று ஒரு குறிப்பு உள்ளது. (ப.104). அயன்டே கம்யூனிஸ்ட் புரட்சியாளர் என


படிப்பகம்

www.padippakam.com

இன்னொன்று (ப. 116). போக, ஃபிரைடா, Fரைடா காலோ (பிரைடா கோலா ?!) த்ரொத்ஸ்கியுடன் சிலகாலம் காதல் கொண்டிருந்ததான குறிப்பால் (ப. 95) ஒரு உன்னதமான முற் போக்குப் பெண்ணியக் கலைஞருக்கு என்ன பெருமை? அண்மையில் தமிழகத்துச் சிற்றேடான 'புதுவிசை'யில் த்ரொத்ஸ்கியை அவர் எவ்வளவு இழிவாகக் கருதினார் என்ற தகவல் வந்துள்ளது. மொழிபெயர்ப்பாளர் முன்னரே அவர் பற்றி விரிவாக எழுதியவர். இது மொழிபெயர்ப்பாளர் அறியாததா? எனவே தான் எல்லாப் பிசகுகளும் அறியாமையோ அசட் டையோ சார்ந்தன அல்ல என எனக்குத் தோன்றுகிறது.

கவிதைகளின் தெரிவு சில படைப்பாளிகளின் கலைப் பண்பு குறைவான பக்கங்களைக் காட்டுகிறதோ என்ற ஐய மும் என்னுள் எழுந்தது. சமபாற் காமமும் கலவியும் பற்றிய நிலைப்பாடுகளை ஒருபுறம் ஒதுக்கிவைத்து, இத்தொகுதியில் உள்ள சில கவிதைகளை நோக்கினால், அவற்றிற் பெண்கள் மீதான காம உணர்வு சார்ந்த அங்க வருணனைகளை ஒரு ஆண் செய்திருந்தால் அது பற்றிய மதிப்பீடு மிக மோசமான தாக இருந்திருக்கும்; கலவியின் வருணனைகள் பெண்ணிலை வாதிகளால் வன்மையாக மறுக்கப்பட்டிருக்கும். அதேவேளை இத்தொகுதிக்காகத் தெரியப்பட்டுள்ள சில கவிதைகள் கவிதைகளாகவே தேறவில்லை. உதாரணமாக தஸ்லீமா நஸ்ரீ னின் கவிதை. வேறுஞ்சில மொழிபெயர்ப்பாளரின் உதவியின் றியே வெகு சாதாரணமானவை.

நாம் செய்யமுற்படுவனவற்றின் அளவைவிடத் தரமும் தன்மையும் முக்கியமானவை. 'நேரடித் தொனியில் நெற்றியில் அடிப்பது போன்ற தொனி' தனியே கவிதைக்கான தகுதியு மல்ல. படைப்பின் முக்கியத்துவம் அரைவேக்காட்டுத் தமி ழாக்கத்தை நியாயப்படுத்தப் போதுமானதுமில்லை. முன் னுரை எழுதிய அமரந்தா கவனமாகவே தமிழாக்கங்கள் பற்றி எதுவுங் கூறுவதைத் தவிர்த்துள்ளார். என்னால் முடியவில்லை. ■

---

நூல் விமர்சன அரங்கு

## தமிழகத்தில் கல்வி

சமீபத்தில் காலச்சுவடு வெளியிட்ட தமிழகத்தில் கல்வி : வே. வசந்தி தேவியுடன் ஒரு உரையாடல் நூலின் விமர்சன அரங்கு கடந்த 4.11.2000 அன்று சென்னையில் தேவநேயப் பாவாணர் அரங்கில் நிகழ்ந்தது. CRY நிறுவனத்தின் ஆதரவுடன் காலச்சுவடு பதிப்பகம் இந்த அரங்கிற்கு ஏற்பாடு செய்திருந்தது. கரோலின் ப்ரீதா (CRY), அ. மங்கை, பெருமாள் முருகன், ஞாநி, பிரபஞ்சன், எம். ஆனந்த கிருஷ்ணன் (துணைத் தலைவர், தமி ழக உயர் கல்வி ஆய்வுமன்றம்), ஜேம்ஸ் வில்லியம்ஸ் (தலைவர், MUTA), கண்ணன் (செயலாளர், SFI ), கே. ராஜேந்திரன் (தலை வர், முதுகலை ஆசிரியர் பட்டதாரி சங்கம்) உரையாற்றினர். சுந் தர ராமசாமி கடைசி நேரத்தில் வரமுடியாமல் போனதால் அவ ரது கட்டுரையை லல்லி வாசித்தார். நான் என்னுடைய கருத்துக் களை எழுதி வாசித்தேன். சுமார் 250க்கும் மேற்பட்டோர் பார்வையாளர்களாக வருகை தந்திருந்தனர்.

புத்தகத்தைப் போலவே விமர்சன அரங்கும் சிதறலான தாகவும் உரையாடல் தன்மை கொண்டதாகவும் அமைந்திருந்தது. தமிழகத்தில் கல்விச் சூழல் பற்றிய ஒரு விமர்சனபூர்வமான பார்வை என்ற அடிப்படையில் நூலின் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் பெரும்பாலானோர் வலியுறுத்தினர். இந்த நூல் எழுப்பும் கேள்விகள் பல்வேறு மட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு விவாதிக்கப்பட வேண்டும் என்பது பலரின் உணர்வாகவும் கருத்தாகவும் வெளிப்பட்டது. வசந்தி தேவி யோடு பணியாற்றிய அனுபவங்களின் அடிப்படையிலும் நூலிலி ருந்த கருத்துக்களின் அடிப்படையிலும் பேச்சுக்கள் அமைந்தி ருந்தன. ஆசிரியர்கள், ஆசிரியர் சங்கங்களின் பொறுப்பின்மை கள் குறித்து நூல் எழுப்பும் உணர்வுகளைப் பலரும் பகிர்ந்து கொண்டனர். விவாதத்தில் பங்கேற்ற கவிஞர் இன்குலாப், 'ஆசிரி யர் சங்கங்கள் வலிமையாக உள்ள இடங்களில் ஆசிரியர் பணி சிறப்பாக நடைபெறுவதில்லை' என்றார். சுயநிதிக் கல்லூரிகள் கல்வி சீரழிந்ததற்கும் வியாபாரமானதற்கும் முக்கிய காரண மாகச் சுட்டப்பட்டது. ஜேம்ஸ் வில்லியம்ஸ், 'ஒவ்வொரு சுய நிதிக் கல்லூரியும் ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் இலாபம் ஈட்டு வ'தாகக் குறிப்பிட்டார். எம்.ஆனந்த கிருஷ்ணன், 'சமீபத்தில் பல புதிய அரசியல் கட்சிகள், சுயநிதிக் கல்லூரிகள் மூலம் கிடைத்த இலாபத்தில்தான் தொடங்கப்பட்டுள்ளன. இந்தக் கல்லூரிகள் பெறுகிற பணத்திற்கு ரசீது கொடுக்க வேண்டும் என்கிற சிறிய நடைமுறையைக் கூட வற்புறுத்த எந்த மத்திய, மாநில அரசுக் கும் துணிவில்லை' என்றார். புத்தகத்தில் நூலகங்கள் பற்றி வரும் பகுதியைத் தொட்டுப் பேசிய பெருமாள் முருகன், 'ஆசிரி யர்கள் படிப்பதில்லை என்ற குற்றச்சாட்டு அர்த்தமற்றது; ஏனெ னில் அவர்கள் படிப்பதற்கான தேவையை எந்த விதத்திலும் இந்தக் கல்வித்திட்டம் உருவாக்கவில்லை' என்றார். நூலில் பார்ப்பனீயம், இட ஒதுக்கீடு போன்றவை விவாதிக்கப்பட்டிருப் பதை வரவேற்ற அ.மங்கை, 'தமிழ் வழிக்கல்வி குறித்த விஷயங் கள் ஆழமாக விவாதிக்கப்படவில்லை' என்று குறிப்பிட்டார். எழுத்தாளர்கள் பொதுப் பிரச்சனைகளில் காட்ட வேண்டிய அக்கறையின் அடையாளமாக இந்த நூலைக் காண்பதாகக் குறிப்பிட்ட ஞாநி, வசந்தி தேவி உருவாக்கிய அமைப்புகள் அவர் போன பிறகு சிதைந்து விடுவதைப்பற்றிப் பேசினார். பிரபஞ்சன் பேசும் போது, 'இங்கு ஆசிரியர்கள் டாக்டர் பட்டம் பெற்றதும் செத்துப் போய்விடுகிறார்கள்' என்று கூறியதும் சமீபத்தில் கூட் டங்களில் பேச்சாளர்களை நோக்கி ஆவேசத்துடன் ஓடிவந்து கொண்டிருக்கும் டாக்டர். வி. அரசு சத்தம் போடத் தொடங்கி னார். ஞாநி விவாத நேரத்தில் பேசும்படி அமைதிப்படுத்தினார். பின்னர் பேசிய அரசு பிரபஞ்சனை நோக்கி 'பத்திரிகைக்குத் தகுந்தாற் போல் எழுதுகிற உங்களுக்கு ஆசிரியர்களைக் குறை சொல்ல என்ன யோக்கியதை இருக்கிறது' என்று கேட்டதுடன் சுந்தர ராமசாமியை ஒரு மதவாதியாகவும், தமிழ் விரோதியாகவும் காட்ட பரிதாபகரமான முயற்சிகளில் ஈடுபட்டார். இந்தப் புத்தகம் கல்வியை ஒரு மதமாகப் பார்க்கிறது என மொட்டை யாக அறிவித்துவிட்டு சு.ராவின் தமிழ் விரோதத்தன்மைக்கு சாட்சியமாகப் புத்தகத்திலிருந்து அங்கொன்றும் இங்கொன்று மாக சொற்களை உருவி பொய்யான வாக்கியங்களை உருவாக் கினார். மேலும் என்னை நோக்கி நீங்கள் கவிதை எழுதுங்கள்; கல்வியைப் பற்றி எழுதாதீர்கள் என்று கூறியதுடன் எனது மொழி நடையையும் குரலையும் சபையில் மிமிக்கிரி செய்து காட்டினார். இத்தகைய அருவருக்கத் தக்க காட்சியை நான் இதற்கு முன் சந்தித்ததில்லை.

விவாத அரங்கில் ஆசிரியர்கள், ஆசிரியர் அமைப்பின் பிரதி நிதியாக வந்தவர்களிடம் சுந்தர ராமசாமியின் கேள்விகளால் வசந்தி தேவியின் பார்வைகள் வரையறுக்கப்பட்டுவிட்டன என் கிற உணர்வு இருந்ததைக் காண முடிந்தது. ஆல்காட் பள்ளி யினைச் சேர்ந்த அருணா, 'இந்தப் புத்தகம் உயர் கல்வியைப் பற்றிப் பேசுகிறது, ஏனெனில் அது மத்திய தர வர்க்கத்துக்கு மன திற்கு உகந்த விஷயம். ஆரம்பக் கல்வியைப் பற்றி ஒரு புத்தகம் வந்தால் அதற்கு இவ்வளவு வரவேற்பு இருக்குமா? ஏனெனில் அது ஒரு கவர்ச்சியான சப்ஜெக்ட் அல்ல' என்றார். வேறுசில ரும் ஆரம்பக் கல்விக்கு நூலில் முக்கியத்துவம் கொடுக்கப்பட வில்லை என்றனர்.

கல்வித்துறை சார்ந்த பரிசீலனைகளில் நிறப்பிரிகையின் முன்னோடியான செயல்பாடுகள் பலராலும் சுட்டிக்காட்டப்பட் டன. இந்த நூலின் கருத்துக்களைத் தொடர்ந்து வளர்த்தெடுக்க வேண்டும் என்பது பெரும்பாலானோரால் வலியுறுத்தப்பட்டது. வசந்தி தேவி தனது ஏற்புரையில், 'பேச்சாளர்கள் பலரும் தம்மு டைய அனுபவம் சார்ந்த விஷயங்களைப் பற்றியும் இந்த நூலில் இல்லாத விஷயங்களைப் பற்றியும் தான் பேசினார்களே ஒழிய இது முன்வைத்த பல முக்கிய கருத்துக்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. கல்வியைப் பற்றி பிரபஞ்ச அளவி லான எல்லா விஷயங்களையும் இதில் நாங்கள் பேசியிருப்ப தாக உரிமை கோரவும் இல்லை' என்று குறிப்பிட்டார். ஒருமுறை நண்பர் எஸ். ராமகிருஷ்ணன், 'தமிழ் வாசகனுக்குச் சொல்லிய விஷயங்களை விட சொல்லாத விஷயங்கள்தான் மிகவும் அவ சியமானதாக இருக்கின்றன' என்று வேடிக்கையாகக் குறிப்பிட் டது நினைவிற்கு வந்தது.

**மனுஷ்ய புத்திரன்**



படிப்பகம்

www.padippakam.com

# இளையராஜா : இசையில் தத்துவமும் அழகியலும்



ஆசிரியர் : *பிரேம் : ரமேஷ்*
வெளியீடு : *செம்புலம், சென்னை 97*
விற்பனை உரிமை : *விஜயா பதிப்பகம், 20 ராஜவீதி, கோயம்புத்தூர் 641 001*
பக். : *95;* விலை : *ரு. 40*

## ஜே. ஆர். வி. எட்வர்ட்

ஆண்டுமலர் ஒன்றில் (மனோரமா இயர் புக் : 1999) பிரசுரமாகியிருந்த "இசைத்துறையில் தமிழரின் பங்களிப்பு" என்ற முகப்புக் கட்டுரை வியப்பும் அதிர்ச்சியும் தருவதாய் அமைந்திருந்தது. கட்டுரையில் இளையராஜாவின் பெயர் எங்குமே இல்லை. இளையராஜா தமிழர் இல்லையா அல்லது இசைத் துறையில் அவரது பங்களிப்பு சிறிதும் இல்லையா போன்ற கேள்விகள் இயல்பாகவே எனக்குள் எழுந்தன. தியாகராஜர், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரி தொடங்கி செம்மங்குடி சீனிவாச ஐயர், எம். எஸ். சுப்புலட்சுமி, சுதா ரகுநாதன், சுந்தராம்பாள், அனுராதா ஸ்ரீராம் உள்பட கட்டுரையாளர் தந்திருக்கும் நீண்ட பட்டியலைப் பார்க்கிறபோது, இளையராஜாவின் பெயர் அதில் இடம் பெறாததில் வியப்பேதும் இல்லை. கட்டுரையாளர் இளையராஜாவின் இசையை இசையாகவே அங்கீகரிக்காத பட்சத்தில், அவரது பெயர் எப்படி பட்டியலில் இடம் பெற முடியும்? பார்ப்பனீய (கர்நாடக) இசையைத்தான் கட்டுரையாளர் இசையாக அங்கீகரித்திருக்கிறார். கர்நாடக இசை இன்று மக்களுக்கு ரொம்பவும் அந்நியமான ஒன்றாகிவிட்ட பின்பும் கூட, அந்தப் பாரம்பரியத்தைக் கட்டிக் காக்கும் சிரத்தையிலேயே பலரும் உள்ளனர் என்பதற்கு அக்கட்டுரை ஓர் சான்று. கர்நாடக இசை தவிர்த்த பிற இசையைக் கொச்சையாகப் பார்க்கும் பார்வைதான் பொதுவாக இங்கு நடப்பில் உள்ளது. இசைவிழா என்றால் கர்நாடக இசைக்கச்சேரிதான். இசை விமர்சகர் என்றால் கர்நாடக இசை விமர்சகர்தான். மேற்சொன்ன கட்டுரையாளர் கூட இசைவிமர்சகர் என்றே குறிப்பிடப்பட்டிருந்தார். இசைபற்றி இத்தகு பார்வைக் கோளாறு இருக்கும் சூழலில், 'இளையராஜா : இசையில் தத்துவமும் அழகியலும்' என்ற நூல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று.

இலக்கியம் தவிர்த்த பிற கலைகள் சார்ந்த நூல்கள் தமிழில் மிகக் குறைவு. தமிழர் மீதான சினிமாவின் ஆதிக்கம் பயங்கரமானது என்ற போதிலும் சினிமா பற்றிய நூல்கள் கூட இங்கு குறைவு. இசை சார்ந்த நூல்களோ மிக அபூர்வம். இத்தனைக்கும் தமிழர் வாழ்வில் இசைக்கு அதிக முக்கியத்துவம் உண்டு. தமிழர்க்கும் இசைக்கும் இடையேயான பிணைப்பு தொன்மையானது. எனவே தான் பிரேம் : ரமேஷின் இளையராஜா பற்றிய இந்நூல் அதிக முக்கியத்துவம் பெறுகிறது. நவீனத்துவ இசை சார்ந்த நூல் என்பது முக்கியத்துவத்தை இன்னும் அதிகரிக்கிறது.

பௌத்தத்தையும் அம்பேத்கரையும் இந்திய வரலாற்றில் நிகழ்ந்திருக்கும் அரிதான அதிசயங்களாகக் கருதும் பிரேம் : ரமேஷ், முற்றிலும் வேறுதுறையில், வேறு திசையில், வேறு பின்புலத்தில் நிகழ்த்தியிருக்கும் இன்னொரு அதிசயமாக இளையராஜாவைச் சொல்லியிருப்பது மிகச் சரியானது.

"உலகின் நிஜமான மிகப்பெரும் தத்துவ, சமூகவியல், அறவியல் மேதைகளை நிஜமாகவே அறிந்து நேசிக்கும் ஒவ்வொரு அறிவார்ந்த மனமும் எப்படி அம்பேத்கரை நேசித்தே ஆகவேண்டுமோ அதேபோல் உலகின் பேரிசைகளை, கலைஞர்களை அறிந்து நேசிக்கும் ஒவ்வொரு கலாபூர்வமனமும் இளையராஜாவை வியந்து நேசித்தே ஆகவேண்டும் என்ற மனநிலை எங்களுக்குள் அடிக்கடி ஏற்படுகிறது" என்பது இந்நூல் பற்றிய ஆசிரியர்களின் பிரகடனத்தின் ஒரு பகுதி. இளையராஜாவின் இசையால் கவரப்பட்டு, நுட்பமாக ரசித்து, அனுபவித்து, மலைத்துப்போய் நிற்கும் இரு இளைஞர்களின் வியப்புக்களின் தொகுப்பே இந்நூல். இளையராஜாவின் இசைபற்றிக் கூற இன்னும் அதிகம் இருந்தாலும், தகவல்களால் அது நிரம்பிவிடக்கூடும் என்பதால் கோட்பாட்டு விளக்கங்களை மட்டுமே தந்திருப்பதாக ஆசிரியர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனாலும், அவசியமான, குறைந்தபட்ச தகவல்கள்கூட நூலில் தரப்படாதது ஒரு பெருங்குறையாகவே தெரிகிறது.

இளையராஜா பற்றிப் பேச நிறைய உண்டு. சமூக, பொருளாதார கலாச்சாரத்தளங்களை முன்வைத்து பல்வேறு கோணங்களில் இளையராஜாவை அணுகமுடியும். மிகச்சிறந்த சில ஆய்வுகளுக்கான மூலங்கள் அவரிடம் உள்ளன. அத்தகைய ஓர் விமர்சனக் கண்ணோட்டத்தில் ஆசிரியர்கள் இந்நூலை அமைக்கவில்லை. இளையராஜா இசையில் அழகியல் கூறுகளைக் கோடிட்டுக் காட்டுவது, அவர் இசையின் ஆற்றலை வியந்து பேசுவது என்ற அளவில் நூல் சுருக்கப்பட்டுள்ளது. இளையராஜா என்ற மாபெரும் கலைஞன் உருவாக்கிய இசையும் சில இடங்களில் தொய்வாக அமைந்துவிட்டதை நாம் உணர்கிறோம். இசையமைக்கும் படத்தில் கதை, கலைத்தன்மை, இவை பற்றியெல்லாம் கவலைப்படாது, சம்பளத்தை மட்டுமே கணக்கில் கொண்டு வேலை செய்ததுதான் இத்தகு விபத்துக்கள் நிகழக் காரணம். மேலும், திரைத் துறைக்கு வெளியில் சாதனை நிகழ்த்த வேண்டுமென்ற முனைப்பு சிறிதும் இன்றி, புகழின் உச்சத்தில் இருந்த காலத்தில், முழுக்க முழுக்க திரைத் துறைக்குள்ளேயே தன்னை முடக்கிக் கொண்டு தன் ஆற்றலின் பெரும் பகுதியை வீணாக்கியவர் அவர்.

இனி, இளையராஜாவின் சாதனைகளாகவும் அவர் ஓர் மாபெரும் கலைஞன் என்பதற்கு சான்றுகளாகவும் நூலாசிரியர்கள் கருதும் சில முக்கிய விஷயங்களைப் பார்ப்போம் :

1. எல்லாம் பிறப்பாலும் மரபுரிமையாலும் மட்டுமே நிகழ்கிறது என்ற இந்திய வன்முறைக் கருத்தாக்கத்தை உடைத்தெறிந்த இளையராஜா இந்துத்துவத்தின் மூலத்தையே பொய்யாக்கிய ஓர் கலைஞன்.

2. இளையராஜா ஓரே சமயத்தில் நான்கு தடங்களில், வழிகளில், பாய்வுகளில் மாறி மாறி பயணப்படக் கூடியவர். நாட்டு இசைத்தொகுப்பு, செவ்வியல் இசைத்தொகுப்பு (கர்நாடக இசை, இந்துஸ்தான் போன்றவை), மேற்கத்திய இசைத்தொகுப்பு, தொல்குடி மரபுகளும் அவற்றின் தாக்கத்தை முழுமையாக உள்வாங்கிய நவீன பன்மை மரபும் ஆகியவையே அந்நான்கு தடங்கள்.

3. இளையராஜா, திரும்ப மறுமுறை வராத அமைவு முறைகளை உருவாக்குவதில் மிகத்துல்லியமாக இருந்து கொண்டிருப்பவர். மேலும் அவர் இசைப் படைப்புகளில் அபரிமிதமான வகைகள், வடிவவேறுபாடுகள் உண்டு.

4. இந்திய இசைக் கலைஞர்கள் பலர் அங்கொன்றும் இங்கொன்றுமாக மலைக்க வைக்கும் தன்மயக்கம் கொள்ள வைக்கும் இசையை உருவாக்கியிருக்கிறார்கள். அவர்கள் செய்ததை இளையராஜா, ஒரு இரண்டரை மணிநேரத் திரைப்படத்தைச் சாக்காகக் கொண்டும் ஒரு நான்கு நிமிட பாடலைச் சாக்காகக் கொண்டும் ஓரே தளத்தில் செய்து முடித்துவிடுகிறார்.

5. ஒவ்வொரு வாத்தியக் கருவியையும் ஒரு தொன்மை தேவதையைப் போல் வசப்படுத்தி வைத்திருப்பவர் இளையராஜா. இவரின் இசைக் குறிப்புகள் ஒவ்வொரு இசைக் கருவியையும் ஒரு தாபமுடைய உடலாக மாற்றிவிடுகிறது.

6. மற்ற மேதைகளிடம் அரிதாகவே காணப்படும் வேகம் இளையராஜாவிடம் இருக்கிறது. அவர் தரும் ஓர் அசட்டுணர்ச்சிப் பாடலிலோ அல்லது அபத்தமான ஓர் படத்திற்கான பின்னணி இசையிலோ கூட பேரிசைகளில் தடையங்களும் அடையாளங்களும் குறிப்புகளும் அலை அலையாய்ப் புரள்கின்றன. இப்படிப் பல.


படிப்பகம்

www.padippakam.com

குறைந்தபட்சம் ஒரு பதினைந்து ஆண்டுகள் தமிழ்ச் சினிமாவின் இசை மன்னனாய் (சர்வாதிகாரியாய் என்று சொல்வது கூடுதல் பொருத்தமானது) ராஜாங்கம் நடத்தியவர் இளையராஜா. இளைஞர்கள் அவர் இசையில் மயங்கிக் கிடந்தனர். தமிழ் எல்லைகள் தாண்டி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, இந்தி என எல்லாமொழி பேசும் மக்களிடத்தும் இவர் இசை ஆதிக்கம் செலுத்தியது. உயர் சாதியினரின் கட்டுப்பாட்டிலிருந்த திரைத்துறைக்குள் தலித்தான அவர் பதினைந்துக்கும் அதிகமான ஆண்டுகள் ராஜாதிராஜாவாகக் கோலோச்சினார் என்றால் அது முழுக்க முழுக்க அவரது திறமையினால் தானேயன்றி வேறெந்தக் காரணத்தாலும் அல்ல. ஆனால், ரஹ்மான் அதிரடியாய் உள்ளே நுழைந்த ஓரிரு ஆண்டுகளிலேயே, அவர்களெல்லாம் இளையராஜாவைக் கைகழுவிவிட்டு ரஹ்மானைத் தேடிச் சென்றது சிந்திக்கத்தக்கது. இளையராஜாவைக் கவிழ்க்கும் தருணம் பார்த்திருந்த பார்ப்பன சூழ்ச்சி ஒருபுறம் இருந்ததென்றாலும், தனக்குப் பின் தன் இசையின் தொடர்ச்சியான ஒரு பாரம்பரியத்தை உருவாக்கும் சிரத்தை எடுக்காத இளைராஜாவின் தவறுதான் அதற்கான முதன்மைக் காரணம் என்பதை இந்நேரம் குறிப்பிட்டாக வேண்டும். இளையராஜா உருவாக்கிய இசை மரபு அவரோடேயே முற்றுப் பெறும் ஓர் அபாயநிலை ஏற்பட்டிருப்பதற்கு, வேறு யார்மீதும் நாம் பழிபோட முடியாது. தமிழ்த் திரைஇசைக்கு இது ஓர் மாபெரும் இழப்பு எனினும், பல தலைமுறை இளைஞர்கள் நிகழ்த்திக் காட்ட வேண்டிய சாதனைகளையெல்லாம் இளைய ராஜா தனி ஒருவராக நிகழ்த்தி முடித்துள்ளார் என்று நாம் ஆறுதல் பட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இசையின் பரிமாணங்கள் பல. இசை உணர்வுகளின் தொகுப்பு. இசை ஓர் அனுபவம். இசை ஓர் கலை. இசை ஓர் ஊடகம். இசை ஓர் அறிவியல் சாதனம். இன்று, இசை ஓர் நுகர்பொருள். இதற்குமேல் இசையைப் புரிந்துக்கொள்ளும் அறிவு எனக்கில்லை. இளையராஜாவின் இசை பெரும்பாலும் உணர்வுகளின் தொகுப்பாகவும் அனுபவங்களாகவுமே அமைந்தன. அதற்குள் பல நுட்பங்கள் இருக்கின்றன; சில சமயம் அவை விஷயங்களையும் பேசுகின்றன என்பனவற்றையெல்லாம் இந்நூலைப் படித்தபின்பே நான் புரிந்து கொண்டேன். "அணு ஆயுதசேகரிப்பு – மனித சமூகத்துக்குத் தரும் பேரச்சம். சிறு விபத்து கூட அணு ஆயுதங்களை, உலைகளை வெடிக்கச் செய்து உலகை அழிக்கக்கூடிய ஒரு பாதுகாப்பற்ற நிலை, இதை ஏன் செய்தார்கள் என்ற கவலை இசை வடிவத்தில் Nothing But Wind-இல் அமைந்திருக்கிறது என்கிற விஷயம் என்னைப் பொறுத்தவரை புதுத்தகவல்.



திரைஇசை பற்றிய ஓர் தவறான புரிதலே நம்மில் பலரிடமும் இருக்கிறது. திரைப்பட இசை என நம்மில் பலர் கருதுவது பாடல்களையே. விருதுக்குழுவினர் கூட, பொதுவாக, பாடல்களுக்குச் சிறந்த மெட்டமைப்பவரையே சிறந்த இசையமைப்பாளராகத் தேர்வுசெய்கின்றனர். திரைப்படத்தை ஓர் உணர்வு காவியமாக்கும் இசையின் முக்கியத்துவம் சரியாக உணரப்பட்டுள்ளதா என்பது சந்தேகமே. பாடல்களைப் பொருத்தவரை கூட, அவற்றின் மெட்டுக்களைவிட, இடையில் வரும் 'இடையிசை'யே முக்கியத்துவம் வாய்ந்தது. இசை ஞானம் அற்றவர்கள்கூட பாடல்களை உருவாக்க முடியும். இசையை உருவாக்க புலமையும் பயிற்சியும் வேண்டும். திரை இசை பற்றிய சரியான புரிதலை இந்நூலின் ஊடாக நாம் பெற முடிகிறது என்பதும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய ஒன்று.

இளையராஜாவின் இசைக்குள் 'காமிரா' நடிகர்களைத்தாண்டி நகர்ந்ததாக வேண்டியுள்ளதாக பேட்டியின் போது ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளது கவனிக்கத்தக்கது. அதாவது, காமிரா ஸ்டுடியோவைத் தாண்டி வெளிகளுக்குப் பயணமானது இளையராஜா இசையால் என்பது அவர்கள் கூற்று. இது உண்மையே எனினும், அது முழுக்க முழுக்க ஓர் தற்செயல் நிகழ்வு என்றே தோன்றுகிறது. காமிரா முழுக்கமுழுக்க ஸ்டுடியோவுக்குள் சுழன்று கொண்டிருந்த தேக்கநிலை உடைபட்டு, வெளியில் பாயும் நேரமும் இளையராஜாவின் பிரவேசனமும் கிட்டத்தட்ட ஒரே காலகட்டத்தில் அமைந்துவிட்டது. இளையராஜாவின் இசைக்கு அது கூடுதல் சுதந்திரமும் விரிவும் பெற்றுத் தந்தது என்று சொல்வதில் தப்பில்லை.

நூலாசிரியர்கள் இசை அறிஞர்கள் அல்லர். இசை நேயர்கள். இளையராஜா ரசிகர்கள். நூலைப் படிக்கிறபோது, இசை ரசனை அவர்கள் வழியாக நம்மில் பாய்கிற ஓர் அற்புதம் நிகழ்ந்துவிடுகிறது.

How to Name It?, Nothing But Wind, ஒரு சிம்ஃபொனி போன்ற சிலவற்றைத் தவிர்த்துவிட்டுப் பார்த்தால், இளையராஜாவின் இசைச் சாதனைகளெல்லாம் சினிமாவுக்குள்தான். ஒரு திரைப்படம் ஒருசுற்று ஓடிவிட்டு பெட்டிக்குள் முடங்கி விடுகிறபோது, அதற்கு இளையராஜா அமைத்த இசையும் கூடவே முடங்கிப் போய்விடுகிறது. பின்னர் வெளியில் உலவுவது பாடல்கள் மட்டுமே. இப்படி, உலகம் வியந்துபோற்ற வேண்டிய ஒரு மாபெரும் கலைஞனின் இசையோவியங்கள் பெட்டிகளுக்குள் அடக்கமாகிக் கிடப்பது துக்கப்பட வேண்டிய விஷயமில்லையா? இனியுள்ள காலங்களிலேனும் இதற்கு எதாவது பரிகாரம் காண இளையராஜா முன் வருவாரா? ■

## வ. ரா. நினைவு சிறுகதைப் போட்டி

தமிழ் நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம், பட்டுக்கோட்டை, தமிழறிஞரும், சிந்தனையாளருமான வ. ரா. அவர்களின் நினைவாக சிறுகதை போட்டி ஒன்றை நடத்துகிறது.

மக்கள் முன்னேற்றத்தையும், மனித நேயத்தையும் மையமாகக் கொண்ட அழகியலுடன் கூடிய கதையாக, கையெழுத்துப் படியில் எட்டு பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். தமிழகத்தின் புகழ் வாய்ந்த எழுத்தாளர்கள் நடுவர்களாக இருப்பார்கள். தேர்ந்தெடுத்த கதைகள் பின்னர் ஒரு தொகுப்பாக வெளியிடப்படும். தானே எழுதியது என்ற ஒப்புதலும், தேர்ந்தெடுக்கப்பட்டால் தொகுப்பாக வெளியிட அனுமதியும் தர வேண்டும்.

கதைகள் 25.1.2001க்குள் தி. தனபால், செயலாளர் த. மு. எ. ச., 96 என். ஜி.ஓ. காலனி, பட்டுக்கோட்டை 614 601 என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.


படிப்பகம்

www.padippakam.com



நேஷனல் புக் டிரஸ்ட், காலச்சுவடு அறக் கட்டளை, நெய்தல் இணைந்து நிகழ்த்திய இலக்கிய அரங்கு 19.11.2000 அன்று நாகர்கோவில் ரோட்டரி கம்யூனிட்டி சென்டரில் நிகழ்ந்தது. திரு. ஜேம்ஸ் டோனி யேல் ஒருங்கிணைப்பாளராக இருந்து அரங்கை நிகழ்த்தினார். சிறப்பு விருந்தின ராக நேஷனல் புக் டிரஸ்டின் முதன்மை ஆசிரியர் டாக்டர் வர்ஷா தாஸ் கலந்து கொண்டு வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. வன்னியப் பெருமாள் I.P.S., சிறப்புரை வழங்கினார்.

காலை அமர்வில் தோப்பில் முகம்மது மீரான் 'என் படைப்புலகம்' என்ற தலைப் பிலும், ந. முருகேச பாண்டியன் 'தொண் ணூறுகளில் தமிழ் நாவல்கள்' என்ற பொருளிலும், தமிழ் புதுக்கவிதை பற்றி ஜெயமோகனும், கன்னியாகுமரி மாவட்டத் தின் தமிழ் சிறுகதைகள் பற்றி எஸ்.அனந்த சுப்பிரமணியனும் உரையாற்றினார்கள். ஒவ்வொரு உரைக்குப் பின்னரும் உரையா டல் நடைபெற்றது.

உணவு இடைவேளைக்குப் பின்னர் நாஞ்சில் நாடனும், குமார செல்வாவும் தங் களுடைய சிறுகதைகளை வாசித்தனர். அதைத் தொடர்ந்து ஜே. ஆர். வி. எட்வர்ட், ஹெச்.ஜி. ரசூல், என்.டி. ராஜ்குமார், நட. சிவகுமார், அபிலாஷ் ஆகியோரின் கவிதை வாசிப்பு நிகழ்ந்தது. இந்தப் படைப்புகள் பற்றிய விரிவான விவாதங் களும் நடைபெற்றன. ஜெயமோகன், குமார செல்வா, அ. ராமசாமி, எஸ். அனந்தசுப்பிர மணியன் இன்னும் பலர் விவாதங்களில் பங்களித்தனர்.

மாலை ஜி. பரமேஸ்வர ராவ்வின் சிறு வர்களுக்கான தோல்பாவைக்கூத்து நிகழ்ந்தது. பாவைக்கூத்தை அ. கா. பெரு மாள் அறிமுகப்படுத்தினார்.

நேஷனல் புக் டிரஸ்டின் நூல்களின் புத்தகக் கண்காட்சியும் நடைபெற்றது.

உரைகள்:

**திரு. வன்னியப் பெருமாள்**

இவர் புத்தக வாசிப்பு – புத்தக உறவு பற்றி பேசினார். இப்போதெல்லாம் தரமான புத்தகங்களைப் படிக்க வேண்டும் என்று தேடினால் எல்லோருக்கும் எளிதாகக் கிடைக்கும்படியான சூழ்நிலை இல்லை. ஒரு மாவட்டத் தலைநகரில் கூட இதற்கு வாய்ப்பு இல்லை என்றால் மற்ற இடங் களில் எப்படிக் கிடைக்கும்?

அதோடு படைப்பாளிகளுக்கும் தர மான புத்தகங்களைப் படிப்பவர்களுக்கும் உள்ள உறவுகூட முழுமையானதாக இல்லை. அதற்கான சூழ்நிலைகளும் குறைவாகவே உள்ளன.

**தோப்பில் முகம்மது மீரான்**

என் படைப்பில் நான் கூறுகின்ற தேங் காய்ப்பட்டினம் கிராமம் இன்று மாறிவிட் டது. அந்த கிராமத்தின் மரங்களும் வீடு களும் கடற்கரையும்கூட இன்று வெகு வேகமாக மாறிவிட்டன. ஆனால் கிரா மத்து மக்களின் மனோபாவம் மட்டும் மாறவில்லை.

என் படைப்புகள் முஸ்லீம் மக்களின் யதார்த்தத்தை, வாழ்க்கையை, மனோ பாவங்களை இயல்பாக வெளிபடுத்துகின் றன. நான் காண்கின்ற வாழ்க்கை முரண் பாடுகளை பழமையிலிருந்து விடுபடாத நிகழ்ச்சிகளை என் நாவலில் காட்டியிருக் கிறேன்.

இன்றைய முஸ்லீம் சமூகத் தலைவர் கள் புதிய சமூக விழிப்புணர்வுக்கு உதவ வில்லை என்பது என் கருத்து. என் படைப் புகளில் இப்படி யதார்த்த சமூகத்தைக் காட்டுவதன்மூலம் எதிர்ப்பை மட்டுமே சம் பாதித்திருக்கிறேன்.

**ந. முருகேச பாண்டியன்**

தொண்ணூறுகளில் 25 எழுத்தாளர் களின் 50 நாவல்களை முக்கியமாகக் குறிப்பிடலாம். இவற்றில், அழகிய நாயகி அம்மாவின் *கவலை*, ஜெயமோகனின் *விஷ்ணுபுரம்*, பிரபஞ்சனின் *மானுடம் வெல் லும்* ஆகிய மூன்றும் முக்கியமானவை. பொதுவாக இன்று அனைத்து தத்துவங்களி லும் அக்கறையின்மை ஏற்பட்டுவிட்டது. யதார்த்தம்கூட நாவல்களில் காட்டபடாத நிலையே உள்ளது. என்றாலும் யதார்த் தத்தை புறக்கணிக்க முடியாது. லத்தீன் அமெரிக்க நாவல்களையும், இலக்கியக் கொள்கை ரீதியான புத்தகங்ளையும் படித்து விட்டு அப்படியே தன் படைப்புகளிலும் காட்டும் மரபு இன்று பெருகிவிட்டது.

**ஜெயமோகன்**

தமிழ்க் கவிதை 2000 ஆண்டுகள் பாரம் பரியம் உடையது. தமிழ் கவிதை மரபை சங்க காலத்திலிருந்தே தொடங்கவேண் டும். நாட்டார் பாடல்கள் செவ்வியல் இலக் கியத்திற்கும், செவ்வியல் இலக்கியத் திற்கு பரிமாறிய செயல்பாடுகளை கவிதைகளி லும் காணமுடியும். இயற்கையிலிருந்து, வாழ்க்கை உறவிலிருந்து இயற்கை தேவை சார்ந்த விஷயங்களை பாலங்களாக இணைப்பதாக தமிழ்க் கவிதைகளை கொள் ளலாம். இந்த நூலிழை இன்றைய கவிதை களிலும் காணமுடியும். இயற்கை வாழ்க்கை உறவிலிருந்து அறம் சார்ந்த விஷயங் களைக் கூறுவதாக கவிதை மாறிய பின் படிமமும் மாறியது. இந்தப் படிமச் செல் வாக்கை பிச்சமூர்த்தியிடம் காணலாம்.

**எஸ். அனந்த சுப்பிரமணியம்**

குமரி மாவட்டத்தில் சுந்தர ராமசாமி, நீல பத்மநாபன் என்ற பழைய பாரம்பரியம் நிறைய இருந்தாலும் இன்றைய இளம் படைப்பாளிகளாக குமார செல்வா, மணி வண்ணன், எட்வர்ட், மீரான், ரசூல், ஜெய மோகன் போன்ற பன்னிரெண்டுக்கும் மேற் பட்டவர்கள் முக்கியமானவர்களாக உள்ளனர்.

இவர்கள் தங்கள் வட்டாரப் பண்பாட் டின், வட்டார வழக்கின் அடிப்படையில் வேறுபட்டு எழுதுகின்றனர். இவர்களுக்குள் சமூக விழிப்புணர்வு, கரிசனை, அனுதாபம் இருக்கிறது. ■

# கண்டதும் கேட்டதும்

எனது இரு நாவல்களை சர்வதேசப் புகழ்பெற்ற பல நாவல்களின் தரத்தை விட மேலானது என்று தயங்காமல் என்னால் கூறமுடியும்.

**ஜெயமோகன்,** *தமிழ்.காம்*

சேரன், ஜெயபாலன் போன்றவர் கள் ஈழத்தின் இலக்கிய பாரம்பரியத்தி லிருந்து வந்தவர்கள். இவர்களது வாழ்க்கை முறையைப் பார்த்தால் பல வாய்ப்புக்களைப் பெற்றவர்கள். 5 லட் சம் ரூபாய் பரிசு பெறும் வாய்ப்பு. உலக நாடுகளை சுற்றிவரும் வாய்ப்பு. ஜேர்ன லிஸ்ட் என்ற வாய்ப்பு. வசதிபெற்றவர் கள். ஏற்கனவே எழுத்தாளர்கள் என்று அங்கீகரிக்கப்பட்ட பாரம்பரியத்தி லிருந்து வந்தவர்கள்.

பார்த்திபன், ஷோபாசக்தி, கலா மோகன் போன்றவர்கள் அங்கீகரிக் கப்பட்ட வாய்ப்புகள் எதையுமே பெறாதவர்கள்.

**தெ. மதுசூதனன்,** *கேப்பியார் 2000*

பெண்கள் பொதுவாக வாயாடி களாக இருக்கின்றனர். கோள் சொல் லுவது, குறை கூறுவது ஆகியவற்றில் அவர்களுக்குப் பிரியம் அதிகம். அவர்கள் தினந்தோறும் நான்கு மணி நேரம் மௌனம் அனுஷ்டிக்க வேண் டும். அவர்கள் செய்தித்தாள்கள், சஞ் சிகைகள், நாவல்கள் முதலியவற்றைப் படிக்கக்கூடாது. அவர்கள் எப்பொழு தும் ஏதாவது சங்கீர்த்தன த்வனிகள் அல்லது இறைவனைப் புகழ்ந்து பாடும் பாக்களைப் பாடிக் கொண்டி ருக்க வேண்டும். அவர்கள் சமையல் செய்து கொண்டிருக்கும் போதும் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்கும் பொழுதும்கூட தங்கள் இஷ்ட மந்தி ரத்தை மானசீகமாக ஜபித்துக் கொண்டிருக்க வேண்டும். "ஸ்ரீமந் நாராயணா நாராயணா நாராயணா" என்று மெல்லிய குரலில் அவர்கள் பாடலாம். அவர்கள் பதிவிரதா தர்மத் தின் முக்கியத்துவத்தை நன்கு உணர வேண்டும். அவர்கள் ஆலயங்களுக் குச் செல்ல வேண்டியதில்லை. அவர் களுக்குத் தங்கள் கணவன்மார்களைத் தவிர கண்கண்ட தெய்வம் வேறில்லை.

**ஸ்ரீ சுவாமி சிவானந்தர்,**
*இல்லறத்தார் கடமைகள்*

அடங்காப் பிடாரி, பேட்டை ரவுடி, போலீஸ் அராஜகம், பொய் சாட்சி, கொடூர கணவன்/மாமியார் மற்றும் பெற்றோர்களுக்கு கட்டுப்படாத குழந்தைகளை அடக்க, பாதிக்கப்பட்ட நபர் சாப்பிட வேண்டிய மலர் மருந் தின் பெயர் ராக் வாட்டர்.

**லயன் டாக்டர் கிருஷ்ணமூர்த்தி,**
*இங்கிலாந்து மலர் மருந்துகள்*



படிப்பகம்

www.padippakam.com

# கடிதங்கள்

தமிழ்மொழி, தமிழ் பண்பாடு எப்படியெல்லாம் வணிக நோக்கத்திற்கு பயன்படுத்தப்படுகிறது என்று கூறும் சேரனின் 'தமிழா – தமிழா!' கட்டுரை இன்றைய காலத்தின் கவனப்படுத்த வேண்டிய கட்டுரையாகும்.

நீண்ட காலமாக தமிழ் உணர்வென்பது அரசியல் உணர்வாகவே பார்க்கப்பட்டுள்ளது. அதனால்தான் தமிழ் மொழி உணர்வை அரசியல்வாதிகள் தங்களின் அரசியல் நோக்கிற்கு பயன்படுத்தி எளிமையாக லாபம் சம்பாதிக்க முடிகிறது. இதை இன்றைய காலத்தில் கண்கூடாக பார்க்க முடிகிறது. மேலும் மொழி உணர்வை தூண்டுவதுகூட மக்களின் இயல்பான உணர்விலிருந்து வெளிப்பட்டுவிடாமல் அரசியல் கோசமாக தூண்டிவிடப்படுகிறது.

மொழி உணர்வென்பது மக்களின் உழைப்பும் வாழ்வும் சார்ந்து இயல்பாக வெளிப்படுத்துவதாக இருக்கவேண்டும். மக்களின் உழைப்பும் வாழ்வும் மதிப்படைய வேண்டும். அப்போதுதான் அவர்கள் வெளிப்படுத்தும் மொழியும் – பண்பாடும் மதிப்படையும். உழைக்கும் மக்களின் வாழ்வுக்கு உத்தரவாதம் இல்லாமல் மொழி மொழி என்று கோசம் இடுவதெல்லாம் மக்களை ஏமாற்றும் வித்தையே.

தமிழ் மக்கள் முக்கியமாக இரண்டு வகையில் ஒடுக்கப்படுகிறார்கள். அந்நிய முதலீட்டின் இரக்கமற்ற சுரண்டல், அந்நிய பண்பாட்டை இறக்குமதி செய்யும் தொலைக்காட்சி, ஜனரஞ்சக பத்திரிகை, (சினிமா) செய்தி ஊடகங்கள். பொருளாதார ஒடுக்குமுறை, பண்பாட்டு ஒடுக்குமுறைக்கு ஆளாகுகிறார்கள்.

தமிழ் மக்கள் தங்களின் சொந்த பண்பாட்டு கலை இலக்கிய மரபுகளை கண்டடைந்து, அதை உயர்த்துவது, தங்களின் சொந்த தேசிய பொருளாதாரத்தை கட்டமைப்பது, இவைகளின் ஊடாகவேதான் தமிழ் மொழி விடுதலையும் தமிழ் பண்பாட்டு விடுதலையும் சாத்தியமாகும். மக்களின் இயல்பான மொழி உணர்வு சார்ந்து தமிழ் படைப்பாளிகளும் தமிழ் அறிஞர்களும் இயங்க வேண்டும்.

**இ. சி. ராமச்சந்திரன்**
**ஈரோடு**

காலச்சுவடில் பிரசுரமாகியிருக்கும் 'குறைந்த ஒளி அருப நடனம்' என்கிற என் கவிதையின் கீழ் அடிக்குறிப்பு ஒன்று பார்த்தேன். அது நான் எழுதியதல்ல. கவிஞர்களிடம் ஒப்புதலோடு பொழிப்புரைகளை பிரசுரிப்பதே நாகரிகமானது.

கவிதை என்ற விஷயத்தை விட்டு வெளியேறி ஆட்களைக் கண்டுபிடிக்கும் மங்கலான புகைப்படமாக அந்த கவிதை திரிந்துவிட்டது. அதற்கு நான் பொறுப்பல்ல என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**லஷ்மி மணிவண்ணன்**
**சென்னை**

நவம்பர் – டிசம்பர் மாத காலச்சுவடு தமிழ் இனி 2000 சிறப்புப்பகுதி என்னை வெகுவாகக் கவர்ந்தது. நான் கோவையில் இருந்ததால் சென்னைக்கு வந்து தமிழ் இனியில் கலந்து கொள்ள இயலவில்லை. அந்தக் குறையை நீக்கிவிட்டீர்கள். தமிழ், தமிழ் என முழங்கிக்கொண்டிருக்கும் இன்றைய தமிழக அரசு எவ்வித உதவியும் மாநாட்டிற்கு செய்யாததை எண்ணி வருத்தமடைந்தேன். மாநாட்டின் வெற்றிக்காக காலச்சுவடும் சரிநிகரும் எத்தகைய கடும் உழைப்பை மேற்கொண்டன என்பதை அறிந்தேன். அம்மாநாட்டினை நிகழ்த்திய தன் மூலம் எதிர்காலத்தில் தமிழின் அனைத்துக் களங்களுக்கும் வலுவான அடித்தளம் அமைத்துள்ளீர்கள். உமது இந்த மாபெரும்பணி தமிழ்கூறும் நல்லுகத்தினரால் பாராட்டப்படத்தக்கதே. இதை, இத்தோடு நிறுத்திவிடலாகாது. எம் போன்ற காலச்சுவடு அபிமானிகளின் நேரடி, மறைமுக ஆதரவு என்றும் நிச்சயம் உண்டு.

**L. கோபாலகிருஷ்ணன்**
**கோவை**

இடாலோ கால்வினோவின் சிறுகதை அளித்த அனுபவமும் ழாக் ப்ரெவெரின் கவிதைகளின் அனுபவமும் வாழ்வின் இருப்பை அர்த்தப்படுத்தியது. சின்ன சின்ன வார்த்தைகளில் புதுத்தன்மையிலான காட்சி படிமங்கள். மொழிபெயர்ப்பாளர்களின் உழைப்பு புரிகிறது.

**முத்துச்செல்வன்**
**மணமேடு**

'தமிழ் இனி'க்காக தி. மு. க. அரசு யாதொரு உதவியும் செய்யவில்லையென தலையங்கத்தில் புலம்பியிருக்கிறார் மனுஷ்ய புத்திரன். இது எதிர்பார்த்தது தானே... நவீன இலக்கியத்திற்கு நிறுவனபலம் குறைவென்பதும் நாம் அறிந்தது தானே... சினிமா கவிஞர்களை, குறிப்பாக வைரமுத்து போன்ற 'ஜால்ரா' கவிஞர்களையே இவ்வரசு உச்சி மோர்கிறது. கூடவே 'கவிப்பேரரசு'(?) பட்டமும் கொடுத்து புளகாங்கிதமடைகிறது. வைரமுத்து, அப்துல் ரகுமான், மு. மேத்தா, நிர்மலா சுரேஷ்(?) ஆகிய சினிமா கவிஞர்களின் கோஷ்டி கானம்தான் தி. மு. க. அரசின் சமஸ்தானங்களில் பட்டுத் தெறிக்கிறது. அ. தி. மு. க. அரசு வந்தால் சொல்லவே தேவையில்லை... வாலி, புலமைப்பித்தன், நா. காமராசன், விசாலி கண்ணதாசன் என்று இந்த பட்டாளத்தின் ஓசை தானே அம்மணிகளின் காதுக்கு ஆனந்த கீதங்களாகயிருக்கும்.

'ஒரு கனவு நனவான கதை'யை கண்ணன் விரிவாக சொன்னது எங்களுக்குள் ஆழமாக பதிந்துப் போனது. பட்ட சிரமங்கள், ஏற்பட்ட தோல்விகள், ஏவப்பட்ட அம்புகள், குழி பறித்த கொம்பர்கள் – இவையெல்லாம் மீறி பெறப்பட்ட வெற்றிகள் அப்பாடா... தமிழ்இனி 2000 – த்தின் வெற்றிக்கு பின்புலத்தில் இத்தனை சோகங்களா? இது போதாதென்று 'ஞாபக மறதி'யில் சிலருக்கு பதில் சொல்லும் வேலை வேறு... இது வெட்டி வேலையாகயிருந்தாலும் சில(ர்) தெளிவுகளுக்காக இதை சொல்லவும் வேண்டியுள்ளது.

**சூர்யநிலா**
**சேலம்**

ஜெயமோகன் கடிதம் (ஞாபகமறதி – 2) படித்தேன். ரவிகுமார்மீது சற்றும் கௌரவமான அபிப்ராயம் அவருக்கு இல்லாத போதிலும் கூட்டத்தில் பங்கேற்றிருக்க வேண்டும் என்பது என் கருத்து. தனி நபர் மீதுள்ள கோபத்தை அடிப்படையாக வைத்து பொதுவான தீர்மானங்கள் ஏற்படகூடாது. அபிப்ராயங்கள் பொதுத் தளத்தில் சர்ச்சை செய்யப்பட வேண்டியவை. அவர் அப்படி செய்திருந்தால் அச்செயல் சனநாயகத்தை மேன்மைப்படுத்தும் செயலாக அமைந்திருக்கும். ரஷ்யாவைப் பற்றி நாவல் எழுதியதால் டால்ஸ்டாய் ஆகிவிட்டோம் என்ற அஹங்காரம் பாசிஸத்திற்கு சமமானது.

**கே. பாலன்**
**அகளி**

நவீன விக்ரமாதித்ய அண்ணாச்சிக்கு சென்னையிலும் நண்பர்கள் இல்லாமல் போகவில்லை. விக்ரமாதித்யன் அரசனல்லவா? எனவே அந்த அரசனுக்கு சிறிதும் சளைக்காதவராக இன்னொரு 'அரசர்', பேராசிரியர் அரசு அவர்கள், தமிழ் இனி 2000 கருத்தரங்கிலும் 'தமிழகத்தில் கல்வி' கருத்தரங்கிலும் அண்ணாச்சியின் பணியை செவ்வனே செய்தார். ஒரே வித்யாசம்: இவர் 'பானம்' அருந்துவதில்லை. செயல்பாடுகள் சார்ந்த வகையில் இவரை அண்ணாச்சியின் நண்பர் என்று நிச்சயமாக எடுத்துக்கொள்ள முடியும்.

**கே. வெங்கடாசலம்**
**சென்னை**

“பாரதி என்றறியப்படும் சி. சுப்ரமணிய பாரதி” கட்டுரை (விமர்சனம்) படித்தேன். கட்டுரை ஆசிரியர் அ. ராமசாமி, அம்ஷன் குமாரின் சி. சுப்ரமணிய பாரதியையும், ஞான. ராஜசேகரின் பாரதியையும் விமர்சித்திருந்தார். அம்ஷன்குமாரின் 'சி. சுப்ரமணிய பாரதி'யை பார்க்கும் வாய்ப்பு கிட்டவில்லை எனக்கு. ஞான. ராஜசேகரனின் 'பாரதி'யை பார்த்து ரசித்த ரசிகன் என்கிற முறையில் என்னுடைய கருத்தையும் சொல்ல முனைகிறேன்.

'பாரதி' படத்தின் குறைகளை தேடிக் கண்டுபிடித்து விமர்சித்துள்ள கட்டுரை ஆசிரியர், நிறைகளையும் தேடிக் கண்டுபிடிக்க முற்பட்டிருக்கலாம். ஞான. ராஜசேகரனால் தனக்கு அறிமுகமான ஒரு கவிஞனின் வாழ்க்கை வரலாற்றை துண்டு துண்டாகத்தான் சொல்ல முடிந்திருக்கிறது என கட்டுரை ஆசிரியர் கூறியுள்ளார். ஆசிரியர் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். காலம் கடந்த ஒரு கவிஞனின் கதையையோ, ஒரு மனிதனின் கதையையோ மூன்று மணி நேரத்திற்குட்பட்ட திரைப்படமாக கொண்டு வருவது என்பது சாத்தியமான காரியமல்ல.

கட்டுரை ஆசிரியர் கூறியுள்ளவாறு 'தேசியக்கவி' என்கிற பிம்பம், 'பாரதி' படத்தில் கண்டுகொள்ளப்படவில்லை என்பது நானறிந்து பார்த்த வரையில் உண்மையில்லை. 'பாரதி' என்கிற தீர்க்கதரிசியின் வரலாற்றைத் திரைப்படமாக எடுக்க முயன்று தோற்றுப் போனவர்கள் பலர். இதில் டைரக்டர் பாலச்சந்தரும், நடிகர் கமல்ஹாசனும் அடக்கம். அந்த வகையில், 'மோகமுள்'ளிலும், 'முக'த்திலும், தொலைந்து போன ஞான. ராஜசேகரன் 'பாரதி' மூலம் கம்பீரமே அடைந்துள்ளார்.

**வே. முத்துக்குமார்**
**கல்லிடைக்குறிச்சி**

யுவன் சந்திரசேகரனின் நச்சுப் பொய்கை படித்ததும் என் மனதில் ஏற்பட்ட தாக்கத்தை எப்படி விவரிப்பது என்று தெரியவில்லை. அழுக்கான மனசு கழுவிவிட்ட பூமிபோல ஆனது.

**மருதம் ச. மாதவன்**
**பூந்தோட்டம்**

Edited and published by S.R. Sundaram for Kalachuvadu Pathippagam, 669 K.P. Road, Nagercoil 629 001
and printed by Smt.V. Bagavathy at Bharathy Press, Chettikulam Junction, Nagercoil 629 002

படிப்பகம்

www.padippakam.com



'MAN with bouquet of Plastic Flowers'
1976 Oil on Canvas – **Buben Kakkar**

**With Best Compliments from**

**S. RANGARAJAN**

படிப்பகம்

# உலகத்தரம் வாய்ந்த சீட்டுத் திட்டங்கள்

## மேன் மேலும் பொலிவுடன்

இந்தியாவில் தோன்றிய தொன்மையான சீட்டு வழிமுறை 2000 ஆண்டுகளை வயதில் கடந்திருந்தாலும் 21ஆம் நூற்றாண்டிலும் வளமைக்கு வழி காட்டுகிறது. கடந்த 200 ஆண்டுகளில் தோன்றிய பல அந்நிய முதலீட்டு முறைகளை விட உன்னதமானவை சீட்டுத் திட்டங்கள். காலத்தை வென்று நிற்கும் இந்தப் பொலிவான வழிமுறை அதிக மக்களுக்கு ஆண்டாண்டுகளாய் பயன் வழங்கி வருகிறது.

### ஸ்ரீராம் சீட்டுத் திட்டங்கள்

மாறிவரும் பொருளாதாரச் சூழல்களை மனதில் கொண்டு சீட்டுத் திட்டங்களில் பல்வேறு மாறுதல்களை உடனடியாய் செயல்படுத்தி இன்றளவும் புதுப்பொலிவுடன் திகழ்கிறது ஸ்ரீராம் சிட்ஸ். புதியதொரு திட்டத்தின் மூலம் உங்களுக்கு கூடுதல் லாபம் தர காத்திருக்கிறது.

### கூடுதல் டிவிடெண்ட் திட்டம்

விழாக்காலங்களில் சீட்டுத்திட்டங்களில் இணைவோருக்கு ஸ்ரீராம் சிட்ஸ் பல பரிசுகள் வழங்கும். ஆனால் இந்த முறை ஒரு சீட்டுத் திட்டமே பரிசாக கிடைக்கிறது. ஆம்! அனைவருக்கும் ஆதாயம் தரும் கூடுதல் டிவிடெண்ட் திட்டம். பணத்தேவைக்காக, சீட்டில் சேர்பவர்களுக்கு அதிகப் போட்டியின்றி உடனடியாக தள்ளியெடுக்க வாய்ப்பு உள்ளது.

இதைத்தவிர, சேமிக்கும் நோக்கத்தில் சீட்டில் சேர்பவர்களுக்கு, முதலில் தள்ளியெடுப்பவர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட டிவிடென்ட் தொகை பகிர்ந்து அளிக்கப்படுகிறது. இதன்மூலம் சந்தாதாரர்கள் கூடுதல் டிவிடென்ட் தொகையை ஆதாயமாகப் பெறுவார்கள்.

கூடுதல் டிவிடெண்ட் திட்டம்

ஸ்ரீராம் சீட்டுத் திட்டங்கள்

மேன்மேலும் பொலிவுடன்

குன்றாத புதுமை, குறையாத வளமை

### ரூ.7,000/- கோடி பட்டுவாடா

ஸ்ரீராம் சிட்ஸ் மூலம் இதுவரை பரிசுப் பணமாக விநியோகிக்கப்பட்ட ரூ.7,000/- கோடியை, 30 லட்சத்திற்கும் அதிகமான குடும்பங்கள் பகிர்ந்து கொண்டுள்ளன. 15 லட்சத்திற்கும் மேலானோர் நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர்.

### நலம் பெற ஸ்ரீராம் சிட்ஸில் இணைவோம்

உலகத்தரம் வாய்ந்த சீட்டுத் திட்டங்களை வழங்கும் ஸ்ரீராம் சிட்ஸில் இணைந்து சந்தோஷமாய் சேமிப்போம். வாழ்வை வளமாக்கிக் கொள்வோம். பல்வேறு பரிசுகள், பற்பல திட்டங்களுடன் உங்களுக்கு சேவை செய்ய காத்திருக்கிறது ஸ்ரீராம் சிட்ஸ்.

## வாருங்கள்! வாழ்வை வளப்படுத்திக் கொள்ளுங்கள்!

**ஸ்ரீராம் சிட்ஸ் தமிழ்நாடு லிமிடெட்**
www.shriramchits.com
சுப்ரமணியன் பில்டிங், 1 கிளப் ஹவுஸ் ரோடு
சென்னை - 600 002. போன்: 8461833 - 39.

WORDCRAFTS